## இராமகுமாரன்

## புதுக்கவிதையில்

# திருக்குறள்




கம்பன் பதிப்பகம்

www. kambanpathippagam.com

www.kuraleasy.com

# இராமகுமாரன்
# புதுக்கவிதையில்
# திருக்குறள்



கம்பன் பதிப்பகம்

www. kambanpathippagam.com

www.kuraleasy.com

முதற் பதிப்பு : 2021

© காப்புரிமை
இராமகுமாரன்

விலை : ₹ 270/-

ஒளி அச்சு :
**ஸ்ரீ அபிராமி கிராபிக்ஸ்**
21, கலிங்கராயன் தெரு,
இராயப்பேட்டை, சென்னை-14.

அச்சிட்டோர் :
**ஏஷியன் பிரிண்டர்ஸ்**
14, பீட்டர்ஸ் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-14.

# ஆசிரியர் உரை

## நான் இரசித்த தமிழ்...

தமிழை வாசிப்பதும், தமிழை நேசிப்பதும், தமிழை இரசிப்பதும், தமிழை இருசிப்பதும் என் பள்ளிப்பருவ காலத்திலிருந்து நான் கொண்டிருந்த வாழ்க்கை...!

"தமிழ்" என்பது என் இரத்தத்தில் கலந்ததாகத்தான் நினைக்கிறேன் !

குறிப்பாக நான் தமிழ் மண்ணான மதுரையில் தியாகராசர் பொறியியல் கல்லூரியில் படித்த போது ஏற்பட்ட தமிழ் உணர்வு மண்ணிற்கே உரித்தானது !

நான் பிறந்த காரைக்குடி வட்டத்து மண்ணிற்கும் தமிழ் உணர்வு அளவிட முடியாதது !

80-களில் பள்ளி, கல்லூரிக் காலத்திலிருந்தே தமிழ்த் திரைப்படங்களுக்குப் பாடலாசிரியராக மிளிர வேண்டுமென்பதே என் ஆசையாக இருந்தது. ஆனால், பொறியியல் கல்லூரியில் கல்வி முடித்த பிறகு, நிருவாகத் துறையில் கல்வியைத் தொடர்ந்து காப்பீட்டு நிறுவனத்தில் அதிகாரியாக இணைந்த பிறகு பாடலாசிரியர் கனவினை ஒத்திப்போட்டு அதற்கான முயற்சிதனைக் கடுகளவும் நான் எடுக்கவில்லை என்பதே கசப்பான உண்மை!

ஆனால், இப்போது திரும்பிப் பார்த்தால் நொடிப் பொழுதில் "30" வருடங்கள் காப்பீட்டு நிறுவனத்தில், மக்களுக்கானக் காப்பீட்டுச் சேவை, குறிப்பாக மானுடத்திற்கு மகத்தான மருத்துவக் காப்பீட்டுச் சேவையில் காலம் வெகுவேகமாக ஓடி விட்டிருந்தது !

திருப்புமுனையாக இந்தக் "கொரோனா" காலம் வந்தது.

இலட்சக்கணக்கான பொது மக்களுக்கு இத்தனை வருடங்களில் நான் மருத்துவக் காப்பீட்டு சேவை அளித்திருந்தாலும் இந்தக் “கொரோனா” காலம் என்னை ஆட்டுவித்தது !

கண் முன்னே என் இனிய நண்பர்கள், உறவினர்கள் கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டுப் பலருக்கும் மருத்துவக் காப்பீட்டை நான் அளித்திருந்தாலும் ஒரு சிலர் உயிர் நீத்த காட்சி என்னைக் கதிகலங்க வைத்தது !

இச்சமயத்தில் தான், நான் நீண்ட காலமாக மனதில் வைத்திருந்த ஒரு குறிக்கோளை நிறைவேற்றியே ஆக வேண்டுமெனத் தீர்மானித்தேன் ! அது தான் உலகத் தமிழர்களுக்கெல்லாம் தலையாய வாழ்க்கை நூலான “திருக்குறளை” எளிமையான வடிவத்தில் மிக மிக இலகுவான முறையில் – உடனடியாக மனதில் பதியும் படியாக புதுக்கவிதையில், அதுவும் மிக மிக இலகுவான **செயலி முறையில்** உலகத்தின் அனைத்து நாடுகளிலும் பரந்து விரிந்து வாழுகின்ற தமிழனுக்குச் சென்று கைகளில் உள்ள கைபேசியிலேயே **‘‘விலையில்லா வியத்தகு செயலி’’யாய்** அமர்ந்து, அவர்களது சிந்தனைக்கு விருந்தாகச் செயல்பட வேண்டுமென்ற என் வாழ்க்கைக் கனவை நிறைவேற்ற ஒரு வாய்ப்புக் கிடைத்தது !

இதை **“கொரோனா” தந்த “தமிழ்க்கொடை**”யாகவே பார்க்கிறேன்...!

## பிறந்த தமிழ்

“தமிழ்” என்னோடு பிறந்ததாகவே நான் நினைக்கிறேன்.

நான் பிறந்த சிறு கிராமமான **‘‘கீழச்சிவல்பட்டி’’** எனும் கிராமம், இராமநாதபுரம் மாவட்டத்தில் (இன்று சிவகங்கை மாவட்டம்) **“சிறு மதுரை”** என்றும் **“சிவல்புரி”** என்றும் அன்புடன் அழைக்கப்பட்டு வீற்றிருக்கிறது. பாடுவார் முத்தப்பர் பிறந்த ஊர்.

பிறந்தது முதல் தமிழால் தாலாட்டியே வளர்த்த ஆயா (தாயாரின் தாயார்) அப்பத்தா (தந்தையின் தாயார்) தாயார், பெரிய தாயார், சிறிய தாயார் போன்ற அனைத்துத் தாய்மார்களும் அந்த மண்ணின் பெண்மணிகள் தான்.

கீழச்சிவல்பட்டிக்கு அடுத்த ஊர் தான் “சிறுகூடல்பட்டி”.

சிறுகூடல்பட்டியில் முத்தையாவாக பிறந்தவர் தான் கவிஞர் கண்ணதாசன்.

கீழச்சிவல்பட்டியில் நான் ஆண்டிற்கு இரண்டு மாதம் பள்ளி விடுமுறைக்குச் செல்லும் போதெல்லாம் என்னுடன் பால்ய காலத்திலிருந்துப் பழகிய கவிஞர்கள் ஏராளம்.

அவர்கள் தான் தமிழை எனக்கு ஊட்டி விட்டார்கள். என்னுடன் சிறு வயது முதலே கீழ்ச்சிவல்பட்டியில் பழகிய கவிஞர்கள், எழுத்தாளர்கள் எல்லோருமே கண்ணதாசனின் தீவிரமான அபிமானிகள். கவியரசர் தான் எங்களின் மானசீகக் குரு.

அடுத்ததாக அந்த வட்டத்திலேயே ஒவ்வொரு சிறு கிராமத்திலும் பிறந்த நூற்றுக் கணக்கானக் கவிஞர்களும் – எழுத்தாளர்களும் எங்களின் உற்ற வழிகாட்டிகள்...!

## தமிழ் விளைந்த மண்

மகிபாலன்பட்டி எனும் பூங்குன்றத்தைச் சேர்ந்த கணியன் பூங்குன்றனார், பண்டிதமணி கதிரேசனார், சிறுகூடல்பட்டியைச் சேர்ந்த கண்ணதாசன், கீழச்சிவல்பட்டியில் பாடுவார் முத்தப்பர், சிவல்புரி சிங்காரம், வ. தேனப்பன், மேலைச்சிவபுரியில் வ.சுப. மாணிக்கனார், காரைக்குடியில் கம்பன் அடிப்பொடி சா. கணேசனார், தமிழ்க்கடல் ராய.சொ., தமிழண்ணல், ப. சிதம்பரம், பழ. கருப்பையா, தேவகோட்டையைச் சார்ந்த சின்ன அண்ணாமலை, தமிழ்வாணன், குழந்தைக் கவிஞர்கள் அழ. வள்ளியப்பா, செல்ல கணபதி, பொற்கிழிக் கவிஞர் அரு.சோ., சொ.சொ.மீ. கண. சிற்சபேசன், “காதல்” ராமனாதன், காசு மணியன், மா. கண்ணப்பன், அரு. நாகப்பன், பஞ்சு அருணாசலம் என அருமையான தமிழ்க் களஞ்சியமாக அந்தப் பகுதியே தமிழ் விளைந்த மண்ணாகத் திகழ்ந்தது. இன்றும் திகழ்கிறது.

எத்துணை, எத்துணைக் கவிஞர்கள்...! ஒவ்வொரு கிராமத்திலும் நூற்றுக்கும் மேல் அருமையான கவிஞர்கள் !

என்னுடைய ஊரான **கோனாபட்டில்** ஆரம்பித்து கானாடுகாத்தான், ஆத்தங்குடி, பலவான்குடி, சிறுவயல், ஆறாவயல், நாச்சியாபுரம், நேமத்தான்ட்டி, கோட்டையூர், அரிமளம், இராயவரம், கண்டனூர், புதுவயல், பள்ளத்தூர், சொக்கலிங்கம்புதூர், கடியாபட்டி, மேலைச்சிவபுரி, கீழப்பூங்குடி, வெற்றியூர், குழிபிறை, வலையபட்டி, கொத்தமங்கலம், நற்சாந்துபட்டி, பனையப்பட்டி, நெற்குப்பை, வேந்தன்பட்டி, கம்பர் நினைவிடம் அமைந்த நாட்டரசன்கோட்டை என ஒவ்வொருக் கிராமத்திலும் வியத்தகுத் தமிழ்ப் படைப்பாளிகள்தான்.

அங்கு கம்பனை இரசிக்காத ஆளே இல்லை. கண்ணதாசனைக் கொண்டாடாத ஆளே இல்லை ! பட்டினத்தாரையும் போற்றி, பாடுவார் முத்தப்பருக்கும் மணிமண்டபம் கட்டியவர்கள் ! பட்டினத்தாருக்கு ஆண்டு தோறும் விழா எடுப்பவர்கள்.

கவிஞர்களுக்காக மணிமண்டபங்கள் கட்டியவர்கள் காரைக்குடியில்தான் உண்டு. பாடுவார் முத்தப்பர் கோட்டம், கம்பன் மணி மண்டபம், கண்ணதாசன் மணி மண்டபம் என வரிசையாகச் சொல்லிக் கொண்டே போகலாம்.

காரைக்குடியில் திருக்குறளுக்காக வாழ்க்கையையே அர்ப்பணிக்கும் **திருக்குறள் தேனீ மெ. செயம்கொண்டான்** போன்று நல்லாசிரியர்களும், நண்பர்களும் அனேகம் பேர் உண்டு !

மகிபாலன்பட்டியில் கணியன் பூங்குன்றனாருக்கு சிலை அமைத்து அதை அப்போதைய முதல்வர் கலைஞரே அந்தக் கிராமத்திற்கு வந்து திறந்து வைத்திருப்பது வியப்பான செய்தி. தமிழன்னைக்கு கோயில் உள்ள ஒரே ஊர் காரைக்குடிதான்.

அடுத்ததாக மதுரையில் நான் கல்லூரிக் காலத்தில் பழகிய தமிழ் சான்றோர்கள், பட்டிமன்றப் பேச்சாளர்கள், கண்ணதாசன் மன்றத்தினர் யாவரும் எனக்கு தமிழ் உணர்வை ஊட்டிக் கொண்டே இருந்தனர்.

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்"** என்ற உலகப் புகழ் பெற்ற புறநானூற்றுப் பாடலை இயற்றிய கணியன் பூங்குன்றனார் பிறந்தது மகிபாலன்பட்டி! மகிபாலன்பட்டியின் முந்தைய பெயர் தான் பூங்குன்றம். மகிபாலன் என்ற அரசர் ஆண்ட பிறகு மகிபாலன்பட்டி ஆனது ! நான் என் பெரிய தாயாரைப் பார்க்கச் செல்லும் போதெல்லாம் மகிபாலன்பட்டியில் பூங்குன்ற நாயகி அம்மன் கோவிலுக்கும், கணியன் பூங்குன்றனாரின் சிலைக்கும் வணக்கங்களைத் தெரிவித்து விட்டுத்தான் வருவேன்.

**"யாதும் ஊரே"** என்றழைத்த கணியன் பூங்குன்றனார் என்னுடைய இராமநாதபுரம் (முகவை) மாவட்டத்தைச் சேர்ந்தவர். என்னுடைய தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் என்று சொல்வதை விட உலகத்தில் வாழும் அனைத்து தமிழர்களின் அடையாளமாக **"கணியன் என்பவன் ஒப்பற்ற தமிழன்"** எனப் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

என்னுடைய தமிழ் உணர்வை ஊக்கப்படுத்தியது காரைக்குடியும், மதுரையும் தான்.

இரத்தத்தில் கலந்த தமிழுக்கு ஓர் அணி செய்ய வேண்டுமென நினைத்தேன். விளைவு இந்த புதுக்கவிதைத் தொகுப்பு !

ஒவ்வொரு சூழ்நிலையையும் வரிசைப்படுத்தி, ஒவ்வொரு மன நிலையையும் வரிசைப்படுத்தி, ஒவ்வொரு தொழிலையும் வரிசைப்படுத்தி அதற்கேற்ப குறட்பாக்களை அதற்கேற்ற தலைப்புகளில் எளிதாக இலகுவாக புரிந்துகொள்ளும்படி புதுக்கவிதைகளில் புனைந்து தந்துள்ளேன் !

குமரிக் கண்டத்தில் 20,000 வருடங்களுக்கு முன்பே **முதல் தமிழ்ச் சங்க காலத்தில்** இயற்றப்பட்ட முதுநாரை, முதுகுறுக்கு, களரிவேளை, பேரதிகாரம் போன்ற நூல்களும், **6000 வருடங்களுக்கு முன்பு** (கி.மு. 3700ல்) **இரண்டாம் தமிழ்ச் சங்க காலத்தில்** இயற்றப்பட்ட அகத்தியம், பூத புராணம், மா புராணம், தொல்காப்பியம் ஆகியவற்றில் நமக்கு தொல்காப்பியம் மட்டுமே கிடைத்துள்ளதாக வரலாறு பறை சாற்றுகிறது.

அதற்குப் பிறகு **2000 வருடங்களுக்கு முன்பு மூன்றாம் தமிழ்ச் சங்க காலத்தில்** இயற்றப்பட்ட பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பொக்கிஷமாக கிடைத்துள்ளது. அதில் திருக்குறள் முதன்மையானது.

**'யாப்பிலக்கணத்தில்''** தொடை என வழங்கப்படும் செய்யுள் உறுப்பு வகைகளில் எதுகை – மோனை முக்கியமானதாகும்.

**வெவ்வேறு அடிகளின் அல்லது சீர்களின் முதலெழுத்துகள் ஒத்துவரின் "மோனை" எனப்படும்.**

அடிதோறும் தலை எழுத்து ஒப்பது **''அடி மோனை''** என்பது **"தொல்காப்பியர்"** கூற்று...!

"அடி மோனை" தவிர "சீர் மோனை"யில் **7 வகையான மோனைகள்** உள்ளன.

1) இணை மோனை; 2) பொழிப்பு மோனை; 3) ஒரூஉ மோனை; 4) கூழை மோனை; 5) மேற்கதுவாய் மோனை; 6) கீழ்க்கதுவாய் மோனை; 7) முற்று மோனை எனும் ஏழு சீர் மோனைகளும் கவிதைக்குக் கூடுதல் அழகு சேர்ப்பதே!

இதில் 1330 குறட்பாக்களில் முதல் அதிகாரத்தில் ஒரு சில குறட்பாக்களைத் தவிர மற்ற அனைத்துக் குறட்பாக்களும் "அடி மோனை" எனும் மோனைத் தொடையில் ஆனால், வள்ளுவனின் கருத்தில் கொஞ்சமும் வேறுபாடில்லாமல் – கூட்டல், கழித்தல் இல்லாமல் புதுக் கவிதைகளை எளிதில் மனதில் பதியுமாறு இயற்றியுள்ளேன்.

**பத்து அம்சக் குறிக்கோளில் உறுதியான நிலைப்பாடு :**

**(1)** வள்ளுவனின் கருத்தில் எந்த விதமானக் கூட்டலும் கழித்தலும் கொள்ளாமல் 2000 வருடங்களுக்கு முன்பு வள்ளுவன் என்ன நினைத்தானோ அதை இயன்றவரை அப்படியே புதுக்கவிதையில் புரிந்து கொள்ளும்படித் தர வேண்டும்.

**(2)** கி.மு. 31இல் எழுதிய வள்ளுவன் இன்று கி.பி. 2020இல் எழுதினால் எப்படியோ அப்படியே கொடுக்க வேண்டும்.

**(3)** கடைச்சங்கக் காலத்தில் இயற்றப்பட்ட இலக்கியங்களான **பதினெண் மேற்கணக்கு நூல்களில் (18), எட்டுத்தொகை (8) நூல்களான** நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகியவைகளும் **பத்துப்பாட்டு (10) நூல்களான** திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் ஆகியவையும், **பதினெண்க் கீழ்க்கணக்கு நூல்களான (18)** நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவை நாற்பது, களவழி நாற்பது, கார் நாற்புது, ஐந்திணை ஐம்பது, திணை மொழி ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, கைந்நிலை ஆகிய நூல்களில் "திருக்குறள்" மட்டுமே **"சு.சொ.வி.வை."** ஆம்! "சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும்" புதையல்!

அதனால் சங்கப் புலவர்கள் பலரே வியந்து திருக்குறளை பாராட்டி உள்ளனர்.

உதாரணத்திற்கு...

1. *எல்லாப் பொருளும் இதன்பாலுள இதன்பால்*
   *இல்லாத எப்பொருளும் இல்லையால்*
   –மதுரைத் தமிழ் நாகனார்

2. *தினையளவு போதாச் சிறு புன்னீர் நீண்ட*
   *பனையளவு காட்டும் படித்தால்...*
   –கபிலர்

3. *கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக்*
   *குறுகத் தரித்த குறள்*
   –இடைக்காடர்

4. *அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக்*
   *குறுகத் தரித்த குறள்*
   –ஔவையார்

5. தற்காலத்தில் – *வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து*
   *வான்புகழ் கொண்டது தமிழ்நாடு !*
   –பாரதி

இதில் சங்க காலத்து ஔவையார், இடைக்காடர் சொன்னதை வழி மொழிந்தாலும் “கடு”கிற்குப் பதிலாக அணு விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பதற்கு முன்பே “அணு”வை அற்புதமாக உதாரணம் காட்டியுள்ளார்.

இந்தச் சங்க கால இலக்கியங்களுக்குப் பிறகு கி.பி. 2ம் நூற்றாண்டு முதல் கி.பி. 12ஆம் நூற்றாண்டு வரை இயற்றப்பட்ட ஐம்பெருங்காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியவையும் கம்ப ராமாயணமும், 12ஆம் நூற்றாண்டு ஔவையாரின் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை போன்ற பல புதையல்களும் தமிழ்த்தாத்தா உ.வே.சா. போன்றவர்களால் பாதுகாக்கப்பட்டு நமக்கு கிடைத்தது தமிழர்கள் செய்த பெரும் புண்ணியமே!

புண்ணியம் என்றவுடன் நினைவிற்கு வருவது இதே சங்கம் மருவிய காலத்தில் பக்தி இலக்கியத்தில் தேவாரமும், திருமூலரின் திருமந்திரமும், திருப்புகழும், மாணிக்க வாசகரின் “திருவாசகமும்” அற்புதமானப் புதையல்களே !

**(4)** இரண்டாயிரம் வருடங்களுக்குப் பிறகு இப்போதும் கூட குறளை ஒரு தடவைக்கு 5 தடவைப் படித்தால் ஈரடியில் உள்ள 7 வார்த்தைகளில் 3 அல்லது 4 வார்த்தைகள் இன்னும் நாம் இத்துணை ஆண்டு காலமாக உபயோகித்து வருவதால் நமக்கு நன்கு புரியும். அந்தச் சொற்களையாவது இன்னும் பல தலை முறைகளுக்குப் புழக்கத்தில் இருப்பது போல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக முதல் அடியில் அனைத்துச் சீர்களிலும் மோனை இருப்பது போல் முற்று மோனையில் எழுதப்பட்ட 2 குறட்பாக்களைப் பார்ப்போம்..!

*கற்க கசடற கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக.*

2000 வருடங்களுக்கு முன் வள்ளுவன் எழுதிய இந்தக் குறட்பாவில் அனைத்துச் சொற்களும் இப்போதும் நாம் உபயோகப்படுத்துபவை ! புரிந்து கொள்வது மிக எளிது !

இரண்டாவது "முற்று மோனை"யில் எழுதப்பட்ட குறளான

*துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்*
*துப்பாய தூஉம் மழை.*

மழை பற்றிய அதிகாரத்தில் உள்ள இக்குறளில் "மழை" என்ற சொல் மட்டுமே நமக்குப் புரியும்...! அதற்கு காரணம் **"துப்பு"** என்பது 2000 வருடங்களுக்கு **"உணவு"** தான் என்பது நமக்குத் தெரியாது !

இப்போது **குறளைப் பிரித்துப் பாருங்கள்...!**

**துப்பார்க்கு** – உணவு உண்பவர்க்கு

**துப்பாக்கி** – துப்பு ஆக்கி – உணவு ஆக்கி

**துப்பு ஆய** – ஆய்ந்த உணவு – தக்க உணவு (தானும் தக்க உணவாக)

ஆக நீங்கள் இப்படி 1330 குறட்பாக்களையும் பிரித்துப் பொருள் புரிந்து ஆய்ந்தால் எத்துணைத் தமிழ்ச் சொற்களை நாம் இப்போது உபயோகப்படுத்தாமல் – புழங்காமல் இழந்து விட்டோம் என்பது புரியும் !

**அதனால் விளைந்ததே இந்த எளிய – இனிய – "அடி மோனை"யில் விளைந்த புதுக்கவிதையில் திருக்குறள்...!**

**(5)** தமிழ் மாணவர்களும் – பேச்சாளர்களும், எழுத்தில் – பேச்சில் திருக்குறளை மேற்கோள் காட்டத் தோதாக தேவையானக் குறட்பாக்களை மனப்பாடம் செய்யும்போது அத்துடன் இன்றைய மக்கள் புரிந்து கொள்கிற வகையில் அந்த குறளுக்கானப் புதுக்கவிதையையும் எளிமையான முறையில் இலகுவாக மனதில் கொண்டால் மேடையில் மேற்கோள் காட்டுவதற்கும், எழுத்தில் எழுதுவதற்கும் பயன்படும்.

**(6)** உலகில் உள்ள அத்துணைப் பாராளுமன்றங்களிலும் நமது பிரதமர் – நிதியமைச்சர் – முதலமைச்சர் ஏன் ? குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் ஐயா போன்றவர்கள் குறளை மேற்கோள் காட்டுவது போல் தமிழ் மரபில் வந்த அரசியல் தலைவர்கள் வெளிநாடுகளில் – மேற்கோள் காட்ட இலகுவாக இருக்குமென நினைத்தேன்.

**(7)** முக்கியமாக அந்தந்தத் துறையில் இருப்பவர்கள்– (1) ஆட்சித்துறை (2) அமைச்சுத்துறை (3) இராணுவம் (4) காவல்துறை (5) வர்த்தகம் (6) அறிவியல் (7) மருத்துவம் (8) குடும்பம் (9) சமூகம் என பலதரப்பட்ட அறிஞர்கள் – மானுட சமூகம் தங்கள் துறைக்கானக் குறட்பாக்களை, இலகுவாக செயலியில் அந்தந்தத் தலைப்புக்கே சென்று என்னென்ன வள்ளுவன் சொல்லி இருக்கின்றான் எனப் பார்த்து ப் படித்து அதை அவர்களுடைய உரையாடல்களில் மேற்கோள் காட்டலாம்.

அதைவிட முக்கியம் அந்தந்தத் துறையினர் ( உதாரணமாக நான் சார்ந்த **காப்பீட்டுத் துறைக்கும் குறள்** தந்திருக்கிறான் வள்ளுவன் – **"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை"...** என்று ) குறள்படி எப்படி **முடிந்தவரை தத்தமது வாழ்க்கையில்** நெறியாகக் கொண்டு வழி காட்டியாக கொள்வது என முடிவு செய்து கொள்ளலாம் என நினைத்தேன்.

**(8)** மிக மிக முக்கியமான காரணம் – தமிழன் இப்போது உலகெங்கும் பரந்து விரிந்து வாழத் துவங்கி விட்டான். வெளி நாடுகளிலேயே மூன்று தலைமுறைகளுக்கும் மேலாக ஆண்டுகள் உருண்டோடி விட்டன.

இலங்கை முதல் இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, சிங்கப்பூர், மலேசியா, துபாய், அபுதாபி, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் மற்ற ஐரோப்பா நாடுகள் என அண்டார்டிகா வரை சென்று வாழ்கிறான். அந்தந்த நாட்டு மக்களுடன் தமிழன் கலந்து வாழப் பழகி விட்டாலும் அடிப்படையில் தமிழ் உணர்வும் தமிழ்ப் பற்றும் நிறைய உள்ளன. அவனுக்கு எப்போதும் சிந்தனைக்கு விருந்தாக குறளும் – குறளின் எளிமையான புதுக் கவிதையும் தங்களது கைகளிலேயே 24 மணி நேரமும் இருந்தால் நலம் என நினைத்தேன்.

**(9) ஏன் குறள் கைகளில் இருக்க வேண்டும் ?**

**வள்ளுவன் தொடாத பொருளே – பிரச்சினையே இல்லை**

இரண்டாயிரம் வருடத்திற்கு முன்பு வள்ளுவன் ஒவ்வொருப் பிரச்சினைக்கும் எப்படித் தீர்வைச் சொல்லி இருக்கிறான் என நாம் ஆராய்ந்து. அதிலிருந்து ஒரு தெளிவான முடிவை எடுக்க குறள் – அதுவும் உடனடியாக புரிகிற எளிமையான தமிழில் (இன்றைக்கு புரிகிற தமிழில்) இருந்தால் தமிழனுக்குக் கிடைத்த புதையலை தேவையான நேரத்தில் உபயோகப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பாக நாம் இதைக் கொள்ளலாம் என நினைத்தேன்.

எந்தவொரு இக்கட்டானச் சூழ்நிலையிலும் ஓர் வழிகாட்டியைக் காண கைபேசியிலேயே குறளை ஆலோசிக்க வேண்டும் என நினைத்தேன்.

உதாரணத்திற்கு நான் அடிக்கடி மனதில் சொல்லிக் கொள்ளும் என் கவி ஆசான் கண்ணதாசனின் பாட்டு வரிகள் :–

*வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்*
*வாசல் தோறும் வேதனை இருக்கும்*
*வந்த துன்பம் எதுவென்றாலும்*
*வாடி நின்றால் ஓடுவதில்லை...!*

கண்ணதாசன் எல்லாப் பிரச்சினைக்கும் ஒரு தீர்வைச் சொல்லி இருப்பார்!

வள்ளுவன் ஒவ்வொரு பிரச்சினைக்கும் ஒவ்வொரு தீர்வைச் சொல்லி இருப்பார்!

ஆகவே, என் மனதில் பதிந்த பாட்டைப் போலவே பிரச்சினைகளின் தன்மைக்கேற்ப ஒவ்வொருத் தமிழனும் வள்ளுவனின் தீர்வை அதற்கேற்ற குறளை உடனடியாக அதிக நேர விரயமும் இல்லாமல் பண விரயமும் இல்லாமல் **விலையில்லா செயலியிலேயே** புரிகின்ற புதுக்கவிதையுடன் சேர்ந்து வள்ளுவனின் தீர்வுகளை அலசி ஆராய்ந்து முடிவினை எட்ட முடிவெடுத்தேன். ஆதலால், இந்தப் புதுக்கவிதைப் புத்தகம் கொரோனோ காலத்தில் உண்டானது.

**(10)** இன்னொரு முக்கியமானக் காரணம் : உலகெங்கும் தமிழ்நாடு உட்பட பள்ளி கல்லூரிகளில், அமெரிக்க தமிழ்ப் பல்கலைக்கழகங்களில் பயிலும் எதிர்காலத் தலைமுறை – சந்ததிகள் – இளம் மாணவர்கள் எந்தவொரு குறளுக்கும் விளக்கம் கேட்டுத் தேர்வுகளில் வினா வரும்போது பதில்களை உடனடியாக புதுக்கவிதைப் பாணியில் மனதில் எளிதாக நிறுத்தியிருந்ததை எழுதினால் போதும். அத்துடன், எளிதாக மனதில் புரிந்து குடிகொண்ட குறள்படி வாழ்க்கையில் எதிர்காலத்தில் நெறிப்படுத்திக் கொள்ள ஒரு வாய்ப்பாக அமையும்.

மேலும், நவீன உத்தியான செயலி மூலம் குறளைத் தமிழ்ச் சந்ததிகள் வாழ்கின்ற மூலை முடுக்கெல்லாம் எளிமையாக – இனிமையாகக் கொண்டு போய்ச் சேர்ப்பது முக்கிய நோக்கமாகும்!

அதனால், தமிழ் மாணவச் சமூகத்தின் எதிர்காலம் மன வளம் மிக்கதாக மாறும் என்பதில் ஐயமில்லை.

இதற்கு நான் பிறந்த மண்ணிற்கும், உற்ற தமிழுக்கும், உறவுத் தமிழுக்கும் என்றென்றும் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன்.

**உற்ற தமிழும், உறவுத் தமிழும் – நான் சுவாசித்த தமிழே :–**

பேச்சுகளில் நான் கேட்ட தமிழாக விளங்குகிற கலைஞர், நாவலர், குமரி அனந்தன், திருக்குறள் முனுசாமி, சிலம்பொலி செல்லப்பன், சாலமன் பாப்பையா, அருளாளர் ஆர்.எம். வீரப்பன், மு.மு. இஸ்மாயில், தமிழருவி மணியன், இலங்கை ஜெயராஜ், சுப. வீரபாண்டியன், குன்றக்குடி அடிகளார், சுகி. சிவம், நெல்லை கண்ணன் மற்றும் பல தலைவர்களும், அறிஞர்களும், கவிதைகளில் கம்பன்,

பட்டினத்தார், பாரதி, பாரதிதாசன், பட்டுக்கோட்டை, கண்ணதாசன், வாலி, வைரமுத்து, சுரதா, நா. முத்துக்குமார், இளந்தேவன், புலமைப்பித்தன், முத்துலிங்கம், நா. காமராசன், பிறைசூடன், பா. விஜய், பழநி பாரதி, யுகபாரதி, தாமரை, கபிலன், நெல்லை ஜெயந்தா, முத்துவிஜயன், சினேகன், ப்ரியன், மதன் கார்க்கி என வரிசை கட்டி நிற்கின்ற என்னருமைக் கவிஞர்களும், கட்டுரைகளில் வலம்புரி ஜான், திசைகள் மாலன், ஞாநி, லேனா தமிழ்வாணன், கதைகளில் கல்கி, சாண்டில்யன், தமிழ்வாணன், ஜெயகாந்தன், பாலகுமாரன், சுஜாதாவும்; புதுக்கவிதைகளில் மு. மேத்தா, அப்துல் ரகுமான், தமிழன்பன், மீரா, சிற்பி, அடியார், அறிவுமதி, தபூ சங்கர் ஆகியோரும், பத்திரிகைகளில் விகடன், குமுதம், கல்கண்டு, கல்கி, சாவி, இதயம், அம்புலிமாமா, தினமணிக்கதிர், தினமலர் வாரமலர், ஆகியவையும் பதிப்பகங்களான வானதி, பூம்புகார், திருமகள் நிலையம், பழனியப்பா பிரதர்ஸ், பாரதி புத்தகாலயம், விகடன் பிரசுரம், மணிமேகலை பிரசுரம், கிழக்குப் பதிப்பகம், பாரி நிலையம், கண்ணதாசன் பதிப்பகம், நக்கீரன் பதிப்பகம், அருணோதயம், சக்தி பிரசுரம் (வை. கோவிந்தன்), முல்லை பதிப்பகம் என அனைத்துத் தமிழ் அறிஞர்களும், தமிழ் அமைப்புகளும் உற்ற தமிழாக என் வாழ்வில் அமைந்தது எனக்குக் கிடைத்த வரம்.

என் இனிய உறவுத் தமிழாக குறளுக்கு உரை எழுதிப் புகழ் பெற்ற பரிமேலழகருக்கு அடுத்தபடியாக **மு.வ.** அவர்களின் குடும்பம் பழகியது. மு.வ. வின் மைந்தர் மருத்துவர் நம்பி எனக்கு மருத்துவராகவும், அவருக்கு நான் மருத்துவக் காப்பீட்டாளராகவும் அமைந்தது நான் பெற்ற பாக்கியமே! உறவுகளைப் போல் எப்போதும் பழகும் பதிப்பகத்தாரும், குறிப்பாகப் பழனியப்பா பிரதர்ஸ் குடும்பத்தாரும், மணிமேகலைப் பிரசுரக் குடும்பத்தினர், லேனா தமிழ்வாணன், ரவி தமிழ்வாணன் அவர்களும் என் உறவுத் தமிழே!

## உரை எழுதியவர்களும்... எழுதப் போகிறவர்களும்...

திருக்குறள் கி.மு. 31இல் இயற்றிய பிறகு முதன் முதலில் 10ஆம் நூற்றாண்டில் சுமார் 1031 வருடங்களுக்குப் பிறகு மணக்குடவர் தெளிவுரை குறுகிய அளவிலான எளிமையான உரை எழுதுகிறார். அதைப் பின்பற்றி பத்தாவது உரையாசிரியர் 13ஆம் நூற்றாண்டின் பின் பகுதியில் பரிமேலழகர் எழுதுகிறார்.

இடையில் தருமர், தாமத்தர், திருமலையர், மல்லர், நச்சர் 5 பேர்கள் எழுதிய உரைகள் கிடைக்கவில்லை. பரிதி, பரிப்பெருமாள், காலிங்கர் எழுதிய உரைகளும் மணக்குடவர், பரிமேலழகர் உரைகளும் கிடைக்கப் பெற்றன என வரலாறு கூறுகிறது. இதில் பரிமேலழகர் உரை மிக நுட்பமானது, அருமையானது எனத் தமிழ் உலகம் பறை சாற்றுகிறது.

மணக்குடவர் உரையை முதன்முதலில் வ.உ.சி. அவர்கள் 1917இல் பதிப்பித்தார். இந்த 1000 வருடங்களில் 400க்கும் மேற்பட்டவர்கள் உரை

எழுதியுள்ளார்கள். அதில் தற்காலத்தில் 100க்கும் மேற்பட்ட அறிஞர்கள் "திருக்குறள்" எனும் சந்தனத்தை உரசிப் பார்த்தவர்கள். அதில் குறள் போலவே "புதிய குறளாக" ஒருவரும், புதுக்கவிதையில் ஒருவரும், இருவரியில் ஒருவரும், ஒரே வரித் தெளிவுரையாக ஒருவரும் அருமையாக இயற்றியுள்ளனர்.

இதோ நானும் ஒரு சிறுபிள்ளை ஒரு "புதுக்கவிதை"யைத் தந்திருக்கிறேன்...!

இதை ஏன் புதுக்கவிதை என்றழைக்கிறேன் என்றால் சில குறட்பாக்களுக்கு முதலிரண்டு அடிகளுக்கு ஒரு அடி மோனையும், அடுத்த இரண்டு அடிகளுக்கு ஒரு அடி மோனையும் இருப்பதால் இலக்கண வரம்புகளுக்கு மீறிச் சென்று விடுகிறது !

ஆதலால் இது கொஞ்சம் தடைகளைத் தாண்டிய "புதுக்கவிதை !"

இதில் ஏதாவது பிழைகள் இருப்பின் திருத்தங்களை அடுத்த பதிப்பிலும், அடுத்த இணையதள பதிவேற்றத்திலும் வெளியிட உங்கள் பொன்னான கருத்துகளை www.kambanpathippagam.com எனும் பதிப்பக இணைய தளத்தில் உள்ள மின்னஞ்சல் முகவரிக்கு மின்னலாய்க் காற்றின் மூலம் அன்போடு தெரிவியுங்கள்...!

**107 மொழிகளில்...**

1794இல் கின்டெர்ஸ்லே தொடங்கி, ஜி.யு. போப் முதல் ஆங்கிலத்தில் 50 அறிஞர்கட்கு மேல் மொழிபெயர்ப்புச் செய்துள்ளனர்.

1730இல் இலத்தீன் மொழியில் வீரமாமுனிவர் தொடங்கி இதுவரை 107 மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது என வரலாறு கூறுகிறது.

எதிர்காலத்தில் இன்னும் 10 வருடங்களில் "ஹைக்கூ"வில் ஒருவர் எழுதலாம் !

கற்க கசடற குறளை "ஹைக்கூ"வில் எழுதினால் எப்படி என ஒரு கற்பனை...!

*கற்க... கற்க...*
*நன்கு கற்க...*
*கற்ற பின் நிற்க...*
*ஓ...! கொஞ்சம் நிற்க*
*மீண்டும் முதலிலிருந்து படிக்கவும்...!*

**"ஹைக்கூ"விற்கு இலக்கணமாகக் கடைசி வரியில் ஒரு திருப்பு முனை !**

இன்றும் 50 வருடங்களில் Whatsapp மொழியில் "Smiley Images" வைத்து உரை எழுதலாம் ! அல்லது 500 வருடங்களில் சுஜாதா சொல்வது போல் மனிதர்களுக்குப் பெயர்கள் எல்லாம் எண்களாக இருக்கும் பட்சத்தில் (உலகப் பொது Aadhar Number ) உலக மொழியான எண்கள் மொழியில் கூட உரை எழுதப்படலாம் !

ஏன் சொல்கிறேன் என்றால் எத்துணை ஆயிரம் – இலட்சம் வருடங்கள் ஆனாலும் "திருக்குறள்" நிற்கும் ! பொருந்தி நிற்கும் !

முத்தாய்ப்பாக உறவுத் தமிழாக விளங்கும் எனக்குத் தமிழ்ப்பாலை ஊட்டிய என் பெற்றோருக்கும், எப்போதும் ஊக்கப்படுத்தும் என் மனைவி, மகள் உள்ளிட்ட குடும்பத்தார்க்கும், வள்ளுவர் பெயரால் ஊரில் பள்ளி நடத்தும் உறவினர்களுக்கும், எப்போதும் உற்சாகப்படுத்தும் எங்கள் காப்பீட்டுத் துறையின் சக தோழர் பாஸ்கரன் மாசிலாமணி அவர்கட்கும் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன்.

பல அரிய தமிழ்ச் சொற்களை சர்வ சாதாரணமாகப் பயன்படுத்தி எனக்குத் தமிழ் மீது மோகத்தை ஏற்படுத்திய எங்கள் தாய்மார்களுக்கு என்றென்றும் என் காணிக்கை உண்டு. **அவர்களின் தாலாட்டில்தானே எனக்குத் தமிழ் பிறந்தது !**

நமக்குத் தெரிந்து உலகின் முதல் மனநல நிபுணர் **"World's First Psychiatrist"** அல்லது **"World's First Human Behaviour Scientist"** வள்ளுவன் தான் எனக் கொள்ளலாம்.

இப்புத்தகத்திற்கு வாழ்த்துரை வழங்கிய அறிஞர்களுக்கும், தலைவர்களுக்கும் நன்றி !

வழக்கம் போலக் கணிப்பொறித் தட்டச்சு செய்த வள்ளுவர் பிறந்த மண்ணான மயிலாப்பூரைச் சேர்ந்த தம்பி செந்தில் குமரனுக்கும், அழகாக அச்சிட்ட 35 ஆண்டுகளுக்கு மேலாக குடும்பம் போல் பழகும் **தமிழகத்திற்கு கோனார் உரையைத்** தந்த பழனியப்பா பிரதர்ஸ் நிர்வாகிகள் முத்து, செல்லப்பன், ஏஷியன் பிரிண்டர்ஸ் சுப்பு அண்ணன்களுக்கும் நன்றி. நான் கல்லூரி மாணவனாக இருக்கும்போதே ஊக்குவித்த பழனியப்பா பிரதர்ஸ் பழனியப்ப ஐயாவை என்றென்றும் வாழ்வில் மறக்க முடியாது. இப்புதுக்கவிதைத் தொகுப்பிற்கு காப்புரிமைபெற்றுத் தந்த தம்பி வழக்குரைஞர் அழகு நாராயணன் அவர்கட்கும் நன்றி. இப்புதுக்கவிதைத் தொகுப்பை அற்புதமாக இணைய தளத்திலும், குறள் செயலியிலும் வடிவமைத்துப் பதிவேற்றிய தம்பி தினேஷ்குமாருக்கும் நன்றி.

நான் விரும்புவது எல்லாம் ஒன்று தான்...! உதாரணத்திற்கு ஒரு **தமிழன் கனடாவில் வசிப்பவர்** டோரென்டோ நகரில் ஒரு பல்கலைக் கழக கூட்டத்திற்கோ, திருமண – சமுதாயக் கூட்டத்திற்காகச் செல்லும் போது உடனடியாக அந்த தமிழர் குழுக்களுக்கானத் **தலைப்புக்கான குறட்பாக்களையும்** அதன் புரிதலுக்கானப் **புதுக்கவிதைகளையும் கைபேசியிலேயே தேர்வு செய்து மனதில் நிறுத்தி கூட்டத்தில் மேற்கோள் காட்டிப் பேசினால்** அருமையாக இருக்கும் என நினைத்தேன் ! அத்தகைய அற்புதமான நிகழ்வுகள் உலகெங்கம் நடந்தால் அதைவிடப் பிறவிப் பயன் எனக்கு எதுவுமில்லை !

இந்த இடத்தில் ஒரே ஒரு வேண்டுகோள், அப்படி மேற்கோள் காட்டும் போது இப்புதுக்கவிதைக்கு ஓர் அங்கீகாரத்தை தந்து ஒவ்வொருவரும் ஒரு ஆயிரம் தமிழர்களையாவது இந்தக் குறள் செயலியை பதிவிறக்கம் செய்து பயன் பெற்றுக் கொள்ள அறிவுறுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தமிழன் எவ்வளவு நாகரிகமான சமூகமாக இருந்திருக்கிறான் என்று வள்ளுவன் எழுத்தில் – எண்ணத்தில் தெரிகிறது.

2000 வருடங்களுக்கு முன்பே தமிழன் காதலையும், கண்ணியத்தையும், ஒழுக்கத்தையும், பண்பையும், அன்பையும், இல்லறத்தையும், நாகரிகத்தையும், பண்பாட்டையும், சமூக நல்லிணக்கத்தையும், கடைப்பிடித்திருக்கிறானே…! ஆச்சர்யம் தான் !

200 வருடங்களுக்கு முன்பு கூட உலகத்தின் பல இடங்களில் மனிதர்கள் காட்டு மிராண்டிகளாக இருந்திருக்கும்போது தமிழ்ச் சமூகம் முதல் முதலில் தோன்றிய நாகரீகமான – பண்பட்ட சமூகம் தான் !

அன்று பெண்களுக்கு இருந்த அதே காதல், வெட்கம், பொய்க்கோபம் இன்றும் இருக்கிறது. அதை அப்படியே இன்பத்துப்பாலில் 250 குறட்பாக்களும் படம் பிடித்துக் காட்டுகின்றன !

அன்றும் அமைச்சர்கள் இருந்திருக்கிறார்கள்; துறவிகள் இருந்திருக்கிறார்கள்; மருத்துவர்கள் இருந்திருக்கிறார்கள்; வர்த்தகர்கள் இருந்திருக்கிறார்கள்; ஏழைகள் இருந்திருக்கிறார்கள்; பணக்காரர்கள் இருந்திருக்கிறார்கள்; திருடர்கள், ஊழல் புரிபவர்கள் இருந்திருக்கிறார்கள். “கோடி” என்ற, எண்ணிக்கையில் செல்வங்கள் மதிப்பிடப்பட்டிருக்கிறது. மது இருந்திருக்கிறது; புலால் இருந்திருக்கிறது; நீதி வழங்கும் அமைப்புகள் இருந்திருக்கின்றன; என்ன…. அன்று அரசன், இன்று முதல்வன் அல்லது பிரதமமந்திரி அவ்வளவுதான் வித்தியாசம்.

என்னை இந்த எழுத்துப் பணிக்கு ஆசீர்வதித்த நான் தினமும் வணங்கும் பிள்ளையார்பாட்டி கற்பக விநாயகருக்கும், என் மனதில் தெய்வமாக வாழும் தெய்வப் புலவன் வள்ளுவனுக்கும் இப்படைப்பைக் காணிக்கை ஆக்குகிறேன்.

எட்டுத் திக்கும் குறள் என்றைக்கும் பரவி, நிலை பெற்று தமிழர்களை சிறப்புடன் வாழ வைக்க வேண்டுமென்பதே என் அவா !

இனி உங்களுக்கும் வள்ளுவனுக்கும் இடையில் யாரும் இல்லை… இன்புற்றுப் படிக்க அழைக்கின்றேன் !

அன்புடன்

சென்னை
13/10/2020

*குறளை உடனடியாகத் தேர்ந்தெடுக்க*
*குறள் செயலியில் உள்ள நடப்புத் தலைப்புகள்...*

## அற்புதத் தலைப்புகள் 62

1. **கடவுள் வாழ்த்து**
அதிகாரம் : 1
2. **இயற்கை வாழ்த்து**
அதிகாரம் : 2
3. **இல்லற வாழ்க்கையைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 5
4. **மனைவி மார்களுக்கு வள்ளுவன்**
அதிகாரம் : 6
5. **கணவன் மார்களுக்கு வள்ளுவன்**
அதிகாரம் : 91
6. **பெற்றோர்களுக்கு வள்ளுவன்**
(குழந்தை செல்வத்தைப் பற்றி...)
அதிகாரம் : 7
7. **மாணவர்களுக்கு வள்ளுவன்**
(கல்வியைப் பற்றி...)
அதிகாரங்கள் : 40, 41, 42
8. **காவல்துறை / இராணுவத்தினருக்கு வள்ளுவன்**
அதிகாரங்கள் : 75, 78
9. **மருத்துவத்துறையினருக்கு வள்ளுவன்**
அதிகாரம் : 95
10. **நீதித் துறையினருக்கு வள்ளுவன்**
அதிகாரம் : 12
11. **சமூக சேவகர்களைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 22
12. **விவசாயத்தைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 104
13. **நிதி / செல்வத்தைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரங்கள் : 76, 101
14. **2000 வருடங்களுக்கு முன்பே எப்படித் தொழில் (Business) செய்ய வேண்டுமெனச் சொல்லிக்கொடுக்கின்றான் வள்ளுவன்...**
12 குறட்பாக்கள் : 449, 461, 462, 463, 464, 465, 467, 468, 501, 502, 509, 512

15. **மனித வள (HR) மேம்பாட்டுத் துறையினருக்கு வள்ளுவன் சொல்வது...**
அதிகாரங்கள் : 51, 52
16. **ஆளுமை, ஊக்கம், முயற்சி (Management) பற்றி வள்ளுவன்**
அதிகாரங்கள் : 60, 62, 66, 67, 68
17. **ஆட்சியாளர்களுக்கு வள்ளுவன்**
அதிகாரங்கள் : 39, 55, 56, 57, 58, 59, 69, 74
18. **அமைச்சர்களுக்கு வள்ளுவன்**
அதிகாரங்கள் : 64, 70
19. **அறத்தைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 4
20. **ஒழுக்கத்தைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 14
21. **மதுப்பழக்கத்தைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 93
22. **புலால் உண்பதைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 26
23. **பொது மகளிர் உறவைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 92
24 **அன்புடைமையைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 8
25. **விருந்தோம்பலைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 9
26. **இனிமையாகப் பேசுவது பற்றி வள்ளுவன்**
அதிகாரங்கள் : 10, 20
27. **மேடைப் பேச்சு பற்றி வள்ளுவன்**
அதிகாரங்கள் : 65, 72, 73
28. **நண்பேன்டா... எனச் சொல்லும் வள்ளுவன்**
அதிகாரங்கள் : 46, 79, 80, 81, 82, 83
29. **உறவுகள் பற்றி வள்ளுவன்**
அதிகாரங்கள் : 53
30. **குறிப்பறிந்து நடந்து கொள்வது எப்படி ?**
அதிகாரம் : 71
31. **நன்றியுடைமையைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 11

32. **கோபப்படாமல் இருப்பதைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 31

33. **மறதி இல்லாமையைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 54

34 **பொறுமையாக இருப்பதைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 16

35. **பொறாமைப்படாமல் இருப்பதைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 17

36. **பேராசைப்படாமல் இருப்பதைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரங்கள் : 18, 37

37. **புறங்கூறாமையைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 19

38. **பிறர் மனைவியை விரும்பாமல் இருப்பதைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 15

39. **கயமையைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 108

40. **கொல்லாமையைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 33

41. **வெட்கக் கேடுகளைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 102

42. **வாய்மையைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 30

43. **அறிவுடைமையைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரங்கள் : 43, 84, 85

44. **பண்புடைமையைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரங்கள் : 99, 100

45. **அடக்கமுடைமையைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 13

46. **பகை, சூது பற்றி வள்ளுவன்**
அதிகாரங்கள் : 86, 87, 88, 89, 94

47. **மானத்தைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 97

48. **குடிப்பெருமையைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரங்கள் : 96, 98, 103

49. **சோம்பலைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 61
50. **வறுமை, பிச்சை எடுப்பதைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரங்கள் : 105, 106, 107
51. **ஊழல் / திருட்டு பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 29
52. **வள்ளல் தன்மையைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 23
53. **துன்பங்கள் வரும் வேளையில்... வள்ளுவன்**
அதிகாரம் : 63
54. **"மகிழ்ச்சியான தருணங்கள்" - எதுவெனச் சொல்கிறான் வள்ளுவன்**
8 குறட்பாக்கள் : 92, 93, 228, 394, 707, 783, 999, 1201
(தனி அதிகாரம் இல்லை)
55. **வாழ்க்கை நெறிகள் பிற பற்றி வள்ளுவன்**
அதிகாரங்கள் : 21, 32, 36, 38, 44, 45, 47, 48, 49, 50, 51, 52, 90
56. **புகழ் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 24
57. **அருள் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 25
58. **தவம் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 27
59. **"துறவு" பற்றி வள்ளுவன்**
அதிகாரங்கள் : 3, 28, 35
60. **வாழ்க்கை நிலையாமையைப் பற்றி வள்ளுவன்**
அதிகாரம் : 34
61. **"காதலை" - காதோடு சொன்ன வள்ளுவன்**
இன்பத்துப்பால் : 250 குறட்பாக்கள்
25 அதிகாரங்கள் : 109 முதல் 133 வரை
62. **முழுத்திருக்குறள் e-Book**
(அதிகாரங்கள் 1 முதல் 133 வரை)

# அறத்துப்பால்

## கடவுள் வாழ்த்து

**1.** *அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி*
*பகவன் முதற்றே உலகு*

**'அ'கரம் எனும் முதல் எழுத்தைப் போல்**
**ஆதி மூலமான கடவுளே**
**உலகத்து உயிர்களுக்கு முதலாவான் !**

**2.** *கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்*
*நற்றாள் தொழாஅர் எனின்*

**முற்றும் அறிந்த இறைவனை**
**சற்றும் குறைவில்லாமல் வணங்காவிடில்**
**கற்ற மாபெரும் கல்வியினால்**
**பெற்ற பயன் தான் என்ன ?**

**3.** *மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்*
*நிலமிசை நீடுவாழ் வார்*

**மலர் போன்ற மனதினிலே**
**மறைந்து, நிறைந்திருக்கும் இறைவனை**
**மனமுவந்து உணர்ந்தால்**
**மங்காப் புகழே இவ்வுலகில் !**

**4.** *வேண்டுதல்வேண் டாமை இலானடி சேர்ந்தார்க்கு*
*யாண்டும் இடும்பை இல*

**விருப்பு வெறுப்பின்றி, எங்கும்**
**வியாபித்திருக்கும் இறைவனின் திருவடிகளை**
**செருக்கின்றி வணங்கி நடக்கின்றவர்களுக்கு**
**வறுத்துகின்ற துன்பங்கள் என்றுமே இல்லையே !**

**5.** *இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்*
*பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு*

**இருவினையாகிய நன்மை–தீமைக்கு அப்பாற்பட்ட**
**இறைவன் எனும் பரம்பொருளை**
**இம்மையில் புரிந்து புகழ் பெற்றால்**
**இருளாம் அறியாமை அகலும் !**

6. *பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க*
*நெறிநின்றார் நீடுவாழ் வார்*

**ஐம்புலன்களினால் பிறக்கும் ஆசைகளை**
**அறவே ஒழித்த இறைவனின்**
**அடியொற்றி ஒழுக்க நெறியில் வாழ்பவன்**
**அழியாப் புகழோடு நீளூழி வாழ்வான் !**

7. *தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்*
*மனக்கவலை மாற்றல் அரிது*

**தனக்கு நிகரில்லாத இறைவனின்**
**தன்னிகரில்லா அடிகளை வணங்காதவர்கள்**
**தனக்கு வரும் மனக்கவலையையும்**
**தடுக்க இயலாது** *!*

8. *அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்*
*பிறவாழி நீத்தல் அரிது*

**அறக்கடலாம் இறைவன் எனும் அருளாளன்**
**அடிகளைப் பின்பற்றி நடக்காதவர்கள்**
**அதர்மத்தின் இருப்பிடமானப் பாவக் கடலைக் கடப்பது**
**அரிதிலும் அரிதே !**

9. *கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்*
*தாளை வணங்காத் தலை*

**ஈடற்ற ஆற்றலும் பண்பும்**
**ஈட்டுகின்ற குணங்களை உடைய இறைவனின்**
**ஈரடிகளை வணங்காதவர்கள்**
**ஈடு இல்லாத ஐம்பொறிகள் இருந்தும் இல்லாத நிலையே** *!*

10. *பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
*இறைவன் அடிசேரா தார்*

**இறைவனின் திருவடிகளை வணங்கி**
**இயைந்து சரணடைந்தவரே**
**'பிறவி' எனும் பெருங்கடலைக் கடந்தவர் !**
**பிறர்; நீந்திக் கடக்காதவர்** *!!*

## 2. வான் சிறப்பு

11. *வானின் றுலகம் வழங்கி வருதலால்*
*தானமிழ்தம் என்றுணரற் பாற்று*

**மழையே உலகை வாழ வைத்து**
**மலர வைக்கும் செழுமையே ! அதனால்**
**மழையே உயிர்களுக்கு அமிழ்தமே !**

12. *துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்*
*துப்பாய தூஉ மழை*

**உணவை உண்பவர்களுக்காக**
**உணவை உண்டாக்குபவனுக்கு**
**உணவுப் பொருளை விளைவிக்க**
**உதவுகின்ற மாமழையே...! நீயே**
**உணவாகவும் மாறிய தியாகத் துளியே...!**

13. *விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து*
*உள்நின் றுடற்றும் பசி*

**விண்ணிலிருந்து வீழுகின்ற மழைத்துளி**
**விழாமல் பொய்த்துப் போனால்**
**விரிந்து பரந்து கிடக்கும் கடல் சூழ் உலகமும்**
**விக்கித்து உயிர்கள் பசியால் வாடி வதங்குமே !**

14. *ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்*
*வாரி வளங்குன்றிக் கால்*

**உழவிற்கு வேண்டிய மழையின் வருவாய்**
**உள்ளபடி வர வேண்டிய அளவு வரத்துக் குறைந்தால்**
**உழவன் ஏர் பிடித்து உழுது**
**உணவுகளை விளைவிப்பது குன்றி விடுமே !**

15. *கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே*
*எடுப்பதூஉம் எல்லாம் மழை*

**உயிர்களைப் பெய்யாமல் கெடுப்பதும் – பிறகு**
**உறுதுணையுடன் கெட்டவர்களுக்குப் பெய்தும்**
**என்றும் நலிந்த உயிர்களை உயர்த்துவதும்**
**எல்லாமும் ஆன மழையே !**

*16.* *விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே*
*பசும்புல் தலைகாண் பரிது*

**விண்ணிலிருந்து மழைத்துளி**
**விழுந்தாலன்றி**
**தாய் மண்ணில் பசும்புல்லின்**
**தளிர் கூடக் காண இயலாதாம் !**

*17.* *நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி*
*தான்நல்கா தாகி விடின்*

**கடல் நீர் ஆவியாகி மேகமானாலும்**
**கடலில் மீண்டும் மழையாகப் பெய்யாவிடின்**
**கண்டத்தின் நெடுங்கடலும் வற்றி வளம் குன்றுமே !**

*18.* *சிறப்பொடு பூசனை செல்லாது வானம்*
*வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு*

**வானம் வறண்டு பொய்த்துப் போனால்**
**வானில் வாழும் வானவர்க்கும்**
**வாஞ்சையுடன் பூசனையும் திருவிழாவும் ஏது ?**

*19.* *தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்*
*வானம் வழங்கா தெனின்*

**தகைசால் வானம் மழைதனை வழங்கா விட்டால்**
**தயங்காமல் பிறர்க்குச் செய்கின்ற தானமும்**
**தனக்காகச் செய்கின்ற தவமும்**
**தங்காதே இவ்வுலகில் !**

*20.* *நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்*
*வானின் றமையா தொழுக்கு*

**உண்மையில் நீரின்றி அமையாது உலகமெனின்**
**உயர் வானிலிருந்து மழை இல்லாமல் போனால்**
**உயிர்களிடத்து ஒழுக்கம் இல்லாமல் போகும் !**

## 3. நீத்தார் பெருமை

**21.** *ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து*
*வேண்டும் பனுவல் துணிவு*

**ஒழுக்கத்தில் உறுதியான துறவியின்**
**ஒருங்கே விளங்கும் பெருமைதனை**
**ஒப்பார் இல்லா சான்றோரின் நூல்கள்**
**ஒருமுகமாக பாராட்டும் !**

**22.** *துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து*
*இறந்தாரை எண்ணிக்கொண் டற்று*

**சுற்றும் இவ்வுலகில் இறந்தாரை எண்ண முடியாதது போல்**
**முற்றும் துறந்த முன்னோரின் பெருமைதனை**
**சற்றும் அளவிடவே முடியாது !**

**23.** *இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்*
*பெருமை பிறங்கிற் றுலகு*

**பிறப்பும் இறப்பும் என்ற இருவகையான**
**பிரிக்க முடியாத நிலைகளையும் நன்கு ஆராய்ந்து**
**பிரபஞ்சத்தில் துறவு கொண்டவர்களே பெருமைக்குரியவர் !**

**24.** *உரனென்னுந் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்*
*வரனென்னும் வைப்பிற்கோர் வித்து*

**ஐம்பொறிகளை அறிவென்ற அங்குசத்தால்**
**ஐயமுற அடக்கிக் காத்தவனே –**
**ஐந்திணைக்கு அல்ல மேலான வீட்டிற்கும் ஏற்ற விதையாவான் !**

**25.** *ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்*
*இந்திரனே சாலுங் கரி*

**ஐந்து புலன்களையும் அடக்க முடியாமல்**
**ஐம்பதிலும் ஆசைகளுக்கு ஆட்பட்டு**
**ஐயகோ என வழி தவறும் மனிதனுக்கு**
**வானத்து அரசன் இந்திரனே சாட்சி!**

26. *செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்*
*செயற்கரிய செய்கலா தார்*

**பெருமை தரும் செயல்களை புரிவோர் என்றும்**
**பெரியோர் தானே !**
**சிறுமை தரும் செயல்களைச் செய்வார் என்றும்**
**சிறியோர் தானே !**

27. *சுவையொளி ஊறோசை நாற்றமென் றைந்தின்*
*வகைதெரிவான் கட்டே உலகு*

**ஓங்கிய உணர்வுகளை – சுவை, பார்வை, தொடு உணர்வு,**
**ஓசை, மணம் என்ற ஐந்தினையும்**
**ஆராய்ந்து அடக்குபவனின்**
**ஆற்றலுக்குள் உலகம் அடங்கும் !**

28. *நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து*
*மறைமொழி காட்டி விடும்*

**முழுமையான சான்றோர்களின் பெருமையை**
**முழு நிலவாய் ஒளி விடும் அவர்களின் அற வழி வந்த**
**முது மொழிகளும் – நூல்களும்**
**முத்திரை பதிக்கும் உலகத்தில் நிரந்தரமாக !**

29. *குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி*
*கணமேயுங் காத்தல் அரிது*

**குணக்குன்றாய் வாழும் சான்றோர்களுக்கு**
**குறுகிய கணமே கோபம் நின்றாலும்**
**குத்தீட்டியாய் பாய்ந்து விடுவதால் தாங்குதல் கடினமே !**

30. *அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்*
*செந்தண்மை பூண் டொழுக லான்*

**எவ்வுயிர்க்கும் அன்பு செலுத்துபவர்**
**எல்லோரும் ‘அந்தணர்’ எனப்படுவர் ! இச்சொல்**
**சாதியம் சார்ந்தது அல்ல; சக உயிர் நேசிப்பே ஆகுமாம் !**

## 4. அறன் வலியுறுத்தல்

31. *சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு*
*ஆக்கம் எவனோ உயிர்க்கு*

**அறவழி தருகின்ற சிறப்பும்**
**அதீத செல்வமும் – போன்ற வேறொரு**
**ஆக்கம் இவ்வுயிர்க்கு இல்லையாம் !**

32. *அறத்தினூஉங் காக்கமும் இல்லை அதனை*
*மறத்தலின் ஊங்கில்லை கேடு*

**அறத்தினால் வருகின்ற**
**ஆக்கமும், செல்வமும், புகழும் மிகுதி !**
**அவ்வறத்தினை மறத்தலால் வருகின்ற**
**அத்துணை துன்பமும், தீமையும் மிகுதி !**

33. *ஒல்லும் வகையாண் அறவினை ஓவாதே*
*செல்லும்வாய் எல்லாஞ் செயல்*

**இயன்ற வரை செய்யக்கூடிய அறச்செயல்களை**
**இடைவிடாது தொய்வில்லாமல் எல்லா வகையிலும்**
**நன்மை தரும் அறவழியில் செய்க !**

34. *மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்*
*ஆகுல நீர பிற*

**உள்ளம் தூய்மையாக இருப்பதே**
**உண்மையான அறம் ! மற்ற**
**உபரிகள் எல்லாம் ஆரவாரம் !**

35. *அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்*
*இழுக்கா இயன்ற தறம்*

**அறம் எனப்படுவது யாதெனின்**
**அழுக்கினைத் தருகிற பொறாமை, பேராசை,**
**அதீத கோபம், புண்படுத்தும் சொல் –**
**அவை நான்கும் அறவே தவிர்ப்பதாம் !**

36. *அன்றறிவாம் என்னா தறஞ்செய்க மற்றது*
*பொன்றுங்கால் பொன்றாத் துணை*

**அப்புறம் என்றே காலம் கடத்தி**
**அறவழியைத் தள்ளிப் போடாமல்**
**அன்றே மேற்கொண்டால் இறந்த பிறகும்**
**அழியாப் புகழ் நிலைத்து நிற்கும் !**

37. *அறத்தா றிதுவென வேண்டா சிவிகை*
*பொறுத்தானோ டூர்ந்தான் இடை*

**பல்லக்கில் பவனி வருவதும் – அதே**
**பல்லக்கைப் பிடித்து தூக்கி வருவதும் கொண்டு**
**சொல்ல இயலாத தன்மையே**
**சிறந்த அறமாம் என உணர்வோம் !**

38. *வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்*
*வாழ்நாள் வழியடைக்கும் கல்*

**மறுபிறுவி இல்லாமல் அடைக்கும் கல் எதுவெனில்**
**மறுபடி மறுபடி ஒரு நிமிடம் கூட வீணாக்காமல்**
**மனமுவந்து தொடர்ந்து அறச்செயல் புரிவதே !**

39. *அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்*
*புறத்த புகழும் இல*

**உண்மையான இன்பம் வருவது**
**உன்னதமான மனதுடன் ஆற்றிய அறத்தால் !**
**உடன்பாடில்லாத பிறவழியில்**
**உருண்டோடி வருவது எல்லாம்**
**உரிய இன்பமும் இல்லை! புகழும் இல்லை!**

40. *செயற்பால தோரும் அறனே ஒருவற்கு*
*உயற்பால தோரும் பழி*

**பழிக்கத் தக்கப் பாவச்செயல்களை விட்டு**
**பலரும் பாராட்டத்தக்க அறவழிச் செயலை மட்டும்**
**பண்புடன் செய்தலே**
**பங்கமில்லா புகழ் வாழ்க்கைக்கு வழி !**

## 5. இல்வாழ்க்கை

41. *இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்*
*நல்லாற்றின் நின்ற துணை*

**இயல்பாகவே அமைந்திடும் உறவுகள்**
**இல்லறத்தில் ஈடுபடுவோர்க்கு – பெற்றோர்,**
**இணையாய் வந்த துணை, குழந்தைகள் ஆகியோர்க்கு**
**இணைந்த கைகளாக என்றும் துணை நிற்பது கடமையே !**

42. *துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்*
*இல்வாழ்வான் என்பான் துணை*

**பற்றற்ற வாழ்வு நடத்தும் துறவியர்க்கும்**
**பசியால் வாடும் ஏழை எளியோர்க்கும்**
**பஞ்சத்தில் பரிதவிக்கும் ஆதரவற்றோருக்கும்**
**பக்க துணையாக இருப்பவன் தான் இல்லறத்தான் !**

43. *தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு*
*ஐம்புலத்தா றோம்பல் தலை*

**வாழ்ந்து மறைந்த முன்னோர்களையும்**
**வணங்குவதற்குரிய கடவுளையும்**
**வாஞ்சையுடன் வருகின்ற விருந்தினர், சுற்றத்தார்களைப் போற்றிடவும்**
**வாழ்க்கையில் இணைந்த தன் குடும்பத்தாரையும்**
**வாகையுடன் காப்பதுவும் இல்லறத்தானின் கடமை !**

44. *பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை*
*வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல*

**பழி பாவத்திற்குப் பயந்து ஈட்டிய செல்வத்தைப் பிறருக்கும்**
**பகுத்து உண்டு வாழ்கின்ற**
**பண்பட்ட இல்லறத்தானின் வாழ்வு**
**பயனான நிறைவான வாழ்வாகும் !**

45. *அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*
*பண்பும் பயனும் அது*

**அன்பு இருந்தால் இல்லறத்தில்**
**அது பண்புடைய வாழ்க்கை !**
**அறம் இருந்தால் இல்லறத்தில்**
**அது பயனுடைய வாழ்க்கை !**

46. *அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்*
*போஒய்ப் பெறுவ தெவன்*

**அறநெறிப்படி இல்வாழ்க்கையினை**
**அமைத்துக் கொண்டால் – பெறுகின்ற**
**அத்துணைப் பயன்களையும் கண்டிப்பாக**
**அதைவிட வேறு நெறியில் பெற முடியாது !**

47. *இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்*
*முயல்வாருள் எல்லாம் தலை*

**முறையான இல்வாழ்க்கை வாழ்பவன்**
**முற்றும் துறந்து துறவற வாழ்வை வாழ**
**முயற்சிப்பவரை விட**
**முதன்மையானவர் !**

48. *ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை*
*நோற்பாரின் நோன்மை உடைத்து*

**தவத்தை விட ஆற்றல் உடையது எதுவெனில்**
**தன்னையும் அறநெறிப்படுத்தி–**
**தன்னைப் போல் பிறரையும் அறநெறிப்படுத்துகிற வாழ்வு**
**தனித்து பெருமை பெற்றது அத்தகைய இல்வாழ்க்கை !**

49. *அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்*
*பிறன்பழிப்ப தில்லாயின் நன்று*

**இல்வாழ்க்கையே அறம் என்றாலும்**
**"இல்லறம்" எனப்படுவது யாதெனின்**
**இன்ன பிறராலும் பழிக்கப்படாத**
**'இல் வாழ்க்கையே' நல்லறம் !**

50. *வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்*

**உலகத்தில் வாழ வேண்டிய முறைதனில்**
**உண்மையில் இல்லறம் நடத்துபவன்**
**உயர்ந்த வானில் வாழ்கின்ற தெய்வத்திற்கு**
**உள்ளாக இணையாக வைத்து மதிக்கப்படுவான் !**

## 6. வாழ்க்கைத் துணைநலம்

**51.** *மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்*
*வளத்தக்காள் வாழ்க்கைத் துணை*

**மனைவி என்பவள் இல்லறத்துக்குரிய பண்புகளுடன்**
**மனைக்குத் தலைவியாக நற்குணங்களுடன்**
**மணந்து கொண்டவனின் வருவாய்க்கு**
**மதிப்பளித்து அதற்கேற்று செலவு செய்பவள் !**

**52.** *மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை*
*எனைமாட்சித் தாயினும் இல்*

**மனைவியிடம் இல்லறத்திற்குத் தகுந்த**
**மனைப் பண்புகள் இல்லையெனில்**
**மற்ற பல பெருமைகள் இருப்பினும்**
**மலராதே சீரும் சிறப்பும் வாழ்வில் !**

**53.** *இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்*
*இல்லவள் மாணாக் கடை*

**மனைவிக்குப் பண்பிருந்தால் வாழ்கின்ற–**
**மனையில் இல்லாதது ஏதும் இல்லை !**
**மனைவிக்குப் பண்பில்லை என்றால் – மனம் வாழும்**
**மணவாழ்க்கையே இல்லை !**

**54.** *பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்*
*திண்மைஉண் டாகப் பெறின்*

**பெண்ணிடம் கற்பு எனும்**
**பெருந்திண்மையும் நிரம்பிய**
**பெண்மை அமைந்துவிட்டால் அதைவிடப்**
**பெருமை வேறொன்றுமில்லை !**

**55.** *தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்*
*பெய்யெனப் பெய்யும் மழை*

**வகைவகையான பற்பலத் தெய்வங்களை**
**வணங்குவதை விடத் தனக்கு**
**வாழ்வளித்த கணவனை வணங்குபவள்**
**வானத்திலிருந்து பெய் என்றால் மழையும் பெய்யுமாம் !**

56. *தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற*
*சொற்காத்துச் சோர்விலாள் பெண்*

**தன்னையும், தன் கற்பையும் காத்து,**
**தன் கணவனையும் பேணிக் காத்து**
**தனக்குப் பெருமை சேர்க்கும் புகழையும் காத்து**
**தன்னகத்தே சோர்வில்லாது இருப்பவள் பெண் !**

57. *சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்*
*நிறைகாக்கும் காப்பே தலை*

**கட்டுக் காவலோடு வீட்டுச் சிறையில் பெண்ணை**
**கடனே எனக் காப்பது காவல் இல்லை !**
**கற்பொழுக்கம் எனும் உயர் பண்பால்**
**கட்டிய மனைவி தன்னைத் தானே**
**கட்டுப்பாட்டுடன் காத்துக் கொள்வதே சிறப்பான காவல் !**

58. *பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்*
*புத்தேளிர் வாழும் உலகு*

**தேவை அறிந்து கணவனைத்**
**தேடி அடைந்து கடமையாற்றிடும் மனைவிக்கு**
**தேவலோகம் போல் பெருஞ் சிறப்பான வாழ்க்கை**
**தேடி வரும் இல்வாழ்க்கையில் !**

59. *புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்*
*ஏறுபோல் பீடு நடை*

**புகழுக்குரிய இல்வாழ்க்கை இல்லாமல் –**
**புனிதமான மணவாழ்க்கை அமையாமல் போனால்**
**பழித்துப் பேசுவார் முன் சிங்க நடை போடாமல்**
**பரிதவித்து புழுங்கிப் போய் விடுவர் !**

60. *மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்*
*நன்கலம் நன்மக்கட் பேறு*

**குடும்பத்தின் பெருமை மிகுதி எதுவெனில் – மனம்**
**குளிர்விக்கும் மங்கலம் !**
**குடும்பத்தில் அதை விடச் சிறப்பானது**
**குலவிளக்கான நல்ல நல்ல பிள்ளைகள் !**

## 7. மக்கட்பேறு

61. *பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த*
*மக்கட்பே றல்ல பிற*

**பெற வேண்டிய பேறுகளில் சிறந்தது**
**பெற்றெடுக்கும் நல்ல நல்ல பிள்ளைகள்...!**
**பெரியதோர் அறிவிற் சிறந்த பிள்ளைகளாய்**
**பெற்றால் அதைவிட வேறு பேறு இல்லை !**

62. *எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்*
*பண்புடை மக்கட் பெறின்*

**பழியில்லாத பண்புக் குழந்தைகளை**
**பத்து மாதம் சுமந்து பெற்று வளர்த்தால்**
**பல அடுக்குகளாய் வரும் ஏழு பிறப்பிற்கும்**
**பக்கத்தில் கூட நெருங்காது தீயவை !**

63. *தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்*
*தந்தம் வினையான் வரும்*

**தனது பொருளான மக்கட் செல்வம் எனும் பெருஞ்செல்வம்**
**தத்தமது ஊழ் வினையால் தான் வந்து**
**தனித்த செயல்களினால் விளையும் !**

64. *அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்*
*சிறுகை அளாவிய கூழ்*

**அமிழ்தத்தை விட இனிமையானது எதுவெனில்**
**'அம்மா' என்றழைக்கும் பிஞ்சுக் குழந்தைகளின்**
**அழகான சிறு பிஞ்சுக்கரத்தால்**
**அளாவப் பட்ட உணவுக் கூழ் !**

65. *மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்*
*சொற்கேட்டல் இன்பம் செவிக்கு*

**பெற்ற குழந்தைகளைத் தழுவி மகிழ்ந்தால்**
**பெற்ற உடம்பிற்கு இன்பம் !**
**பெற்ற குழந்தைகளின் மழலை மொழி கேட்டால் தான்**
**பெற்ற செவிகளுக்கு இன்பம் !**

**66.** *குழலினி தியாழினி தென்பதம் மக்கள்*
*மழலைச்சொல் கேளா தவர்*

**குழல் ஓசை இனிது என்பர்**
**குழல் போல் யாழ் இசையும் இனிது என்பர் – யார் ? தம்**
**குழந்தைகளின் மழலைச் சொல்லை செவி**
**கொடுத்துக் கேளாதவர் !**

**67.** *தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து*
*முந்தி இருப்பச் செயல்*

**தந்தை மகனுக்கு ஆற்றும் நல்லுதவி**
**தகைமை சால் அறிஞர்களின் அவையில்**
**தலைமைப் பண்போடு முதன்மையாய் வீற்றிருப்பதே !**

**68.** *தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து*
*மன்னுயிர்க் கெல்லாம் இனிது*

**தன்னை விட அறிவிற் சிறந்தவர்களாக**
**தம் மக்கள் விளங்கினால்**
**தனக்கு மட்டுமல்லாமல்**
**தரணியில் வாழும் உயிர்களுக்கெல்லாம் இனிமையே !**

**69.** *ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்*
*சான்றோன் எனக்கேட்ட தாய்*

**பெற்ற தாய்க்குத் தன் மகனை**
**பெற்ற போது ஏற்பட்ட மகிழ்ச்சியை விட**
**பெரு மகிழ்ச்சி 'சான்றோன் அவன்' எனப்**
**பெருமையுடன் ஊரார் சொல்லக் கேட்கும் பொழுது !**

**70.** *மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை*
*என்நோற்றான் கொல்லெனும் சொல்*

**இவன் தந்தை – மகனாக**
**இவனைப் பெற்றதற்கு என்ன தவம் செய்தானோ**
**என அவனைப் பிறர் புகழ்ந்து பாடுவது தான்**
**அவன் தந்தைக்கு அவன் செய்யும் கைம்மாறு !**

## 8. அன்புடைமை

71. *அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்*
*புண்கணீர் பூசல் தரும்*

**அன்பினை மறைக்க தாழ் போட்டு**
**அடைத்து வைக்க முடியுமோ ?**
**அன்பிற்குரியவர்கள் துன்பம் காணுமிடத்து**
**அனிச்சையாக வெளிப்படும் கண்ணீர்த்துளி காட்டிவிடுமே !**

72. *அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு*

**அன்பு இல்லாதவர் தமக்கே உரியது**
**அனைத்தும் என்பர் !**
**அன்புடையார் தமக்கென்று எதையும் கருதாது**
**அனைத்தும் பிறருக்கு என்பர் !**

73. *அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு*
*என்போ டியைந்த தொடர்பு*

**அன்போடு பொருந்திய வாழ்க்கை என்பது**
**அருமை உயிர்க்கு உடம்போடும் எலும்போடும்**
**அடர்த்தியாக உள்ள தொடர்பை போலாகும்**
**அற்புத பயனாம் !**

74. *அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்*
*நண்பென்னும் நாடாச் சிறப்பு*

**அன்பு என்றென்றும் விருப்பத்தை**
**அடுத்தவர்களிடம் கொண்டு சேர்த்திடும் !**
**அத்தகைய உயர்ந்த உள்ளமே**
**அற்புதமான “நட்பு” எனும் பெருஞ்சிறப்பை உருவாக்கும் !**

75. *அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்து*
*இன்புற்றார் எய்தும் சிறப்பு*

**உலகில் இன்பமுற்று வாழுகின்ற**
**உயர்ந்த வாழ்க்கைக்கு காரணம் அவர்**
**உள்ளத்தில் ‘அன்பு’ எனும் அடிப்படைக் கோட்பாடு**
**உண்மையாகப் பெருக்கெடுத்து ஓடுவது தான் !**

76. *அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்*
*மறத்திற்கும் அஃதே துணை*

**"அறம்" செய்வதற்கு மட்டுமே**
**"அன்பு" துணையாகத் திகழ்கிறது என**
**அறியாதவர் கூறுவர் ! உண்மையில்**
**அற்புத வீரச் செயலுக்கும் "அன்பே" துணை !**

77. *என்பி லதனை வெயில்போலக் காயுமே*
*அன்பி லதனை அறம்*

**உடம்பில் எலும்பில்லாப் புழுவை**
**உக்கிரமான வெயில் சுட்டெரிக்கும் !**
**அதே போல் அன்பில்லா உயிரை**
**"அறம்" வருத்தும் !**

78. *அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்*
*வற்றல் மரந்தளிர்த் தற்று*

**உள்ளத்தில் அன்பு இல்லாத**
**உயிர் வாழ்க்கை என்றென்றும்**
**பாலைவனம் எனும் கொடிய நிலப்பரப்பில்**
**பட்ட மரம் துளிர்க்காததைப் போல் !**

79. *புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை*
*அகத்துறுப் பன்பி லவர்க்கு*

**'அன்பு' எனும் உறுப்பு**
**'அகத்தில்' இல்லை யெனில்**
**'அழகான' புற உறுப்புகள்**
**அமைந்து என்ன பயன் ?**

80. *அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு*
*என்புதோல் போர்த்த உடம்பு*

**அன்பு நெஞ்சம் மட்டும்**
**அமைந்துவிட்டால் உயிர் பெற்ற உடலாகும் !**
**அன்பு மட்டும் இல்லையெனில்**
**அது எலும்பைத் தோல் போத்திய வெற்றுடலாகும் !**

## 9. விருந்தோம்பல்

81. *இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி*
*வேளாண்மை செய்தற் பொருட்டு*

**இல் வாழ்க்கை வாழ்வதெல்லாம்**
**இன்முகத்தோடு விருந்தினரை வரவேற்று**
**இனிய உபசரிப்பும் உதவியும் செய்வதற்கே !**

82. *விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா*
*மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று*

**வந்த விருந்தினர் வெளியே இருக்க**
**வரமாகக் கிடைத்த – சாகாமல் இருப்பதற்கான**
**வலிய மருந்தாக இருந்தாலும்**
**வந்தவருக்குத் தராமல் தனித்து உண்பது விரும்பத்தக்கதல்ல !**

83. *வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை*
*பருவந்து பாழ்படுதல் இன்று*

**நாள்தோறும் இல்லம் நோக்கி**
**நாடி வருகின்ற விருந்தினரை**
**நாவசைத்து வரவேற்று மகிழ்பவரின் வாழ்க்கை**
**நாதியற்றுத் துன்பம் அடையப் போவதில்லை !**

84. *அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து*
*நல்விருந் தோம்புவான் இல்*

**முக மலர்ச்சியால் அக மகிழ்ச்சியைக் காட்டி**
**முத்தாய்ப்பாய் விருந்தினரை வரவேற்பவர் வீட்டில்**
**முழு மகிழ்வோடு தங்குவாள் திருமகள் !**

85. *வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி*
*மிச்சில் மிசைவான் புலம்*

**விருந்தினர்க்கு முதலில் உணவளித்து**
**விருந்திற்குப் பின் மிஞ்சியதை**
**விருப்பமுடன் உண்டு வாழும் பண்பாளனின் நிலத்தில்**
**விதைக்காமலே விளைச்சல் விளையும் !**

**86.** *செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்*
*நல்விருந்து வானத் தவர்க்கு*

**வந்த விருந்தினரைப் போற்றி – இனி**
**வரப் போகின்ற விருந்தினரை எதிர்பார்த்து**
**வரவேற்கக் காத்திருப்பவன்**
**வணங்குதலுக்குரிய வானத்துத் தேவர்களுக்கும் சிறந்த விருந்தினனே!**

**87.** *இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்*
*துணைத்துணை வேள்விப் பயன்*

**விருந்தோம்பலுக்கு அளவுகோல் இல்லை !**
**விருந்தினரின் சிறப்பை எண்ணிப்பார்த்து**
**விருந்தோம்பலை வேள்வியாகக் கருதினால்**
**விளையும் அறத்தின் பயன் !**

**88.** *பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி*
*வேள்வி தலைப்படா தார்*

**விருந்தோம்பல் எனும் வேள்வியில் ஈடுபடாதார்**
**வியத்தகு முறையில் சேர்த்த செல்வம்**
**விலகி ஒழிந்த பின் விக்கித்து**
**விருந்தோம்பலுக்குப் பயன்படாமல் வீணானது என வருந்துவார்கள்!**

**89.** *உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா*
*மடமை மடவார்கண் உண்டு*

**இருந்தும் இல்லாதவர் என்பது**
**இன்விருந்து ஓம்பாதவர் !**
**இத்தகைய மடமை அறியாதவரிடத்தே**
**இருக்குமாம் !**

**90.** *மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து*
*நோக்கக் குழையும் விருந்து*

**முகர்ந்தவுடன் வாடி விடும் அனிச்சம் பூ போல்**
**முகங்கோணி விருந்தினரை வரவேற்றாலே**
**முற்றாக வாடிடுவர் விருந்தினர் – விருந்தும்**
**முறிந்து கெடும் !**

## 10. இனியவை கூறல்

**91.** *இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்*
*செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்*

**உண்மைச் சிறப்பை அறிந்தவர் வாயிலிருந்து**
**இன்சொல் எனப்படும் வஞ்சனையற்ற**
**இனிமையான, அன்பும் அழகும்**
**இரண்டறக் கலந்த சொல்லே வெளிப்படும் !**

**92.** *அகன்அமர்ந் தீதலின் நன்றே முகனமர்ந்து*
*இன்சொலன் ஆகப் பெறின்*

**அகம் மலர்ந்து தானம் கொடுப்பதை விட**
**முகம் மலர்ந்து இனிமையாகப் பேசுவது**
**முத்திரை பதிக்கும் முத்தானப் பண்பாகும் !**

**93.** *முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்*
*இன்சொ லினதே அறம்*

**மலரும் முகத்தோடு இனிமையாகப் பார்த்து**
**மனப்பூர்வமாக இனிய சொற்களை அகம்**
**மலரக் கூறுவதே வாழ்க்கை நெறியான அறம் !**

**94.** *துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்*
*இன்புறூஉம் இன்சொ லவர்க்கு*

**இன்சொல் பேசி எல்லோரிடத்திலும்**
**இனிமையுடனும் கனிவுடனும் பழகுவோர்க்கு**
**இன்பத்தைத் தவிர வறுமை எனும் துன்பம் வாட்டுவதில்லை !**

**95.** *பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு*
*அணியல்ல மற்றுப் பிற*

**அடக்கமானப் பண்பும், இனிமையானப் பேச்சும்**
**அழகாய் மிளிரும் உயிர் அணிகள் !**
**அதை விடுத்து மற்ற அணிகள் எல்லாம்**
**அழகில்லா உடல் அணிகள் !**

**96.** *அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை*
*நாடி இனிய சொலின்*

**நல்லவற்றை நாடி – என்றும்**
**நன்மைகளையே விரும்பி இன்சொற்களே**
**நயந்து நாவில் வந்தால் தீமை தேயும் !**
**நல் வழி கண்டு அறம் தழைத்திடும் ! நன்மை வளரும் !**

**97.** *நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று*
*பண்பின் தலைப்பிரியாச் சொல்*

**நற்பயனைப் பிறருக்கு உண்டாக்கும் இனிய சொற்கள்**
**நவில்வோருக்கும் நல் இன்பத்தையும் கொடுத்து**
**நன்மையையும் நயத்தையும் நல்கும் !**

**98.** *சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்*
*இம்மையும் இன்பம் தரும்*

**சிந்தையில் அற்பத்தனம் எனப்படும்**
**சிறுமைத்தனமில்லாத இனிய சொற்களைச்**
**சிறப்புடன் பயன்படுத்துபவனுக்கு**
**சிறந்த இன்பம் கிடைக்கும் மறுபிறவியிலுமே !**

**99.** *இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ*
*வன்சொல் வழங்கு வது*

**இனிய சொற்கள் பிறர் பேசும் போது தனக்கு**
**இன்பத்தை வழங்கும் என்று உணர்ந்தவன்**
**இனிய சொல்லை விட்டு கடுஞ் சொற்களை**
**இன்ன பிறரிடம் பேசுவது ஏனோ ?**

**100.** *இனிய உளவாக இன்னாத கூறல்*
*கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று*

**இனிய சொற்கள் எத்தனையோ**
**இருந்தும் அதை விடுத்து எப்போதும்**
**இன்சொல் பயன்படுத்தாதவர்**
**இன்சுவையான ‘கனி’ இருந்தும் – ‘காய்’ கவர்பவரே !**

## 11. செய்ந்நன்றியறிதல்

**101.** *செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்*
*வானகமும் ஆற்றல் அரிது*

**நம்மிடத்தில் எந்த உதவியும் பெறாமல் இருந்தும்**
**நமக்குக் கேட்காமலேயே தக்க சமயத்தில்**
**நயந்து உதவி செய்தால் அதற்கு**
**நன்கொடையாக விண்ணுலகமும் மண்ணுலகமும் கூட ஈடாகாது !**

**102.** *காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்*
*ஞாலத்தின் மாணப் பெரிது*

**உதவி மிகச் சிறியதாக இருந்தாலும்**
**உரிய காலத்தில் வழங்கப்பட்டால்**
**உலகத்தை விடச் சிறந்த மதிப்புடையதாகும் !**

**103.** *பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்*
*நன்மை கடலின் பெரிது*

**என்ன பயன் கிடைக்கும் என்றே ஒருவர்**
**எண்ணிப் பார்க்காமல் செய்த உதவியை**
**எண்ணத்தில் கொண்டால் அதன் நன்மை**
**ஆழக் கடலையும் விடப் பெரிது !**

**104.** *தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்*
*கொள்வர் பயன்தெரி வார்*

**தினை அளவு நன்மை செய்திருந்தாலும்**
**திறம்பட அதன் பயனை அறிந்தவர்–**
**பல்வேறு வகையில் பயன்படும்**
**பனை அளவாய் அதனைக் கருதுவர் !**

**105.** *உதவி வரைத்தன் றுதவி உதவி*
*செயப்பட்டார் சால்பின் வரைத்து*

**உதவியை அளவிடும் வரையறை**
**உதவிய பொருளைப் பொறுத்தல்ல !**
**உள்ளத்தைப் பொறுத்ததே !**

*106.* *மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க*
*துன்பத்துள் துப்பாயார் நட்பு*

**தூய மாசற்றவரின் உறவையும்**
**துன்பத்தில் என்றென்றும்**
**துணை நின்றவரின் நட்பையும்**
**துறக்கவும் கூடாது ! மறக்கவும் கூடாதது !**

*107.* *எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்*
*விழுமந் துடைத்தவர் நட்பு*

**எழுகின்ற பிறப்பெல்லாம்**
**எண்ணுவார் – தன் துன்பத்தை**
**எண்ணிப் போக்கிய தூய நட்பின்**
**எல்லையில்லா மகிமையை !**

*108.* *நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது*
*அன்றே மறப்பது நன்று*

**உதவியை மறப்பது நல்லதல்ல ! ஆனால்**
**உதவிடாத் தீமையை நெஞ்சில் கொள்ளாமல்**
**உடனடியாக அன்றே மறப்பது நன்று !**

*109.* *கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த*
*ஒன்றுநன் றுள்ளக் கெடும்*

**கொல்வதைப் போன்ற தீமையான**
**கொடுமையை ஒருவர் செய்தாலும் – முன்பு அவர்**
**கொடுத்துச் சென்ற நன்மையை உள்ளத்தில்**
**கொண்டால் போதும் !**

*110.* *எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை*
*செய்ந்நன்றி கொன்ற மகற்கு*

**அறம் பல மறந்தவர்க்கும் கூட**
**அருமை வாழ்வு உண்டு ! – ஆனால்**
**அவரவர்க்கு ‘செய்ய வேண்டிய நன்றியை’**
**அறவே மறந்தவர்க்கு வாழ்வே இல்லை !**

## 12. நடுவு நிலைமை

*111.* *தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்*
*பாற்பட் டொழுகப் பெறின்*

**தகுதியைப் பிரித்துப் பார்த்து – ஒரு**
**தலைச் சார்பாக நிற்காமல் இருத்தலே**
**தகுந்த "நடுநிலை" ஆகும் !**

*112.* *செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி*
*எச்சத்திற் கேமாப் புடைத்து*

**"நடுவுநிலை"யை பின்பற்றும் நேர்மையாளரின்**
**நற்செல்வத்திற்கு என்றும் அழிவில்லை ! – அது**
**நயந்து வழிவழி தலைமுறையினருக்கும்**
**நன்மை பயக்கும் !**

*113.* *நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை*
*அன்றே யொழிய விடல்*

**நடுநிலை தவறுவதால் கிடைக்கும் பலன்**
**நமக்கு நன்மையே தரக்கூடியதானாலும்**
**நிலை தடுமாறாமல் நடுநிலையைத்தான்**
**நிச்சயமாகக் கடைப்பிடிக்க வேண்டும் !**

*114.* *தக்கார் தகவிலர் என்ப தவரவர்*
*எச்சத்தாற் காணப் படும்*

**நெறி வழி நடந்தவரா அல்லது**
**நெறி தவறி நடந்தவரா என்பதை அவரின்**
**நெடிய வாழ்வுக்குப் பின் எஞ்சி நிற்கும்**
**நெடுஞ்சொல்லான புகழோ – பழியோ கூறும் !**

*115.* *கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்*
*கோடாமை சான்றோர்க் கணி*

**அழிவும் ஆக்கமும் வாழ்வும் தாழ்வும்**
**அகண்ட உலகில் இயற்கை !**
**அந்த இரு நிலைமையிலும் நடுநிலை வகிப்பதே**
**அறிவுடையோர்க்கு அழகு !**

**116.** *கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்சம்*
*நடுவொரீஇ அல்ல செயின்*

**மனம் நடு நிலையிலிருந்து நிலை தடுமாறி**
**மருகி தவறு செய்வதற்கு**
**மனதால் நினைத்து விட்டாலே – அவன்**
**மதிமயங்கி கெட்டொழியப்போவது தெரிய வேண்டும் !**

**117.** *கெடுவாக வையா துலகம் நடுவாக*
*நன்றிக்கண் தங்கியான் தாழ்வு*

**அறநெறி நின்று நடுநிலை தவறாமல்**
**அடிப்படை வாழ்க்கை முறையால்**
**அடைகின்ற வறுமை நிலையை "கேட்டின்"**
**அடையாளமாய் உலகம் கொள்ளாது !**

**118.** *சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற்*
*கோடாமை சான்றோர்க் கணி*

**சமமாக இருந்து பொருளை**
**சரியாக எடைபோடும் துலாபாரம் போல்**
**சமரசமான நியாயம் கூறுவது தான்**
**சான்றோர்களுக்கு அழகாகும் !**

**119.** *சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா*
*உட்கோட்டம் இன்மை பெறின்*

**நெஞ்சத்தில் நேர்மை உறுதி கொண்டால்**
**நெடுஞ்சொல்லில் நீதி இருக்கும் ! இந்த**
**நெறியே "நடுவு நிலைமை" யாம் !**

**120.** *வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்*
*பிறவும் தமபோல் செயின்*

**வணிக நெறி என்பது பிறர்**
**வசம் கொண்ட பொருளையும் தன்**
**வசம் உள்ள பொருளாக கருதி**
**வணிகத்தை நேர்மையாக நடத்துவதே !**

## 13. அடக்கம் உடைமை

121. *அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை*
*ஆரிருள் உய்த்து விடும்*

**அடக்கம் உயர்வளித்து**
**அனைத்துப் புகழையும் தந்து தேவனாக்கும் !**
**அடங்காமை இருள் போன்ற துன்பத்தில்**
**அடக்கி விடும் !**

122. *காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்*
*அதனினூஉங் கில்லை உயிர்க்கு*

**காக்க காக்க**
**காலமெல்லாம் அடக்கத்தை உறுதியுடன் காக்க !**
**ஆருயிருக்கு என்றும் மேன்மையான**
**ஆக்கம் தருவது அடக்கம்ஒன்றே !**

123. *செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்*
*தாற்றின் அடங்கப் பெறின்*

**அறிய வேண்டியவைகள் அனைத்தையும்**
**அறிந்து அடங்கி நடந்தால் . அந்த**
**அடக்கம் அனைவராலும்**
**அறியப்பட்டு பாராட்டுப் பெறும் !**

124. *நிலையின் திரியா தடங்கியான் தோற்றம்*
*மலையினும் மாணப் பெரிது*

**எந்த நிலையிலிருந்தும் மாறாமல்**
**என்றென்றும் அடங்கி வாழ்பவன்**
**எட்டும் உயர்வு – வானத்தை**
**எட்டிப்பார்க்கும் மாமலையைவிட உயர்வானது !**

125. *எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்*
*செல்வர்க்கே செல்வம் தகைத்து*

**பணிவு என்னும் பண்பு என்பது**
**பலருக்கும் ஓர் செல்வமாகும் – அது**
**பணம் படைத்த செல்வர்களுக்கோ அந்த**
**பண்பு மேலும் ஒரு செல்வத்துள் செல்வமே !**

126. *ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்*
*எழுமையும் ஏமாப் புடைத்து*

**இருக்கின்ற உறுப்புகளையெல்லாம்**
**இழுத்து ஓர் ஓட்டுக்குள் அடக்கும் ஆமை போல்**
**இப்பிறவியில் ஐம்பொறிகளை அடக்கி வாழ்ந்தால்**
**இனி வரும் ஏழு பிறப்பிற்கும் அதுவே காவல் !**

127. *யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்*
*சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு*

**எதைக் காக்க முடியாவிட்டாலும் ஒருவர்**
**எப்படியாயினும் நாவை அடக்க வேண்டும் ! – இல்லை**
**எனில் அவர் உதிர்த்த சொல்லே**
**எங்ஙனமும் துன்பத்தில் தள்ளி விடும் !**

128 *ஒன்றானுந் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்*
*நன்றாகா தாகி விடும்*

**உதிர்த்த சொற்கள் அனைத்தும்**
**உயர்ந்த சொற்களாயினும் – அதில்**
**உறுத்தலாய் ஒரே ஓர் தீய சொல்**
**உட்புகுந்தால் உள்ளது அனைத்தும் கெட்டுவிடும் !**

129. *தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே*
*நாவினாற் சுட்ட வடு*

**நெருப்பினால் சுட்ட புண் வெளியில்**
**நெருடலாய் தழும்பு தெரிந்தாலும் ஆறிவிடும் !**
**வெறுப்பினால் திட்டிய சொற்கள் உள்ளே நிரந்தரமாய்**
**வெந்த புண்ணாய் மனதில் வடுவாகும் !**

130. *கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி*
*அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து*

**கற்பவை எல்லாம் கற்று –**
**கடுங்கோபத்தையும் காத்து –**
**அடக்கம் கொண்ட பண்பாளரை**
**அடையவே தவம் கிடக்குமாம் அறம் !**

## 14. ஒழுக்கம் உடைமை

**131.** *ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்*
*உயிரினும் ஓம்பப் படும்*

**ஒருவருக்கு மேன்மைதரக் கூடியது**
**ஒழுக்கம் ! அதை உடையவருக்கு எப்போதும்**
**உயர்வைத் தருவதால் அதனை**
**உயிரை விட மேலானதாகக் காக்க வேண்டும் !**

**132.** *பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கந் தெரிந்தோம்பித்*
*தேரினும் அஃதே துணை*

**பல வழிகளில் ஆராய்ந்து பார்த்து**
**பரிசோதனைகள் முடிவில் வாழ்க்கைக்கு ஒழுக்கம்**
**பக்க துணை எனப் புரிந்தால் அதன் –**
**பக்க விளைவுகள் பற்றிக் கவலைப்படாமல் காக்க வேண்டும் !**

**133.** *ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்*
*இழிந்த பிறப்பாய் விடும்*

**ஒழுக்கத்தை விடாமல் என்றென்றும்**
**ஒருமனதோடு கடைப்பிடிப்பவர்கள் உயர்குடி என**
**ஒப்புதல் கூறப்படும் ! ஆனால்**
**ஒழுக்கம் தவறுகிறவர்கள் இழிந்த குடியே !**

**134.** *மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்*
*பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்*

**ஓங்கிய உயர்குலத்தில் பிறந்தோர்**
**ஓதுவதையும் – கற்பதையும் மறந்தாலும்**
**ஒன்றுமில்லை ! ஆனால் வாழ்வில்**
**ஒழுக்கம் இல்லையேல் இழி குலமே !**

**135.** *அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை*
*ஒழுக்க மிலான்கண் உயர்வு*

**அழுக்கும் பொறாமையும் மனதில் கொண்டவனுக்கு**
**அமையும் வாழ்வில் வளர்ச்சி இல்லை !**
**ஒழுக்கம் இல்லாதவனுக்கு உயர்வும் இல்லை**
**ஒப்பில்லா மேன்மையும் இல்லை !**

**136.** *ஒழுக்கத்தி னொல்கார் உரவோர் இழுக்கத்தின்*
*ஏதம் படுபாக் கறிந்து*

**ஒழுக்கம் தவறுதலால் குற்றம் மிகுந்து**
**ஒடுங்கி நடந்து இழிவைக் காண மனம்**
**ஒத்துக் கொள்ளாததால் மன உறுதி மிக்கவர்கள்**
**ஒழுக்கத்திலிருந்து பிறழவே மாட்டார்கள் !**

**137.** *ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை இழுக்கத்தின்*
*எய்துவ ரெய்தாப் பழி*

**விடா ஒழுக்கத்தால் உயர்வு வரும் ! – அதை**
**விட்டு விட்டால் அடையத் தகாத**
**விடயமாக இழிவான பழி வந்து சேரும் !**

**138.** *நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கந் தீயொழுக்கம்*
*என்றும் இடும்பை தரும்*

**நல்லொழுக்கும் இனிய வாழ்க்கையின்**
**நன்மைக்கு வித்திடுவதாகும் !**
**தீயொழுக்கம் என்றும் வாழ்க்கையில்**
**தீராதத் துன்பம் தரும் !**

**139.** *ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய*
*வழுக்கியும் வாயாற் சொலல்*

**தவ ஒழுக்கம் உடையவர் வாயிலிருந்து**
**ஒருப்போதும் தவறியும்**
**ஒப்பில்லா வார்த்தைகள்**
**ஒலிக்காது !**

**140.** *உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றுங்*
*கல்லா ரறிவிலா தார்*

**அரிய பல நூல்களைக் கற்றுத் திறம்பட**
**அறிந்திருந்தாலும் ஒழுக்கமெனும் பண்பால்**
**அகண்ட உலகத்தோடு நட்பு ஒழுகத் தெரியாதவர்கள்**
**அறிவில்லாதவர்களே ஆவார்கள் !**

## 15. பிறனில் விழையாமை

**141.** *பிறன்பொருளான் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்*
*தறம்பொருள் கண்டார்க ணில்*

**மற்றவர் மனைவியை விரும்புகின்ற**
**மடமையும் அறியாமையும் கிஞ்சித்தும்**
**மனதில் அறத்தின் பொருளை உணர்ந்தவர்களிடம் இல்லை !**

**142.** *அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை*
*நின்றாரிற் பேதையா ரில்*

**பிறர் மனைவியை விரும்பியதால்**
**பித்தம் பிடித்து பிறர் வாயிற்படியில் நிற்பவன்**
**பிற பாவங்களைச் செய்பவர்களை விட**
**பிழை மிக்க கொடிய பாவி ஆவான் !**

**143.** *விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்*
*தீமை புரிந்தொழுகு வார்*

**நம்பிப் பழகியவர் வீட்டில் அவரின்**
**நற்துணையுடன் காமம் பாராட்ட நினைப்பவன்**
**நல்லுயிர் இருந்தும் பிணமாவான் !**

**144.** *எனைத்துணைய ராயினும் என்னாந் தினைத்துணையும்*
*தேரான் பிறனில் புகல்*

**அறிவின்றி பிழை புரிகிறோம் என தினையளவுக் கூட**
**அறியாமல் – அயலான் மனைவியை விரும்புவது**
**அளவில்லாப் பெருமையுடையவரையும்**
**அதல பாதாளத்தில் தள்ளி மதிப்பிழக்கச் செய்யும் !**

**145.** *எளிதென இல்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும்*
*விளியாது நிற்கும் பழி*

**எளிதென்று எண்ணிப் பிறன் மனைவியை**
**எண்ணத்தில் கொண்டு முறைகேடாக நடப்பது**
**என்றும் அழியாத பழியைத் தந்திடும் !**

**146.** *பகைபாவம் அச்சம் பழியென நான்கும்*
*இகவாவாம் இல்லிறப்பான் கண்*

**பகை, தீமை, அச்சம், பழி – என நான்கும்**
**பயம் உறுத்தும் குற்றங்கள் என்றும்**
**பிறன் மனைவி விரும்புபவனை விட்டுப்**
**பிரிவதில்லை !**

**147.** *அறனியலான் இல்வாழ்வா னென்பான் பிறனியலான்*
*பெண்மை நயவா தவன்*

**அயலான் மனைவியிடம் பெண்மையை விரும்பாதவனே**
**அறநெறி தவறாது இல்லறம் புரியும்**
**அறநெறியான் !**

**148.** *பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்*
*கறனன்றோ ஆன்ற வொழுக்கு*

**பேதமையோடு பிறன் மனைவியை நோக்காதவன்**
**பேராண்மை கொண்டவன் ! அத்தகைய**
**பேறு கொண்ட சான்றோனுக்கு அதுவே**
**பேர் பெற்ற அறமும் ஒழுக்கமும் ஆகும் !**

**149.** *நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்*
*பிறற்குரியாள் தோள்தோயா தார்*

**உலகில் உடலும் உள்ளமும் சார்ந்த**
**உயர்ந்த பெருமைகளையும் நன்மைகளையும்**
**உடன் ஏற்றுக் கொள்ளக் கூடியவர்கள் பிறருக்கு**
**உரிய மனைவியின் தோளைத் தீண்டாதவரே !**

**150.** *அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்*
*பெண்மை நயவாமை நன்று*

**அறம் கடந்து தீமைகள் பல செய்திருந்தாலும்**
**அயலான் மனைவியை விரும்புவதை**
**அறவே ஒழித்தால் எப்போதும்**
**அவனுக்கு நன்மையே !**

## 16. பொறையுடைமை

151. *அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை*
*இகழ்வார்ப் பொறுத்தல் தலை*

**தம்மைக் குழி தோண்டுபவரை கூடத்**
**தயங்காமல் தாங்கும் நிலம் போலத்**
**தம்மை இகழ்ந்து பேசுபவரையும்**
**தயங்காமல் தாங்கிக் கொள்வது**
**தலை சிறந்த பண்பாகும் !**

152. *பொறுத்த லிறப்பினை யென்றும் அதனை*
*மறத்த லதனினும் நன்று*

**வரம்பு மீறி இழைத்த தீங்கை**
**வலியுடன் பொறுப்பது நற்பண்பு ! அதனைத் தன்**
**வாழ்வில் மறத்தல் அதனினும்**
**வல்லமை பொருந்திய நற்பண்பு !**

153. *இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்*
*வன்மை மடவார்ப் பொறை*

**வறுமையிலும் கொடிய வறுமை**
**வந்த விருந்தினரை புறக்கணிப்பது !**
**வலிமையிலும் சிறந்த வலிமை**
**வல்லமை இல்லாத அறிவிலிகளின் தீங்கைத் தாங்குவது !**

154. *நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை*
*போற்றி யொழுகப் படும்*

**நிறைவான மனிதர் இவரென்று**
**நிறைய பொறுமை உடையவரை –**
**நிரந்தரமான மன உறுதி கொண்டவரை**
**நித்தம் இவ்வுலகம் போற்றும் !**

155. *ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்*
*பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து*

**பொறுக்காமல் தாம் தீங்கு செய்தாரை – அப்**
**பொழுதே தண்டித்தோரை உலகம் மதிக்காது !**
**பொறுத்துக் கொண்டு தண்டிக்காதவர்களை**
**பொன்னாகப் பூவுலகம் மதிக்கும் !**

**156.** *ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்*
*பொன்றுந் துணையும் புகழ்*

**தங்களுக்கு தீமை செய்தவரை உடனடியாக**
**தண்டித்தவர்க்கு அன்று மட்டுமே இன்பம் !**
**தண்டிக்காமல் பொறுத்துக் கொண்டவர்க்கு**
**தரணி உள்ளவரை புகழே !**

**157.** *திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்*
*தறனல்ல செய்யாமை நன்று*

**தகுதியில்லாத இழிவான காரியங்களை**
**தமக்குப் பிறர் செய்தாலும் வருந்தி தானும்**
**தகுதியற்ற அதே அறமில்லாத காரியங்களைத்**
**தரம் கெட்டு செய்து பழி வாங்காமல் இருப்பது நன்று !**

**158.** *மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்*
*தகுதியான் வென்று விடல்*

**பொருமும் இறுமாப்பால் நமக்குத் தீமை செய்தாரை – நம்**
**பொறுமைச் சிறப்பால் வெல்லலாம் – நாம்**
**பொறுத்துக் கொள்வதன் மூலம் வெற்றியே**
**பொங்கும் !**

**159.** *துறந்தாரின் தூய்மை யுடையர் இறந்தார்வாய்*
*இன்னாச்சொல் நோற்கிற் பவர்*

**துன்பம் தரும் கொடுஞ் சொற்களை**
**துணிவோடு பொறுத்துக் கொள்பவர்கள்**
**துறவிகளைக் காட்டிலும் தூய்மையானவர்கள் !**

**160.** *உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்*
*இன்னாச்சொ னோற்பாரிற் பின்*

**உண்ணா நோன்பு இருந்து பசி பொறுத்துப் போகும்**
**உறுதி படைத்தவர்களை விட**
**உண்மையில் பிறரின் கொடுஞ் சொற்களை**
**உள்ளத்தால் பொறுப்பவர் பெரியோரே !**

## 17. அழுக்காறாமை

**161.** *ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்*
*தழுக்கா றிலாத இயல்பு*

**பிறருடைய நல்வாழ்க்கையைக் கண்டு**
**பின்னும் பொறாமை மனதில் கொள்ளாமல்**
**பிழையில்லா வாழும் இயல்பை**
**பின்பற்றுகிற ஒழுக்க நெறியாய் கொள்ள வேண்டும் !**

**162.** *விழுப்பேற்றின் அஃதொப்ப தில்லையார் மாட்டும்*
*அழுக்காற்றின் அன்மை பெறின்*

**யார் ஒருவரிடமும் பொறாமை கொள்ளாத பண்பு**
**யார் ஒருவருக்கு வாய்க்கிறதோ**
**யாங்கு ஒப்பில்லா பேறாகும் !**

**163.** *அறனாக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்*
*பேணா தழுக்கறுப் பான்*

**அறநெறியும் வளர்ச்சியையும்**
**அறவே விரும்பாதவன் தான்**
**அடுத்தவர் பெருமையைப் போற்றாமல்**
**அழுக்காறாமை எனும் பொறாமை கொண்டவன் !**

**164.** *அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்*
*ஏதம் படுபாக் கறிந்து*

**தீய வழியில் சென்றால் துன்பம்**
**தீண்டும் என்று அறிந்தவர்கள்**
**தீமை தரும் பொறாமையினால்**
**தீய செயல்களில் ஈடுபடமாட்டார்கள் !**

**165.** *அழுக்கா றுடையார்க் கதுசாலும் ஒன்னார்*
*வழுக்கியுங் கேடீன் பது*

**அழுக்காறாமை குணம் கொண்டவர்களுக்கு**
**அவர்களை வீழ்த்த பகைவரின் பகை தேவையில்லை !**
**அத்தகைய குணமே தீங்கிழைத்து**
**அவர்களுக்கு பெரும் பகையாகி விடும் !**

**166.** *கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்*
*உண்பதூஉ மின்றிக் கெடும்*

**கொடுக்கும் உதவிகளை பார்த்துக் கூட**
**கொஞ்சமும் வெட்கமில்லாமல் பொறாமை**
**கொண்டால் அவனின் உறவு**
**கொண்டவருக்கும் கூட "உடை"யும் "உணவு"ம் கெடும் !**

**167.** *அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்*
*தவ்வையைக் காட்டி விடும்*

**அழுக்காறாமை கொண்டவனை காணும் இலக்குமி தன்**
**அக்காள் மூதேவி எனும் வறுமையை**
**அடையாளம் காட்டிவிட்டு எப்போதும்**
**அகன்று விடுவாள் !**

**168.** *அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்*
*தீயுழி உய்த்து விடும்*

**அழுக்காறு என்று அடையாளம் காணப்பட்ட பாவி**
**அங்ஙனமே ஒருவனின் செல்வத்தையும் அழித்து**
**அவனையும் தீய வழியிலே செலுத்தும் !**

**169.** *அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்*
*கேடும் நினைக்கப் படும்*

**பொறாமை கொண்டவன் வளமாக வாழ்வதும்**
**பொறாமை குணம் இல்லாதவன்**
**பொல்லா வறுமையில் வாடுவதும் எதன்**
**பொருட்டு என ஆராய வேண்டும் !**

**170.** *அழுக்கற் றகன்றாரும் இல்லையஃ தில்லார்*
*பெருக்கத்தில் தீர்ந்தாரு மில்*

**பொறாமை கொண்டு எப்போதும்**
**பெருமை அடைந்தாரும் இல்லை !**
**பொறாமை கொள்ளாததால்**
**பொல்லாங்கு பெற்று வீழ்ந்தாரும் இல்லை !**

## 18. வெஃகாமை

171. *நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்*
*குற்றமும் ஆங்கே தரும்*

**நெஞ்சில் நேர்மையின்றிப் பிறர் பொருளை**
**நெறி தவறி நேசம் கொண்டு**
**நெருடல் இன்றி கவர்ந்தால் குடியும் கெட்டு**
**நெடும் பழியும் வந்து சேரும் !**

172. *படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்*
*நடுவன்மை நாணு பவர்*

**நாளும் நடுவுநிலைமை தவறுதல்**
**நாணித் தலைகுனியத் தக்கது என்பவர்**
**நாட்டமுடன் பிறர் பொருளை கவர்ந்ததால்**
**நமக்கு பயனளிக்கும் என்று பழிச் செயல் செய்யார் !**

173. *சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே*
*மற்றின்பம் வேண்டு பவர்*

**சிறுமையான இன்பம் உடனடியாக**
**சிறப்படைகிறது என்பதற்காக**
**சிறிதும் அறம் அல்லாத வழிகளைச்**
**சிந்திக்க மாட்டார்கள் பேரின்பம் வேண்டுவோர் !**

174. *இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற*
*புன்மையில் காட்சி யவர்*

**ஐம்புலன்களையும் அடக்கி வாழும் தூயவர்**
**அஞ்சுகின்ற வறுமை தாண்டவமாடினாலும்**
**அணு அளவும் பிறர் பொருளைக் கவர்ந்திட**
**ஆசை கொள்ளார் !**

175. *அஃகி யகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்*
*வெஃகி வெறிய செயின்*

**பிறர் பொருளை அறவழிக்குப் புறம்பாக**
**பிரியமுடன் கவர விரும்பினால் அவருக்குப்**
**பிரித்துணரும் நுண்ணிய அறிவிருந்து என்ன பயன் ?**

176. *அருள்வெஃகி யாற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்*
*பொல்லாத சூழக் கெடும்*

**அருளை பெற விரும்பி அதனை**
**அடைவதற்கான வழியில் செல்பவன் பிறர்**
**பொருளை விரும்பி அதனை அடைய**
**பொல்லாத வழியில் சென்றால் கெடுவான் !**

177. *வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்*
*மாண்டற் கரிதாம் பயன்*

**அடுத்தவர் பொருளை கவர்ந்து**
**அவனின் செல்வம் உயருமானால்**
**அந்த வளத்தின் பயன்**
**அறவே நலமாக இருக்காது !**

178. *அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை*
*வேண்டும் பிறன்கைப் பொருள்*

**அடைந்த செல்வச் செழிப்பு**
**அழியாமலிருக்க வேண்டுமெனில்**
**அடுத்தவர் செல்வத்தையும் பொருளையும்**
**அடைய ஆசைப்படாமல் இருக்க வேண்டும் !**

179. *அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேருந்*
*திறனறிந் தாங்கே திரு*

**அடுத்தவர் பொருளை விரும்பாத**
**அறநெறி உணர்ந்த அறிஞர்களிடம்**
**அவர்கள் திறன் அறிந்து**
**அச்செல்வம் தானே சேரும் !**

180. *இறலீனும் எண்ணாது வெஃகின் விறலீனும்*
*வேண்டாமை யென்னுஞ் செருக்கு*

**பின் விளைவுகளைப் பற்றி நினைக்காமல்**
**பிறர் பொருளைக் கவர்ந்தால் அழிவும் – நம்**
**பின் தொடரும் என்பதை உணர்ந்து**
**பிழையின்றி வாழ்ந்தால் வெற்றிப்படி கிட்டும் !**

## 19. புறங்கூறாமை

**181.** *அறங்கூறா னல்ல செயினும் ஒருவன்*
*புறங்கூறா னென்றல் இனிது*

**அறநெறிகளைப் போற்றாதவனாக இருந்தாலும்**
**அறச் செயல்களைப் புரியாதவனாக இருந்தாலும்**
**அத்துணைப் பெரிய விடயமில்லை !**
**அடுத்தவர் பற்றி புறங்கூறாமல் இருப்பதே இனிது !**

**182.** *அறனழீஇ யல்லவை செய்தலின் தீதே*
*புறனழீஇப் பொய்த்து நகை*

**முகம் பார்த்துப் பேசும் போது**
**முகத்துதியாக பொய்யாக சிரித்துப் பேசி**
**முன்னெதிரில் இல்லாத போது பழித்துப் பேசும்**
**முள்ளெனக் குத்தும் புறங்கூறுதலின் தீது**
**முறையற்ற செயலினும் தீதாம் !**

**183.** *புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்*
*அறங்கூறும் ஆக்கந் தரும்*

**அடுத்தவரைக் காணும் இடத்தில் ஒன்றாய்**
**அவரைக் காணாத இடத்தில் இன்னொன்றுமாய்**
**அளவில்லாப் புறங்கூறி வாழ்வதைவிடச் சாவது**
**அறநூல்கள் அறிவுறுத்துகிறப் புண்ணியம் ஆகும் !**

**184.** *கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க*
*முன்னின்று பின்னோக்காச் சொல்*

**கண்ணோடு கண் பார்த்து ஒருவரது குறைகளைக்**
**கடுமையாகச் சொன்னாலும் சொல்க !**
**கண் முன்னால் இல்லாதவரை முதுகுக்குப் பின்னால்**
**கடிந்துரைத்து புறங்கூறுவது தவிர்த்திடுக !**

**185.** *அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்*
*புன்மையாற் காணப் படும்*

**மருகி புறம் கூறும் சொல்லே – அவன்**
**மனம் அறம் விரும்பவில்லை என**
**மத்தளமிட்டுக் காட்டிவிடும் !**

186. *பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளுந்*
*திறன்தெரிந்து கூறப் படும்*

**பிறர் மீது பழி கூறுபவர் மீது**
**பிறர் அவரின் பழிச் செயல்களைப்**
**பிரித்தாய்ந்து அவற்றின் குற்றங்களைப்**
**பிணைத்துப் பழிப்பார்கள் !**

187. *பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி*
*நட்பாடல் தேற்றா தவர்*

**மகிழ்வுடன் பழகி**
**மலரும் நட்பை தொடரத் தெரியாதவர்கள்**
**மனதை வருத்துமளவு புறங்கூறி**
**மற்ற நண்பர்களையும் பிரித்து விடுவர் !**

188. *துன்னியார் குற்றமுந் தூற்றும் மரபினார்*
*என்னைகொல் ஏதிலார் மாட்டு*

**தூய்மையாகப் பழகியவரின் குறையைக்கூட**
**தூற்றிப் புறம் பேசுவோர் – பழகாத**
**தூரத்தில் இருக்கும் அயலாரை எப்படி எப்படியோ**
**தூற்ற மாட்டார்களா என்ன ?**

189. *அறனோக்கி யாற்றுங்கொல் வையம் புறனோக்கிப்*
*புன்சொ லுரைப்பான் பொறை*

**முதுகுக்குப் பின்னால் ஒருவரைப் பற்றி**
**முழுதாகப் புறங்கூறுவோர் உடல் பாரத்தை**
**முதற்கொண்டு தாங்கிச் சுமப்பதே**
**முதிர் அறம் என்கிறதோ பூமி ?**

190. *ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்*
*தீதுண்டோ மன்னு முயிர்க்கு*

**மற்றவர் குற்றத்தைக் காண்பவர்கள்**
**மனதில் தம் குற்றத்தை எண்ணிவிட்டால்**
**மறுபடியும் புறங்கூறும் பழக்கம் போகும் ! – அதனால்**
**மண்ணுயிர்க்கும் தீதில்லையே !**

## 20. பயனில சொல்லாமை

**191.** *பல்லார் முனியப் பயனில சொல்லுவான்*
*எல்லாரும் எள்ளப் படும்*

**ஏனையோரும் வெறுக்கும் அளவிற்கு**
**ஏசுகின்ற சொல்லைப் பயனற்றுப் பேசுபவரை**
**எல்லோரும் எள்ளி நகையாடுவர் !**

**192.** *பயனில பல்லார்முன் சொல்லல் நயனில*
*நட்டார்கட் செய்தலிற் றீது*

**பலர்முன் பயனில்லாத சொற்களைப்**
**பயன்படுத்திப் பேசுவது என்பது**
**பல காலம் பழகிய நண்பர்களுக்குப்**
**பலனில்லா தீமை புரிவதை விடக் கொடியது !**

**193.** *நயனில னென்பது சொல்லும் பயனில*
*பாரித் துரைக்கும் உரை*

**பயனற்ற சொற்களையே ஒருவர் எப்போதும்**
**பரந்து விரிந்து பேசிக் கொண்டிருப்பதே**
**பயனற்றவன் அவனே என உணர்த்தி விடும் !**

**194.** *நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்*
*பண்பில்சொல் பல்லா ரகத்து*

**பயனில்லாத பண்பில்லாத சொற்களைப்**
**பலர் முன் பகர்வது என்பது**
**பலரின் இன்பத்தைக் கெடுத்து – அவனுக்கே**
**பல நன்மைகளையும் நீக்கி விடும் !**

**195.** *சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில*
*நீர்மை யுடையார் சொலின்*

**பண்பின் சிகரத்தில் உள்ளவர்கள்**
**பயனில்லாச் சொற்களை பயன்படுத்தினால்**
**பல காலம் சேர்த்து வைத்த சிறப்பும், மதிப்பும்**
**பலமிழந்து அழிந்து விடும் !**

**196.** *பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்*
*மக்கட் பதடி யெனல்*

**பயனற்ற சொற்களைப் பலமுறைப் பயன்படுத்தி**
**பயன் பெற நினைப்பவனை மனிதன் எனப்**
**பகர்வதை விட அவனை மனிதருள்**
**'பதர்' என்றே சொல்வதே பொருத்தம் !**

**197.** *நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்*
*பயனில சொல்லாமை நன்று*

**நயமில்லாத சொற்களைக் கூட**
**நல்ல பண்பாளர்கள் – சான்றோர்கள்**
**நவிலலாம் ! ஆனால் என்றும்**
**நற்பயனில்லாச் சொற்களைப் பயன்படுத்தாமலிருப்பதே நன்று !**

**198.** *அரும்பய னாயும் அறிவினார் சொல்லார்*
*பெரும்பய னில்லாத சொல்*

**அரிய பயனை அடைய முயலும்**
**அறிஞர் பெருமக்கள் எப்போதும்**
**பெரிய பயனைத் தராத சொல்லைப்**
**பெரிதாய்க் கருதுவர்; பயன்படுத்த மாட்டார் !**

**199.** *பொருள்தீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருள்தீர்ந்த*
*மாசறு காட்சி யவர்*

**மருட்சி இல்லாத தெளிவான அறிஞர்**
**மறந்தும்கூடப் பயனில்லாச் சொற்களை**
**மனதாலும் பயன்படுத்த மாட்டார் !**

**200.** *சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க*
*சொல்லிற் பயனிலாச் சொல்*

**சொல்லுகிற சொற்களில் எல்லாம் – என்றும்**
**சொல்லிக்கொள்ளும்படி பயன் அடைய வேண்டும் !**
**சொற்ப பயன் கூட இல்லாத சொற்களை**
**சொல்லிடக் கூடாது யாண்டும் !**

## 21. தீவினையச்சம்

201. *தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்*
*தீவினை யென்னுஞ் செறுக்கு*

**தீங்கிழைத்தல் எனும் ஆணவச்செருக்கை**
**தீயவர்கள் செய்ய அஞ்சமாட்டார்கள் !**
**தீவினையால் மகிழ்ச்சி ஏற்படினும்**
**தீண்டிட அஞ்சிடுவர் சான்றோர் !**

202. *தீயவை தீய பயத்தலால் தீயவை*
*தீயினும் அஞ்சப் படும்*

**தீய செயல்களால் என்றென்றும்**
**தீமையே விளையும் ! ஆகவே**
**தீய செயல்களை எப்போதும் செய்ய**
**தீயை விடக் கொடியதாகக் கருதி அஞ்சிட வேண்டும் !**

203. *அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய*
*செறுவார்க்குஞ் செய்யா விடல்*

**தீமை செய்தவர்க்கு அதையே தண்டனைத்**
**தீர்வாகத் திருப்பி செலுத்தாமலிருப்பதே**
**தீர்க்கமான தலையாய அறிவாகும் !**

204. *மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்*
*அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு*

**மற்றவர்க்குக் கேடு செய்ய**
**மறந்தும் கூட நினைக்கக் கூடாது !**
**மனம் தீங்கிழைக்க நினைத்துவிட்டால்**
**மறுபடி திருப்பி அறமே தீங்கிழைக்கும் !**

205. *இலனென்று தீயவை செய்யற்க செய்யின்*
*இலனாகும் மற்றுப் பெயர்த்து*

**இல்லாதவன் என்ற நிலை**
**இருப்பதால் தீயவை செய்து வறுமையை**
**இல்லை என்று ஆக்கலாம் என நினைத்தால்**
**இலகுவாய் மேலும் வறுமை வாட்டும் !**

206. *தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால*
*தன்னை அடல்வேண்டா தான்*

**தான் தீய செயல்களால் வருந்துவதை விரும்பாதவன்**
**தானும் தீய செயல்களைப் பிறர்க்குச் செய்து**
**தாக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் !**

207. *எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை*
*வீயாது பின்சென் றடும்*

**எப்படிப்பட்ட நேரடிப் பகையிலிருந்தும்**
**எவராயினும் காத்துக் கொள்ளலாம் ! ஆனால்**
**எங்கே போய் ஒளிந்தாலும்**
**எப்படியும் தொடரும் தீவினைப் பகையே !**

208. *தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை*
*வீயா தடியுறைந் தற்று*

**நிழல் எப்படி ஒருவருடைய பாதங்களிலிருந்து**
**நிச்சயம் நீங்காதோ – அதன்படி**
**நிழல் போல் தீமையும், கெடுதலும்**
**நித்தம் தீயவர்களுடன் ஒட்டிக் கொள்ளும் !**

209. *தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றுந்*
*துன்னற்க தீவினைப் பால்*

**தன்னைத் தானே காதலிப்பவன்**
**தனது நலத்தை விரும்புகிறவன்**
**தான் எப்போதும் தீயசெயல்களை**
**தாமதித்தும் செய்ய மாட்டான் !**

210. *அருங்கேடன் என்ப தறிக மருங்கோடித்*
*தீவினை செய்யான் எனின்*

**நேர்கோட்டில் பயணித்து**
**நெறி வழி தவறாமல் சென்று**
**அடுத்தவர்க்கு தீங்கு விளைவிக்காதவர்**
**அருமையான கேடில்லாதவர் ஆவர் !**

## 22. ஒப்புரவறிதல்

**211.** *கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்*
*டென்னாற்றுங் கொல்லோ உலகு*

**கார்முகில் கைம்மாறு எதிர்பார்த்து**
**காலம் முழுவதும் மழை பெய்வதில்லை !**
**காக்கும் மழை போலானவர்கள் கைம்மாறாக**
**காலத்திற்கும் பதிலுதவி கேட்பதில்லை !**

**212.** *தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு*
*வேளாண்மை செய்தற் பொருட்டு*

**பாடுபட்டு பாடுபட்டுக் காலம் முழுவதும்**
**பார்த்துச் சேர்த்த பொருளெல்லாம்**
**பார்த்துப் பார்த்து பரிதவிப்போர்க்கு உதவிடவே**
**பாய வேண்டும் !**

**213.** *புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே*
*ஒப்புரவின் நல்ல பிற*

**தேவருலகத்திலும் பூவுலகத்திலும்**
**தேடினாலும் கிடைக்காது "ஒப்புரவு" எனும்**
**தேர்ந்த பொது நலப்பண்பு !**

**214.** *ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்*
*செத்தாருள் வைக்கப் படும்*

**உலக நடப்பை ஒத்து ஒப்புரவை அறிந்து**
**உதவி தேவைப்படுபவர்களுக்குத் தன் வாழ்வை**
**உதவிடும் வகையில் அமைத்துக் கொள்பவனே**
**உயிர் வாழ்பவன் ! மாறானவன் மறைந்தவனே !**

**215.** *ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்*
*பேரறி வாளன் திரு*

**பொது நல நோக்குடன் வாழ்கின்ற பேரறிவாளனின்**
**பொருட் செல்வமானது ஊரிலுள்ள**
**பொது மக்கள் அனைவருக்கும்**
**பொழுதும் பயன்தரும் ஊருணி நீராகும் !**

*216. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்*
*நயனுடை யான்கண் படின்*

**மற்றவர்களுக்கு உதவும் குணத்தை உடைய**
**மனிதனிடம் சேரும் செல்வம்**
**மரம் பழுத்து ஊரின் நடுவே வீற்று**
**மற்றனைவருக்கும் பயன் தருவதைப் போன்று !**

*217. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்*
*பெருந்தகை யான்கண் படின்*

**மரத்தின் எல்லா உறுப்புகளும்**
**மருந்தாகப் பயன்படுத்துவதைப் போல்**
**மற்றவர்களுக்கு உதவிடும் ஒப்புரவு எனும்**
**மகத்தானப் பண்புள்ளவனிடம் சேரும் செல்வம் !**

*218. இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்*
*கடனறி காட்சி யவர்*

**வாழும் வரை பிறருக்கு உதவுவதையே**
**வாழ்நாள் கடமையாக கொண்டவர்கள்**
**வாழ்க்கையில் வறுமை வந்தாலும்**
**வாழ்வில் கொண்ட கடமையை, விட மாட்டார்கள் !**

*219. நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயும்நீர*
*செய்யா தமைகலா வாறு*

**வறியவர்களுக்கு உதவிடும் பண்புள்ளவனுக்கு**
**வறுமை எது வெனில் தாம் உதவிடும்**
**வன்மையிலிருந்து விலகி உதவிட முடியாமல்**
**வருந்துவதே ஆகும் !**

*220. ஒப்புரவி னால்வருங் கேடெனின் அஃதொருவன்*
*விற்றுக்கோள் தக்க துடைத்து*

**உதவிகளைப் பிறருக்குச் செய்வதால்**
**உதவிடுபவனுக்குக் கேடு**
**உடன் வருமென்றால் அக்கேட்டை அவன்**
**உயிரே விலையாயினும் கொடுத்து வாங்கினாலும் நன்மையே !**

## 23. ஈகை

221. *வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாங்*
*குறியெதிர்ப்பை நீர துடைத்து*

**தர்மம் எனப்படுவது எப்போதும்**
**தக்கபடி இல்லாதார்க்கும், வறியவர்க்கும்**
**தயங்காமல் தருவதே ! மற்றவர்களுக்கு**
**தருவது எல்லாம் ஏதோ ஓர் ஆதாயம் கருதி !**

222. *நல்லா றெனினுங் கொளல்தீது மேலுலகம்*
*இல்லெனினும் ஈதலே நன்று*

**பொது நன்மை செய்வதற்காகக் கூட**
**பொருளைப் பிறரிடமிருந்து கொள்வது**
**மேன்மையானது இல்லை ! அது போல்**
**மேலுலகம் இல்லையெனினும் கொடுப்பது நன்று !**

223. *இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்*
*குலனுடையான் கண்ணே யுள*

**தன் வறுமைத் துன்பத்தைக் காட்டாமல்**
**தனக்குள்ள துயரை மறைத்துப் பிறர்க்கு**
**உதவிடும் உள்ளம் கொண்டு உதவுவது**
**உயர்ந்த குலத்தினரின் குணமாகும் !**

224. *இன்னா திரக்கப் படுதல் இரந்தவர்*
*இன்முகங் காணு மளவு*

**யாசிப்பவர் தாம் விரும்பும் பொருளை**
**யாசித்துப் பெற்று மகிழும் வரை**
**யாசகன் பொருளைக் கேட்கும் காலம் கூட**
**யாங்கு ஒப்புரவாளனுக்குத் துன்பமே !**

225. *ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை*
*மாற்றுவா ராற்றலிற் பின்*

**பசியைப் பொறுத்துக் கொள்ளும் உண்ணா நோன்பின்**
**பறை சாற்றும் வலிமையை விட மற்றவர்**
**பசியினைப் போக்கும் பெரு வலிமைக்கே**
**பரிவட்டமாம் !**

226. *அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்*
*பெற்றான் பொருள்வைப் புழி*

**பட்டினி எனச் சொல்லும் ஏழைகளின்**
**பசியைத் தீர்ப்பது என்பது**
**பிற்காலத்தில் தன் கருவூலத்தில்**
**பிறருக்கு உதவிடச் சேமிக்கும் செல்வமாகும் !**

227. *பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்*
*தீப்பிணி தீண்ட லரிது*

**பகிர்ந்து மற்றவர்களுடன் உண்ணும்**
**பண்பு உடையவர்களைப்**
**பசி என்னும் கொடிய நோய்**
**பக்கத்தில் கூட அணுகாது !**

228. *ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை*
*வைத்திழக்கும் வன்க ணவர்*

**பொருளைத் தேடித்தேடி சேர்ந்துப் பின்**
**பொருள் முழுவதும் கொடியோரால் இழந்தவர்**
**பிறருக்கு கொடுத்து உதவுவதால்**
**பிறக்கும் இன்பத்தை அறிய மாட்டார் !**

229. *இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய*
*தாமே தமிய ருணல்*

**குறைந்து விடும் என்று பிறர்க்கு ஈயாமல்**
**குவித்து வைத்துள்ள உணவைத் தனித்து உண்பது**
**கும்பிட்டு யாசிப்பதை விட**
**குரூரமானது !**

230. *சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்*
*ஈத லியையாக் கடை*

**இறப்பை விடத் துன்பமானது வேறெதுவும்**
**இல்லை ! எனினும், தான்**
**இல்லாதவர்க்கு எதுவும் வழங்க**
**இயலாத நிலையில் இறப்பும் இனிமையானதே !**

## 24. புகழ்

231. *ஈத லிசைபட வாழ்தல் அதுவல்ல*
*தூதிய மில்லை உயிர்க்கு*

**இல்லாதவர்க்கு ஈந்து**
**இவ்வுலக வாழ்க்கையில் புகழ் பெறுவதே**
**இம்மையில் பெரும் ஆக்கமாகும் ! இதுதவிர**
**இவ்வுயிர்க்கு வேறு ஒரு பயனுமில்லை !**

232. *உரைப்பா ருரைப்பவை யெல்லாம் இரப்பார்க்கொன்*
*றீவார்மேல் நிற்கும் புகழ்*

**பாராட்டுபவர்கள் பாராட்டுவது எல்லாம்**
**பார்த்து பார்த்து வறியவர்களுக்கு**
**வாரி வாரி ஈந்து வழங்கி**
**வான் புகழ் கொள்ளும் வள்ளல்களைப் பற்றியே !**

233. *ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லாற்*
*பொன்றாது நிற்பதொன் றில்*

**ஒப்பற்ற உலகத்தில் உயர்ந்து நிற்பது**
**ஒன்றே ஒன்று தான் ! அந்த**
**ஒன்றும் அழியாத புகழ் தவிர வேறு**
**ஒன்றும் இல்லை !**

234. *நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்*
*போற்றாது புத்தே ளுலகு*

**மண்ணுலகில் நெடும் புகழ் ஈட்டிய**
**மக்களையே வானுலகம் போற்றும் !**
**மற்றபடி தேவர்களுக்கும் புலவர்களுக்கும் கூட**
**மகுடம் சூட்டாது !**

235. *நத்தம்போல் கேடும் உளதாகுஞ் சாக்காடும்*
*வித்தகர்க் கல்லால் அரிது*

**சரித்திரம் போற்றும் புகழாளனுக்கு**
**சவமாய் ஆனாலும் இவ்வுலகில்**
**உயிரும் உடலும் அழிந்த பிறகும்**
**உலகத்தில் புகழ் இருக்கும் வித்தகர்களுக்கு !**

236. *தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று*

**தொடரும் வாழ்வு முழுவதும்**
**தொடர வேண்டும் பெரும் புகழ் ! புகழில்**
**தொய்வென்றால் மானுட வாழ்வையே**
**தொடமால் இருப்பதே நன்று !**

237. *புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை*
*இகழ்வாரை நோவ தெவன்*

**புகழ்பட வாழ முடியாதவர்கள்**
**புரிந்து கொண்டு தம்மைத் தான்**
**இகழ்ந்து கொள்ள வேண்டுமே தவிர – தம்மை**
**இகழ்பவரை நொந்து என்ன பயன் ?**

238. *வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்*
*எச்சம் பெறாஅ விடின்*

**வாழ்க்கைக்குப் பின்னும் எஞ்சி நிற்பது**
**வானுயர்ந்து விஞ்சி நிற்கும் புகழே !**
**வாழ்க்கையில் அந்தப் புகழ் மட்டும்**
**வாய்க்கப் பெறாவிட்டால் வையகம் பழிக்கும் !**

239. *வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா*
*யாக்கை பொறுத்த நிலம்*

**புகழில்லாமல் வாழ்ந்தவனைச் சுமந்த**
**புண்ணிய பூமி – வளத்தின் பயன்**
**புகாத விளையாத நிலமாகும் !**

240. *வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய*
*வாழ்வாரே வாழா தவர்*

**பழி இல்லாமல் வாழ்பவரே**
**பல்லாண்டு வாழ்பவர் ஆவர் !**
**வான் புகழ் பெற்று வாழாதவர்**
**வாழ்க்கையில் உயிர் வாழாதவர் !**

## 25. அருளுடைமை

241. *அருட்செல்வஞ் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்*
*பூரியார் கண்ணு முள*

**கொடிய உள்ளம் கொண்ட இழி மக்களிடம்**
**கொட்டிக் கிடக்கலாம் கோடி செல்வம் !**
**கொண்டாடும் அருட்செல்வம் மட்டும்**
**கொண்டிருப்பவர்கள் உயர் மக்கள் மட்டுமே !**

242. *நல்லாற்றான் நாடி யருளாள்க பல்லாற்றால்*
*தேரினும் அஃதே துணை*

**நாம் நல்ல வழிகளில் ஆராய்ந்து**
**நாடியே அருளைப் பெற வேண்டும் !**
**அளவற்ற ஆற்றல் மிகுதியால் ஆராய்ந்தாலும்**
**'அருளே' வாழ்க்கைக்குத் துணை !**

243. *அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த*
*இன்னா உலகம் புகல்*

**அருள் நிறைந்த மனம் படைத்தவர்களுக்கு**
**அறியாமை எனும் இருள்**
**அமைந்த துன்பம் சூழ் வாழ்க்கை**
**அமையவே அமையாது !**

244. *மன்னுயி ரோம்பி அருளாள்வாற் கில்லென்ப*
*தன்னுயி ரஞ்சும் வினை*

**உயிர்கள் அனைத்திடமும் மண்ணில்**
**உள்ளன்போடு காத்திடும் அருளாளன்**
**உயிரின் பொருட்டு அஞ்ச மாட்டான்**

245. *அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்*
*மல்லன்மா ஞாலங் கரி*

**உள்ளத்தில் உள்ள அருளின்**
**உணர்வினால் துன்பத்தின் வலியை**
**உணராமல் கடமையாற்றலாம் ! அதற்கு**
**உலகத்தில் காற்றின் வலிமையே சாட்சி !**

*246.* *பொருள்நீங்கிப் பொச்சாந்தா ரென்பர் அருள்நீங்கி*
*அல்லவை செய்தொழுகு வார்*

**அருளற்ற மனம் கொண்டு தீமைகளைப் புரிபவர்கள்**
**அர்த்தமில்லாத வாழ்க்கை வாழ்ந்து**
**அருமைக் குறிக்கோளையும் மறந்தவர்கள் ஆவர் !**

*247.* *அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்*
*கிவ்வுலகம் இல்லாகி யாங்கு*

**பொருள் இல்லாதவர்க்கு இல்வாழ்க்கைப்**
**பொருளாதாரச் சிக்கலினால் நன்றாக இராது !**
**அருளும் கருணை உள்ளமும் இல்லாதவர்களுக்கு**
**அருமையான வீடுபேறு வாழ்க்கை இராது !**

*248.* *பொருளற்றார் பூப்ப ரொருகால் அருளற்றார்*
*அற்றார்மற் றாதல் அரிது*

**பொருளில்லார் மீண்டும் தேடித் தேடிப்**
**பொருளைப் பெறலாம் ! செல்வத்தை அடையலாம் !**
**அருளில்லார் வாழ்க்கையில்**
**அளவற்றச் சிறப்பையும் பலனையும் பெறுதல் அரிது !**

*249.* *தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்*
*அருளாதான் செய்யும் அறம்*

**தெளிந்த அறிவு இல்லாதவன் – மெய்ஞானத்தின்**
**தெளிந்த உண்மைப் பொருளை அடைவதைப் போல்**
**தெள்ளிய அருள் இல்லாதவன் செய்யும் அறச் செயல் இருக்கும் !**

*250.* *வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்*
*மெலியார்மேற் செல்லு மிடத்து*

**தன்னைவிட மெலிந்தவரைத்**
**தண்டனையாகத் துன்புறுத்தும் போது**
**தன்னைவிட வலியவர் முன்**
**தன்னிலை என்னாகும் என எண்ண வேண்டும் !**

## 26. புலால் மறுத்தல்

251. *தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்*
*எங்ஙனம் ஆளும் அருள்*

**உடம்பை வளர்ப்பதற்காகப் பிற உயிரின்**
**உடம்பை உணவாக்கிக் கொள்பவர்**
**உண்மையில் எப்படி அருளாளராக இருப்பர் ?**

252. *பொருளாட்சி போற்றாதார்க் கில்லை அருளாட்சி*
*ஆங்கில்லை ஊன்றின் பவர்க்கு*

**பொருளைப் பேணிக் காத்திடவில்லை யெனில்**
**பொருள் வரவு இல்லை !**
**இறைச்சியை உண்பவருக்கோ**
**இம்மையில் அருள் வரவு இல்லை !**

253. *படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா தொன்றன்*
*உடல்சுவை யுண்டார் மனம்*

**உயிரைக் கொலை செய்யும் ஆயுதம்**
**உடையவனுக்கு நெஞ்சில் இரக்கம் இருக்காது ! – பிற**
**உயிரின் உடம்பை நன்கு சுவைத்து**
**உண்பவனுக்கு நெஞ்சில் அருள் இருக்காது !**

254. *அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்*
*பொருளல்ல தவ்வூன் தினல்*

**உயிரை அழிக்காதிருப்பது அருள்**
**உயிரை அழிப்பது அருள் இல்லாமை !**
**உயிரைக் கொலை செய்து அதன்**
**உடம்பை புசிப்பது பாவச் செயலே !**

255. *உண்ணாமை யுள்ள துயிர்நிலை ஊனுண்ண*
*அண்ணாத்தல் செய்யா தளறு*

**இறைச்சி உண்ணாமையினால் பிற உயிர்கள்**
**இறவாமல் உயிர்கள் அழியாமல் நிலைத்து**
**இருக்கின்றன ! நரகம் கூட வாய் திறவாத**
**இறைச்சிக்கு மனிதன் வாய் திறப்பது ஏன் ?**

256. *தினற்பொருட்டால் கொல்லா துலகெனின் யாரும்*
*விலைப்பொருட்டால் ஊன்றருவா ரில்*

**உலை வைப்பதற்காக எந்த ஒரு**
**உயிரைக் கொல்லும் நிலை இல்லாமலிருக்குமானால்**
**விலை வைத்து இறைச்சியை**
**விற்பதுக்கு யாரும் இருக்க மாட்டார் !**

257. *உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்*
*புண்ண துணர்வார்ப் பெறின்*

**'புலால்' என்பது ஓர் உடம்பின்**
**புண் என்பது எல்லோரும்**
**புலனாய்ந்து தெரிந்து கொண்டால்**
**புலாலை யாரும் உண்ணவே மாட்டார் !**

258. *செயிரின் தலைப்பிரிந்த காட்சியா ருண்ணார்*
*உயிரின் தலைப்பிரிந்த ஊன்*

**மாசற்ற தெளிந்த அறிவுடைய**
**மாபெரும் அறிஞர் பெருமக்கள்**
**மாண்ட உயிரிலிருந்து பிரிந்த உடம்பான**
**மாமிசத்தை உண்ண மாட்டார்கள் !**

259. *அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்*
*உயிர்செகுத் துண்ணாமை நன்று*

**'ஆ'வின் நெய்யால் ஆகுதி பெய்து**
**ஆயிரமாயிரம் வேள்விகள் செய்வதை விட**
**ஆருயிர் ஒன்றினைக் கொன்று**
**ஆசையுடன் உண்ணாதிருப்பது நன்று !**

260. *கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி*
*எல்லா உயிருந் தொழும்*

**உயிரைக் கொல்லாதவனையும், புலால்**
**உண்ணாதவனையும் என்றென்றும்**
**உலகத்தில் வாழும் அனைத்து**
**உயிர்களும் கை கூப்பித் தொழும் !**

## 27. தவம்

261. *உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை*
*அற்றே தவத்திற் குரு*

**‘தவத்தின்’ குணம் என்னவெனில்**
**‘தன்’ துன்பத்தைப் பொறுத்துக் கொள்வது மட்டுமல்ல**
**தன் போன்ற பிற உயிர்களுக்கும்**
**தக்கதொரு துன்பத்தைச் செய்யாது இருத்தலே !**

262. *தவமுந் தவமுடையார்க் காகும் அவமதனை*
*அஃதிலார் மேற்கொள் வது*

**“தவம்” மனத் திடமும் ஈடுபாடும்**
**தன்னகத்தே கொண்டவர்க்கே உறுதியாகும் !**
**தகுதிகள் தக்கபடி இல்லையெனில்**
**தவத்தை மேற்கொள்வது வீணே !**

263. *துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொன்*
*மற்றை யவர்கள் தவம்*

**துறவறம் மேற் கொண்டவர்களுக்குத்**
**துணை நிற்க வேண்டி**
**இல்லறம் மேற் கொண்டவர்கள்**
**இனிய தவத்தை மறந்தனரோ ?**

264. *ஒன்னார்த் தெறலும் உவந்தாரை யாக்கலும்*
*எண்ணின் தவத்தான் வரும்*

**எண்ணிய மாத்திரத்தில்**
**எதிரிகளை வீழ்த்தவும், நண்பரைக் காக்கவும்**
**எண்ணத்தில் உறுதியும் கட்டுப்பாடு**
**என்கின்ற தவமும் இருந்தால் இயலும் !**

265. *வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்*
*ஈண்டு முயலப் படும்*

**விரும்பியதை விரும்பியவாறு**
**வென்றிடுவது தவம் ! ஆகவே**
**விரைந்து இல்லறத்தாரும்**
**வியத்தகு தவத்தை முயல வேண்டும் !**

266. *தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்*
*அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு*

**தவம் மேற்கொண்டவர்கள் மட்டுமே**
**தம் கருமத்தில் கண்ணாயிருப்பர் !**
**அப்படித் தவம் மேற்கொள்ளாதார் வீணே**
**அவதிப் படுவர் ஆசைப்பட்டு !**

267. *சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடுந் துன்பஞ்*
*சுடச்சுட நோற்கிற் பவர்க்கு*

**சுடச் சுடச் துன்பங்கள் வருத்திச்**
**சுட்டாலும் தவம் மேற் கொள்வோர்**
**சுட்டிக் காட்டிய குறிக்கோளை நோக்கிச் சென்று**
**சுடரும் பொன் போல் ஒளி விடுவர் !**

268. *தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய*
*மன்னுயி ரெல்லாந் தொழும்*

**'தன்னுயிர்' என்கின்ற பற்றும்**
**'தான்' என்கின்ற இறுமாப்பும்**
**மருந்துக்கும் இல்லாதவர்களை**
**மண்ணில் உள்ள மற்ற உயிர்களெல்லாம் தொழும் !**

269. *கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்றலின்*
*ஆற்றல் தலைப்பட் டவர்க்கு*

**தாங்க முடியாத துன்பங்கள் வந்தாலும்**
**தாங்கிக் கொண்டு – வாழ்க்கையில் குறிக்கோள்**
**தான் குறி எனத் தவ வலிமையானவர் எமனையும்**
**தாண்டும் உறுதி படைத்தவர் ஆவார் !**

270. *இலர்பல ராகிய காரணம் நோற்பார்*
*சிலர்பலர் நோலா தவர்*

**இல்லாதவர் பலராகவும்**
**இருப்பவர் சிலராகவும்**
**இருப்பதற்குக் காரணம் – முயற்சியில்**
**இருப்பவர் சிலரே ! இல்லாதவர் பலரே !**

## 28. கூடா ஒழுக்கம்

271. *வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்*
*ஐந்தும் அகத்தே நகும்*

**வஞ்ச மனம் கொண்ட**
**வஞ்சகனின் உடம்பில் கலந்திருக்கும்**
**வகை ஐந்தும் பூதங்களும் அவனின்**
**வருத்தும் பொய் ஒழுக்கத்தை கண்டு**
**வகை தொகை இல்லாமல் தங்களுக்குள் நகைக்கும் !**

272. *வானுயர் தோற்றம் எவன்செய்யுந் தன்நெஞ்சத்*
*தானறி குற்றப் படின்*

**வாய்த்த நெஞ்சமே குற்றம் எனச் சுட்டிக்காட்டியும்**
**வாழ்க்கையில் குற்றங்களைச் செய்தால்**
**வானுயர்ந்த தவக்கோலம் கொண்டவராயினும்**
**வாய்ப்பே இல்லை பயன் பெற !**

273. *வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்*
*புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று*

**தவக் கோலத்தில் தன்னை மறைத்துக் கொண்டு**
**தவறான காரியங்களை செய்வது**
**பசு ஒன்று புலித்தோலை போர்த்திக் கொண்டு**
**பயிரை மேய்வது போன்றது !**

274. *தவமறைந் தல்லவை செய்தல் புதல்மறைந்து*
*வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று*

**வேடன் ஒருவன் புதரில் மறைந்து**
**வேவு பார்த்து வலை வீசி பறவைகளை**
**வேட்டையாடுவது போலத் தான் தவக்கோலத்தில் மறைந்திருந்து**
**வேண்டாத காரியங்களை பொய்தவத்தார் செய்வது !**

275. *பற்றற்றேம் என்பா படிற்றொழுக்கம் எற்றெற்றென்*
*றேதம் பலவுந் தரும்*

**எந்தப் பற்றும் இல்லையென**
**எளிதாக வேடம் போட்டு**
**ஏமாற்றும் போலி தவத்தார் பின்**
**ஏன் செய்தோம் ஏன் செய்தோம் என்றே**
**ஏங்கித் துன்பப்படுவர் !**

276. *நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து*
*வாழ்வாரின் வன்கணா ரில்*

**நெஞ்சில் ஆசைகளைத் தேக்கிக் கொண்டு**
**நேரெதிராக ஆசை இல்லாதாராய்**
**வஞ்சித்து வாழ்கின்றவர்களைப் போல்**
**வடிகட்டிய கொடியவர்கள் யாருமில்லை !**

277. *புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி*
*மூக்கிற் கரியா ருடைத்து*

**குன்றி மணி போல் புறத் தோற்றத்தில்**
**குளிர் சிவப்பாக இருந்தாலும் மனதில்**
**குறுகிய மூக்கைப் போல கருத்த**
**குறியீடாக மனம் படைத்தவர் உள்ளனர் !**

278. *மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி*
*மறைந்தொழுகு மாந்தர் பலர்*

**நீருக்குள் மூழ்கியோர் தம்மை முழுவதுமாக**
**நீரில் மறைத்திருப்பது போல்**
**நீதி வழி மாண்புடையவர் என**
**நீங்காப் புகழில் மறைத்துக் கொண்ட மாசுடையோர் பலர் !**

279. *கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கண்ண*
*வினைபடு பாலாற் கொளல்*

**நேராகத் தோன்றும் அம்பு கொடியது !**
**நேரெதிராக வளைந்து நெளிந்து தோன்றும்**
**நேர்த்தியான யாழ் கொம்பு இனியது ! ஆகவே மனிதர்களை**
**நேரிடும் வினைச் செயல்களால் மட்டுமே மதிப்பிடுக !**

280. *மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்*
*பழித்த தொழித்து விடின்*

**பழிக்கின்ற செயல்களைச் செய்து உலகத்தின்**
**பழிப்பிற்கு ஆளாகின்ற துறவி, தலைமுடியை**
**மழித்தோ, சடா முடியை வளர்த்தோ கோலத்தை**
**மட்டும் மாற்றிக் கொள்வது ஏமாற்று வித்தையே !**

## 29. கள்ளாமை

281. *எள்ளாமை வேண்டுவா னென்பான் எனைத்தொன்றுங்*
*கள்ளாமை காக்கதன் நெஞ்சு*

**எள்ளி நகையாடும் இகழ்ச்சிக்கு**
**என்றைக்கும் ஆட்படாமல் இருக்க வேண்டும்**
**எனில், தன் நெஞ்சில்**
**எந்தப் பொருளையும் களவாடும் நினைப்பே கூடாது !**

282. *உள்ளத்தால் உள்ளலுந் தீதே பிறன்பொருளைக்*
*கள்ளத்தால் கள்வே மெனல்*

**உலகத்தில் உள்ள மற்றவர்க்கு**
**உரிமையான பொருளை வஞ்சித்து**
**உடனே கள்ளத்தால் கவர்வேன் என்று**
**உள்ளத்தால் நினைப்பதே தீது !**

283. *களவினா லாகிய ஆக்கம் அளவிறந்*
*தாவது போலக் கெடும்*

**கொள்ளையடித்துப் பொருளைக் குவித்து**
**கொள்முதல் செய்வது முதலில் வளரும் அளவு**
**கொள்ளாத நிலை இருந்தாலும் – பின்னர்**
**கொண்டு போய் விடும் மொத்தத்தையும் !**

284. *களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்*
*வீயா விழுமந் தரும்*

**களவின் மீது கொண்ட காதல்**
**கவர்ச்சியும், தீராத மோகமும், ஆசையும் –**
**கடைசியில் நம்மை கொண்டு சேர்க்கும்**
**கடும் துன்பத்தில் !**

285. *அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்*
*பொச்சாப்புப் பார்ப்பார்க ணில்*

**சோர்வடைந்திருக்கும் நேரம் பார்த்து**
**சோதனை ஏற்படுத்திக் களவாடி**
**சோதிப்பவர்கள் அருள் கருதி அன்புடன்**
**சோபிக்க மாட்டார்கள் !**

*286. அளவின்கண் நின்றொழுக லாற்றார் களவின்கண்*
*கன்றிய காத லவர்*

**களவோடு காதல் கொண்டு**
**களிப்போடு வாழ்கின்ற கருத்து உடையோர் !**
**அளவோடு செலவு செய்து வாழ**
**அடிப்படை அமைத்துக் கொள்ளாதவர்**

*287. களவென்னுங் காரறி வாண்மை அளவென்னும்*
*ஆற்றல் புரிந்தார்க ணில்*

**அளவு அறிந்து வாழும்**
**அறிவும் ஆற்றலும் உடையவர்களுக்கு**
**களவு என்னும் இருளான**
**கருத்து உள்ள புத்தி இருக்காது !**

*288. அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்*
*களவறிந்தார் நெஞ்சில் கரவு*

**அளவு அறிந்து வாழ்பவர் நெஞ்சில்**
**அறம் நீங்காமல் இருக்கும் !**
**அது போல் களவு மட்டுமே**
**அறிந்தவர் நெஞ்சில் வஞ்சமே இருக்கும் !**

*289. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல*
*மற்றைய தேற்றா தவர்*

**களவுத் தொழிலைத் தவிர பிற தொழிலைக்**
**கருதாதவர் – நற்செயல் புரியாதவர்,**
**அளவு கடந்த குற்றச் செயல் புரிந்து**
**அடியோடு அழிவர் !**

*290. கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்*
*தள்ளாது புத்தே ளுலகு*

**களவாடுபவர்களுக்கு உடலில் உயிர் கூட**
**கண நேரத்தில் தவறலாம் !**
**களவை கிஞ்சித்தும் நினையாதவர்களுக்கு**
**கனவில் காணும் விண்ணுலகம் தவறாது !**

# 30. வாய்மை

**291.** *வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்*
*தீமை யிலாத சொலல்*

**உண்மை எனப்படுவது என்னவெனில்**
**உலகில் வாழும் யாருக்கும் தீமை**
**உண்டாக்காத சொற்களை பேசுவதே !**

**292.** *பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த*
*நன்மை பயக்கு மெனின்*

**உண்மையில் குற்றம் தீர்ந்த நன்மை**
**உண்டாக்குமெனில் பொய்யான சொற்களும்**
**உண்மையின் மதிப்பைப் பெறும் !**

**293.** *தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்*
*தன்நெஞ்சே தன்னைச் சுடும்*

**தன்நெஞ்சே பொய் என அறிந்த பின்**
**தயக்கமின்றி பொய்யைச் சொன்னால்**
**தன் நெஞ்சே பின்னால் சுட்டெரித்துத்**
**தண்டிக்கும் !**

**294.** *உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்*
*உள்ளத்து ளெல்லாம் உளன்*

**உள்ளத்தால் கூட பொய்யை**
**உள்ளபடி நினைக்காமல் வாழ்பவர்களை**
**உலகத்தில் உள்ள மக்களெல்லாம்**
**உள்ளத்தில் வைத்துப் போற்றுவார்கள் !**

**295.** *மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு*
*தானஞ்செய் வாரின் தலை*

**உதட்டளவில் இன்றி உளமார**
**உண்மை பேசுகிறவர்கள் தவத்திலும் தானத்திலும்**
**உறுதியோடு இருப்பவரை விட**
**உயர்ந்தவர்கள் !**

296. *பொய்யாமை யன்ன புகழில்லை எய்யாமை*
*எல்லா அறமுந் தரும்*

**உண்மை சொல்லி வாழுகின்ற**
**உயர்ந்த புகழுக்குரிய நிலை**
**உண்மையில் வேறு எதற்கும் இல்லை !**
**உள்ளபடி அதன்படி வாழ்ந்தால்**
**உலக நன்மைகள் அனைத்தும் வந்து சேரும் !**

297. *பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற*
*செய்யாமை செய்யாமை நன்று*

**உண்மையை உண்மையாகவே**
**உணர்ந்து கடைப்பிடித்தால் – அதன்பின்**
**உள்ள பிற அறங்களை**
**உள்ள படி செய்ய வேண்டிய அவசியமில்லை !**

298. *புறந்தூய்மை நீரா னமையும் அகந்தூய்மை*
*வாய்மையால் காணப் படும்*

**உடலில் உள்ள அழுக்கு – நீரால் நீங்கும்**
**உள்ளத்தில் உள்ள அழுக்கு**
**உண்மையால் நீங்கும் !**

299. *எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்*
*பொய்யா விளக்கே விளக்கு*

**விசாலமான வெளியிருளை நீக்கும்**
**விளக்குகள் எல்லாம் விளக்கல்ல !**
**உள்ளத்தின் இருளை நீக்கும்**
**"உண்மை" விளக்கே உண்மையான விளக்காகும் !**

300. *யாமெய்யாக் கண்டவற்று ளில்லை எனைத்தொன்றும்*
*வாய்மையின் நல்ல பிற*

**உண்மையாக யான் கண்ட உண்மைகளுள்**
**"உண்மை" எனும் வாய்மைப் பண்பைப்போல்**
**உயர்ந்தது வேறு எதுவும் இல்லை !**

## 31. வெகுளாமை

301. *செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்*
*காக்கினென் காவாக்கா லென்*

**செல்லுபடியாகின்ற இடத்தில் கோபத்தைச்**
**செலுத்தாமல் இருப்பவனே சினங் காப்பான் !**
**செல்லாத இடத்தில் கோபத்தைச்**
**செலுத்தினால் என்ன ? செலுத்தாவிட்டால் தான் என்ன ?**

302. *செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்*
*இல்லதனின் தீய பிற*

**செல்லுபடியாகாத இடத்தில் கோபத்தைச்**
**செலுத்துவது தீங்கு விளைவிக்கும் !**
**செல்லுகிற இடத்தில் கோபத்தை**
**செலுத்துவதும் அதை விடத் தீது !**

303. *மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய*
*பிறத்தல் அதனான் வரும்*

**எவரிடத்திலும் சினம் கொள்வதை**
**எப்படியும் மறந்து விட வேண்டும் !**
**என்றும் அதனால் தீயவை வருதலால் !**

304. *நகையும் உவகையுங் கொல்லுஞ் சினத்தின்*
*பகையும் உளவோ பிற*

**முக மகிழ்ச்சியையும் மன மகிழ்ச்சியையும்**
**முழுதும் அழிக்கின்ற சினத்தை விட**
**முழு முதற் பகை வேறேதும் உண்டோ ?**

305. *தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்*
*தன்னையே கொல்லுஞ் சினம்*

**நம்மை நாம் காத்துக்கொள்ள வேண்டுமெனில்**
**நம் கோபத்தை நாம் கட்டுப்படுத்த வேண்டும் !**
**நம் கோபம் கட்டுப்பாடற்றுப் போனால் – அது**
**நம்மையே அழித்துவிடும் !**

306. *சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்*
*ஏமப் புணையைச் சுடும்*

**சினங் கொண்டவரை மட்டுமல்ல தன்னுடன் சேர்ந்தோரையும்**
**சினமென்னும் நெருப்பே அழிக்கும் ! அதனால்**
**சிற்சில துன்ப காலங்களில் பாதுகாக்கும்**
**சிறு தோணி போன்ற சுற்றமும் அழியும் !**

307. *சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு*
*நிலத்தறைந்தான் கைபிழையா தற்று*

**நிலத்தைக் கையால் அறைந்தால்**
**நிச்சயம் கை தான் வலிக்கும் !**
**சினத்தைக் கைக் கொண்டவனுக்கு**
**சிறிதும் தப்பாது அதே நிலையே !**

308. *இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்*
*புணரின் வெகுளாமை நன்று*

**கொழுந்து விட்டு எரியும் நெருப்பைக்**
**கொண்டு சுடுகின்ற துன்பத்தைக்**
**கொடுப்பவர்களிடத்தும் கூட சினத்தைக்**
**கொண்டு செலுத்தக் கூடாது !**

309. *உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்*
*உள்ளான் வெகுளி யெனின்*

**உள்ளத்தில் வெகுளி எனும் சினத்தை**
**உண்டாக்காமல் இருந்தால்**
**உள்ளத்தில் நினைத்ததெல்லாம்**
**உடனடியாகக் கிட்டும்; உயர்வு எட்டும் !**

310. *இறந்தார் இறந்தா ரனையர் சினத்தைத்*
*துறந்தார் துறந்தார் துணை*

**இறுதி வரை எல்லையற்ற சினம் கொள்பவர்**
**இறுதிப் பயணம் மேற்கொள்ளும் இறந்தவர் ஆவர் !**
**அறவே சினத்தை துறந்தவர்**
**அறவழி நடக்கும் முற்றும் துறந்த துறவியாவார் !**

## 32. இன்னா செய்யாமை

311. *சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா*
*செய்யாமை மாசற்றார் கோள்*

**சிறப்பை அளிக்கும் செல்வத்தைப் பெறுவதாக இருந்தாலும்**
**சிறிதும் பிறர்க்குத் துன்பம் செய்யாமல் இருப்பதே**
**சிந்தையிலும் மாசற்றவர் கொள்கையாகும் !**

312. *கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா*
*செய்யாமை மாசற்றாறார் கோள்*

**கொடுங்கோபங் கொண்டு ஒருவன் சொல்லாலோ செயலாலோ**
**கொடுந் துன்பம் செய்யும் போது அவனுக்குத் துன்பம்**
**கொடுக்காமல் தாங்கிக் கொள்வதே மாசற்றவர்**
**கொள்கையாகும் !**

313. *செய்யாமற் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்*
*உய்யா விழுமந் தரும்*

**இன்னா செய்யாமற் போனாலும்**
**இன்னொருவன் தன் மீது உள்ள பகையால்**
**இறுக்கும் துன்பம் தந்தால் அவனுக்கு**
**இன்னும் தீங்கு செய்தாலும் மீளாத் துன்பம் தரும் !**

314. *இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண*
*நன்னயஞ் செய்து விடல்*

**வெம்மை தரும் தீங்கை செய்பவரே**
**வெட்கப்படும்படியாக அவனுக்கு நன்மையை**
**வெளிப்படுத்துதலே நாம் தரும் தண்டனை !**

315. *அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்*
*தந்நோய்போற் போற்றாக் கடை*

**மற்ற உயிர்களுக்கு வரும் துன்பத்தை**
**மனதால் தனக்கு வந்த துன்பமாகக் கருதி**
**மறுப்பின்றி உடனே காப்பாற்ற முடியாதவர்களுக்கு**
**மடங்கு பல அறிவிருந்தும் பயன் இல்லை !**

316. *இன்னா எனத்தா னுணர்ந்தவை துன்னாமை*
*வேண்டும் பிறன்கட் செயல்*

**துறந்தவன் ஒருவன் தான் அனுபவித்து உணர்ந்து**
**துன்பம் என்று அறிந்தவற்றைத்**
**துளி அளவேனும் பிறருக்குச் செய்யாமை வேண்டும் !**

317. *எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்*
*மாணாசெய் யாமை தலை*

**எக்காலத்திலும், எவர்க்கும், எள்ளளவும், எவ்வகையிலும்**
**எவர் மனதிலும் ஒட்டாத செயலான தீங்கை**
**எண்ணாமல் இருப்பதே தலையான சிறப்புகளின்**
**எண்ணிக்கையில் முதன்மையானதாகும் !**

318. *தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ*
*மன்னுயிர்க் கின்னா செயல்*

**தன் உயிருக்குத் தீங்கு செய்வது என்னவென்று**
**தன் மனம் அறிந்து அதை அறவே**
**தவிர்க்க விரும்புகிறவன் உலகில்**
**தன் நிலை பேறடைய பிற உயிர்க்குத் துன்பம் செய்வதேனோ ?**

319. *பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா*
*பிற்பகல் தாமே வரும்*

**பிறருக்கு முற்பகலில் துன்பம் இழைத்தால்**
**பிற்பகலில் அதே போன்ற துன்பம் நம்மை**
**பின்பற்றித் தாமே வரும் !**

320. *நோயெல்லாம் நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்*
*நோயின்மை வேண்டு பவர்*

**துன்பத்தைப் பிறருக்கு செய்தவர்**
**துன்பம் அடைவது உறுதி ! ஆகவே**
**துன்பம் தனக்கு வருவதை விரும்பாதவன் – அத்**
**துன்பத்தைப் பிறருக்கு செய்யார் !**

# 33. கொல்லாமை

**321.** *அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்*
*பிறவினை எல்லாந் தரும்*

**கொலை செய்யாமல் இருப்பதே அறம் ! – உயிர்க்**
**கொலை செய்து விட்டால் பிற தீமைகளை**
**கொண்டு வந்து விடும் தானாக !**

**322.** *பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்று ளெல்லாந் தலை*

**பிற உயிர்க்குப் பகுத்துக் கொடுத்து**
**பின் தானும் உண்டு**
**பிற உயிர்களை வாழ்விப்பது**
**பின்பற்றும் நூலோர் தொகுத்த அறங்களில் முதன்மையானது !**

**323.** *ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்*
*பின்சாரப் பொய்யாமை நன்று*

**"கொல்லாமையே" அறங்களில் நாம்**
**கொடுக்க வேண்டிய இடம் முதன்மையானது !**
**பின் தொடர்ந்து இரண்டாவதாக இடம்**
**பிடிப்பது "பொய்யாமையே" !**

**324.** *நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்*
*கொல்லாமை சூழும் நெறி*

**'நன்னெறி' எனப்படுவது யாதெனின்**
**நல்லவழி காட்டும் நீதி நூல்கள்**
**நவிலும் எவ்வுயிரையும் கொல்லாமையே !**

**325.** *நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்*
*கொல்லாமை சூழ்வான் தலை*

**பிறவியில் வரும் துன்பங்களுக்குப்**
**பிடி கொடுக்க அஞ்சித் துறவியாவதை விட**
**இல்லறத்திலேயே இருந்து கொண்டு**
**இன்ன பிற உயிர்களைக் கொல்லாமையே சிறந்தது !**

326. *கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்*
*செல்லா துயிருண்ணுங் கூற்று*

**கொல்லாமை எனும் சிறந்த அறத்தைக்**
**கொண்டு வாழ்பவனை**
**உலகத்து உயிர்களை எல்லாம்**
**உண்ணும் காலனும் நெருங்கிட வாய்ப்பில்லை !**

327. *தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி*
*தின்னுயிர் நீக்கும் வினை*

**தன்னுயிருக்கே ஆபத்து என்றாலும் அதைத்**
**தடுக்க இன்னொரு உயிரை**
**தயங்காமல் எடுக்கும் தீய செயல் வேண்டாம் !**

328. *நன்றாகும் ஆக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்*
*கொன்றாகும் ஆக்கங் கடை*

**கொட்டும் பயன்களைக்**
**"கொலை" பெரிதாகத் தந்திடினும் – அறத்தைக்**
**கொண்டாடும் சான்றோர்கள் – அதன்படி**
**கொடுப்பதை இழிவாகவே கருதுவார்கள் !**

329. *கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்*
*புன்மை தெரிவா ரகத்து*

**கொலை செய்தலின் இழிவை அறிவு**
**கொண்டு ஆராய்வதால் – உயிரைக்**
**கொலை செய்யும் மிக இழிவானக் –**
**கொடுஞ் செயல் புரிபவர் "புலையரே" !**

330. *உயிருடம்பின் நீக்கியா ரென்ப செயிருடம்பின்*
*செல்லாத்தீ வாழ்க்கை யவர்*

**ஓர் "உயிரை" உடம்பு எனும்**
**ஓட்டிலிருந்து முற்பிறவியில் நீக்கியவர்**
**ஓயாத நோயும் வறுமை மிகுந்த இழி வாழ்வும் உடையவர் ஆவர் !**

## 34. நிலையாமை

331. *நில்லாத வற்றை நிலையின என்றுணரும்*
*புல்லறி வாண்மை கடை*

**நிலையில்லாதவைகளை என்றும்**
**நிலையானதாகவே எப்போதும்**
**நினைக்கும் அறிவானது**
**நிச்சயம் கடைந்தெடுத்த கடையானது !**

332. *கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்*
*போக்கும் அறுவிளிந் தற்று*

**கூத்தாடும் இடத்தில் மக்கள்**
**கூடுவதைப் போல சேரச் சேர செல்வம்**
**கூடும் ! கூத்து முடிந்ததும்**
**கூட்டம் கலைவதைப் போல் செல்வமும் கரையும் !**

333. *அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்*
*அற்குப ஆங்கே செயல்*

**ஓரிடத்தில் தேங்கி நிற்பதில்லை செல்வம் !**
**ஓடோடி உருண்டோடிடும் செல்வம் !**
**ஓடை போல் ஓடி, ஓட்டாண்டி ஆவதற்குள்**
**ஓங்கிய நிலையான அறத்தை நிறுவ வேண்டும் !**

334. *நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்*
*வாள துணர்வார்ப் பெறின்*

**நாள் எனப்படுவது கால அளவு ! – அது**
**நாளும் ஆயுளைக் குறைத்து**
**உடலிலிருந்து உயிரை அறுக்கும் வாள் ! – இதை**
**உணர்பவர்களுக்கு உண்மை விளங்கும் !**

335. *நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை*
*மேற்சென்று செய்யப் படும்*

**நாக்கு தள்ளிச் சுருண்டு விக்கல் எழும்பி–**
**நாழிகையில் நாண்டு கொண்டு விழும்**
**நிச்சயமில்லா வாழ்க்கையினை உணர்ந்து**
**நிச்சயம் நற்பணிகளை முன்பே ஆற்றிட வேண்டும் !**

**336.** *நெருந லுளனொருவன் இன்றில்லை என்னும்*
*பெருமை யுடைத்திவ் வுலகு*

**நேற்று இருந்த ஒருவன்**
**நேரம் காலம் கடந்து**
**நொடியில் இன்று இல்லை எனும்**
**நொடிப்பொழுதும் உலகம் பெருமை கொள்ளும் !**

**337.** *ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப*
*கோடியு மல்ல பல*

**ஒரு பொழுது கூட வாழ்க்கையில்**
**ஒரு "முறையோடு" வாழ வேண்டுமென**
**ஒரு கணம் கூட அறிய மாட்டார் – ஆனால்**
**ஒரு கோடி எண்ணக் கோட்டைகள் கட்டுவார் !**

**338.** *குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே*
*உடம்போ டுயிரிடை நட்பு*

**முட்டையிலிருந்து குஞ்சு பொறிந்ததும்**
**முகிழும் பறவை பறப்பது போல்**
**உடம்பு எனும் ஓட்டிற்கும்**
**உயிருக்கும் உள்ள நட்பு அத்தகையதே !**

**339.** *உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி*
*விழிப்பது போலும் பிறப்பு*

**உறங்குவது போல் வருவது இறப்பு**
**உறங்கி விழிப்பது போல் வருவது பிறப்பு !**
**உறங்குவதும் உறங்கி விழிப்பதும்**
**உருமாறி உருமாறி வருவதுதான் பிறப்பும் இறப்பும் !**

**340.** *புக்கி லமைந்தின்று கொல்லோ உடம்பினுள்*
*துச்சி லிருந்த உயிர்க்கு*

**உடலில் ஒட்டியிருந்த உயிர்**
**உடலை விட்டுப் பிரிந்தவுடன்**
**நிலையாக தங்கியிருக்க**
**நிதர்சனமான வீட்டை இன்னும் தேடி அலைகிறதோ ?**

## 35. துறவு

**341.** *யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்*
*அதனின் அதனின் இலன்*

**எந்தெந்தப் பொருளின் மீது ஆசை**
**எண்ணத்தையும், எதிர்பார்ப்பையும், பற்றையும்**
**துறந்தோமோ அந்தந்தப் பொருளினால் வரும்**
**துன்பமும் இல்லை ! துயரமும் இல்லை !**

**342.** *வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபின்*
*ஈண்டியற் பால பல*

**துன்பம் துளைத்தெடுக்காமல் இருக்க**
**ததும்பும் செல்வம் இருக்கும் போதே**
**துளிர் விடும் ஆசை அனைத்தையும்**
**துறந்து விட்டால் துவங்கும் இன்ப மயம் !**

**343.** *அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்*
*வேண்டிய வெல்லாம் ஒருங்கு*

**அடக்க வேண்டும் அடக்க வேண்டும்**
**ஐம்புலன்களையும் அடக்க வேண்டும் !**
**விட வேண்டும் விட வேண்டும்**
**விரும்பும் தேவைகள் அனைத்தையும் ஒன்றாக !**

**344.** *இயல்பாகும் நோன்பிற்கொன் றின்மை உடைமை*
*மயலாகும் மற்றும் பெயர்த்து*

**தவமிருக்க ஒரு பொருளின் மீது கூட**
**தனித்த ஆசை இருத்தல் கூடாது !**
**தவசியானவன் தனித்ததொரு பொருள் மீது**
**தணியாத மோகம் கொண்டால் அது**
**தயங்காமல் மேன்மேலும் மயக்கி விடும் !**

**345.** *மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்*
*உற்றார்க் குடம்பும் மிகை*

**பிறவித் துன்பத்தைப் போக்கிக் கொள்ள**
**பிறப்பெடுத்தத் துறவிக்கு தன்னுடன்**
**பிறந்த உடம்பே மிகை என்பதால்**
**பிற பொருட்களோடு தொடர்பு எதற்கு ?**

346. *யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்*
*குயர்ந்த உலகம் புகும்*

**யான் என்ற செருக்கையும் எனது எனும் கர்வத்தையும்**
**யாங்கணுமே விட்டவன்**
**வானில் வாழ்கின்ற தேவர்களையும் விஞ்சி**
**வான்புகழ் நிலைமை அடைவான் !**

347. *பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்*
*பற்றி விடாஅ தவர்க்கு*

**பற்றுகளை பற்றிக்கொண்டு விடாதவர்களைப்**
**பல ஆசைகளை விடாது பற்றுபவர்களைப்**
**பற்றுமே விடாது இறுக "பிறவித் துன்பங்கள்" !**

348. *தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி*
*வலைப்பட்டார் மற்றை யவர்*

**முற்றும் துறந்தவரே துறவிகளில்**
**முதன்மையானவர் ! அவ்வாறு**
**முழுதும் துறக்காத மற்றவர் அறியாமை எனும்**
**முள்ளின் வலையில் அகப்படுவர் !**

349. *பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று*
*நிலையாமை காணப் படும்*

**பிறக்கும் ஆசைகளிலிருந்து அறவே விலகி விட்டால்**
**பிறவித் துன்பம் விலகி "பிறப்பு" விடும் !**
**பிணைக்கும் பற்றை விடாத போது**
**பிறப்பும் இறப்பும் மாறி மாறி வந்து "நிலையாமையை" நாட்டும் !**

350. *பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு*

**எல்லாப் பற்றுகளையும் விட்டொழிப்பதற்கு**
**எதிலும் பற்றற்ற இறைவனை**
**எப்படியும் பற்றி விடுங்கள் !**

## 36. மெய்யுணர்தல்

351. *பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்*
*மருளானாம் மாணாப் பிறப்பு*

**'பொருள்' என்று கொள்ள முடியாத**
**பொய்யான பொருளை – உண்மைப்**
**'பொருள்' என மயங்கி நம்புவதால்**
**பொன்னான பிறப்பு இனிமை இழக்கிறது !**

352. *இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி*
*மாசறு காட்சி யவர்க்கு*

**'மருள்' எனும் குழப்பமும், மயக்கமும் நீங்கி**
**மனதில் மாசற்ற உண்மையை உணர்ந்தவர்க்கு**
**'இருள்' எனும் அறியாமை நீங்கி**
**இம்மையில் இன்பம் உண்டாகும் !**

353. *ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்*
*வானம் நணிய துடைத்து*

**ஆராய்ந்து எதையும் ஐயப்பாடுகளை**
**ஆயிடை நீக்கித் தெளிந்து**
**ஆட்பட்டவர்களுக்கு வையகத்தை விட**
**ஆகாயமே அருகில் தோன்றும் !**

354. *ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே*
*மெய்யுணர் வில்லா தவர்க்கு*

**"மெய்யுணர்வு" எனும் உண்மையை உணரும்**
**"மெய் ஞானம்" இல்லாதவர்கள்**
**ஐந்து புலன்களின் உணர்வுகளை**
**ஐயமற்று பெற்றிருந்தாலும் பயனல்ல !**

355. *எப்பொரு ளெத்தன்மைத் தாயினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு*

**எப்பொருளின் தோற்றத்தைக் கண்டும்**
**எங்ஙனமும் மயங்கிடாமல்**
**அப்பொருளின் உண்மைத் தன்மையை**
**அறிவதே உண்மையான 'அறிவு' !**

356. *கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்*
*மற்றீண்டு வாரா நெறி*

**உள்ளபடி கற்க வேண்டியதைக் கற்று**
**உண்மைப் பொருளை நன்கு**
**உணர்ந்தவர்கள் மறு பிறவி எடுக்கும்**
**உரிய நிலை பெற மாட்டார் !**

357. *ஓர்த்துள்ளம் உள்ள துணரின் ஒருதலையாப்*
*பேர்த்துள்ள வேண்டா பிறப்பு*

**உள்ளம் உண்மைப் பொருளை ஆராய்ந்து**
**உறுதியாக உணர்ந்து விட்டால்**
**உறுமாறி மறுபிறப்பு மீண்டும்**
**உள்ளதாக ஒரு தலையாய் நினைக்க வேண்டாம் !**

358. *பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்*
*செம்பொருள் காண்ப தறிவு*

**"அடுத்த பிறப்பு" என்ற பேதைமையாகிய**
**அறியாமையை நீக்க நாம்**
**அறிந்த பொருள்களிலேயே உயிர் செம்மைப் பொருளை**
**அறியும் அறிவுதான் "மெய்யுணரும்" அறிவு !**

359. *சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்*
*சார்தரா சார்தரு நோய்*

**சார்ந்திருப்பதும் சார்ந்திடக் காத்திருப்பதுமானப் பற்றுகள் மீது**
**சார்பற்று இல்லாமல் "மெய்ப்பற்றை" மட்டும்**
**சார்ந்து வாழ்ந்தால் அவனைச்**
**சார வேண்டிய துன்பங்கள் மீண்டும் வாரா !**

360. *காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்*
*நாமங் கெடக்கெடும் நோய்*

**காமம், கோபம், அறியாமை**
**காலூன்றும் மூன்றும் வாழ்க்கையில்**
**காலாவதி ஆகிவிட்டால் அதன் பொருட்டு**
**காணும் துன்பங்கள் காணாமல் போகும் !**

## 37. அவா அறுத்தல்

361. *அவாவென்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றுந்*
*தவாஅப் பிறப்பீனும் வித்து*

**'அவா' எனும் ஆசையே**
**அனைத்திற்கும் மூல காரணம் ! – அதுவே**
**எல்லா உயிர்களிடமும், எல்லாக் காலத்திலும்**
**எப்போதும் வருகின்ற பிறப்பை விளைவுக்கும் வித்து !**

362. *வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது*
*வேண்டாமை வேண்ட வரும்*

**வேண்டுகின்ற வரம் வாழ்க்கையில் என்னவெனில்**
**வேண்டும் பிறவாமை என்பது தான் !**
**வேண்டாமையை வேண்டும் என்று**
**வேண்டினால்தான் அதுவும் கை கூடும் !**

363. *வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை*
*யாண்டும் அஃதொப்ப தில்*

**ஆசையின்மையே பெருஞ்செல்வம் – ஏனெனில்**
**ஆசைகளே தீமைகளின்**
**ஆணிவேர் ! ஆதலால்**
**ஆசையின்மைக்கு நிகரான வேறு செல்வமே இல்லை !**

364. *தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது*
*வாஅய்மை வேண்ட வரும்*

**தூய்மை என்பது ஆசையற்ற நிலை – அந்தத்**
**தூய்மை எனும் தூய நிலையே**
**வாய்மை நாடுவோர்க்கே வாய்க்கும் !**

365. *அற்றவ ரென்பார் அவாவற்றார் மற்றையார்*
*அற்றாக அற்ற திலர்*

**பற்றற்ற துறவிகள் என்பவர்கள்**
**பற்பல ஆசைகளையும் விட்டவர்கள் !**
**மற்றவற்றையெல்லாம் விட்டு விட்டு**
**மனதில் "ஆசையை" விடாதவர் துறவி அல்ல !**

366. *அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை*
*வஞ்சிப்ப தோரும் அவா*

**ஒருவனை வஞ்சித்து**
**ஒரு பிறவித் துன்பத்தை அனுபவிக்க**
**ஒரே காரணம் ஆசையே ! ஆகவே**
**ஒருங்கே ஆசைக்கு அஞ்சி வாழ்வதே அறம்!**

367. *அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை*
*தான்வேண்டு மாற்றான் வரும்*

**துன்பம் தரும் ஆசைகளை முற்றிலும்**
**துறந்தால் வாழ்க்கையில் நல்வினையான**
**துன்பமற்ற பிறவா நிலை விரும்பியவாறு**
**துவங்கி வரவேண்டிய முறையில் வரும் !**

368. *அவாவில்லார்க் கில்லாகுந் துன்பமஃ துண்டேல்*
*தவாஅது மேன்மேல் வரும்*

**ஆசை இல்லாதவர்களுக்குத் துன்பம் இல்லை !**
**ஆனால் ஆசை உடையவர்க்கு**
**ஆரம்பம் ஆகும் முடிவில்லா துன்பம்**
**ஆங்கு மென்மேலும் !**

369. *இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னுந்*
*துன்பத்துள் துன்பங் கெடின்*

**துன்பங்களிலேயே கொடிய**
**துன்பம் தீண்டும் ஆசைத் துன்பம் !**
**துளி ஆசையும் அழிந்து போனால்**
**துவங்கும் இடையறாத இன்பம் !**

370. *ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே*
*பேரா இயற்கை தரும்*

**இயற்கையிலேயே ஒருகாலும் நிரம்பாதது**
**இன்னும் இன்னும் எனக் கேட்கும் பேராசை !**
**இதையே மனதில் அறுதியிட்டு நீக்கினால்**
**இயல்பாகவே கிட்டும் நீங்கா இன்பம் !**

## 38. ஊழ்

371. *ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்*
*போகூழால் தோன்று மடி*

**“ஆக்கத்திற்கான” ஊழ்வினைக்கு**
**ஆதாரம் சோர்வு இல்லாத ஊக்கமே !**
**செல்வம் அழிவதற்கான ஊழ் வினை**
**செயலற்ற சோம்பலே !**

372. *பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்*
*ஆகலூ ழுற்றக் கடை*

**செல்வத்தை இழப்பதற்குக் காரணமான ஊழ்**
**செல்லுகின்ற இடம் அறியாமை !**
**செல்வம் வளர்ச்சி பெறக் காரணமான ஊழ்**
**செம்மையான அறிவுடைமை !**

373. *நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்*
*உண்மை யறிவே மிகும்*

**நுண்ணிய பல அறிவு நூல்கள் அறிவாக**
**நுழைந்திருந்தாலும் ஒருவனுக்கு**
**நுட்பமான அறிவு “ஊழ்வினைப்” பொருட்டே இருக்கும் !**

374. *இருவே றுலகத் தியற்கை திருவேறு*
*தெள்ளிய ராதலும் வேறு*

**இரு வேறு உலகம் விதிப்படி இயற்கையானதே !**
**இலக்குமி தங்கியிருக்கும் செல்வ நிலை வேறு –**
**இருள் அகற்றும் அறிவு உடையவராக**
**இருப்பது வேறு !**

375. *நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவும்*
*நல்லவாஞ் செல்வஞ் செயற்கு*

**பொருள் தேடும் முயற்சியால்**
**பொங்குகிற ஊழ்வினையால்**
**நேர்மையான நல்வழியின் முடிவில்**
**நேரலாம் தீமை ! தீய வழியில்**
**நேரலாம் செல்வம் சேர்க்கும் நன்மை !**

376. *பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்*
*சொரியினும் போகா தம*

**உரிமையில்லாத பொருட்களை**
**உயிரைக் கொடுத்துக் காப்பாற்றினாலும்**
**உண்மையில் தங்கவே தங்காது !**
**உரிமையான பொருட்களை**
**உறுதியுடன் தூக்கி வெளியில் போட்டாலும் – நம்மை**
**உள்ளபடி விட்டுப் போகாது !**

377. *வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி*
*தொகுத்தார்க்குந் துய்த்த லரிது*

**வகுத்தவன் வகுத்து அமைத்து**
**வழங்கிய ஊழ்வினைப்படியே யாவும் நடக்கும்**
**கோடி கோடியாய் பெருஞ் செல்வத்தைக்**
**கோடிகளாய் கொட்டிக் குவித்திருந்தாலும் முழுவதையும்**
**கோருதலும் அனுபவித்தலும் அரிது !**

378. *துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால*
*ஊட்டா கழியு மெனின்*

**ஊழ்வினைப் பயனால் வாழ்க்கையில்**
**ஊடுருவிய பொருட்களை நுகர்**
**ஊட்டுதல் இல்லாமற் போனால்**
**ஊதியப் பேறு அற்றவர் துறவி ஆவார் !**

379. *நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்*
*அல்லற் படுவ தெவன்*

**நம் வாழ்க்கையில் ஊழ்வினைப் பயனால்**
**நன்மையும் தீமையும் மாறி மாறி வரும் !**
**நன்மை வரும் போது மகிழ்கிறவர்கள்**
**நமை வாட்டும் தீமை வரும் போது வருந்துவது ஏன் ?**

380. *ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று*
*சூழினுந் தான்முந் துறும்*

**'விதி' என்ற ஊழை விட**
**விதிப்படி வலியது எதுவுமில்லை ! அதை**
**விலக்கிட பல வழிகளில் முயன்றும்**
**விதியே முதலில் நின்று விளையாடும் !**

# பொருட்பால்

## 39. இறைமாட்சி

381. *படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்*
*உடையான் அரசரு ளேறு*

**ஆறு அங்கங்களான**
**ஆற்றல் மிகு படை, அறிவார்ந்த மக்கள்**
**ஆதார உணவு, மதிமிகு அமைச்சகம்,**
**ஆதரவான நட்பு, பாதுகாப்பு அரண்**
**ஆகிய சிறப்புகள் உடையவனே பேரரசு !**

382. *அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்*
*எஞ்சாமை வேந்தற் கியல்பு*

**அஞ்சாமை, இரக்க சிந்தனை, அறிவாற்றல்,**
**ஊக்கமுடைமை, அடங்கிய நான்கு குணங்களே – நல்**
**ஆட்சி செய்யும் அரசனின் இயல்பு !**

383. *தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்*
*நீங்கா நிலனாள் பவற்கு*

**தூங்கி வழிந்து காலம் தாழ்த்தாமை**
**கல்வியறிவு, துணிவுடைமை – இத்தகு**
**தூண் மூன்றும் ஆட்சியாளர்களுக்கு நீங்காது வேண்டுபவை !**

384. *அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா*
*மான முடைய தரசு*

**அறநெறி தவறாமல்**
**அநீதியை அகற்றி**
**வீரத்தில் குறையாமல்**
**வீழாத மானத்தில்**
**வீற்றிருப்பது நல் அரசு !**

385. *இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த*
*வகுத்தலும் வல்ல தரசு*

**பொருளாதாரத் திட்டங்களை இயற்றுவதும் – அவ்வழி**
**பொருள்களை ஈட்டுவதும் – ஈட்டிய**
**பொருட்களைக் காத்தலும் – காத்த**
**பொருளாதாரத்தை முறையாகப் பகிர்தலும்**
**பொற்கால வல்லமையுடைய அரசு !**

*386.* *காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்*
*மீக்கூறும் மன்னன் நிலம்*

**காத்திருக்கும் குடிமக்கள் நெருங்குவதற்குத் தோதாக**
**காட்சிக்கு எளியவனாகவும்**
**காலம் முழுவதும் கடுஞ்சொல் பேசாதவனாகவும்**
**காணுகின்ற ஆட்சியாளனை உலகமே புகழும் !**

*387.* *இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்*
*தான்கண் டனைத்திவ் வுலகு*

**இன்சொல் பேசி ஏழை எளிய மக்களக்கு**
**இன்றியமையாத உதவிகளை வழங்கி**
**மக்களை பாதுகாக்கும் மன்னவனின்**
**மரியாதையான சொல்லில் உலகம் மயங்கும் !**

*388.* *முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்*
*கிறையென்று வைக்கப் படும்*

**மக்களை நீதி நெறிமுறை தவறாமல் காப்பாற்றும்**
**மன்னவன் எனும் ஆட்சியாளன்**
**மக்களுக்குக் கண்கண்ட கடவுளாவான் !**

*389.* *செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்*
*கவிகைக்கீழ்த் தங்கு முலகு*

**செவி கசக்கக் கூடிய அளவு கடுஞ் சொற்களுக்கு**
**செவி சாய்க்காமல், மனம் கசக்கும்படியாக**
**காதில் விழுந்தாலும் பொறுத்துக் கொள்ளும்**
**தார்வேந்தனின் ஆட்சியின் கீழ் தங்கும் உலகம் !**

*390.* *கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்*
*உடையானாம் வேந்தர்க் கொளி*

**கொடுக்கும் கொடையாளியாகவும்**
**கொண்ட மனதில் ஈகையும்**
**கொள்கையில் நீதி தவறாத ஆட்சியும்**
**கொலை, கொள்ளை யற்ற பாதுகாப்பு அரணும்**
**கொண்டிருக்கும் வேந்தனே ஒளிரும் குல விளக்கு !**

## 40. கல்வி

**391.** *கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக*

**கற்க வேண்டிய நூல்களை**
**கண்டிப்பாகப் பிழையின்றி கசடறக்**
**கற்க வேண்டும் ! அதன் பின்**
**கற்றுக் கொண்டபடி நடத்தல் வேண்டும் !**

**392.** *எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டுங்*
*கண்ணென்ப வாழும் உயிர்க்கு*

**எண் சார்ந்த கல்வியும்**
**எழுத்து சார்ந்த கல்வியும்**
**எப்போதும் அறிவுக் கண் போன்றதாம்**
**எங்கும் வாழும் மனித உயிர்க்கு !**

**393.** *கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு*
*புண்ணுடையர் கல்லா தவர்*

**கண்ணுடையவர் என்பவர்கள் கல்வி கற்றவர்களே !**
**கல்வி கற்காதோர் முகத்தில்**
**கண்கள் இரண்டு இருந்தாலும் – அவை**
**கண்கள் அல்ல புண்களே !**

**394.** *உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்*
*அனைத்தே புலவர் தொழில்*

**பழகும் போது மிக மகிழ்வோடு பழகி, பழகிய நினைவுகள்**
**பசுமையாக என்றும் நினைவில் நின்று**
**பிரியும் போது வருத்தமுடன்**
**பிரியா விடை பெறுவது அறிஞர் செயல் !**

**395.** *உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்*
*கடையரே கல்லா தவர்*

**ஏகபோக செல்வம் உடையவர் முன்**
**ஏழை எளியோர் இல்லாதோர்**
**ஏக்கத்தோடு நிற்பது போல்**
**ஏங்கிப் பணிந்து கற்றவர் முன் நின்று**
**ஏற்கும் கல்வியாளர் உயர்வார் ! அக்கல்வியை**
**ஏற்காதவர் கடை நிலை மாந்தர் !**

**396.** *தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்*
*கற்றனைத் தூறும் அறிவு*

**தோண்டத் தோண்ட கேணியில்**
**தோதாய் ஊறும் நீர் ! அது போல**
**தொடர்ந்து நூல்களை படிக்கப் படிக்க**
**தொடர்ச்சியால் சுரக்கும் மாந்தர்க்கு அறிவு !**

**397.** *யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்*
*சாந்துணையுங் கல்லாத வாறு*

**யாதும் ஊரே எந்நாடும் எம் நாடே**
**யாங்ஙனுமே கல்வி கற்றால் !**
**சர்வ தேசமும் கற்றோருக்க சிறப்பு தரும் போது**
**சாகும் வரை கல்வி கற்கலாமே !**

**398.** *ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்*
*கெழுமையும் ஏமாப் புடைத்து*

**ஒரு தலைமுறையில்**
**ஒருவன் பெறும் கல்வி அறிவினால்**
**ஒருங்கே வரும் பெருமையும் புகழும்**
**ஒட்டி வரும் ஏழு பிறப்பிலும் !**

**399.** *தாமின் புறுவ துலகின் புறக்கண்டு*
*காமுறுவர் கற்றறிந் தார்*

**கற்பதனால் தாம் பெறும் இன்பம்**
**கண்டுணரும் போது –**
**கல்வியினால், மேலும் மகிழ்வதைக்**
**கல்விதனை உலகமே கொண்டாடும்போது**
**கல்விதனைக் காதலிப்பார் கற்றறிந்தவர் !**

**400.** *கேடில் விழுச் செல்வங் கல்வி யொருவற்கு*
*மாடல்ல மற்றை யவை*

**குன்றாத கல்வி ஒன்றே அழியாத**
**குறைவற்ற செல்வமாகும் !**
**அதற்கொப்ப சிறப்பினை பெற்ற மற்ற செல்வம்**
**அங்ஙனம் எதுவும் இல்லை !**

## 41. கல்லாமை

**401.** *அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய*
*நூலின்றிக் கோட்டி கொளல்*

**நூல் பல கற்காமலேயே**
**நூலோர் நிரம்பிய அறிவுச்சபையில்**
**உரையாடுவது என்பது ஆடுகளத்தை**
**உருவாக்காமல் பகடைக் காயை**
**உருட்டிப் போட்டு ஆடுவது போன்றது !**

**402.** *கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்*
*இல்லாதாள் பெண்காமுற் றற்று*

**கல்வியறிவு இல்லாத ஒருவன்**
**கற்றோர் சபையில் ஒன்றைச் சொல்ல விரும்புவது –**
**இரண்டு முலைகளும் இல்லாத பெண்**
**இன்பத்தை விரும்புவது போன்றது !**

**403.** *கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்*
*சொல்லா திருக்கப் பெறின்*

**கல்லாதவரும் மிக நல்லவரே !**
**கற்றவர் முன் ஒன்றும் சொல்லாமல்**
**கட்டுப்பாட்டுடன் அமைதியாக காலம்**
**கடத்தும் வரை !**

**404.** *கல்லாதான் ஒட்பங் கழியநன் றாயினுங்*
*கொள்ளார் அறிவுடை யார்*

**கல்வி கற்காதவனுக்கு இயற்கையாகவே அறிவுக்**
**கதிர்கள் ஒளிர்ந்தாலும், நுட்பத்தை**
**கண்டுணர்ந்தாலும், மற்ற பிற கல்வி**
**கற்றோர், அறிவுடையோர் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் !**

**405.** *கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து*
*சொல்லாடச் சோர்வு படும்*

**கல்லாத ஒருவன் மேதையைப் போல்**
**கலையாத வேடம் போட்டாலும்**
**கற்றுத் தேர்ந்த அறிஞர்களிடம்**
**கலந்துரையாடும்போது வேடம் கலைந்து விடும் !**

*406.* *உளரென்னும் மாத்திரைய ரல்லால் பயவாக்*
*களரனையர் கல்லா தவர்*

**கல்லாதவர் உயிரோடு உளர் என்று**
**கருதலாமே தவிர மற்றபடி அவர்கள்**
**பயிர் செய்ய முடியாத களர் நிலத்தைப்போல்**
**பயன்படாதவர்களே என்றும் !**

*407.* *நுண்மாண் நுழைபுல மில்லான் எழினலம்*
*மண்மாண் புனைபாவை யற்று*

**நுட்பமான நூல்கள் பல கற்று ஆராயும்**
**நுண்ணிய அறிவில்லாதவர்களின் அழகிய தோற்றம்**
**நுடங்கும் அழகிய வண்ண மண் பொம்மை போன்றதே !**

*408.* *நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே*
*கல்லார்கண் பட்ட திரு*

**கல்லாதவர்களிடம் ஓடோடி வந்து**
**களிப்புடன் சேர்ந்த செல்வம்**
**நல்லோர்களிடம் உள்ள வறுமையை விட**
**நிறைந்த துன்பத்தைத் தரக் கூடியது !**

*409.* *மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்*
*கற்றா ரனைத்திலர் பாடு*

**மேட்டுக்குடி என்று சொல்லப்படுபவர்கள்**
**மேம்பட்ட கல்வியைக் கல்லாதவராயின் –**
**தாழ்குடி என்று சொல்லப்படுகின்ற குடியில் பிறந்து**
**“தாழாத கல்வி” கற்றவர்களுக்கு ஒப்பாக மாட்டார் !**

*410.* *விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்*
*கற்றாரோ டேனை யவர்*

**விரிவான அறிவு நூலைக் கற்று**
**விளங்கிய அறிஞர்கட்கும்**
**விளங்காத கல்லாதவருக்கும் வேற்றுமை**
**விலங்கிற்கும் மனிதருக்கும் உள்ள**
**வித்தியாசமே !**

## 42. கேள்வி

**411.** *செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வஞ்*
*செல்வத்து ளெல்லாந் தலை*

**செழுமையான கருத்துகளை**
**செவி வழியாக கேள்விப்படுவதே**
**செவிச் செல்வம் ! அச்செல்வமே**
**செல்வத்துள் எல்லாவற்றிலும் தலையாய செல்வமாகும் !**

**412.** *செவிக்குண வில்லாத போழ்து சிறிது*
*வயிற்றுக்கும் ஈயப் படும்*

**செழுமையான கருத்துக்களை**
**செவி வழியாக கேள்விப்படும்**
**செவி இன்பம் கிடைக்காத போது தான்**
**வயிற்றுப் பசி பிறந்து அதற்காக**
**வயிற்றுக்கும் சிறிதேனும் உணவு வழங்கப்படும் !**

**413.** *செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்*
*ஆன்றாரோ டொப்பர் நிலத்து*

**செவி வழியாகக் கேள்விப்படும்**

**செவி உணவாகிய கேள்வியறிவு**
**செம்மையாக உடையவர்கள்**
**வேள்வித் தீயில் அவிந்த உணவுகளை**
**வேதாகம பிரசாதமாய் உண்ணும்**
**வேத விற்பன்னர்களுக்கு ஒப்பாவர் !**

**414.** *கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற்*
*கொற்கத்தின் ஊற்றாந் துணை*

**தானே கற்கவில்லை எனினும்**
**தகுதி வாய்ந்த கற்றோரிடம் சென்று**
**தகவல்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டால்**
**தளர்ச்சி வாழ்வில் ஏற்படும்போது – அவ்வறிவு**
**தக்கதொரு ஊன்றுகோலாய் அமையும் !**

**415.** *இழுக்க லுடையுழி ஊற்றுக்கோ லற்றே*
*ஒழுக்க முடையார்வாய்ச் சொல்*

**வழுக்கல் நிலத்தில் விழுந்து விடாமல்**
**வசதியாக நடக்க உதவும் ஊன்றுகோல் போல்**
**வாழ்க்கையில் இழுக்கல் எனும் பிழை**
**வாராமல் இருக்க உதவும் ஒழுக்கமுடையார் சொல் !**

*416.* *எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்*
*ஆன்ற பெருமை தரும்*

**நல்ல நல்ல செய்திகளை**
**நறுக்குத் தெறித்தாற் போல் சிறிதளவே**
**கேட்டாலும் நிறைவான பெருமையை**
**கேட்ட அளவிற்கு தந்துயர்த்தும் !**

*417.* *பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா ரிழைத்துணர்ந்*
*தீண்டிய கேள்வி யவர்*

**பிழைகளை நுணுகி ஆராயும் கேள்வி ஞானத்தவர்**
**பிழையாக சில சமயம் பொருள் உணர்ந்தாலும்**
**பேதைமையுடன் அறியாத்தனமாக**
**பேசமாட்டார் என்றென்றும் !**

*418.* *கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியால்*
*தோட்கப் படாத செவி*

**கேள்வி ஞானத்தை சான்றோரிடம்**
**கேட்டுப் பெற்று துளைக்கப்படாத செவிகள்**
**கேட்கும் சக்தி இருந்தாலும்**
**கேளாத செவிட்டுச் செவிகளே !**

*419.* *நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய*
*வாயின ராத லரிது*

**கேட்டுக் கேட்டு நுட்பமான**
**கேள்வி அறிவு பெறாதவர்கள்**
**வணக்கத்திற்க் உரிய**
**வாய்ச்சொற்களை பேசுதற்கு அறியார் !**

*420.* *செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்*
*அவியினும் வாழினு மென்*

**செவியால் கேள்விச் சுவையை உணராமல்**
**செஞ்சோற்று உணவின் சுவையை வாயால்**
**உணரும் மனிதர்கள் – வாழ்வில்**
**உயிரோடு இருந்தும் என்ன ?**
**உயிர் இல்லாமற் போனால் தான் !என்ன ?**

## 43. அறிவுடைமை

**421.** *அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்*
*உள்ளழிக்க லாகா அரண்*

**“அறிவு” – அழிவு வராமல் பாதுகாக்கும்**
**அரண் ! குற்றம் தடுத்துக் காக்கும்**
**படை ! பகையால் அழிவு வராமலும்**
**பகைவரால் ஊக்கம் அழிக்க முடியாத அரண் !**

**422.** *சென்ற இடத்தாற் செலவிடா தீதொரீஇ*
*நன்றின்பா லுய்ப்ப தறிவு*

**மனம் போன போக்கிலே**
**மயங்கிப் போகாமல்**
**தீய வழிகளை எல்லாம்**
**தீண்டாமல், நல்வழியின் பால்**
**தீர்க்கமாய் உய்ப்பது “அறிவு” !**

**423.** *எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு*

**அங்ஙனம் எப்பொருளையும் யார் யார் வாய் மூலம் கேட்டாலும்**
**அதன் உண்மைப் பொருளை நன்கு**
**அறிந்து கொள்வதே “அறிவு” !**

**424.** *எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்*
*நுண்பொருள் காண்ப தறிவு*

**எளிமையாகக் கேட்பவர் மனதில்**
**என்றும் பதியும்படி சொல்வதும்**
**எதிர்ப்படும் பிறர் சொல்வதில்**
**எண்ணத்துக்கரிய நுட்பத்தை காண்பதும் “அறிவு” !**

**425.** *உலகந் தழீஇய தொட்பம் மலர்தலுங்*
*கூம்பலு மில்ல தறிவு*

**உலகத்தோடு ஒட்டித் தழுவிப் போவது நுட்பம் !**
**உண்டாகும் அந்த நுண்ணறிவு மூலம்**
**உலக வழக்கங்களை தழுவிப் போவதால்**
**உண்டாகுமே இதய இன்பம் !**

426. *எவ்வ துறைவ துலக முலகத்தோ*
*டவ்வ துறைவ தறிவு*

**எப்படி உயர்ந்தோர்கள் உலகத்தில்**
**உயர்ந்து வாழ்கிறார்களோ**
**அப்படி உலகத்தோடு ஒட்டி வாழ்வதே**
**அறிவாகும் !**

427. *அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்*
*அஃதறி கல்லா தவர்*

**அறிவுள்ளவர்கள் நடப்பதை முன்னரே**
**அறிந்து கொள்பவர்கள் !**
**அறிவில்லாதவர் அத்தகைய**
**அறிவை அற்றவர்கள் !**

428. *அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ*
*தஞ்சல் அறிவார் தொழில்*

**அஞ்ச வேண்டியதற்கு**
**அஞ்சாமல் இருப்பது அறிவின்மை !**
**அஞ்ச வேண்டியதற்கு**
**அஞ்சுவது அறிவுடைமை !**

429. *எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை*
*அதிர வருவதோர் நோய்*

**எதிர் காலத்தில் வரக் கூடிய துன்பங்களை**
**எதிர் நோக்கி காத்துக் கொள்கிற**
**அறிவுடையவர்களுக்கு எப்போதும்**
**அதிர்ச்சி தரக்கூடிய நடுங்க வைக்கும் நோயே இல்லை !**

430. *அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்*
*என்னுடைய ரேனு மிலர்*

**அறிவு உடையவர்க்கு வேறு ஏதும்**
**அறவே இல்லையென்றாலும் அவர்**
**எல்லாம் உடையவரே ! அறிவில்லாதவர்**
**எல்லாம் இருந்தும் ஏதும் இல்லாதவரே !**

## 44. குற்றங்கடிதல்

431. *செருக்குஞ் சினமுஞ் சிறுமையும் இல்லார்*
*பெருக்கம் பெருமித நீர்த்து*

**இறுமாப்பு, கோபம், இழிவான நடத்தை**
**இவைகள் இல்லாதவர்களுடைய**
**முன்னேற்றமும், செல்வாக்கும்**
**முழுவதும் மதிக்கத் தக்கதாகும் !**

432. *இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா*
*உவகையும் ஏதம் இறைக்கு*

**மனதில் பேராசையும், மாண்பில்லா மானமும்,**
**மடங்கு பல கொண்ட மாட்சிமையற்ற மகிழ்ச்சியும்**
**மன்னனான ஆட்சியாளனுக்கு குற்றம் !**

433. *தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்*
*கொள்வர் பழிநாணு வார்*

**பழிக்க நாணுபவர்கள் தினையளவு**
**பங்காய் சிறு குற்றமே ஆனாலும்**
**பனையளவாகக் கருதி வேதனைப்பட்டுப்**
**பதறி அதைச் செய்யாமல் தங்களைக் காப்பர் !**

434. *குற்றமே காக்க பொருளாகக் குற்றமே*
*அற்றந் தரூஉம் பகை*

**“குற்றமே” அழிவு தரும் பகையாகக்**
**குறைவின்றி மாறுவதால்**
**“குற்றம்” செய்யாமல் இருப்பதையே**
**குறிக்கோளாகக் கொள்ள வேண்டும் !**

435. *வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்*
*வைத்தூறு போலக் கெடும்*

**தீமை வருமுன்னர்**
**தீர்க்க தரிசனமாய்க் காக்க**
**தீர்மானிக்காத வாழ்க்கை**
**தீ முன்னால் வைத்த வைக்கோல் போலக் கெடும் !**

436. *தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின்*
*என்குற்ற மாகும் இறைக்கு*

**பிணைந்துள்ள தன் குற்றத்தை முதலில் நீக்கி**
**பின் மற்றவர்களின் குறையைக் கண்டு**
**பிடித்து ஆராயும் அரசனுக்கு**
**பிறவாதே ஒரு குறையும் !**

437. *செயற்பால செய்யா திவறியான் செல்வம்*
*உயற்பால தன்றிக் கெடும்*

**செய்வன செய்யாது சேர்த்து வைத்த**
**செல்வத்தை – சேர்த்தவனாலேயே பாதுகாக்கும்**
**செயலை செய்ய முடியாமல் அழியும் !**

438. *பற்றுள்ள மென்னும் இவறன்மை எற்றுள்ளும்*
*எண்ணப் படுவதொன் றன்று*

**எண்ணிக்கையில் வருகின்ற குற்றங்களோடு**
**எண்ண முடியாத தனிப் பெருங் குற்றம்;**
**எண்ணத்தை பொருளின் மீது அதிகமாக ஆசை வைத்து**
**எவருக்கும் உதவாமல் இருக்கும் கஞ்சத்தன்மையே !**

439. *வியவற்க எஞ்ஞான்றுந் தன்னை நயவற்க*
*நன்றி பயவா வினை*

**தன்னைத் தானே வியந்து கொண்டு**
**தற்பெருமை பேசிக் கொண்டு இருப்பதை எப்போதும்**
**தவிர்க்க வேண்டும் நன்மை அதனால் விளையாது !**

440. *காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்*
*ஏதில ஏதிலார் நூல்*

**விரும்புகிற விருப்பங்களின்**
**விவரங்கள் கொஞ்சம் கூட பகைவர்கள்**
**அறியாதபடி அனுபவிக்கிற தலைவனிடம்**
**அக்கிரம எதிரிகளின் சூழ்ச்சிகள் பலிக்காது !**

## 45. பெரியாரைத் துணைக்கோடல்

***441.*** *அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை*
*திறனறிந்து தேர்ந்து கொளல்*

**அறம் அறிந்தவரும் அறிவில் மூத்த**
**அறிவுடையவருமானவரின் திறனறிந்து**
**அருமை அறிஞரின் நட்பை பெறும் வகை**
**அறிந்து அதனைத் தேர்ந்தெடுக்க வேண்டும் !**

***442.*** *உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்*
*பெற்றியார்ப் பேணிக் கொளல்*

**இப்போது வந்திருக்கும் துன்பத்தை போக்கி**
**இனிமேலும் துன்பம் வராதபடி**
**உளவறிந்து முன்னதாகவே காக்கின்றவரை**
**உற்ற துணையாகக் கொள்ள வேண்டும் !**

***443.*** *அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்*
*பேணித் தமராக் கொளல்*

**பெரியோரைப் போற்றி ஒருவன் தமக்கு**
**பெருமை மிக்க உறவாக கொள்வது**
**பெறுகின்ற செல்வங்களையும் விட**
**பெறுஞ் செல்வமாகும் !**

***444.*** *தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்*
*வன்மையு ளெல்லாந் தலை*

**வகை அனைத்திலும் பெரியோரை**
**வரமாக, தமக்குக் கிடைத்த உறவினர்களாக**
**வரவேற்று அவர் வழியே நடப்பது**
**வலிமையால் எல்லாம் பெரிய வலிமையாகும் !**

***445.*** *சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்*
*சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்*

**சூட்சம அறிவுடன் ஆலோசனை சொல்பவர்கள்**
**சூரிய ஒளி போல ஒளிரும் கண்ணாக**
**சூழ்நிலையைக் கண்டறிந்து சொல்பவர்கள்**
**சூழ ஆட்சி செய்வதே ஆட்சியாளர்களுக்குச் சிறந்தது !**

446. *தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்*
*செற்றார் செயக்கிடந்த தில்*

**தக்கதொரு அறிவிற் சிறந்த**
**தகுதியான பெரியோரை**
**பக்க துணையாக ஒழுகுபவனை**
**பகைவர்கள் எந்தத் தீங்கையும் விளைவிக்க இயலாது !**

447. *இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே*
*கெடுக்குந் தகைமை யவர்*

**இடித்துரைத்து நல்வழி காட்டுபவரின்**
**இறுகத்துணை கொண்டு**
**ஆட்சி புரிபவனைக் கெடுக்கும்**
**ஆற்றல் யாருக்கு உண்டு?**

448. *இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்*
*கெடுப்பா ரிலானுங் கெடும்*

**தவறினை உணர்த்த**
**தக்கதொரு இடித்துரைப்பார்**
**இல்லாத போது ஆட்சியாளன் பகைவர்**
**இல்லையென்றாலும் தானே கெடுவான் !**

449. *முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்*
*சார்பிலார்க் கில்லை நிலை*

**தாங்கும் தூண் போலத் தம்மைத்**
**தாங்கி நிற்கக் கூடிய துணையற்றவர் நிலை**
**முதலீடு செய்யாத வாணிபத்தில்**
**முழுதாக வருவாய் இல்லாத நிலையைப் போன்றதே !**

450. *பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே*
*நல்லார் தொடர்கை விடல்*

**பல வகைகளிலும் நல்லவர்களின்**
**பயனான தொடர்பைக் கைவிடுவது**
**பலருடைய பகையை தேடிக் கொள்வதைவிட**
**பத்து மடங்குத் தீமையை ஏற்படுத்தும் !**

## 46. சிற்றினம் சேராமை

451. *சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்*
*சுற்றமாச் சூழ்ந்து விடும்*

**சிறந்த பெருமைக்குரிய குணம் கொண்டவர்கள்**
**சிறு மதியாளரைக் கண்டு அஞ்சாதவர்கள் !**
**சிறுமை குணம் கொண்டவர்களே**
**சிறுமதியாளரைச் சுற்றமாக சூழ வைத்துக் கொள்வார்கள் !**

452. *நிலத்தியல்பான் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்*
*கினத்தியல்ப தாகும் அறிவு*

**நிலத்தின் இயல்பின் தன்மைக்கேற்ப சேரும்**
**நீரின் தன்மையும் மாறிவிடும் ! அது போல்**
**மாந்தரின் அறிவும் இயல்பும்**
**மாண்பும் சேரும் இனத்தின் இயல்பிற்கேற்ப**
**மாறிப்போய் விளங்கும் !**

453. *மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானாம்*
*இன்னா னெனப்படுஞ் சொல்*

**மக்களுக்கு உணர்ச்சி என்பது அவர்கள்**
**மனதைப் பொறுத்து அமைகிறது !**
**மதிப்பையோ சேரும் சேர்க்கையால்**
**மற்றவர்கள் அளந்து சொல்வார்கள் !**

454. *மனத்து ளதுபோலக் காட்டி ஒருவற்*
*கினத்துள தாகும் அறிவு*

**மனிதனின் அறிவு அவன்**
**மனதோடு சம்பந்தப்பட்டது போல**
**மற்றவர்களுக்குக் காட்சி அளித்தாலும் – அது**
**மனம் விரும்பி சேர்ந்த இனத்தோடு தொடர்புடையது !**

455. *மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்*
*இனந்தூய்மை தூவா வரும்*

**மனதின் தூய்மையும் அவன் செய்யும்**
**மற்ற பிற செயலின் தூய்மையும்**
**மனதார அவன் சேர்ந்த இன**
**மனிதர்களின் தன்மையின் தூய்மையைப் பொறுத்ததே !**

456. *மனந்தூயார்க் கெச்சநன் றாகும் இனந்தூயார்க்*
*கில்லைநன் றாகா வினை*

**மனத்தூய்மை உடையவர்க்குத் தன் வாழ்வின்**
**மறைவிற்குப் பின் வரும் எச்சங்களான**
**மக்கட் செல்வம், புகழ், பெருமை நன்றாகும் !**
**மற்றை தூய இனத்தோடு உறவாடுபவர்க்கு அனைத்தும் நன்றாகும் !**

457. *மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்*
*எல்லாப் புகழுந் தரும்*

**நம் மன நலம் – உயிர்க்கு**
**நல் ஆக்கத்தையும் செல்வத்தையும்**
**நல்கும் ! ஆனால்**
**நல்லவர் உறவோ எல்லா**
**நற்புகழும் தரும் !**

458. *மனநலம் நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்*
*கினநலம் ஏமாப் புடைத்து*

**பிறவிப் பயனால் மன நலம்**
**பின்னும் நன்கு அமைந்திருந்தாலும்**
**பிணைந்திருக்கும் கூட்டத்தைப் பொறுத்தே**
**பிறக்குமே பெருந்துணையும், வலிமையும், பேருறுதியும் !**

459. *மனநலத்தி னாகும் மறுமைமற் றஃதும்*
*இனநலத்தி னேமாப் புடைத்து*

**மன நலத்தால் இன்பம்**
**மறுபடியும் மறு பிறப்பில் கிடைக்கும் !**
**மற்றைய அந்த இன்பம் இன நலத்தால்**
**மட்டிலா மகிழ்வும் பாதுகாப்பும் நல்கும் !**

460. *நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்*
*அல்லற் படுப்பதூஉ மில்*

**நல்ல இனத்தை விடச் சிறந்த**
**நற்துணையும் இல்லை !**
**தீய இனத்தின் சேர்க்கையை விடத்**
**தீமை தரும் பகையும் இல்லை !**

# 47. தெரிந்து செயல்வகை

**461.** *அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்*
*ஊதியமுஞ் சூழ்ந்து செயல்*

**செயல் செய்வதற்கு முன்பு அச்**
**செயலால் அழிவதும் ஆவதுமாகிய**
**நன்மை தீமைகளை ஆராய்ந்த பிறகு**
**நடக்கப்போகும் விளைவுகளைக் கணக்கிட்டுச் செய்க !**

**462.** *தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்*
*கரும்பொருள் யாதொன்று மில்*

**தேர்ந்த வல்லுனர்களான நண்பர்களுடன்**
**சேர்ந்து ஆற்ற வேண்டிய செயல்களை**
**ஆராய்ந்து தாமும் நன்கு சிந்தித்துச் செய்தால்**
**பாய்ந்து வராத அறிய பொருளே இல்லை !**

**463.** *ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை*
*ஊக்கா ரறிவுடை யார்*

**வருவதை நம்பி – வரப்போகும்**
**வருவாயை நம்பி – போட்ட**
**மூலதனத்தையும் இழக்கும்**
**மூடத்தனமான செயலை செய்ய மாட்டார் அறிவுடையார் !**

**464.** *தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும்*
*ஏதப்பா டஞ்சு பவர்*

**இழிவு நிலைக்கு அஞ்சுபவர்கள்**
**இழிவான களங்கத்திற்குப் பயப்படுகிறவர்கள்**
**தெளிவாகத் தெரியாத செயலை**
**தொடங்க மாட்டார்கள் !**

**465.** *வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்*
*பாத்திப் படுப்பதோ ராறு*

**முன்னேற்பாடுகளை முழுமையாகச் செய்யாமல்**
**முடிச்சுள்ள செயலின் உட்கூறுகளை ஆராயாமல்**
**பகைவரின் வலிமைக்கு வலு சேர்த்து அவரின் வெற்றிக்குப்**
**பாத்தி கட்டி வழி அமைப்பதாகும் !**

**466.** *செய்தக்க அல்ல செயக்கெடுஞ் செய்தக்க*
*செய்யாமை யானுங் கெடும்*

**செய்யக் கூடாத செயல்களைச்**
**செய்வதால் கேடு ஏற்படும் !**
**செய்ய வேண்டியச் செயலைச்**
**செய்யாமல் விட்டாலும் கேடு ஏற்படும் !**

**467.** *எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்*
*எண்ணுவ மென்ப திழுக்கு*

**துழாவி சிந்தித்த பிறகே**
**துணிந்து செயலில் இறங்க வேண்டும் !**
**துணிந்து செயலில் இறங்கிய பிறகு**
**துளைத்துச் சிந்திப்பது இழுக்கு !**

**468.** *ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று*
*போற்றினும் பொத்துப் படும்*

**முனைப்பாக எத்துணை பேர் வந்தாலும்**
**முறையாகச் செய்யப்படாத செயல்**
**முயற்சி, இறுதியில் முடங்கி விடும் !**

**469.** *நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்*
*பண்பறிந் தாற்றாக் கடை*

**கொண்டுள்ள குணத்தையும் இயல்பையும்**
**கொண்டுதான் நாம் பிறருக்கு நன்மையைக் கூட**
**கொடுக்க வேண்டும் ! இல்லையெனில் அதுவே**
**கொடுந்தீமையாக திருப்பித் தாக்கும் !**

**470.** *எள்ளாத எண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு*
*கொள்ளாத கொள்ளா துலகு*

**தனக்கு ஏற்காத காரியத்தை**
**தரணியும் தன் நிலைக்குப் பொருந்தாத காரியத்தை**
**தயங்காமல், உலகமும் ஏற்காது ! எனவே**
**தப்பிதமான இழிவுக்கு இடம் தராத செயலை**
**தக்கவாறு எண்ணிப்பார்த்துச் செயலாற்ற வேண்டும் !**

## 48. வலியறிதல்

**471.** *வினைவலியுந் தன்வலியும் மாற்றான் வலியும்*
*துணைவலியுந் தூக்கிச் செயல்*

**தக்கதொரு சொல் வலிமை**
**தன் உண்மையான வலிமை**
**தன் எதிரியின் வலிமை**
**தனக்கும் எதிரிக்கும் துணை வருபவரின் வலிமை**
**தகுதி வரிசையில் ஆராய்ந்து செயல்பட வேண்டும் !**

**472.** *ஒல்வ தறிவ தறிந்ததன் கண்தங்கிச்*
*செல்வார்க்குச் செல்லாத தில்*

**தமக்கு இயலும் செயலை அறிந்து**
**தன் வலிமையை நன்கு உணர்ந்து**
**தளராமல் செயலில் முயல்பவருக்கு**
**தவறி முடியாத செயலே இல்லை !**

**473.** *உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி*
*இடைக்கண் முரிந்தார் பலர்*

**வலிமையின் வலுவை அறியாமல் – உணர்ச்சி**
**வசப்பட்டு ஆர்வக் கோளாறால்**
**வரிந்து கட்டிக் கொண்டு செயலில் இறங்கி பாதி**
**வழியிலேயே முடிக்க முடியாமல் கெட்டவர் பலர் !**

**474.** *அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை*
*வியந்தான் விரைந்து கெடும்*

**வித்தகரான அறிவாற்றல் உடையவரிடமிருந்து**
**விலகி, ஒத்துப் போகாமலும், தன் வலிமை –**
**வித்திடும் வலுவின் அளவறியாமலும் – தன்னை**
**வியந்து புகழ்ந்து தற்பெருமை கொள்பவன்**
**விரைந்து கெடுவான் !**

**475.** *பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்*
*சால மிகுத்துப் பெயின்*

**வண்ண மயில் இறகானாலும்**
**வரை முறை இல்லாமல் அளவுக்கு மேல்**
**வண்டியில் ஏற்றினால் கண்டிப்பாக**
**வண்டியின் அச்சு முறிந்து விடும் !**

476. *நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்*
*உயிர்க்கிறுதி ஆகி விடும்*

**மரத்தின் நுனிக் கொம்பு வரை**
**மடமட வென ஏறி அதிலிருந்து**
**மறுபடியும் தப்புக் கணக்கினால் மேலும் ஏறினால்**
**மண்ணிலிருந்தே இறுதி ஆகி விடும் !**

477. *ஆற்றின் அளவறிந் தீக அதுபொருள்*
*போற்றி வழங்கும் நெறி*

**வருவாயின் அளவை அறிந்து அதனை**
**வகுத்து தக்கபடி பிறருக்குத் தானம் செய்வதே**
**பொருளைச் சீராகப் போற்றிக் காத்து**
**பொறுப்போடு வாழும் வழியாகும் !**

478. *ஆகா றளவிட் டி தாயினுங் கேடில்லை*
*போகா றகலாக் கடை*

**வருகின்ற வருவாயின் வழி அறிந்து – அஃதே**
**வரும்படி குறைவாக இருந்தாலும்**
**செலவு போகின்ற வழி தெரிந்து – அஃதே**
**செல்லுபடி ஆகும் வழி விரிதல் கூடாது !**

479. *அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல*
*இல்லாகித் தோன்றாக் கெடும்*

**வந்தது, வருவது, வரப் போவது ஆகிய**
**வருவாயைக் கணக்கில் கொண்டு**
**வரவு செலவுகளை வகையாகத் தீட்டாவிட்டால்**
**"வளம்" உள்ளது போலக்காட்டி மறைந்துவிடும் !**

480. *உளவரை தூக்காத ஒப்புர வாண்மை*
*வளவரை வல்லைக் கெடும்*

**உள்ள செல்வம் என்ன தனக்கு**
**உள்ளது என்று பாராமல் ஊராருக்கு**
**உதவி செய்யும் உபகாரியிடம்**
**உள்ள சொத்தும் விரைந்து கெடும் !**

# 49. காலமறிதல்

*481.* *பகல்வெல்லுங் கூகையைக் காக்கை இகல்வெல்லும்*
*வேந்தர்க்கு வேண்டும் பொழுது*

**காக்கைத் தன்னை விட வலிமையான கோட்டானை**
**காணுகின்ற கண் பகலில் பார்க்க முடியாத**
**காரணத்தால் எளிதாக வெல்லும் ! அது போல்**
**காலத்தை சரியாகத் தேர்ந்தெடுத்தால் வேந்தர்க்கு வெற்றியே !**

*482.* *பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத்*
*தீராமை ஆர்க்குங் கயிறு*

**பருவ காலத்திற்குத் தகுந்தபடி**
**பக்குவத்தோடு நடந்து கொள்வது**
**நீங்கா செல்வத்தை இறுகக் கட்டும்**
**நீள் கயிறு போன்றது !**

*483.* *அருவினை யென்ப உளவோ கருவியாற்*
*கால மறிந்து செயின்*

**அருமையான ஆற்றல் மிக்க கருவிகளோடு**
**அரிதான காலத்தின் அருமை**
**அறிந்து செயல்பட்டால்**
**அதன் பின்னும் வெற்றியடையாத செயலே இல்லை !**

*484.* *ஞாலங் கருதினுங் கைகூடுங் காலம்*
*கருதி இடத்தாற் செயின்*

**காலத்தையும் இடத்தையும் அறிந்து**
**காரியத்தோடு பொருத்தமாகச் செயல்பட்டால்**
**உலகமே வேண்டுமெனக் கருதினாலும்**
**உறுதியோடு கை கூடும் !**

*485.* *காலங் கருதி இருப்பர் கலங்காது*
*ஞாலங் கருது பவர்*

**உயர்ந்த காரியங்களை உரிய முறையில்**
**உலகமே மெச்சும்படி செய்பவர்கள்**
**தக்க காலம் வாய்க்கிற வரையில்**
**தடுமாறாமல் கலங்காமல் இருப்பர் !**

486. *ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்*
*தாக்கற்குப் பேருந் தகைத்து*

**பொல்லாங்கு கொடுமைகளைக் கண்டும்**
**பொன் மனதினர் உறுதியுடன் அமைதியாக**
**பொறுமையாக இருப்பது அடக்கத்தினால் அல்ல !**
**பொங்கி முன் பாய்தலுக்காக ஆட்டுக்கிடா**
**பொய்மையாய்க் கால்களை பின்வாங்குவதைப் போல !**

487. *பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்*
*துள்வேர்ப்பர் ஒள்ளி யவர்*

**தீங்குதனைப் பகைவர் செய்யும் போது**
**தீபம் போல் அறிவொளி உடையவர் – உடனே**
**பொங்கும் சினத்தைக் காட்டாமல்**
**பொறுமையாய்க் காலம், இடம்**
**பொருட்டு எதிர்பார்த்துக் காத்திருப்பவர் !**

488. *செறுநரைக் காணிற் சுமக்க இறுவரை*
*காணிற் கிழக்காந் தலை*

**வெல்லும் காலம் வாய்க்கும் வரை**
**வெல்ல வேண்டிய பகைவரைப் பொறுத்தால்**
**வெற்றி நிச்சயம் ! பகைவர்க்கு அழிவுக் காலம்**
**வெளிப்படும் போது அவர்கள் தலை தானாய்க் கவிழும் !**

489. *எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே*
*செய்தற் கரிய செயல்*

**கிடைப்பதற்கு அரிய காலம்**
**கிடைத்து விட்டால் உடனே**
**வாய்ப்பை நழுவ விடாமல்**
**வாஞ்சையுடன் அரிய செயலை செய்திடல் வேண்டும் !**

490. *கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்*
*குத்தொக்க சீர்த்த இடத்து*

**காலம் கைகூடும் வரை பெரிய மீனுக்காகக்**
**காத்திருக்கும் கொக்கு போல் – சாதகமான**
**காலத்திற்காக காத்திருந்து உரிய**
**காலத்தில் குறி பார்த்துக் குத்துவது போல்**
**காலவிரயமில்லாமல் விரைந்து செயல்படுக !**

# 50. இடனறிதல்

**491.** *தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்*
*இடங்கண்ட பின்னல் லது*

**எளிதாகச் செய்து விடலாமே என**
**எந்தச் செயலையும் இகழாதே !**
**முழுவதுமாகச் செய்து வெற்றி காண**
**முற்றிலும் சரியான இடத்தைத் தேர்ந்தெடுக்க !**

**492.** *முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்தாம்*
*ஆக்கம் பலவுந் தரும்*

**வரும் பகையை எதிர்த்துப் போராடும்**
**வலிமை நன்றாக பெற்றிருந்தாலும்**
**பாதுகாப்பு எனும் பக்கத் துணையான அரண்**
**பாந்தமாய் இணைந்தால் பெரும் பயன் கிட்டும் !**

**493.** *ஆற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து*
*போற்றார்கண் போற்றிச் செயின்*

**வலிமை இல்லாதாரும் வெற்றி பெறுவர்**
**வலிமை பெற – வாய்ப்பான இடத்தை தேர்ந்தெடுத்து**
**பகைவனின் பலத்தை உள்ளபடி அளந்து**
**பகைவரிடம் விழிப்போடு நடக்க வேண்டும் !**

**494.** *எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து*
*துன்னியார் துன்னிச் செயின்*

**ஏற்ற இடத்தைத் தேர்ந்தெடுத்து**
**எப்போதும் தொடர்ந்து தாக்கினால் –**
**எளிதாக வென்று விடலாம் என்று**
**எண்ணிய பகைவர் கூட, அந்த**
**எண்ணத்தைக் கைவிடுவர் !**

**495.** *நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்*
*நீங்கின் அதனைப் பிற*

**ஆழமான நீர்நிலையில் இருக்கும் போது**
**ஆற்றல் மிக்க முதலை எதையும் வெல்லும் !**
**அம் முதலையே நீரை விட்டு வெளியே வந்து விட்டால்**
**அதனைப் பிற உயிர்கள் வெல்லும் !**

496. *கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்*
*நாவாயும் ஓடா நிலத்து*

**தேர்ந்தெடுத்து ஓர் இடத்தை செயலுக்காக**
**தேர்வு செய்பவர் நுண்ணறிவில்**
**தேர்ச்சி பெற்றவராகவே இல்லையெனினும்**
**தேர் கடலில் ஓடாது, கப்பல் தரையில் போகாது என்ற**
**தேவையான அடிப்படை அறிவாவது வேண்டும் !**

497. *அஞ்சாமை யல்லால் துணைவேண்டா எஞ்சாமை*
*எண்ணி யிடத்தாற் செயின்*

**துளியும் குறைவில்லாமல் சிந்தித்து ஓர் செயலைத்**
**துவங்கினால் தக்க இடத்தில் –**
**துணிவைத் தவிர வேறு**
**துணை எதுவும் வேண்டாமே !**

498. *சிறுபடையான் செல்லிடஞ் சேரின் உறுபடையான்*
*ஊக்கம் அழிந்து விடும்*

**பரிவாரங்கள் சிறிதாக இருந்தாலும் – சிறு**
**படையானாலும் வாய்ப்பான இடத்தை**
**வாய்க்கப்பெற்று விட்டால் – பெரும்படை**
**வாய்த்த பேரரசனின் ஊக்கம் கெடும் !**

499. *சிறைநலனுஞ் சீரும் இலரெனினும் மாந்தர்*
*உறைநிலத்தோ டொட்ட லரிது*

**பாதுகாப்புக் கோட்டையும்**
**பாங்கான வீரம் மிகுந்த வீரர்களும் – பல**
**படைச்சிறப்புகளும் இல்லாதிருப்பினும்**
**பகைவர் வாழும் இடத்திற்கே சென்று**
**படையெடுத்துத் தாக்குவது எளிதல்ல !**

500. *காலாழ் களரின் நரியடுங் கண்ணஞ்சா*
*வேலாள் முகத்த களிறு*

**வேல் கொண்ட வீரர்களை எதிர்த்துப் போரிடும்**
**வேழம் பலம் பொருந்திய தன் கால்களை**
**ஆழ சேற்றில் அழுந்திச் சிக்கி விட்டால்**
**ஆங்கே நரி கூட அதனைக் கொன்று விடும் !**

## 51. தெரிந்து தெளிதல்

501. *அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்*
*திறந்தெரிந்து தேறப் படும்*

**அறங்களை மதித்து நடப்பதும்**
**அற வழியில் பொருள் சம்பாதிப்பதும்**
**அற்பமான இன்பங்களை விரும்பாததும்**
**அவசியமான நேரத்தில் உயிருக்கு அஞ்சாததும்**
**அவை நான்கின் திறன்களை ஆராய்ந்து**
**அறிந்து ஒருவனைச் செயலாக்கத் தேர்ந்தெடுக்க வேண்டும்**

502. *குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்*
*நாணுடையான் கட்டே தெளிவு*

**நல்ல குடும்பத்தில் பிறந்து**
**நவை என்ற குற்றத்திலிருந்து நீங்கி**
**நடுங்க வைக்கும் பழிச்சொல்லுக்கு நாணி**
**நயந்து விளையும் இந்த நற்குணங்களை உடையவனை**
**நம்பி நம் செயலுக்குத் தேர்ந்தெடுக்கலாம் !**

503. *அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கால்*
*இன்மை அரிதே வெளிறு*

**அறிவுக்குரிய பல நூல்கள் கற்றலும்**
**அய்யம் பல தெளிவு பெற்று**
**அறவே குற்றமற்றவராக இருந்தாலும்**
**அவரிடம் அறியாமையே இல்லை என**
**அறுதியிட்டுக் கூற முடியாது !**

504. *குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்*
*மிகைநாடி மிக்க கொளல்*

**ஒருவரின் குணங்களையும் குறைகளையும்**
**ஒருங்கே கூட்டிக்கழித்து ஆராய்ந்து – இரண்டில்**
**ஒன்று எது மிகுதி என்றே தெரிந்து**
**ஒருவரைப் பற்றி முடிவு கொளல் வேண்டும் !**

505. *பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்குந் தத்தங்*
*கருமமே கட்டளைக் கல்*

**உள்ளபடி ஒருவரின் பெருமையையும், சிறுமையையும்**
**உணர்ந்து கொள்ள பொன்னின் மாற்றை**
**உரைக்கும் உரைகல்லாக வீற்றிருப்பது அவர்**
**உருவாக்கும் செயல்களே !**

506. *அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்*
*பற்றிலர் நாணார் பழி*

**சுற்றத்தார் எவரையும் பெற்றில்லாதவரைச்**
**சுத்தமாக நம்புதல் கூடாது ! – ஏனெனில்**
**உலக வாழ்க்கையில் பற்றில்லாதவர்கள்**
**உண்டாகும் பழிக்கு அஞ்சாதவராகவும் இருப்பர் !**

507. *காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்*
*பேதைமை எல்லாந் தரும்*

**அறிந்து கொள்ள வேண்டியவற்றை**
**அறிந்து கொள்ளாத அறிவிலிகளை**
**அன்பின் காரணமாகத் தேர்ந்தெடுத்தால்**
**அத்துணைத் துன்பங்களையும் தரும் !**

508. *தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை*
*தீரா இடும்பை தரும்*

**வந்த வழி தெரியாமல்**
**வந்த எவனோ ஒருவனை**
**வகையாக ஆராயாமல் தேர்ந்தெடுத்தால்**
**வம்சா வழிக்கே கடுந்துன்பம் வரும் !**

509. *தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபின்*
*தேறுக தேறும் பொருள்*

**தேர்ந்தெடுப்பதற்கு முன்பு ஒருவரை**
**தேர்ந்த ஆராய்ச்சி நடத்தித் தெளிவு பெற்று**
**தேர்வு செய்ய வேண்டும் ! தெளிந்த பின் – அவனிடம்**
**தேர்ச்சி பெற்ற தொழிலை ஒப்படைக்க வேண்டும் !**

510. *தேரான் தெளிவுந் தெளிந்தான்கண் ஐயுறவும்*
*தீரா இடும்பை தரும்*

**தெளிவாக ஆராயாமல் ஒருவனைத் தேர்ந்தெடுப்பதும்**
**தெளிவாக ஆராய்ந்துத் தேர்ந்தெடுத்துவிட்டு – அவன் மீது**
**தெளிவில்லாமல் சந்தேகப்படுவதும் – எப்போதும்**
**தென்படும் பெருந்துன்பமே !**

## 52. தெரிந்து வினையாடல்

**511.** *நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த*
*தன்மையான் ஆளப் படும்*

**நன்மையும் தீமையும் எதுவென**
**நன்கு ஆராய்ந்து பின்னர்**
**நற்செயல்களில் மட்டுமே நாட்டம்**
**நல்கியவன் நல்லதொரு செயல் வீரனாவான் !**

**512.** *வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை*
*ஆராய்வான் செய்க வினை*

**வருவாய் வரும் வழிகளைப் பெருக்கி**
**வளமான செல்வங்களை வளர்த்து**
**வரும் துன்பங்களை ஆராய்ந்துப் போக்கிடும்**
**வல்லவனே செயல் வீரனாவான் !**

**513.** *அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்*
*நன்குடையான் கட்டே தெளிவு*

**அன்பு, அறிவு, செயலாற்றும் தன்மை,**
**அதிகம் ஆசைப்படாத குணம் ஆகிய**
**அவை நான்கு பணிவுகளையும்**
**அருமையாகக் கொண்டவனை**
**அங்ஙனம் தேர்வு செய்வதே நல்லது !**

**514.** *எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்*
*வேறாகும் மாந்தர் பலர்*

**எவ்வளவுதான் பலவகை வழிமுறைகளை**
**எடுத்து அறிந்து ஆராய்ந்து தெளிந்து தேர்ந்தெடுத்தாலும்**
**செயல்படும் போதும் எப்படியோ வேறுபடுபவர்கள்**
**எத்துணையோ மாந்தர் பலர் உண்டு !**

**515.** *அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்*
*சிறந்தானென் றேவற்பாற் றன்று*

**வழிமுறைகளை நன்கு அறிந்து செயலாற்றி**
**வருகின்ற துன்பங்களை தாங்கிக் கொண்டு**
**வரையறுத்த செயலை முடிப்பவனைத் தவிர்த்து**
**வரன்முறையற்ற காரணத்திற்காக வேறொருவரை ஏவாதல் நன்று !**

516. *செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ*
*டெய்த உணர்ந்து செயல்*

**செயலாற்றும் செயல் வீரனைத் தேர்ந்தெடுத்து**
**செய்யப்பட வேண்டிய செயலையும் ஆராய்ந்து**
**செய்ய வேண்டிய காலத்தையும் உணர்ந்து**
**செயல்களைச் செயல்படுத்த வேண்டும் !**

517. *இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்*
*ததனை அவன்கண் விடல்*

**இந்தச் செயலை**
**இந்தக் கருவியின் துணையால்**
**இலகுவாக வெற்றிகரமாக**
**இவன் முடிப்பான் என ஆராய்ந்த பின்**
**இனிதாய்ப் பொறுப்பை ஒப்படைத்தல் வேண்டும் !**

518. *வினைக்குரிமை நாடிய பின்றை அவனை*
*அதற்குரிய னாகச் செயல்*

**செயலைச் செய்து முடிக்க இவனே**
**செயல் வீரன் என தேர்ந்தெடுத்த பின்பு**
**செய்யும் முழுப்பொறுப்பையும் அவனிடம் தந்து விடல் நன்று !**

519. *வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக*
*நினைப்பானை நீங்குந் திரு*

**காரியத்தை முடிப்பதில் கண்ணும் கருத்துமாக**
**கணப் பொழுதும் வீணின்றிக் கச்சிதமாக செயலாற்றும் உரிமைக்**
**கண்ணோட்டத்தை வேறாக – தவறாக**
**கணிப்பவனை விட்டு நீங்குவாள் இலக்குமி !**

520. *நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்*
*கோடாமை கோடா துலகு*

**உழைப்பவர் உள்ளம் வாடாமலிருந்தால்**
**உலகின் செழிப்பு வாடாமல் இருக்கும் !**
**உலகை ஆளும் வேந்தன்**
**உழைப்பாளர் நலத்தில் அக்கறை காட்டி எப்போதும்**
**உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் !**

# 53. சுற்றந் தழால்

521. *பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்*
*சுற்றத்தார் கண்ணே உள*

**பற்றற்ற போதும், வறுமை வந்த போதும்**
**பழைய உறவைப் பாராட்டிப் பேசும்**
**பசுமை மிகுந்த நெஞ்சம், பாசத்துடன்**
**பழகிய சுற்றத்தாரிடம் மட்டுமே உள்ளது !**

522. *விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா*
*ஆக்கம் பலவுந் தரும்*

**விருப்பும் அன்பும் நீங்காத சுற்றம் ஒருவனுக்கு**
**விரும்பியபடி அமைந்து விட்டால்**
**வியத்தகு வளர்ச்சியும், ஆக்கமும்**
**விருப்பத்துடன் விளையும் !**

523. *அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்*
*கோடின்றி நீர்நிறைந் தற்று*

**சுற்றத்தாரைச் சுற்றி சுற்றி வந்து**
**சுகமான அளவளாவுதலைக் கொண்டு**
**சுவைக்காத வாழ்க்கை**
**சுற்றுக்கரையில்லாத குளத்தில்**
**சுவை நீர் நிறைந்ததைப்போல் பயனற்றுப் போகும் !**

524. *சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்*
*பெற்றத்தாற் பெற்ற பயன்*

**பெற்ற செல்வத்தால் வாழ்க்கையில்**
**பெறுகின்ற பெரும் பயன் என்னவெனில்**
**பெரும் சுற்றத்தார் அன்புடன் சூழ்ந்திருந்து**
**பெறுகின்ற இனிய ஒழுகல் !**

525. *கொடுத்தலும் இன்சொல்லும் ஆற்றின் அடுக்கிய*
*சுற்றத்தாற் சுற்றப் படும்*

**உதவி செய்யும் வள்ளல் தன்மையோடும்**
**உள்ளன்புடன் எப்போதும் இன்சொல்லை**
**உச்சரித்து வாழ்பவனை**
**உற்றார் உறவினர் மட்டுமின்றி**
**உலகத்தாரே உறவாவார் !**

526. *பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்*
*மருங்குடையார் மாநிலத் தில்*

**கொடுத்துக் கொடுத்து பெரும் கொடை வள்ளலாகவும்**
**கொஞ்சம் கூட கடுகடுத்து கோபம் இல்லாத குணம்**
**கொண்டவராக இருப்பவர்க்குக்**
**கொண்டாடும் சுற்றத்தார் சூழ உலகில் வேறு**
**கொண்டவர் யாருமில்லை !**

527. *காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்*
*அன்னநீ ரார்க்கே உள*

**காக்கைத் தனக்குக் கிடைத்த உணவை**
**கா...கா.. எனத் தன் சுற்றத்தாரை**
**காத தூரம் இருந்தாலும் அழைத்து உண்ணும் !**
**காணும் இக்குணம் உடையவர்களால் சுற்றத்தாரால்**
**காண்பர் ஆக்கமும் முன்னேற்றமும் !**

528. *பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்*
*அதுநோக்கி வாழ்வார் பலர்*

**பொது மக்கள் அனைவரையும்**
**பொது நோக்கோடு சமமாகப் பார்க்க வேண்டியவன்**
**பொது மக்களின் தலைவன் வேந்தன் – எனினும்**
**பொறுப்புகளைத் தரும் போது அவரவர் தகுதியின்**
**பொருட்டு நோக்கினால் அதனால் பலர் வாழ்வர் !**

529. *தமராகித் தற்றுறந்தார் சுற்றம் அமராமைக்*
*காரண மின்றி வரும்*

**உறவினை ஏதோ காரணத்திற்காக**
**உடன்பாடில்லாமல் பிரிந்தவர்**
**உறவு பிரிந்ததற்கானக் காரணத்தின்**
**உண்மை தெரிந்தவுடன் மீண்டும் உறவாடுவார் !**

530. *உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்*
*இழைத்திருந் தெண்ணிக் கொளல்*

**காரணம் கற்பித்து பிரிந்து போனவர் – வேறு**
**காரணத்தால் வேந்தனை உறவு கொண்டாடி**
**காண வந்தவரை நன்கு ஆராய்ந்தபின்பு தான் உறவு**
**காக்க வேண்டும் !**

## 54. பொச்சாவாமை

531. *இறந்த வெகுளியின் தீதே சிறந்த*
*உவகை மகிழ்ச்சியிற் சோர்வு*

**அளவிற்கதிகமான அக மகிழ்ச்சியினால்**
**மறதியினால் கடமையை மறப்பது**
**அளவு கடந்த கோபத்தினால் ஏற்படும்**
**அநேக தீமையை விட தீங்கானது !**

532. *பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை*
*நிச்ச நிரப்புக்கொன் றாங்கு*

**வயிறு நிரப்பக் கூட இல்லாமல் நாள் தோறும்**
**வருத்துகின்ற வறுமை வாட்டினால்**
**வளர் அறிவும் அழிந்து விடும் ! அது போல்**
**வரும் மறதியும் புகழை அழித்துவிடும் !**

533. *பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்*
*தெப்பானூ லோர்க்குந் துணிவு*

**மறதி உடையவர்க்கு**
**மதிக்கத்தக்க புகழ் வாழ்வில்லை – இது**
**மண்ணில் உள்ள நூலோர் அனைவரும்**
**மறுக்க முடியாத உண்மை !**

534. *அச்ச முடையார்க் கரணில்லை ஆங்கில்லை*
*பொச்சாப் புடையார்க்கு நன்கு*

**பயம் உடையவர்க்கு**
**பலமான கோட்டையிலிருந்தும்**
**பலத்த பாதுகாப்பு இல்லை !**
**நல்ல மறதி உடையவர்க்கு**
**மண் பயன் விளைவிக்கும்**
**மகத்தான நன்மையில்லை !**

535. *முன்னுறக் காவா திழுக்கியான் தன்பிழை*
*பின்னூ றிரங்கி விடும்*

**நினைவோடு முன்கூட்டியே சிந்தித்து கேடு**
**நிலைமையைத் தடுக்காது மறந்தவன்**
**நிலைக்கும் துன்பம் வந்த பிறகு – அதை**
**நினைத்து நினைத்து தன் பிழை பற்றி வருந்துவான் !**

536. *இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை*
*வாயின் அதுவொப்ப தில்*

**எக்காலத்திலும் எவரிடத்திலும் மறதி**
**எனும் தன்மை இல்லாமல் இருந்தால்**
**எங்கும் அதற்கு ஒப்பான நன்மை இல்லை !**

537. *அரியவென் றாகாத இல்லைபொச் சாவாக்*
*கருவியாற் போற்றிச் செயின்*

**மறவாமை எனும் கருவியால் ஆராய்ந்து**
**மறக்காமல் காரியம் செய்பவனுக்கு**
**மலைக்கும் அரிய செயல் எதுவுமே இல்லை !**

538. *புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா*
*திகழ்ந்தார்க் கெழுமையும் இல்*

**அறிவுடையோர் புகழும் செயல்களை**
**அகிலம் போற்றும் செயல்களை**
**அக்கறையாய் போற்றிச் செய்ய வேண்டும் !**
**அவ்வாறு செய்ய மறந்தவர்க்கு**
**அங்ஙனம் ஏழு பிறவியிலும் நன்மை இல்லை !**

539. *இகழ்ச்சியிற் கெட்டாரை உள்ளுக தாந்தம்*
*மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து*

**மகிழ்ச்சியின் உச்சக் கட்டத்தில்**
**மமதையின் பிடியில் பூரித்துப்போய்**
**கர்வம் கொள்கிற போது அதே நிலையில்**
**கடமை மறந்து அழிந்தவர்களைக்**
**கண நேரம் நினைத்துப் பார்க்க வேண்டும் !**

540. *உள்ளிய தெய்தல் எளிதுமன் மற்றுந்தான்*
*உள்ளிய துள்ளப் பெறின்*

**எய்த குறிக்கோளைப் பற்றியே**
**எந்நேரமும் சற்றும் மறவாமல்**
**எண்ண முடிந்தால் நிச்சயம்**
**எண்ணியதை எளிதில் எய்திடலாம் !**

# 55. செங்கோன்மை

**541.** *ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டும்*
*தேர்ந்துசெய் வஃதே முறை*

**ஓர் பக்கம் சாய்ந்து இரக்கம் காட்டி**
**ஓர வஞ்சனையுடன் பார்க்காமல்**
**நன்குணர்ந்து குற்றத்தை ஆராய்ந்து**
**நடுவுநிலைமை தவறாமல் தண்டனை நல்குவதே நீதி !**

**542.** *வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்*
*கோனோக்கி வாழுங் குடி*

**வான் மழையை எதிர்பார்த்து உலகத்து உயிர்கள்**
**வாழும் ! அதே போல் நாட்டில்**
**வாழும் குடி மக்கள் எல்லோரும்**
**வானளாவிய புகழ் பெற்ற நீதிமானின் ஆட்சியை எதிர்பார்ப்பர் !**

**543.** *அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்*
*நின்றது மன்னவன் கோல்*

**அருளாளர் ஆன அந்தணர்**
**அருளும் நூலான வேதத்திற்கும்**
**அறச்செயல் புரிவதற்கும்**
**அடிப்படையானது அரசனின் ஆட்சியே !**

**544.** *குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்*
*அடிதழீஇ நிற்கும் உலகு*

**குடிமக்களை அரவணைத்து**
**குறைவில்லா ஆட்சி நடத்தும்**
**மாமன்னவனின் அடிச்சுவட்டை**
**மாநிலமே போற்றி நிற்கும் !**

**545.** *இயல்புளிக் கோலோச்சும் மன்னவ னாட்ட*
*பெயலும் விளையுளுந் தொக்கு*

**நீதி வழுவாமல் ஓர் நாட்டில்**
**நீதிமான் போல மன்னவன் ஆட்சி செய்தால்**
**பருவ காலத்தில் தவறாமல் மழையும்**
**பசுமையான வளமான விளைச்சலும்**
**பலப்பலவாய் திரண்டு வரும் !**

546. *வேலன்று வென்றி தருவது மன்னவன்*
*கோலதூஉங் கோடா தெனின்*

**மன்னவனுக்கு வெற்றி தருவது**
**மடங்கு பல கொண்ட ஆயுத பலம் அல்ல !**
**குத்தீட்டியாய் பாயும் வேலும் அல்ல !**
**குடிமக்களை வாழ வைக்கும் நேரான செங்கோலே !**

547. *இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை*
*முறைகாக்கும் முட்டாச் செயின்*

**உலகத்தையெல்லாம் ஆள்பவன் காப்பான்**
**உவண் "காப்பான்" எனினும் அவன்**
**உண்டாக்கிய நல்லாட்சி முறையே அவனை**
**உண்மையில் காக்கும் !**

548. *எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்*
*தண்பதத்தான் தானே கெடும்*

**முறையாகக் குறைகளை முறையிட**
**முழுமையாக மக்களுக்கு வழி செய்யாத**
**முற்றாக ஆராய்ந்து தீர்ப்பளிக்காத**
**முதல்வன் எனும் ஆட்சியாளனுக்கு**
**முட்டும் பகைவரில்லை என்றாலும் தானே**
**முனைந்து கெட்டழிவான் !**

549. *குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்*
*வடுவன்று வேந்தன் தொழில்*

**குடி மக்களைக் காத்து வளர்ப்பதும்**
**குற்றம் செய்யின் தண்டிப்பதும்**
**குந்தகம் தரும் இழுக்கு அல்ல ! அது**
**குறிப்பிடும் வேந்தனது கடமையே !**

550. *கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்*
*களைகட் டதனொடு நேர்*

**கொலை போன்ற கொடிய செயல்களைச் செய்யும்**
**கொடிய குற்றவாளிகளைத் தண்டிப்பதைக்**
**கொள்கையாய் என்றும் கொண்ட**
**கொற்றவனின் செயல் – பயிரை அழிக்கும் களையை**
**கொத்தி எடுக்கும் செயலுக்கு ஒப்பானது !**

# 56. கொடுங்கோன்மை

*551.* *கொலைமேற்கொண் டாரிற் கொடிதே அலைமேற்கொண்*
*டல்லவை செய்தொழுகும் வேந்து*

**பொருளின் மீது ஆசை கொண்டு**
**பொறுப்பற்ற, முறையற்ற, அறவழி அற்ற**
**கொடிய செயல்களால் குடி மக்களை துன்புறுத்தும் அரசு**
**கொலைகாரர்களைக் விடக் கொடியதாகும் !**

*552.* *வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்*
*கோலொடு நின்றான் இரவு*

**ஆட்சி செய்ய வந்தவன்**
**ஆக்கினைகள் செய்து முறையற்ற வழியில்**
**ஆளப்படும் குடிமக்களிடம் பொருள் பறிப்பது**
**ஆயுதமான வேல் தாங்கிய வழிப்பறிக் கொள்ளையன்**
**ஆவேசத்துடன் பொருளைப் பறிப்பது போன்று !**

*553.* *நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்*
*நாடொறும் நாடு கெடும்*

**நாள்தோறும் தம் ஆட்சியின் நன்மை தீமைகளை**
**நாடாது மேலும் முறையோடும் ஒழுங்கோடும்**
**நாட்டின் ஆட்சியை நடத்தாத வேந்தன்**
**நாள்தோறும் நாட்டைக் கொஞ்சம் கொஞ்சமாக இழப்பான் !**

*554.* *கூழுங் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்*
*சூழாது செய்யும் அரசு*

**சூழ்ந்திருக்கும் அமைச்சர்களை கலந்து**
**சூட்சுமங்களையும் பின் விளைவுகளையும்**
**ஆராயாமல் முறை பிறழ்ந்து கொடுங்கோல்**
**ஆட்சி செய்யும் அரசு தன் செல்வச் சிறப்பையும்**
**ஆளப்படும் குடிமக்களின் மதிப்பையும் இழந்துவிடும் !**

*555.* *அல்லற்பட் டாற்றா தழூதகண் ணீரன்றே*
*செல்வத்தைத் தேய்க்கும் படை*

**கொடுங்கோல் ஆட்சியினால் மக்கள் குமுறி**
**கொட்டியழுத கண்ணீரே ஆட்சிக்கு சாவுக்**
**கொட்டுதல் அடிக்கும் படைக்கருவியாகும் !**

556. *மன்னார்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல்*
*மன்னாவாம் மன்னர்க் கொளி*

**அரசுக்கு, நிலையான அரசு என்கின்ற**
**அருமை – செம்மையான ஆட்சியினால்**
**அங்ஙனம் உண்டாகும் ! அது இல்லையேல்**
**அரசுக்கு அதிகாரமே நிலைக்காது !**

557. *துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்தன்*
*அளியின்மை வாழும் உயிர்க்கு*

**மழைத்துளி கொஞ்சம் கூட இல்லையேல்**
**மண்ணுலகம் எத்தகைய துன்பத்தை அடையுமோ**
**அத்தகைய துன்பத்தை மக்கள்**
**அருள் இல்லாத ஆட்சியில் அடைவார்கள் !**

558. *இன்மையின் இன்னா துடைமை முறைசெய்யா*
*மன்னவன் கோற்கீழ்ப் படின்*

**வறுமையின்றி எல்லாம் உடையாராக**
**வளத்தோடு வாழ்ந்தாலும் கூட அந்த**
**வகையான வாழ்க்கை முறையில்லா ஆட்சியின்**
**வரையறையின் கீழ் அமைந்து விட்டால் அது**
**வறுமையை விடத் துன்பத்தைத் தரக்கூடியது !**

559. *முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி*
*ஒல்லாது வானம் பெயல்*

**முறை தவறி அறம் அற்ற கொடுங்கோல்**
**முறையில் ஆட்சி செய்யும் நாட்டில்**
**முறை தவறிப் பெய்யுமாம் பருவ மழை !**

560. *ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்*
*காவலன் காவான் எனின்*

**ஆளுகின்ற ஆட்சிமுறைப்படி நாட்டை**
**ஆபத்திலிருந்து காக்கத் தவறினால்**
**ஆக்கப் பணிகள் எதுவும் நடக்காது !**
**'ஆ'வினது பால் சுரப்பது குன்றும் !**
**ஆறு வகை தொழில்கள் மறக்கப்படும் !**

## 57. வெருவந்த செய்யாமை

**561.** *தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்*
*ஒத்தாங் கொறுப்பது வேந்து*

**குற்றம் செய்தால் தக்கபடி ஆராய்ந்தறிந்து – அக்**
**குற்றம் மீண்டும் செய்யாதபடி அந்தக்**
**குற்றத்திற்கு எற்ற தக்கதொரு தண்டனையை**
**குறை உணரக் கொடுப்பதே அரசின் கடமை !**

**562.** *கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்கம்*
*நீங்காமை வேண்டு பவர்*

**ஆட்சிப் பொறுப்பில் நிரந்தரமாக**
**ஆள்பவராக இருக்க விரும்புவோர்**
**கடமையின்படி குற்றங்கள் மேலும் நடக்காமலிருக்க**
**கடுமையான தண்டனை கொடுப்பதிலிருந்து மெல்ல மெல்ல**
**மென் கடினத்திலிருந்து பெண்மைக்கு மாறுதல் நன்மையே !**

**563.** *வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்*
*ஒருவந்தம் ஒல்லைக் கெடும்*

**கொலை நடுங்கும் அச்சத்தைக் குடிமக்களுக்கு**
**கொடுக்கும் கொடுங்கோல் ஆட்சியாளரின்**
**கொற்றக் குடை உறுதியாய் விரைவில் அழியும் !**

**564.** *இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்*
*உறைகடுகி ஒல்லைக் கெடும்*

**'ஆள்கிறவன் கொடியவன்' என மனம் தெளிந்து**
**ஆங்ஙனம் குடிமக்கள் இன்னா சொல்லை உதிர்த்தால்**
**ஆட்சியாளரின் வாழ்நாளும் சுருங்கி**
**ஆட்சியும் கெட்டு விரைவில் அழிவான் !**

**565.** *அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்*
*பேஎய்கண் டன்ன துடைத்து*

**பேய் முகம் போல் வெறுப்பாக முகங் கொண்டு**
**பேசுதலுக்குக் கூட எளிதில் காண முடியாதவன்**
**பேணிக் காக்கும் பெருஞ் செல்வமானது**
**பேய் காக்கும் புதையலைப் போன்றதே !**

566. *கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின் நெடுஞ்செல்வம்*
*நீடின்றி ஆங்கே கெடும்*

**கடுமையான சொற்களைப் பேசுபவனும்**
**கருணையற்ற இரக்கத்திற்குக் கண்ணற்றவனும்**
**கடினப்பட்டுச் சேர்த்த நெடுஞ் செல்வம்**
**கல்வெட்டாய் காலத்திற்கும் நிற்காமல் அப்போதே அழியும் !**

567. *கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்தன்*
*அடுமுரண் தேய்க்கும் அரம்*

**வெறுப்பேற்றுகின்ற கடுமையானப் பேச்சும்**
**வெம்மை மிகு அளவில்லாத் தண்டனையும்**
**வெற்றி வேந்தனின் பெருமையை**
**வெற்றாக்கித் தேய்க்கும் அரக் கருவியாகும் !**

568. *இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்*
*சீறிற் சிறுகுந் திரு*

**ஆட்சி புரியும் வேந்தன் தன்னுடன்**
**ஆட்சியில் பங்கு பெறும் கூட்டணி அமைச்சுடன்**
**கலந்து பேசி எதையும் எண்ணாமல்**
**கடும் சீற்றத்துடன் முடிவுகளை எடுத்தால்**
**கண்டிப்பாக ஆட்சியாகிய செல்வம் சிறுக்கும் !**

569. *செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்*
*வெருவந்து வெய்து கெடும்*

**போர் என்று வருவதற்கு முன்னேயே**
**போதிய பாதுகாப்பை ஏற்படுத்தி அரணை**
**போதிக்காத அரசன்**
**போர் வந்து விட்டால் அதற்கு அஞ்சி**
**போக்கிடம் இன்றி விரைந்து அழிவான் !**

570. *கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோல் அதுவல்ல*
*தில்லை நிலக்குப் பொறை*

**கடும் ஆட்சி புரியும் கொடுங்கோலன்**
**கற்க வேண்டிய அறநூல்களை கொஞ்சமும்**
**கற்காதவர்களையே அமைச்சர்களாக**
**கடமையாற்ற நியமிப்பான் ! அது போல்**
**கண்டிடும் நாட்டிற்கு பாரம் வேறு எதுவுமில்லை !**

## 58. கண்ணோட்டம்

**571.** *கண்ணோட்டம் என்னுங் கழிபெருங் காரிகை*
*உண்மையான் உண்டிவ் வுலகு*

**'கருணை' என்றழைக்கப்படும் அன்பும் இரக்கமும்**
**கலந்து வெளிப்படும் "கண்ணோட்டம்" எனும்**
**பேராற்றல் இருக்கின்ற காரணத்தினாலேயே**
**பேரழிவு இல்லாமல் உள்ளது இவ்வுலகு !**

**572.** *கண்ணோட்டத் துள்ள துலகியல் அஃதிலார்*
*உண்மை நிலக்குப் பொறை*

**உலகியல் எனும் தத்துவமே**
**உள்ளார்ந்த இரக்க குணம்**
**உள்ளதால் வாழ்கிறது ! அத்தகைய**
**உண்மை நிலையான கண்ணோட்டத்தின் கண்**
**உள்ளாகாதவர் பூமிக்கு பாரமே !**

**573.** *பண்ணென்னாம் பாடற் கியைபின்றேற் கண்ணென்னாங்*
*கண்ணோட்டம் இல்லாத கண்*

**ஈடில்லா இசையானாலும் பொருந்தி**
**ஈர்க்காத பாடல் என்றால்**
**ஈண்டு பயன் இல்லை ! அது போல்**
**ஈவு இரக்கம் காட்டாத கண்ணால் பயனில்லை !**

**574.** *உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினாற்*
*கண்ணோட்டம் இல்லாத கண்*

**முகத்தில் உள்ளது போல்**
**முழுதாக "கண்ணாக" காட்சி தருவதைத் தவிர**
**கருணைக் கண் இல்லாத கண்ணால்**
**கடுகளவும் பயன் இல்லை !**

**575.** *கண்ணிற் கணிகலங் கண்ணோட்டம் அஃதின்றேற்*
*புண்ணென் றுணரப் படும்*

**கண்ணிற்கு மை போல் அழகான**
**கண் கவர் அணிகலனாவது**
**கண்ணோட்டமே ! அப்படி இரக்கம் இல்லாத**
**கண்கள் புண்களாகவே கருதப்படும் !**

576. *மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ*
*டியைந்துகண் ணோடா தவர்*

**கண்களோடு இருந்தும் கருணை கொண்ட**
**கண்ணோட்டம் இல்லாதவர்**
**மண்ணோடு மண்ணாக பொருந்தி**
**மரம் போன்று நிற்பதற்கு ஒப்பாவர் !**

577. *கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடையார்*
*கண்ணோட்டம் இன்மையும் இல்*

**'கண்ணோட்டம்' எனும் கருணை இல்லாதவர்**
**கண்ணில்லாதவர் எனப்படுவர் !**
**கண் உள்ளவர் என்றாலே**
**கருணை உள்ளவர் ஆவர் !**

578. *கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்*
*குரிமை உடைத்திவ் வுலகு*

**கொண்ட காரியம் கெடாமல்**
**கொண்ட தொழிலில் மேன்மை கெடாமல்**
**கருணை காட்டுபவர்களை**
**கண்டு வயப்பட்டது இவ்வுலகம் !**

579. *ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணுங்கண் ணோடிப்*
*பொறுத்தாற்றும் பண்பே தலை*

**தண்டனைக்குரிய குற்றம் செய்தவரைத்**
**தண்டிக்கும் ஆற்றல் இருப்பினும்**
**தனிப்பெருங் கருணை காட்டி மன்னிப்பது**
**தலை சிறந்த பண்பாகும் !**

580. *பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க*
*நாகரிகம் வேண்டு பவர்*

**நல்லோர் போற்றுகின்ற நாகரிகத்தையும்**
**நல்ல மனம் காட்டும் கருணையும் கொண்டவர்**
**நன்கு பழகியவர் தன் கண்ணெதிரே**
**நஞ்சினை இட்டுக் கொடுத்தாலும் மறுக்காமல் ஏற்பர் !**

# 59. ஒற்றாடல்

**581.** *ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்*

**ஒற்றர்களைக் கொண்ட உளவுத்துறையும்
ஒட்பம் மிகுந்த நீதியுரை வழங்கும்
ஒப்பில்லா அற நூலும் அரசிற்கு
ஒப்பான இரு கண்களாகும் !**

**582.** *எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில்*

**உற்ற நண்பரானாலும், கொடிய பகைவரானாலும்
உண்மை நடுநிலையாளர் ஆனாலும்
உளவுத்துறை மூலம் எல்லாரிடத்திலும்
உழலும் எல்லா நிகழ்வுகளையும் எல்லாக் காலங்களிலும்
உற்று நோக்கி விரைவாக அறிவது அரசின் கடமை !**

**583.** *ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில்*

**ஒற்றறிந்து எல்லாரிடத்திலும் நிகழ்ந்தவற்றை
ஒற்றறிவித்து அவற்றால் எய்தும் பயன்களை
ஒருமுகப்படுத்தி ஆராயாத மன்னவன்
ஒருகாலும் கொற்றம் தழைத்திட வழியில்லை !**

**584.** *வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றாங்
கனைவரையும் ஆராய்வ தொற்று*

**உளவறியும் ஒற்றர் பணி புரிபவர்
உறவாடும் சுற்றத்தார், வேண்டுபவர், வேண்டாதவர்
எத்தொழிலும் செய்பவர் என
எத்திறத்தாரையும் பாகுபாடில்லாமல் ஒற்றறிவதே கடமை !**

**585.** *கடாஅ உருவொடு கண்ணஞ்சா தியாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று*

**ஒருவரும் சந்தேகப்படாத உருவத்தோடு
ஒன்றுக்கும் அஞ்சாதத் தன்மையோடு
ஒளிந்திருக்கும் மனதில் உள்ள இரகசியங்களை
ஒருவருக்கும் வெளிப்படுத்தாமலும்
ஒற்றறிபவனே 'ஒற்றன்' !**

586. *துறந்தார் படிவத்த ராகி இறந்தாராய்ந்*
*தென்செயினுஞ் சோர்வில தொற்று*

**துறவி போல பற்றற்று நடந்து கொண்டு**
**துணிந்து தீர ஆராய்ந்து அதில் எத்துணைத்**
**துன்பம் வரினும்தாங்கிக் கொண்டு**
**துலங்குதலுக்கு வெளிப்படுத்திக் கொள்ளாதவரே**
**துப்பறியும் 'ஒற்றன்' !**

587. *மறைந்தவை கேட்கவற் றாகி அறிந்தவை*
*ஐயப்பா டில்லதே ஒற்று*

**மறைக்கப்பட்ட இரகசியச் செய்திகளை**
**மறைந்திருந்தே ஒற்று கேட்கும் அவர்களுடன் கூட இருந்து**
**மற்றவர்கள் மூலம் அறிந்து – ஆராய்ந்து**
**மறைத்த உண்மையைத் தெளிவாக உணர்வதே ஒற்று !**

588. *ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்*
*ஒற்றினால் ஒற்றிக் கொளல்*

**ஒற்றன் ஒருவன் உளவறிந்து வந்த**
**ஒரு செய்தியை உடனே ஏற்காமல் – மறு**
**ஒற்றனை நியமித்து அதே செய்தியை**
**ஒற்றறிந்து கொணரச் செய்து இரண்டையும்**
**ஒப்பிட்டுப் பார்த்துத்தான் முடிவுக்கு வர வேண்டும் !**

589. *ஒற்றொற் றுணராமை யாள்க உடன்மூவர்*
*சொற்றொக்க தேறப் படும்*

**ஒருவருக்கொருவர் அறிய முடியாதபடி**
**ஒற்றருக்கு ஒற்றர் தெரியாமல் மூன்று**
**ஒற்றர்களை இயங்க வைத்து – மூவரும்**
**ஒற்றறிந்து கொணரும் உண்மைகள்**
**ஒத்திருந்தால் மட்டுமே உண்மை என ஒப்புக் கொள்ள வேண்டும் !**

590. *சிறப்பறிய ஒற்றின்கண் செய்யற்க செய்யிற்*
*புறப்படுத்தான் ஆகும் மறை*

**ஒற்றர் ஒருவர் திறமையுடன் செயல்பட்டால் – அந்த**
**ஒற்றரைச் சிறப்புச் செய்வதாக எண்ணி பலரறியப் பாராட்டினால்**
**ஒளிவு மறைவாக இருக்க வேண்டிய இரகசியத்தை**
**ஒருங்கே தானே ஊரறிய செய்தவனாவான் !**

## 60. ஊக்கம் உடைமை

**591.** *உடையர் எனப்படுவ தூக்கமஃ தில்லார்*
*உடைய துடையரோ மற்று*

**உடையவர் என்றால் ஊக்கம்**
**உடையவர் மட்டுமே ! மற்ற பிற**
**உள்ளவைகளையெல்லாம் இருந்தாலும்**
**'உடையவர்' ஆக மாட்டார் !**

**592.** *உள்ள முடைமை உடைமை பொருளுடைமை*
*நில்லாது நீங்கி விடும்*

**உள்ளத்தில் 'ஊக்கம்' எனும்**
**உடைமையே நிலையான செல்வம் !**
**உபரியாக வேறு எத்துணை**
**உடைமைகள் இருந்தாலும் அது நிலைத்த**
**உறுதியில்லாத செல்வங்கள் !**

**593.** *ஆக்கம் இழந்தேமென் றல்லாவார் ஊக்கம்*
*ஒருவந்தங் கைத்துடை யார்*

**ஊக்கத்தை உறுதியாகக் கொண்டவர்கள்**
**'ஊதியம்' எனும் ஆக்கத்தை இழந்தாலும்**
**உயர்வடைந்து எதற்கும் கலங்க மாட்டார்கள் !**

**594.** *ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா*
*ஊக்க முடையா னுழை*

**உறுதியான ஊக்கமுடையவர்களை**
**உயர்வு தரும் செல்வம்**
**உரிய வழிகளை கண்டறிந்து போய்ச் சேரும் !**
**உடனே சென்றடைய தானே !**

**595.** *வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்*
*உள்ளத் தனைய துயர்வு*

**தண்ணீரிலே மலரும் தாமரைப் பூவின்**
**தண்டின் நீளம் தண்ணீரின் அளவு வரைதான் நீளும் !**
**மனிதனின் வாழ்வின் உயர்வும் அவர்**
**மனதில் கொண்டுள்ள ஊக்கத்தின் அளவே அமையும் !**

596. *உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது*
*தள்ளினுந் தள்ளாமை நீர்த்து*

**உள்ளத்தில் நினைப்பதெல்லாம் எப்போதும்**
**உயர்ந்த நினைப்பாகவே இருக்க வேண்டும் !**
**உயர்வு வரா விட்டாலும் அந்த நினைப்பையே**
**உறுதியாகப் பற்றிக் கொள்ள வேண்டும் !**

597. *சிதைவிடத் தொல்கார் உரவோர் புதையம்பிற்*
*பட்டுப்பா டூன்றுங் களிறு*

**உடல் முழுவதும் மறைப்பது போல்**
**ஊசி முனை அம்புகள்**
**உள்ளே புண்பட்டிருந்தாலும் யானை**
**உறுதி தளராமல் இருப்பதைப் போல்**
**உள்ளத்தில் ஊக்கமுடையவர்கள்**
**உருக்கும் அழிவானாலும் கலங்க மாட்டார் !**

598. *உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து*
*வள்ளியம் என்னுஞ் செருக்கு*

**உலகத்தில் கொடை வள்ளல் எனும்**
**உயர்வையும் பெருமையையும்**
**உள்ளத்தில் அள்ளி வழங்கும் ஆர்வத்தையும்**
**உரிய ஊக்கம் இல்லாதவர் பெற வழியில்லை !**

599. *பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை*
*வெரூஉம் புலிதாக் குறின்*

**உருவத்தை விட ஊக்கமே**
**உண்மையில் வலிமையானது என்பதற்கு**
**உதாரணமே உலகில் ஒன்றுள்ளது !**
**உடம்பில் பருத்த யானை, கூரிய தந்தம்**
**உண்டானாலும் ஊக்கம் இல்லாததால்**
**உயிரைத் தாக்க வரும் புலியைக் கண்டு அஞ்சுவது தான் !**

600. *உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்*
*மரமக்க ளாதலே வேறு*

**உள்ளத்தில் உறுதியான ஊக்கமில்லாதவர்கள்**
**உருவத்தில் மனிதர்களாகக் காணப்பட்டாலும்**
**உண்மையில் அவர்கள் மரங்களே !**

## 61. மடி இன்மை

601. *குடியென்னுங் குன்றா விளக்கம் மடியென்னும்*
*மாசூர மாய்ந்து கெடும்*

**குடிப்பெருமை கொண்ட குடும்பம் எனும் மங்காத**
**குன்றா விளக்கு ஒளி மயமாக**
**குன்றிலிட்ட விளக்கு போல ஒளிர்ந்தாலும்**
**குற்ற வரிசையில் வரும் சோம்பல் மட்டும்**
**குடி கொண்டு விட்டால், ஒளி மங்கி இருண்டு விடும் !**

602. *மடியை மடியா ஒழுகல் குடியைக்*
*குடியாக வேண்டு பவர்*

**குடித்தனத்தைச் சிறந்த நல்**
**குடியாக உயர்த்த வேண்டுபவர்**
**சோம்பலைச் சோர்வின்றி அகற்றி**
**சோடையின்றி முயற்சிக்க வேண்டும்!**

603. *மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த*
*குடிமடியுந் தன்னினு முந்து*

**'மடி' என்னும் சோம்பலைப் பல**
**மடங்கு மிகுந்து வைத்துள்ள**
**மடத்தனம் மிகுந்த மூடன் பிறந்தால் – அவன்**
**மடிவதற்கு முன்னால் அவன் குடி**
**மடிந்து மூழ்கிவிடும் !**

604. *குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து*
*மாண்ட உஞற்றி லவர்க்கு*

**சோர்வுடன் எப்போதும் வாழ்க்கையில்**
**சோம்பலில் மூழ்கிப் போனவர்களின்**
**குடும்பப் பெருமை சீரழிந்து போகும்**
**குற்றங்களும் வாழ்க்கையில் பெருகி விடும் !**

605. *நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்*
*கெடுநீரார் காமக் கலன்*

**கால தாமதம், மறதி, சோம்பல்**
**கால அளவிற்கு மீறிய தூக்கம் – இந்த**
**கெடுதிக் குணங்கள் நான்கும் உடையவர்**
**கெட்டழிந்து போகிறவர்கள் விரும்பி ஏறும் மரக்கலம் !**

606. *படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்*
*மாண்பயன் எய்தல் அரிது*

**படியளிக்கும் அரசனின் நட்பின்**
**பற்றே அமைந்திருந்தாலும்**
**'மடி' என்னும் சோம்பல் உடையவர்**
**மதிப்பின் பயனை பெறுவது அரிது !**

607. *இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து*
*மாண்ட உஞற்றி லவர்*

**சோம்பலின் மடியில் விழுந்தவர்கள்**
**சோர்வின்றி உழைத்து நற்காரியங்களை**
**நிகழ்த்த முடியாதவர்கள் – மக்களின் வசைவுக்கு**
**நித்தம் இடிபட்டு இகழ்ச்சிக்கு ஆளாவார்கள் !**

608. *மடிமை குடிமைக்கண் தங்கிற்றன் ஏனான்னார்க்*
*கடிமை புகுத்தி விடும்*

**நல்ல குடியில் பிறந்தாலும்**
**நன்மை பயக்காத சோம்பலில் வீழ்ந்துவிட்டால்**
**அந்தச் சோம்பலே அக்குடும்பத்தைப் – பகைவருக்கு**
**அஞ்சி அடிமையாக்கி விடும் !**

609. *குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்*
*மடியாண்மை மாற்றக் கெடும்*

**சோம்பலினால் ஆட்படுவதைத் தகர்த்து ஒருவன்**
**சோதனைகளைக் கடந்து விட்டால்**
**குடிப்பெருமைக்கும், ஆண்மைக்கும் ஏற்பட்ட**
**குற்றங்கள் நீங்கி விடும் !**

610. *மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்*
*தாஅய தெல்லாம் ஒருங்கு*

**காலத்திற்கும் சோம்பல் இல்லாத மன்னன் – தன்**
**கால் பட்ட இடத்தையெல்லாம்**
**காலடி எல்லைக்குள் கொண்டு வருவான்**
**காலால் உலகளந்த திருமால் போல !**

## 62. ஆள்வினை உடைமை

**611.** *அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்*
*பெருமை முயற்சி தரும்*

**செய்வதற்கு முடியாத அரிய**
**செயல் என்று சோர்வடைதல் கூடாது ! அதனை**
**செய்து முடிக்க முடியும் என்று முயற்சிச்**
**செய்தால் அதுவே முடிப்பதற்கு வலிமை தரும் !**

**612.** *வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை*
*தீர்ந்தாரின் தீர்ந்தன் றுலகு*

**முதலில் தொட்ட காரியத்தை**
**முழுதாக முடிக்காமல் அரை குறையாய்**
**முரித்துக் கொண்டவரை உலகம்**
**முற்றிலும் கை விட்டு விடும் ! ஆகவே**
**முயற்சியில் தளர்ச்சியில்லாமல் செயலை முடிக்க வேண்டும் !**

**613.** *தாளாண்மை என்னுந் தகைமைக்கண் தங்கிற்றே*
*வேளாண்மை என்னுஞ் செருக்கு*

**மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற**
**மதிப்பு மிக்க வேளாண் எண்ணம்**
**முயற்சியுடன் செயல்பட்டு விடாது**
**முழு வெற்றி பெற்றவரிடமே தங்கும் !**

**614.** *தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை*
*வாளாண்மை போலக் கெடும்*

**உழைப்பில் கொஞ்சம் கூட விடா முயற்சிதனை**
**உட்படுத்தாதவன் மற்றவர்களுக்கு**
**உதவ நினைப்பது என்பது**
**வீரமில்லா பேடி ஒருவன் கையில்**
**வீரவாள் எடுத்துப் போரிட**
**வீசுவது போலத் தான் !**

**615.** *இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்*
*துன்பம் துடைத்தூன்றும் தூண்*

**சுகபோக இன்பத்தைத் தனக்கு நாடாமல்**
**சுணங்காது காரியத்திலேயே கண்ணானவன்**
**சுற்றத்தாரின் துன்பத்தைத் துடைத்துத் தாங்கும் தூணாவான் !**

*616.* *முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை*
*இன்மை புகுத்தி விடும்*

**முயற்சி எனும் உழைப்பு**
**முதன்மையாக செல்வத்தை தரும் !**
**முயற்சியே இல்லாத நிலை**
**முற்றாக வறுமையைப் புகுத்தி விடும்!**

*617.* *மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்*
*தாளுளாள் தாமரையி னாள்*

**முயற்சியே இல்லாதவனிடத்தில்**
**முதலில் பிறந்த மூத்தவள் மூதேவி**
**முகாமிடுவாள் ! ஆனால் சோம்பலில்லாத**
**முயற்சி யுடையானிடம் இளையவள் சீதேவி**
**முதன்மையாய் வீற்றிடுவாள் !**

*618.* *பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்*
*தாள்வினை இன்மை பழி*

**'பொறி' எனும் நுட்பமான அறிவை**
**பொறுத்தமட்டிலும் குறைவாக பெற்றிருப்பது**
**பொருட்படுத்த வேண்டிய பழி அல்ல !**
**முடிந்த வரை கிடைத்த அறிவைக் கொண்டு**
**முயற்சிக்காமல் இருப்பதே பழி பாவமாகும் !**

*619.* *தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்*
*மெய்வருத்தக் கூலி தரும்*

**தெய்வத்தை மட்டுமே நம்பி எடுத்த ஒரு காரியம்**
**தெளிவாக வெற்றியடையாமல் போகலாம் – ஆனால்**
**உடலை வருத்தி முழு முயற்சியுடன்**
**உழைக்கும் போது அதற்கேற்ற வெற்றிப் பலன் கிட்டும் !**

*620.* *ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்*
*தாழா துஞற்று பவர்*

**உழன்றோடி வரும் "ஊழை"யும்**
**உருண்டோடி தோற்கச் செய்திடுவர்**
**"உலைவு" என்னும் "ஊக்கக்குறை"வின்றி**
**உறுதியுடன் தொடர்ந்து முயற்சிப்பவர் !**

## 63. இடுக்கண் அழியாமை

621. *இடுக்கண் வருங்கால் நகுக அதனை*
*அடுத்தூர்வ தஃதொப்ப தில்*

**துன்பம் வரும் போது அதனைப்பார்த்து**
**துணிந்து கேலி செய்து சிரிக்க !**
**துன்பத்தை வெல்வதற்கு அது ஒன்றே**
**துரிதமான வழி !**

622. *வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்*
*உள்ளத்தின் உள்ளக் கெடும்*

**வெள்ளம் போல் இடும்பை எனும் துன்பம்**
**வெகுண்டெழுந்து வந்தாலும்**
**அறிவுடையான் அதை உள்ளத்தில்**
**அவதானித்தவுடன் மன வலிமையால் மறையும் !**

623. *இடும்பைக் கிடும்பை படுப்பர் இடும்பைக்*
*கிடும்பை படாஅ தவர்*

**'துன்பம்' எனும் இடும்பை வரும்போது**
**துன்பப்பட்டு கலங்காதவர் – அந்த**
**துன்பத்திற்கே துன்பத்தைத்தந்து**
**துவண்டுவிடச் செய்வர் !**

624. *மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற*
*இடுக்கண் இடர்ப்பா டுடைத்து*

**கரடு முரடான பாதையில் பெரும் பாரத்தை**
**கட்டிளங்காளை இழுத்துச் செல்வது போல்**
**கடும் விடா முயற்சியுடன் செயல்பட்டால்**
**கடுந்துன்பமும் விலகி ஓடும் !**

625. *அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற*
*இடுக்கண் இடுக்கண் படும்*

**அடுக்கடுக்கான துன்பங்கள்**
**அளவில்லாமல் வந்தாலும்**
**அதைக் கண்டு மனம் கலங்காதவனைப் பார்த்து – வந்த**
**அந்தத் துன்பமே துன்பப்பட்டுக் கொள்ளும் !**

626. *அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்*
*றோம்புதல் தேற்றா தவர்*

**பெற்றோமே இத்துணை செல்வத்தை என**
**பெருமைப்பட்டு அதனைக் காக்க**
**பெரிதும் பற்றற்று இருப்பவர்**
**பெற்ற செல்வத்தை இழந்த பின்பு**
**பெரும் பாடும் பட்டு வருத்தப்பட மாட்டார் !**

627. *இலக்கம் உடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்*
*கையாறாக் கொள்ளாதாம் மேல்*

**உடம்பு என்றாலே துன்பங்களுக்கு**
**உடனே இலக்காவது இயற்கையே என்று**
**உணர்ந்து துன்பம் வந்தால் கலங்காமல்**
**உற்றறிதலே மேலான அறிவு !**

628. *இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்*
*துன்ப முறுதல் இலன்*

**இன்பத்தை நாடித் தேடி அலையாமல்**
**இடும்பை எனும் துன்பம் என்பது**
**இயல் பானதே என அறிந்தவன்**
**இடும்பையினால் துன்பமடையப் போவதில்லை !**

629. *இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்*
*துன்ப முறுதல் இலன்*

**இன்பம் வரும்போது அதற்காகப் பெரிதும்**
**இங்குமங்கும் ஆட்டம் போடாதவர்கள்**
**துன்பம் வரும் போது அதற்காக**
**துவண்டு போய் துன்பப்பட மாட்டார்கள் !**

630. *இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகுந்தன்*
*ஒன்னார் விழையுஞ் சிறப்பு*

**'இன்னாமை' எனும் துன்பத்தையே தன்**
**'இன்பம்' என ஏற்றுக் கொள்பவருக்கு**
**பகை பாராட்டும் பகைவர் கூட**
**பகை மறந்து பாராட்டிச் சிறப்பு செய்வர் !**

# 64. அமைச்சு

**631.** *கருவியும் காலமும் செய்கையும் செய்யும்*
*அருவினையும் மாண்ட தமைச்சு*

**செயலை முடிப்பதற்குரிய கருவி – அச்**
**செயலைச் செய்வதற்கான காலம்**
**செயலைச் செய்யும் செய்முறை – இவற்றை**
**செம்மையுடன் ஆய்ந்தறிந்து நன்கு**
**செயல்படுபவரே நல்ல அமைச்சர் !**

**632.** *வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ*
*டைந்துடன் மாண்ட தமைச்சு*

**அஞ்சாமல் எப்போதும் துணிவுடன் செயல்படுதல்;**
**அருமைக் குடிமக்களைப் பாதுகாத்தல்;**
**அரசியல் நூல்களை கற்று அறிதல்;**
**அயராத முயற்சி அவற்றோடு பஞ்ச தந்திரங்களின்**
**அறிவு பெறுதல் ஆகியவை நல் அமைச்சாம் !**

**633.** *பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்*
*பொருத்தலும் வல்ல தமைச்சு*

**நாட்டின் நலனுக்காகப் பகைவரைப் பிரித்தலும்**
**நாட்டின் நல விரும்பிகளைப் பேணிக் காத்தலும்**
**நாட்டின் நலனுக்காக பிரிதொரு காரணங்களுக்காக முன்பு பிரிந்தவரை**
**நாடிச் சேர்த்துக் கொள்ளுதலும்**
**நாட்டில் அமையும் வல்லமை வாய்ந்த அமைச்சாம் !**

**634.** *தெரிதலுந் தேர்ந்து செயலும் ஒருதலையாச்*
*சொல்லலும் வல்ல தமைச்சு*

**செய்ய வேண்டிய செயலைத் தெரிந்து கொள்ளுதலும்;**
**செயல்படுவதற்கான விதிமுறைகளை ஆராய்ந்து தேர்ந்தெடுப்பதும்**
**செயல்படுத்தும் ஒரே முடிவை உறுதிபடச் சொல்வதும்**
**செங்கோல் கொண்ட வல்லமை படைத்த அமைச்சாம் !**

**635.** *அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந்*
*திறனறிந்தான் தேர்ச்சித் துணை*

**அறத்தை அறிந்தவனாகவும்**
**அறிவு நிறைந்த சொற்களைச் சொல்பவனாகவும்**
**அருஞ் செயல்திறன் படைத்தவனாகவும்**
**அமைந்தவனே ஆலோசனை வழங்கும் அருமைத் துணையாவான்!**

636. *மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்*
*யாவுள முன்னிற் பவை*

**பலமான புத்திக் கூர்மையான மதிநுட்பத்தோடு**
**பல நூல்களைக் கற்றறிந்த மேலான அறிவும்**
**பக்க பலமாக சேர்ந்து கொண்டு விட்டால்**
**படரும் சிக்கலும் அதிநுட்பமான சூழ்ச்சியும் நிற்காது ஓடும் !**

637. *செயற்கை அறிந்தக் கடைத்து முலகத்*
*தியற்கை அறிந்து செயல்*

**உள்ளபடி செயலாற்றல் பற்றி நூலறிவைப் பெற்றிருந்தாலும்**
**உலக நடப்பை ஒட்டியே எப்போதும்**
**உணர்ந்து பார்த்து அதற்கேற்றவாறு**
**உள்ளறிந்து செயலாற்ற வேண்டும் !**

638. *அறிகொன் றறியான் எனினும் உறுதி*
*உழையிருந்தான் கூறல் கடன்*

**சொந்த புத்தியும் இல்லாமல்**
**சொல் புத்தியும் கேட்காமல்**
**சொற்பமாக இருக்கின்ற "ஆட்சியாளனுக்கு" –**
**சொல்ல வேண்டிய அறிவுரைகளை அமைச்சர்கள்**
**சொல்லுறுதியுடன் துணிவோடு சொல்ல வேண்டும் !**

639. *பழுதெண்ணும் மந்திரியிற் பக்கத்துள் தெவ்வோர்*
*எழுபது கோடி உறும்*

**பக்கத்தில் இருந்து கொண்டே மந்திரியார்**
**பழுதான தவறான வழிமுறைகளையே**
**பல வகைகளில் சிந்திப்பதை விட**
**பகைவர்கள் எழுபது கோடிப்பேர்**
**பக்கத்தில் இருந்தாலும் நன்மையே !**

640. *முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்*
*திறப்பா டிலாஅ தவர்*

**முறைப்படி தீட்டப்படும் திட்டங்களும்**
**முனைந்து சிறப்பாகச் செயலாற்றி**
**முடிக்க திறமையில்லாத அமைச்சர்களிடம் சிக்கினால்**
**முழுமையடையாமல் முடங்கி விடும் !**

## 65. சொல்வன்மை

**641.** *நாநல மென்னும் நலனுடைமை அந்நலம்*
*யாநலத் துள்ளதூஉம் அன்று*

**பேச்சுத்திறமை என்னும் நா நலம் –**
**பேர் பெற்ற அறிவாளர்களால் சிறப்பாக**
**பேசப்படும் எல்லா நலன்களையும் விட**
**பேரிடம் கொண்ட தலைசிறந்த நன்மை !**

**642.** *ஆக்கமுங் கேடும் அதனால் வருதலாற்*
*காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு*

**ஆக்கமும் அழிவும், நன்மையும் தீமையும்**
**ஆங்கே உதிர்த்த சொல்லால் தான்**
**ஆகும் ! ஆகவே எந்தவொரு சொல்லாயினும்**
**ஆராய்ந்து சொல்லல் வேண்டும் !**

**643.** *கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்*
*வேட்ப மொழிவதாம் சொல்*

**கேட்போரை எல்லாம் வசீகரிப்பதாகவும்**
**கேட்காதோரையும் தேடி வந்து விரும்பி**
**கேட்கத் தூண்டக்கூடியதாக அமைவதும்**
**கேடு தரும் பகைவரையும்**
**கேட்கத் தூண்டுவதே சொல்வன்மை !**

**644.** *திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்*
*பொருளும் அதனினூஉங் கில்*

**சொல்லுகிற சொல்லின் அர்த்தத்தை அறிந்து**
**சொல்லின் ஆற்றலை அறிந்து**
**சொல்லுகிற சமயத்தையும், பலனையும் அறிந்து**
**சொல்லுக ! அவ்வாறு சொல்வதைக் காட்டிலும்**
**சொல்லக்கூடிய அளவில் வேறு அறமோ பொருளோ இல்லை !**

**645.** *சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை*
*வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து*

**சொல்லுகின்ற சொல்லை விட இன்னொரு**
**சொல் வெல்லக்கூடிய சொல் இது என**
**சொல்வதற்கு இல்லை என அறிந்த பிறகு**
**சொல்லைத் தேர்ந்தெடுத்துச் சொல்ல வேண்டும் !**

646. *வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடல்*
*மாட்சியின் மாசற்றார் கோள்*

**கேட்பவர்கள் விரும்பி ஏற்று தன் கருத்தை**
**கேட்பார்கள் என்ற நிலையை உருவாக்குவதும்**
**மாற்றார் சொற்களின் பயனை ஆராய்ந்து ஏற்பதும்**
**மாசற்றவர்களின் கொள்கையாகும் !**

647. *சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சா னவனை*
*இகல்வெல்லல் யார்க்கும் அரிது*

**சொல்ல வேண்டியவைகளை சொல்வதில் வல்லவனாகவும்**
**சொற்போருக்கு சபையில் அஞ்சாதவனாகவும்**
**சொல்லும்படி சிறந்து இருப்பவனை யாராலும்**
**சொல்லி அடித்து எளிதில் வெல்ல முடியாது !**

648. *விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது*
*சொல்லுதல் வல்லார்ப் பெறின்*

**வகையான கருத்துகளை முறையாக**
**வரிசைப்படுத்திச் சொல்லி**
**இனிமையாக சுவையாக சொல்பவரை**
**இந்த உலகம் உடனே ஏற்றுக்கொண்டு**
**இலக்காய் நிறைவேற்ற காத்திருக்கும் !**

649. *பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற*
*சிலசொல்லல் தேற்றா தவர்*

**மன்றத்தில் குற்றமற்ற சில சொற்களைப்பேசி**
**மனதை ஈர்க்க முடியாதவர்தான்**
**பலர் முன்னிலையில் படபடவென**
**பல சொற்களைப் பேசிடவே ஆசைப்படுவர் !**

650. *இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்ற*
*துணர விரித்துரையா தார்*

**கற்ற வித்தையை பிறர் எளிதாக**
**கற்றுணர்ந்து கொள்ளும் வகையில்**
**கற்றுத் தர முடியாதவர் – கொத்தாகக்**
**கவிதை மலர்ந்திருந்தாலும் மணம்**
**கமழாத மலரைப் போன்றவர் !**

# 66. வினைத் தூய்மை

651. *துணைநலம் ஆக்கந் தரூஉம் வினைநலம்*
*வேண்டிய எல்லாந் தரும்*

**துணையாக இருப்பவர்கள் நல்லவர்களாக இருந்தால்**
**துவங்குகிற காரியமெல்லாம் வெற்றியும் செல்வமும் தரும் !**
**துவங்கிய காரியமெல்லாம் நல்லவைகளாக இருந்தால்**
**துய்ப்பதற்கு எல்லாம் தரும் !**

652. *என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு*
*நன்றி பயவா வினை*

**வினையை புரிபவனுக்கு புகழையும்**
**விளைவுகளை அனுபவிப்பவர்களுக்கு நன்மையையும்**
**கொஞ்சமும் தராத தூய்மையற்ற செயலை**
**கொஞ்சமும் எந்நிலையிலும் செய்தல் கூடாது !**

653. *ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்குஞ் செய்வினை*
*ஆஅது மென்னு மவர்*

**மேலும் மேலும் மேன் மேலும்**
**மேம்பாடு அடைய விரும்புபவர்**
**மேதினியில் செய்திடும் செயல்களில் – தம்**
**மேம்பட்ட புகழ் கெடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் !**

654. *இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்*
*நடுக்கற்ற காட்சி யவர்*

**நடுக்கமற்ற தெளிந்த நிலையான**
**நல்லறிவு பெற்றவர் வாழ்வில்**
**இடுக்கண் எனும் துன்பம் வரினும்**
**இழிவான செயல்களைச் செய்யார் !**

655. *எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்*
*மற்றன்ன செய்யாமை நன்று*

**என்ன இப்படித் தவறு செய்து விட்டோம்**
**என்றே எண்ணி எண்ணிக் கவலைப்படுகிற**
**எந்தக் காரியங்களையும் கண்டிப்பாக**
**என்றைக்கும் செய்யற்க ! செய்துவிட்டால்**
**எக்காலத்திலும் மீண்டும் செய்யாமை நன்று !**

*656.* *ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க*
*சான்றோர் பழிக்கும் வினை*

**ஈன்ற தாயின் பசியின் வேதனையைப் போக்க**
**இனிய நற்சான்றோர்**
**ஈது பழிக்கும் எனும் இழிவான செயலை**
**ஈடேற்றுதல் கூடாது !**

*657.* *பழிமலைந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர்*
*கழிநல் குரவே தலை*

**பழியை ஏற்று, இழிவான செயலைச் செய்து**
**பசுமையான வளமிகுந்த செல்வத்தை ஈட்டுவதை விட**
**அறிவுடைய நல்லோரை வருத்தி**
**அணைக்கும் வறுமையே மேலானது !**

*658.* *கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதாம்*
*முடிந்தாலும் பீழை தரும்*

**ஒழிக்க செய்யத்தகாத செயல்களை**
**ஒதுக்காமல் செய்து முடித்தாலும்**
**ஒழியாத துன்பமே ஏற்படும் !**

*659.* *அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்*
*பிற்பயக்கும் நற்பா லவை*

**அழ அழ பிறர் மனம் வருந்தி பறித்த செல்வம்**
**அழ அழப் போய்விடும் !**
**அளந்து அளந்து நல் வழியில்**
**அமிழ்தாக வந்த செல்வம் முதலில் இழந்தாலும்**
**அடுத்து அவை திரும்ப வந்து நன்மை பயக்கும் !**

*660.* *சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்*
*கலத்துணீர் பெய்திரீஇ யற்று*

**பழி வரும் தீய செயல்களால் பொருள் சேர்த்து – அதைப்**
**பல காலம் பாதுகாத்து வைப்பது என்பது**
**பச்சை மண்ணால் செய்யப்பட்ட மண் கலத்தில்**
**பச்சைத் தண்ணீரை ஊற்றிப் பாதுகாப்பது போல !**

# 67. வினைத்திட்பம்

661. *வினைத்திட்பம் என்ப தொருவன் மனத்திட்பம்*
*மற்றைய எல்லாம் பிற*

**செயல் உறுதி என்பது செயலை**
**செய்கிறவனுடைய மன உறுதி தான் !**
**மற்ற உறுதிகள் எல்லாம் அந்த**
**மன உறுதிக்கு ஈடாக மாட்டா !**

662. *ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்*
*ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்*

**ஊறு நேராமல் காத்துக் கொள்ளுதல்**
**ஊறு வந்த பின் மனம் தளராது இருத்தல்**
**விதிகள் இவை இரண்டும் தான்**
**வினைத்திட்பம் கொண்ட செயல் வீரனின் கொள்கைகள் !**

663. *கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை இடைக்கொட்கின்*
*எற்றா விழுமந் தரும்*

**செயலைச் செய்து முடிக்கும் வரையில் – அந்தச்**
**செயலைப் பற்றி வெளிப்படுத்தாமல் இருப்பதே திறமை !**
**செயல் திட்டம் பற்றி செய்தி இடையில்**
**சென்று விட்டால் நீங்கா துன்பம் தரும் !**

664. *சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்*
*சொல்லிய வண்ணம் செயல்*

**செயலைச் செய்வதாகத் திட்டமிடாமல்**
**செவி கேட்கத் திறமையாகச் சொல்லுதல் எல்லோருக்கும் எளிது !**
**செயலைச் சொல்லியபடி மட்டும்**
**செயலாற்றுவது கடினம் !**

665. *வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்*
*ஊறெய்தி உள்ளப் படும்*

**செய்து முடிக்கும் திறமையால் புகழ் பெற்றவரின்**
**செயலாற்றலை – வினைத்திட்பத்தை**
**செகத்தை ஆளும் வேந்தன் அறிந்து போற்றுவான் !**

*666. எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்*
*திண்ணியர் ஆகப் பெறின்*

**எண்ணிய செயலைச் செய்து**
**எண்ணியபடியே அதை வெற்றிகரமாக**
**எளிதில் முடிக்க முடியும் – அப்படி**
**எண்ணியவர் அதை உறுதிபட**
**எண்ணத்தில் வைத்தால் !**

*667. உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்*
*கச்சாணி யன்னார் உடைத்து*

**உருவம் கண்டு இகழ வேண்டாம்**
**உருளும் பெரிய தேரின் சக்கரம்**
**உருண்டு ஓடாமல் சுழல்வதற்குக் காரணமே**
**உருவத்தில் சிறிய அச்சாணியே !**

*668. கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது*
*தூக்கங் கடிந்து செயல்*

**கலங்காமல் ஏற்றுக் கொண்ட செயலைக்**
**கண்ணயர்வை நீக்கித் தளராமல் ஓய்வின்றி**
**கண நேரமும் காலம் தாழ்த்தாமல்**
**கச்சிதமாக முயன்று முடிக்க வேண்டும் !**

*669. துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி*
*இன்பம் பயக்கும் வினை*

**இறுதியில் இன்பம் தரும் செயலை**
**இனிதே தொடங்கிய பின் கடுந்துன்பம்**
**இடையிடையே பல வந்தாலும்**
**இன்னும் துணிவோடு செய்க !**

*670. எனைத்திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்பம்*
*வேண்டாரை வேண்டா துலகு*

**எடுத்த காரியத்தை முடித்து**
**எப்பாடுபட்டாவது வெற்றி பெற வேண்டும்**
**என அதில் செயலுறுதி இல்லாதவனை**
**எப்போதும் உலகம் விரும்பாது !**

## 68. வினை செயல்வகை

671. *சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு*
*தாழ்ச்சியுள் தங்குதல் தீது*

**துவங்கும் ஆராய்ச்சியும் ஆலோசனையும்**
**துப்பறிந்து சாதக பாதகங்களை அறிந்த பின்**
**துணிந்து எடுக்க வேண்டும் முடிவு !**
**துணிந்த பின் காலம் தாழ்த்துதல்**
**துயர் தரும் தீமையே !**

672. *தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க*
*தூங்காது செய்யும் வினை*

**நிதானமாகச் செய்ய வேண்டிய காரியங்களை**
**நின்று நிதானமாகச் செய்யலாம் !**
**நினைத்தவுடன் செய்து முடிக்க வேண்டிய காரியங்களை**
**நிறுத்தாமல் விரைவாக செய்து முடிக்க வேண்டும் !**

673. *ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்*
*செல்லும்வாய் நோக்கிச் செயல்*

**முடிகிற போதெல்லாம் நல்ல செயல்களை**
**முனைந்து விரைந்து உடனே செய்து**
**முடித்திட வேண்டும் ! ஆனால்**
**முடியாத போது வேறு வழிகளை ஆராய்ந்து**
**முயன்று காத்திருந்து நல்லன செய்ய வேண்டும் !**

674. *வினைபகை யென்றிரண்டின் எச்சம் நினையுங்கால்*
*தீயெச்சம் போலத் தெறும்*

**எடுத்த காரியத்தை முடிக்காமல்**
**எச்சமாய் விட்டு வைப்பதும்**
**எதிரிகளின் பகைமையைத் தீர்க்காமல்**
**எச்சமாய் மிச்சம் வைப்பதும்**
**எரிந்ததை அணைக்காமல் விட்ட சிறு நெருப்பு**
**எரிமலையாய் பெருகி தீமை செய்வதைப் போல !**

675. *பொருள்கருவி காலம் வினையிட னொ டைந்தும்*
*இருள்தீர எண்ணிச் செயல்*

**செயலை செய்வதற்கு வேண்டிய பொருள் ஆதாரம்**
**செயலை செய்வதற்கு ஏற்ற கருவி, செய்ய வேண்டிய நேரம் காலம்**
**செய்ய வேண்டிய வழி முறை, செய்வதற்கு உரிய இடம் – இவை**
**செவ்வனே ஐந்தும் செறிவாகத் தேவை !**

676. *முடிவும் இடையூறும் முற்றியாங் கெய்தும்*
*படுபயனும் பார்த்துச் செயல்*

**செயலைச் செயலாற்றவதற்கான வழிமுறை**
**செயலுக்கு இடையூறாய் வரும் தடைகள்**
**செய்து முடித்த பின்பு வரும் பயன் – இவை**
**செவ்வனே மூன்றையும் ஆராய்ந்து**
**செம்மையுடன் செயலாற்ற வேண்டும் !**

677. *செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை*
*உள்ளறிவான் உள்ளங் கொளல்*

**செயலைச் செய்யப் புகுந்தவன்**
**செய்ய வேண்டிய முதற் காரியம் – அந்தச்**
**செயல் குறித்து முழுமையாக உணர்ந்தவனின்**
**செயல் திறனையும், கருத்தையும், அனுபவத்தையும்**
**சென்றுணர்ந்து கொள்வதே !**

678. *வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்*
*யானையால் யானையாத் தற்று*

**செயல் வீரன் ஒரு செயலை**
**செய்து முடிக்கும் முன்பே தொடர்புடைய**
**செயலையும் செய்து கொள்வதால்**
**பழகிய யானையை நன்கு**
**பயன்படுத்தி புது யானையைப் பிடிப்பது போல !**

679. *நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே*
*ஒட்டாரை ஒட்டிக் கொளல்*

**பகைவரை வெல்வதற்குத் துணையாக**
**பல நண்பர்களுக்கு நன்மை செய்வதை விட**
**பகைவரையே நண்பராக்கிக் கொள்வதே**
**அதி விரைவாக செய்ய வேண்டிய ஒன்று !**

680. *உறைசிறியார் உண்ணடுங்கல் அஞ்சிக் குறைபெறிற்*
*கொள்வர் பெரியார்ப் பணிந்து*

**வலிமை குறைந்த படைத் தலைவர் –**
**வலிமையானவரைக் கண்டு தம்முடன்**
**வரும் துணைக்காவலர்களே அஞ்சுவதைக் கண்டு**
**வலிமையானவர்களை வணங்கி ஏற்று**
**வருகின்ற பலனை அடைவர் !**

## 69. தூது

681. *அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்*
*பண்புடைமை தூதுரைப்பான் பண்பு*

**அன்பு, மாட்சிமை தாங்கிய குடிப்பிறப்பு**
**அரசன் விரும்புகின்ற பண்பு**
**அவையே தூதுவனின் சிறப்பியல்புகளாம் !**

682. *அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்*
*கின்றி யமையாத மூன்று*

**தூது சொல்லப் போகிற செயலில் ஆர்வமும்,**
**தூதின் நோக்கத்தைத் தெளிவாக அறிந்திருப்பதும்,**
**தூதுவனாய் செல்லும்போது சொல்லும் சொற்களில்**
**தூண்டிலிடும் ஆராய்வும், சொல் வன்மையும்**
**தூது உரைப்பவனுக்குஉரிய மூன்றாகும் !**

683. *நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள்*
*வென்றி வினையுரைப்பான் பண்பு*

**மற்ற நாட்டாரிடம் தூது சென்று**
**மறவாமல் வெற்றிக் கனியைத் தனது**
**மன்னனுக்கு பெற்றிடச் செல்லும் தூதுவர் – பல**
**மடங்கு கற்றவர்களை விட கற்றவராக இருத்தல் வேண்டும் !**

684. *அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்*
*செறிவுடையான் செல்க வினைக்கு*

**காணும் இயற்கை அறிவும்**
**காண்பார் விரும்பும் தோற்றமும் – பல**
**காலம் பலராலும் ஆராயப்பட்ட கல்வியும்**
**கற்றுத் தேர்ந்தவன் செல்க தூதிற்கு !**

685. *தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி*
*நன்றி பயப்பதாந் தூது*

**முக்கியமான செய்திகளைத் தொகுத்துச் சொல்லி**
**முற்றாக பயனில்லாதவைகளை நீக்கி**
**முழுமுதற் கொண்டு கேட்பவர் மகிழ்வதாகச் சொல்லி**
**முடிவாகத் தன் நாட்டிற்கு நன்மை கிடைக்கச் செய்பவனே**
**முத்திரை பதிக்கும் தூதுவன் ஆவான் !**

686. *கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்*
*தக்க தறிவதாந் தூது*

**பல்கலை கல்வி பயின்ற கல்வியாளனாகவும்**
**பகைவரின் கனலான பார்வைக்கு அஞ்சாதவனாகவும்**
**பலர் மனதில் பதியுமாறு உரைப்பவனாகவும்**
**பற்றி உணர்ந்து கொள்ள வேண்டியதை உணர்பவனாகவும்**
**பறந்திடும் காலத்திற்குத் தக்கபடி செயல்படுபவனாகவும்**
**பன்முகத் திறன் பெற்றவனே 'தூதுவன்' !**

687. *கடனறிந்து காலங் கருதி இடனறிந்*
*தெண்ணி உரைப்பான் தலை*

**தூது செல்ல வேண்டிய நாட்டின் முறை அறிந்து**
**தூதிற்கு உரிய காலத்தையும், இடத்தையும் சேர்ந்து**
**தூது செல்வதற்கு முன்னரே எண்ணி**
**தூது மொழி சொல்பவனே சிறந்த தூதுவன் !**

688. *தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்*
*வாய்மை வழியுரைப்பான் பண்பு*

**தன்னில் எப்போதும் குற்றமற்ற தூய்மையான எண்ணம்**
**தனக்குத்தானே பாதுகாப்பான ஆலோசனை தந்து கொள்ளும் எண்ணம்**
**தன்னிடம் உள்ள "துணிவே துணை" என்ற கொள்கையும் தான்**
**தக்கதொரு தூதுவனின் உண்மைத் தகுதிகளாம் !**

689. *விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்*
*வாய்சோரா வன்க ணவன்*

**மற்றோர் நாட்டிற்குச் சென்று**
**மன்னவனின் கருத்தை எடுத்துரைக்கும் தூதன்**
**மறந்தும் கூட வாய்தவறி**
**மனதாலும் குற்றம் தோய்ந்த சொற்களைக் கூறிடாத**
**மன உறுதி படைத்தவனாக இருத்தல் வேண்டும் !**

690. *இறுதி பயப்பினும் எஞ்சா திறைவற்*
*குறுதி பயப்பதாம் தூது*

**இறுதிக் கட்டத்திற்கு வந்து**
**இறந்து விட நேர்ந்தாலும் அஞ்சாமல்**
**இறையாண்மையைக் காத்து**
**இறுதிவரை உறுதியுடன் கடமையாற்றி**
**வருபவனே நம்பிக்கையான தூதுவன் !**

# 70. மன்னரைச் சேர்ந்து ஒழுகல்

691. *அகலா தணுகாது தீக்காய்வார் போல்க*
*இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்*

**நெறி செய்யும் முடி மன்னருடன் பழகுவோர்**
**நெருப்பில் குளிர் காய்வது போல் அதிகமாக**
**நெருங்கி விடாமலும் அதிகமாக நீங்கி விடாமலும் இருப்பர் !**

692. *மன்னர் விழைப விழையாமை மன்னரான்*
*மன்னிய ஆக்கந் தரும்*

**மன்னர் விரும்புகின்றவை யாவையும்**
**மனது தமக்கும் விரும்பாமல் இருந்தால்**
**மன்னரே மன்னிய எனும் நிலையான செல்வம் தருவார் !**

693. *போற்றின் அரியவை போற்றல் கடுத்தபின்*
*தேற்றுதல் யார்க்கும் அரிது*

**ஆள்வோரைச் சார்ந்த அமைச்சர் பெருமக்கள்**
**ஆங்கண் தங்களைக் காத்துக் கொள்ள விரும்பினால்**
**ஆரம்பம் முதல் தவறுகள் நேராமல்**
**அமைதியுடன் திகழல் வேண்டும்**
**ஆள்பவனுக்கு சந்தேகம் ஏற்பட்டால்**
**ஆற்றுப்படுத்த முடியாது !**

694. *செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்*
*ஆன்ற பெரியா ரகத்து*

**அறிவும் ஆற்றலும் வாய்ந்த அரசன் பார்க்கும் படி**
**அருகருகே நிற்பவர்களிடம் செவிக்குள்**
**அத்துணை இரகசியமாக கிசுகிசுப்பதும்**
**அருவருக்கத்தக்க வகையாய் எள்ளி நகையாடுவதும்**
**அவித்தல் எனும் அழித்து ஒழுகுதல் நன்று !**

695. *எப்பொருளும் ஓரார் தொடரார்மற் றப்பொருளை*
*விட்டக்காற் கேட்க மறை*

**பிறரோடு அரசனுக்கு இரகசியங்கள்**
**பிறக்கும் நேரத்தில் அதை ஒட்டுக் கேட்காமலும்**
**பின் தொடர்ந்து அதைப் பற்றிக் கேட்டுத் தகவலைப்**
**பிடுங்குதல் இல்லாமல், சொன்னால் மட்டும் கேட்க வேண்டும் !**

696. *குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில*
*வேண்டுப வேட்பச் சொலல்*

**ஆட்சி செய்பவரைச் சார்ந்திருப்பவர்கள்**
**ஆட்சியாளனின் மனநிலை அறிந்து**
**ஆங்கே சொல்லும் காலத்தைத் தேர்ந்து**
**ஆட்சியாளன் வெறுக்கும் செய்தியைத் தவிர்த்து**
**ஆசை கொண்ட செய்தியை**
**ஆவலைத் தூண்டும்படி சொல்ல வேண்டும் !**

697. *வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்*
*கேட்பினும் சொல்லா விடல்*

**அரசை ஆள்பவன் விரும்பிக் கேட்டாலும்**
**அறிய பயனுள்ளவற்றை மட்டும் சொல்லி**
**அறவே பயனற்றவைகளைச் சொல்லாமல்**
**அங்ஙனம் தவிர்த்து விட வேண்டும் !**

698. *இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற*
*ஒளியோ டொழுகப் படும்*

**இளையவன் இவன் என்றும் – தனக்கு**
**இன்ன உறவினன் ஆட்சி செய்பவன்**
**இவன் தான் என்றும் இகழாமல் அவமதிக்காமல்**
**இவனே ஆட்சியாளன் என மதித்து நடக்க வேண்டும் !**

699. *கொளப்பட்டேம் என்றெண்ணிக் கொள்ளாத செய்யார்*
*துளக்கற்ற காட்சி யவர்*

**ஏற்றுக்கொள்ளப் பட்டோம் அரசனால் என்றெண்ணி**
**ஏற்க முடியா காரியங்களை**
**ஏகத்திற்கும் செய்ய மாட்டார்கள்**
**ஏற்புடைய தெளிந்த அறிவுடைய அமைச்சர்கள் !**

700. *பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும்*
*கெழுதகைமை கேடு தரும்*

**பழக்கம் நமக்கு அரசை ஆள்பவன் என்று**
**பண்பில்லாதபடி தகாத செயல்களைச் செய்திட**
**'கெழுதகை' எனும் உரிமை எடுத்துக் கொள்வது**
**கெடுதலாகவே முடியும் !**

## 71. குறிப்பறிதல்

701. *கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்*
*மாறாநீர் வையக் கணி*

**சொல்லாமலேயே அவன் முகத்தைப் பார்த்து என்ன**
**சொல்ல நினைக்கிறான் என்பதனைச்**
**சொல்லி விடுபவன் உலகத்திற்கே**
**சொக்க வைக்கும் அணியாவான் !**

702. *ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்*
*தெய்வத்தோ டொப்பக் கொளல்*

**மனிதனின் உள்ளத்தில் உள்ளதை**
**மதிநுட்பத்தோடு கொஞ்சமும் சந்தேகமில்லாமல் – இன்னொரு**
**மனிதன் உணர்ந்து கொண்டான் எனில் – அம்**
**மனிதன் தெய்வத்திற்கு ஒப்பாவான் !**

703. *குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்*
*யாது கொடுத்துங் கொளல்*

**உணர்த்தும் முகக் குறிப்பைக் கொண்டே**
**உள்ளக் குறிப்பை முழுவதுமாக**
**உணர்ந்து கொள்ளக் கூடிய ஆற்றல்**
**உடையவரை சபையில் எப்பொறுப்பிலாது**
**உபயோகப்படுத்தி துணையாக்கிக் கொள்ள வேண்டும் !**

704. *குறித்தது கூறாமைக் கொள்வாரோ டேனை*
*உறுப்போ ரனையரால் வேறு*

**மனதில் கொண்ட கருத்து**
**மறைந்திருந்தாலும் குறிப்பால் உணர**
**மறுப்பவரும் – குறிப்பால் உணரும்**
**மற்றவரும் உருவத்தால் ஒன்று பட்டவராயினும்**
**மதியால் வேறுபட்டவர்களே !**

705. *குறிப்பிற் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்*
*என்ன பயத்தவோ கண்*

**முகக் குறிப்பைப் பார்த்தே**
**முழு உள்ளக் குறிப்பை உணர**
**முடியாவிட்டால் சிறந்த உறுப்பான**
**முகத்தில் உள்ள கண்கள் இருந்துதான் என்ன பயன் ?**

706. *அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்*
*கடுத்தது காட்டும் முகம்*

**பக்கத்தில் உள்ள பொருள்களின் பிம்பத்தை**
**பளிங்குக் கல் கண்ணாடி**
**பளிச்சென்று காட்டுவதைப் போல் – மனதில்**
**பதுங்கி இருக்கும் மிகுதியான உணர்ச்சியினை**
**பட்டென முகம் காட்டி விடும் !**

707. *முகத்தின் முதுக்குறைந்த துண்டோ உவப்பினும்*
*காயினும் தான்முந் துறும்*

**முழு மனதையும் அறியக் கூடிய அங்கம்**
**முகத்தைத் தவிர வேறு உண்டா ?**
**முகமே மனதில் உள்ள விருப்பையும்**
**முன்னிடும் வெறுப்பையும் வெளிப்படுத்த**
**முந்திக் கொண்டு வரும் அறிவாளி !**

708. *முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி*
*உற்ற துணர்வார்ப் பெறின்*

**உள்ளத்தை ஊகித்தறியும் தனித்திறமை**
**உள்ளவர்கள் உள்ளத்தில் உள்ளதை அறிய**
**உற்றுப்பார்த்து முகம் நோக்கினாலே**
**உள்ளபடி போதும் !**

709. *பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்*
*வகைமை உணர்வார்ப் பெறின்*

**கண்ணின் மொழி அறிந்தவர்**
**கண் பார்வையின் பொருள் புரிந்தோர்**
**கச்சிதமான துணையாக இருந்தால்**
**கண்களை கொண்டே பகையா ? நட்பா ? என**
**கண்டு கொள்ளலாம் !**

710. *நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்காற்*
*கண்ணல்ல தில்லை பிற*

**நுட்பமான அறிவை மிகுதியாகப் பெற்ற**
**நுண்ணறிவாளருக்குப் பிறரின் மனதிலுள்ளதை**
**நுணுக்கமாக, அளந்தறியும் கோலாக –**
**நுந்துதலாக இருப்பது அவரின் கண்களே !**

## 72. அவை அறிதல்

711. *அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்*
*தொகையறிந்த தூய்மை யவர்*

**சொற்களின் வகை தொகைகளை புரிந்து**
**சொற்பொழிவு ஆற்றத் தெரிந்த**
**தூயவர் – அவையில் அமர்ந்திருப்போரின் மனதை**
**தூண்டிவிட்டு ஆராய்ந்து தன்மையறிந்து பேச வேண்டும் !**

712. *இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்*
*நடைதெரிந்த நன்மை யவர்*

**சொற்களை நல்ல உரையாடலில்**
**சொல்லத் தெரிந்த நல்லவர்கள்**
**இடையிடையே சபையில் வீற்றிருப்பவர்கள்**
**இன்னமும் பேச்சை சுவைக்கிறார்களா ? என**
**இன்றியமையாமல் கவனித்துப் பேச வேண்டும் !**

713. *அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்*
*வகையறியார் வல்லதூஉம் இல்*

**அவையின் தன்மை அறியாமல்**
**அடுக்கடுக்காக வளவள வென்று**
**அளப்பவர்களுக்குச்**
**சொல்லிய சொல்லின் வகையும் தெரியாது**
**சொற்பொழிவின் வல்லமையும் புரியாது !**

714. *ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்*
*வான்சுதை வண்ணங் கொளல்*

**அறிவு ஒளி மிக்கவர் வட்டத்தில் எப்போதும்**
**அறிவாளியாகப் பேச வேண்டும் !**
**அறிவிலிகள் கூட்டத்தில் எப்போதும்**
**அங்ஙனம் வெண் சுண்ணாம்பாய் அருமையற்று**
**அறிவிலியாய்க் காட்டிக் கொள்ள வேண்டும் !**

715. *நன்றென் றவற்றுள்ளும் நன்றே முதுவருள்*
*முந்து கிளவாச் செறிவு*

**முதிர்ந்த அறிவாளர்கள் – அனுபவசாலிகள்**
**முழுவதும் இருக்கும் அறிவான சபையில்**
**முந்திரிக்கொட்டை போல் எதற்கெடுத்தாலும்**
**முந்திக் கொண்டு பேசாமல் அடங்கும்**
**முதிர்ச்சியான குணம் தான் மேலான குணம் !**

716. *ஆற்றின் நிலைதளர்ந் தற்றே வியன்புலம்*
*ஏற்றுணர்வார் முன்னர் இழுக்கு*

**பரந்து விரிந்த அறிவுபெற்றோர் சபையில் –**
**பலர் முன்பு பல்கலை வித்தகர்களிடம் உரையாற்றும்போது**
**படபடத்து உரையில் குற்றம் ஏற்படுமானால்**
**பற்றிய ஒழுக்க நெறியிலிருந்து தவறுவது போல இழுக்காகும் !**

717. *கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்*
*சொற்றெரிதல் வல்லார் அகத்து*

**கசடு இல்லாமல் சொற்களின் பொருளை**
**களங்கமில்லாமல் அறிந்து இருக்கும்**
**கற்றவர்கள் சபையில் ஒருவர் உரையாடும் போது அவர்**
**கற்ற கல்வியின் மேம்பாடு விளங்கும் !**

718. *உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்*
*பாத்தியுள் நீர்சொரிந் தற்று*

**தாமே அறிந்து கொள்ளும் வல்லமை**
**தாங்கியவர் முன் கற்றவர் பேசுவது**
**தானே வளரும் பயிர்கள் பலவற்றைத்**
**தாங்கி இருக்கும் பாத்தியில் நீர் ஊற்றுவது போல !**

719. *புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்*
*நன்கு செலச்சொல்லு வார்*

**மன்றம் நிறைந்த நல்லோர் சபையில்**
**மனதில் பதியும்படி பேசும் வல்லமை பெற்றோர்**
**மதியற்றவர் பொல்லாதோர் சபையில்**
**மறந்தும் கூட பேசாமல் இருப்பதே நல்லது !**

720. *அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தார்*
*அல்லார்முன் கோட்டி கொளல்*

**அறிவார்ந்த கருத்துகளை தம்மைப்போல்**
**அனுபவிக்கக் கூடியவர்கள் இல்லாத**
**அறிவற்றவர் சபையில் பேசுவது**
**"அங்கணம்" என்னும் "சேற்றில்"**
**அமிர்தத்தைக் கொட்டுவதைப் போல !**

## 73. அவை அஞ்சாமை

**721.** *வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்*
*தொகையறிந்த தூய்மை யவர்*

**வல்லவர்கள் கூடியிருக்கும் அவையில் – அவர்கள்**
**வகை அறிந்து – தகுதி அறிந்து கொள்ளும்**
**சொல்லின் தொகை அறிந்த தூயவர்கள்**
**சொல் தவறிக் கூட பிழை நேருமாறு பேச மாட்டார்கள் !**

**722.** *கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்*
*கற்ற செலச்சொல்லு வார்*

**கற்றவருள் கற்றார் எனப்படுவர்**
**கடுமையாக கற்றவரின் முன் – தான்**
**கற்றவற்றை மனதில் பதியுமாறு சொல்ல வல்லார் !**

**723.** *பகையகத்துச் சாவார் எளியர் அரியர்*
*அவையகத் தஞ்சா தவர்*

**போர்க்களத்திற்கு துணிவோடு சென்று**
**போரிட்டுச் சாக அஞ்சாதவர் பலர் – ஆனால்,**
**அனைத்தும் கற்ற அறிவாளர் சபையில்**
**அஞ்சாமல் பேசத்துணிவு கொள்பவர் சிலரே !**

**724.** *கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற*
*மிக்காருள் மிக்க கொளல்*

**கற்றறிந்த சபையில் கற்றார் முன் தாம்**
**கற்றதைச் சபையோர் ஏற்கும்படி பேசுக !**
**கற்றோர் தம்மை விட மிக அதிகமாக கற்றிருந்தால்**
**கற்ற மிகுதியை தாம் விருப்பமுடன் கற்க !**

**725.** *ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா*
*மாற்றங் கொடுத்தற் பொருட்டு*

**அவையில் உள்ளவர் குறுக்கிட்டு**
**அடிக்கடி கேள்விகளை எழுப்பினால்**
**அஞ்சாமல் பதில் கொடுக்கும் பொருட்டு**
**அறிந்து கொள்ள அறிவு நூல்களை**
**அளவில்லாமல் படிக்க வேண்டும் !**

726. *வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு நூலொடென்*
*நுண்ணவை அஞ்சு பவர்க்கு*

**நூறுதலுக்கு கையிலே வாள் இருந்தாலும்**
**நூலிழைக்கும் அஞ்சும் கோழைகளின் கைவாளால் பயனில்லை !**
**நூல்கள் பல கற்றாலும் – அவ்வண்ணம்**
**நுண்ணறிவுள்ளவர்கள் கூடிய சபையில்**
**நுட்பமாய்ப் பேச அஞ்சுபவர்களாலும் பயனில்லை !**

727. *பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்*
*தஞ்சு மவன்கற்ற நூல்*

**மேடையிலே பேசுவதற்கு அஞ்சுபவன்**
**மேதையாகப் பல நூல் கற்றிருந்தாலும்**
**மேதமையைத் தந்த அந்த நூல்கள்**
**பேடியின் கையில் உள்ள கூர் வாள் போல**
**பேரிகையிடும் போர்க்களத்தில் பயனற்றவையே !**

728. *பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்*
*நன்கு செலச்சொல்லா தார்*

**பல நல்ல அறிஞர்கள் கூடியுள்ள இடத்தில்**
**பலரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் மனதில்**
**பதியக் கூடிய அளவிற்குச் சொல்ல இயலாவிடின்**
**பல நூல்களைத் திறம்படக் கற்றிருந்தாலும்**
**பயனே இல்லை !**

729. *கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்தும்*
*நல்லா ரவையஞ்சு வார்*

**கல்வியறிவு நன்கு பெற்றிருந்தும்**
**கற்றவர்கள் சபையில் நன்கு பேசத் தெரியாதவர்கள்**
**கற்பதற்கான பல நூல்களைத் திறம்படக்**
**கற்றிருந்தாலும் அவர்கள் கல்லாதவர்களை விடக் கீழானவர்கள் !**

730. *உளரெனினும் இல்லாரொ டொப்பர் களனஞ்சிக்*
*கற்ற செலச்சொல்லா தார்*

**கற்ற கல்வியினால் பெற்ற அறிவை**
**களத்திலே அனைவரும் ஏற்றுக்கொள்ள**
**கவரும்படி சொல்ல அஞ்சுபவர்**
**உயிரோடு உள்ளவர் என்றாலும்**
**உயிரில்லாதவர்க்கு ஒப்பாவர் !**

## 74. நாடு

**731.** *தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்*
*செல்வருஞ் சேர்வது நாடு*

**குறையாத விளைச்சலைத் தரும்**
**குன்றாத விளை நிலங்களும் – அதில்**
**குறையே இல்லாமல் கடுமையாக உழைக்கும்**
**குடிமக்களும் – தாழ்வும் கேடும் இல்லாத**
**குற்றமற்ற செல்வர்களும் உடையதே நல்ல நாடு !**

**732.** *பெரும்பொருளாற் பெட்டக்க தாகி அருங்கேட்டால்*
*ஆற்ற விளைவது நாடு*

**பெரும் பொருளாதாரத்தோடு விளங்கும்**
**பெட்டகத்தை உடைய, எந்நாட்டவரும்**
**பெரும்பாலும் விரும்புகின்ற வளமுடைய,**
**பெரும் கேடு வந்தாலும் அதனைத் தாங்கி**
**பெருவாரி விளைச்சலைத் தருவதே நல்ல நாடு !**

**733.** *பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்*
*கிறையொருங்கு நேர்வது நாடு*

**பொறுக்க முடியாத பாரங்கள் வந்தாலும்**
**பொறுத்துக் கொண்டு தாங்கி குடிமக்கள் தங்கள்**
**பொறுப்புகளை உணர்ந்து ஆட்சிக்கு வந்தவனை**
**பொறுப்பாய் அறிந்து வருங்காலத்தை வழங்குவதே நாடு !**

**734.** *உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்*
*சேரா தியல்வது நாடு*

**அளவுக்கு மிகுந்த பசியும்**
**அழியாத கொடு நோயும்**
**அழிக்கும் தீராப்பகையும்**
**அறவே இல்லாமல் இருப்பதே நாடு !**

**735.** *பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்*
*கொல்குறும்பும் இல்லது நாடு*

**பல குழுக்களாகப் பிரிந்து கிடக்கும்**
**பற்று இல்லாதக் கூட்டணியும் !**
**பாழ் செய்யும் உட்கட்சிப் பகையும்**
**பார் வேந்தனுக்குக் கெடு மதியாளர்களின்**
**பாடுபடுத்துதல்களும் இல்லாதிருப்பதே நாடு !**

736. *கேடறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா*
*நாடென்ப நாட்டின் தலை*

**பகைவரால் கேடு அறியாததாயும்**
**பஞ்சம், இயற்கை சீற்றத்தால் கெட்டாலும்**
**பாதிக்காமல் "வளமை" குன்றாத நாடே**
**பாரினில் மிகச் சிறந்த நாடு !**

737. *இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்*
*வல்லரணும் நாட்டிற் குறுப்பு*

**வற்றாத ஆறு, கடல் என்ற இரு புனலும்**
**வளர்ந்தோங்கி நீண்டு அமைந்த மலையும்**
**வருகின்ற புனலாம் வான் மழையும்**
**வலிமை மிக்க பாதுகாப்பு அரணும்**
**வரவாகும் நாட்டின் உறுப்புகள் !**

738. *பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்*
*அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து*

**தீரா நோய் இல்லாதிருத்தல்**
**தீராத செல்வம், பெரு விளைச்சல்**
**தீண்டும் நெடிய இன்பம்**
**தீரமான காவல் இவை ஐந்தும் – நாட்டிற்கு**
**தீர்க்கமான அழகிய அணிகலன்களே !**

739. *நாடென்ப நாடா வளத்தன நாடல்ல*
*நாட வளந்தரு நாடு*

**நாடென்பது தானாகவே வளங்கள்**
**நாடி வந்து அமையப் பெற்றது தாம் !**
**நாடல்ல; தன் வளத்திற்காக மற்ற**
**நாடுகளை எதிர்நோக்கும் நாடு !**

740. *ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே*
*வேந்தமை வில்லாத நாடு*

**வேந்தனொடு பொருத்தம் அமையாத**
**வேதனையான ஆட்சி அமைந்த நாட்டில்**
**வேண்டுகின்ற வளங்கள் பல இருந்தாலும்**
**வேண்டிய பலனே இல்லை !**

## 75. அரண்

741. *ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தற்*
*போற்று பவர்க்கும் பொருள்*
**பகைவர் மீது போர்த்தொடுப்பதற்குப்**
**பலமிக்க கோட்டை பயன்படும் !**
**பகைவரிடமிருந்து அஞ்சித் தம்மைப்**
**பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்வதற்கும்**
**பலமிக்க கோட்டை பயன்படும் !**

742. *மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்*
*காடும் உடைய தரண்*
**அகன்ற ஆழமான நீருள்ள அகழி**
**அகலப் பரந்த நிலம்**
**அருகே வானுயர்ந்த மலைத்தொடர்**
**அடர்ந்திருக்கும் காடு**
**அத்துணையும் சூழ்ந்து உள்ளதே**
**“அரண்” எனும் கோட்டை !**

743. *உயர்வகலந் திண்மை அருமையிந் நான்கின்*
*அமைவரண் என்றுரைக்கும் நூல்*
**எதிரிகள் எளிதில் ஏற முடியாத உயரம்**
**எழுச்சி பெற்ற வீரர்கள் புழங்கும் அகலம்**
**எறி குண்டுகள் துளைக்க முடியா திண்மை**
**எந்திர தந்திர இரகசியங்களின் அருமை**
**என நான்கும் அமைந்ததே அரண்**
**எனும் கோட்டை என நூல்கள் உரைக்கும் !**

744. *சிறுகாப்பிற் பேரிடத்த தாகி உறுபகை*
*ஊக்கம் அழிப்ப தரண்*
**காவல் காக்க வேண்டிய நுழைவாயில் – எதிரிகள்**
**கால் படும் முதல் இடம் ஆகையால்**
**காவலுக்கு ஏற்றபடி மிகக் குறுகியதாய்**
**நுழைவாயிலுக்கு உள்ளே நுழைந்தவுடன் எதிரிகள்**
**நுணங்குதலுக்கு ஏற்றாற் போல் பகைவரை**
**நுறுங்குதலுக்காகப் பரந்த இடமாக அமைவதே கோட்டை !**

745. *கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி அகத்தார்*
*நிலைக்கெளிதாம் நீர தரண்*
**பகைவரால் கைப்பற்ற முடியாததாக**
**பல விதமான உணவுப் பொருட்கள்**
**படையினருக்காகப் பதுங்கி வைப்பதாக**
**பல நாட்கள் தேவைப்படும் அளவு**
**பல விதமான வசதிகள் உள்ளதாகப்**
**பராமரிக்கப்படுவதே கோட்டை !**

746. *எல்லாப் பொருளும் உடைத்தா யிடத்துதவும்*
*நல்லா ளுடைய தரண்*

**போருக்குத் தேவையான எல்லாப் பொருளும்**
**போர்க்களத்தில் பகைவரை வெல்லும்**
**போர் வீரர்களைக் கொண்டதே கோட்டை !**

747. *முற்றியும் முற்றா தெறிந்தும் அறைப்படுத்தும்*
*பற்றற் கரிய தரண்*

**முற்றுகையிட்டுப் போர் செய்தோ – அல்லது**
**முற்றுகையிடாமல் போர் செய்தோ – அன்றியும்**
**நயவஞ்சகமாக சூழ்ச்சி செய்தோ – வெல்லலாம் என**
**நம்பி நெருங்கும் பகைவரால் கைப்பற்ற முடியாத**
**நல்ல தகுதியைக் கொண்டு விளங்குவதே கோட்டை**

748. *முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்*
*பற்றியார் வெல்வ தரண்*

**முற்றிலும் வலுவாகச் சூழ்ந்து வளைத்து**
**முற்றுகையிட்டவரைக் கோட்டைக்குள் உள்ளே நுழைந்து**
**முயன்றாலும் கண்டுபிடிக்க முடியாத அமைப்பினால்**
**"பற்றார்" எனப்படும் பகைவரை உள்ளேயே கைப் –**
**பற்றி வெல்வதற்கு ஏற்றதே அரண் !**

749. *முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து*
*வீறெய்தி மாண்ட தரண்*

**போர் முனையில் போர்த் தொடங்கியவுடன்**
**போர்க்கதவு கொண்ட கோட்டைக்குள்ளிருந்து**
**போராடித் கடும் தாக்குதல் நடத்தத் தன்னுடைய**
**போர் வீரர்களுக்கு வாய்ப்பளிப்பதே அரண் !**

750. *எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி*
*இல்லார்கண் இல்ல தரண்*

**கோட்டைக்கு எவ்வளவு சிறப்பு இருந்தாலும்**
**கோட்டைக்குள் இருக்கும் வீரர்கள்**
**கோட்டை விடுபவர்களாக – செயலற்றவர்களாக இருந்தால்**
**கோட்டை இருந்தும் பயன் இல்லை !**

## 76. பொருள் செயல்வகை

751. *பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்*
*பொருளல்ல தில்லை பொருள்*

**பொருட்டாக மதிக்கத் தகாதவர்களையும் கூட – ஒரு**
**பொருட்டாக மதிக்கக் கூடிய அளவிற்குப்**
**பொறுப்பானது அவர்களிடம் குவிந்துள்ள**
**பொருளைத் தவிர வேறொன்றும் இல்லை !**

752. *இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை*
*எல்லாரும் செய்வர் சிறப்பு*

**பொருள் இல்லாதவரை எல்லாரும்**
**பொல்லாங்கு பேசி இகழ்வர் !**
**பொருள் அதிகம் உள்ள செல்வரை**
**பொலிவோடு புகழ்ந்து சிறப்பு செய்வர் !**

753. *பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்*
*எண்ணிய தேயத்துச் சென்று*

**பொருள் என்ற அணையா விளக்கான**
**பொய்யா விளக்கு மட்டும் இருந்துவிட்டால்**
**போகின்ற தேசத்தில் எல்லாம் அறியாமை இருள்**
**போகச் செய்து துணை நிற்கும் !**

754. *அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து*
*தீதின்றி வந்த பொருள்*

**திறன் அறிந்து திறமைக்குத் தக்கபடி**
**திரண்ட தீதில்லாத செல்வமே**
**திரளும் அறத்தையும் இன்பத்தையும் தரும் !**

755. *அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்*
*புல்லார் புரள விடல்*

**புரளுகிற அளவு ஈட்டுகிற பொருளாகவே இருந்தாலும்**
**புலப்படுகிற அருள்நெறி, அன்பு நெறி வழியில்**
**புகாத மாற்று வழியில் வர விடக்கூடாது !**

756. *உறுபொருளும் உல்கு பொருளுந்தன் ஒன்னார்த்*
*தெறுபொருளும் வேந்தன் பொருள்*

**உறு பொருள் எனும் அரசு பொக்கிஷத்திற்கு**
**உரிய பொருளும் திரண்ட புதையலும்**
**"உல்கு பொருள்" எனும் சுங்க வரியும்**
**உவக்கும் பகைவரின் கப்பமும் அரசின் சொத்தாகும் !**

757. *அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்*
*செல்வச் செவிலியால் உண்டு*

**அன்புத்தாய் பாசத்துடன் பெற்றெடுத்த**
**அருட்குழந்தை என்றென்றும்**
**அரும் பொருள் எனும் வளர்ப்புத்தாயால்**
**அழகாய் வளரும் !**

758. *குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்*
*றுண்டாகச் செய்வான் வினை*

**தன் கையில் வைத்திருக்கும் பொருளைத்**
**தன்னகத்தே கொண்டு செயல்படுவது**
**மலையின் மீது ஏறி நின்று கீழே**
**மல்லுக்கட்டிப் போர் புரியும் யானைகளின்**
**மகத்தான சண்டையைப் பார்ப்பது போன்று பாதுகாப்பானது !**

759. *செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்*
*எஃதனிற் கூரிய தில்*

**செல்வம் சேர்க்க வேண்டும்**
**செறுநர் எனும் பகைவரின்**
**செருக்கை அழிக்க ! ஏனெனில் அதற்கு–**
**செல்வத்தை விடக் கூரிய வாள் எதுவுமில்லை !**

760. *ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்*
*ஏனை இரண்டும் ஒருங்கு*

**அறம், பொருள், இன்பம் என்ற**
**அக வாழ்வின் இலட்சியங்கள் மூன்று !**
**அதில் ஒன்றான "பொருளை" மட்டும்**
**அதிகமாக ஈட்டியவர்களுக்கு ஏனைய**
**அடுத்த இரண்டும் தானாகக் கைகூடும் !**

## 77. படை மாட்சி

**761.** *உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்*
*வெறுக்கையுள் எல்லாம் தலை*
**போர் புரிய பல்வேறு படைகளின் வகைகள்**
**போதுமென்ற அளவு கொண்டதாகவும்**
**போரினில் எதிர்வரும் துன்பங்களுக்கு அஞ்சாமல்**
**போர் வெற்றிதனைத் தரும் வெற்றிப் படையே**
**போற்றும் வேந்தனின் தலையாய செல்வம் !**

**762.** *உலைவிடத் தூறஞ்சா வன்கண் தொலைவிடத்துத்*
*தொல்படைக் கல்லால் அரிது*
**தொல்லை தரும் துன்பம் நிறைந்த**
**தொலைவிடத்தில் அஞ்சாமல்**
**தொடர்ந்து போராடும் நெஞ்சுறுதி**
**தொல்லியல் தன்மை கொண்ட பழமையான**
**"தொல்படை" எனும் முப்படைக்கே உண்டு !**

**763.** *ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை*
*நாகம் உயிர்ப்பக் கெடும்*
**சீறும் பாம்பின் மூச்சுக்காற்றின்**
**சீற்றத்தின் முன்பு சின்னஞ்சிறு**
**எலிகள் ஒன்று கூடிக் கடல் போல்**
**எல்லையற்று ஒலித்தாலும் பயனற்று**
**எகிறிக்குதித்து ஓட வேண்டும் !**

**764.** *அழிவின் றறைபோகா தாகி வழிவந்த*
*வன்க ணதுவே படை*
**படைகள் மோதும் போரில் அழிக்க முடியாததாகவும்**
**பகைவரின் சூழ்ச்சிக்கு ஆளாகாததாகவும்**
**பரம்பரை பரம்பரையாக இன்றியமையாததாகவும்**
**பல காலம் தொடர்ந்து பெருமையோடு விளங்குவதே "படை" !**

**765.** *கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்*
*ஆற்ற லதுவே படை*
**"கூற்றுவன்" எனும் எம தர்ம ராசனே**
**கூப்பிடு தூரத்தில் எதிரில் நின்று**
**கூப்பிட்டாலும் சிதறிப் போகாமல்**
**கூடிநின்று சேர்ந்து போராடுவதே**
**கூடிய அளவு சிறப்பான படை !**

766. *மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்*
*எனநான்கே ஏமம் படைக்கு*
**அச்சமில்லாத அளவற்ற வீரம்**
**அகத்திலே மேலிடும் உணர்வான மானம்**
**அருமையான வழி காட்டும் வழி நடை**
**அரசை ஆள்பவரின் நம்பிக்கை**
**அவை நான்கும் பாதுகாப்பான**
**அம்சம் ஒரு சிறந்த படைக்கு !**

767. *தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த*
*போர்தாங்கும் தன்மை அறிந்து*
**தார் எனும் வெற்றி மாலையை**
**தாங்கிச் செல்லும் வீரம் மிகுந்த**
**தானைப் படை எதுவெனில்**
**தாக்கும் களத்தில் வியூகத்தை வகுத்து**
**தாக்கத்தை தகர்க்கும் ஆற்றல் பெற்றவரே !**

768. *அடல்தகையும் ஆற்றலும் இல்லெனினும் தானை*
*படைத்தகையால் பாடு பெறும்*
**அழிக்கும் வீரமும், ஆற்றலினால்**
**அமைந்த எதிர்த்து நிற்கும் வல்லமையும்**
**அவை இரண்டும் இல்லையென்றாலும்**
**அணிவகுப்பு தோற்றத்தினால் படை**
**அருமையும் பெருமையும் பெறும் !**

769. *சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்*
*இல்லாயின் வெல்லும் படை*
**நாளடைவில் சிறுத்து விடாமலும்**
**நாடாளும் மன்னவனை வெறுத்து விடாமலும்**
**நாளும் தேவையான உணவு, உடை, ஆயுதம்**
**நாடிட வறுமை இல்லாமலும்**
**நாடிச் செயல்படுத்தும் படையே வெல்லும் படை !**

770. *நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை*
*தலைமக்கள் இல்வழி இல்*
**தளராமல் உறுதி வாய்ந்த வீரர்கள்**
**தயவில்லாமல் அதிகம் பேர் இருந்தாலும்**
**தலைமை தாங்கிச் சரியாக வழி நடத்த**
**தளபதிகள் இல்லையென்றால்**
**தரணியில் எப்படையும் வெல்லாது !**

## 78. படைச் செருக்கு

771. *என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை*
*முன்னின்று கல்நின் றவர்*

**போர்க்களத்தில் போர் வீரனின் எச்சரிக்கை –**
**போரிடும் பகைவர்களே! என் அரசனைப்**
**போரில் எதிர்த்து நிற்காதீர்கள்!**
**போராடி மாண்டு நடு கல்லாய் – தெய்வமாய்ப்**
**போனவர்கள் பலப் பலர் !**

772. *கான முயலெய்த அம்பினில் யானை*
*பிழைத்தவேல் ஏந்தல் இனிது*

**கானகத்து முயல் மீது குறிதனைக்**
**காணும் போது சரியாக எய்த அம்பினை**
**வைத்திருப்பதை விட யானை மேல்**
**வைத்த குறி தவறிப் போன வேலினை**
**வைத்துக் கொண்டிருப்பதே இனிது !**

773. *பேராண்மை என்ப தறுகணொன் றுற்றக்கால்*
*ஊராண்மை மற்றதன் எஃகு*

**பேடியாய்ப் பகைவர்க்கு அஞ்சாத வீரத்தை**
**பேராண்மை எனப் பெருமை கொள்வார்கள் ! – உயிர்**
**ஊசலாடும் பகைவனுக்குக் கூட துன்பம் நேர்ந்தால்**
**ஊரை ஆளுந்தன்மையுடையவன் அவனுக்கு**
**ஊக்கத்தோடு உதவுவதே ஆண்மையின் கூர்மை !**

774. *கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்*
*மெய்வேல் பறியா நகும்*

**கையிலிருந்த வேலை – ஓர் யானையின் மேல்**
**கையெறிந்து வீசிக்கொன்றுவிட்டு**
**கைக்கெட்டும் தூரத்தில் ஓடி வருகிற யானையைத் தாக்க**
**கையெறி வேலைத் தேடித் தன் மார்பில் குத்திய எதிரியின் வேல்**
**கை கொடுக்கும் எனக் கண்டு மகிழ்பவன் வீரன் !**

775. *விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்*
*ஓட்டன்றோ வன்க ணவர்க்கு*

**போர்க்களத்தில் பகைவரைக் கோபங்கொண்டு**
**போதாமையுடன் பார்க்கும் விழிகள் – காற்று**
**போகும் வேகத்தில் வேல் வீசப்பட்டாலும்**
**போகிறப் போக்கில் விழிகள் இமைத்துவிட்டால்**
**போரில் புறமுதுகுக் காட்டி ஓடுவதற்க ஒப்பாகும் !**

776. *விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்*
*வைக்குந்தன் நாளை எடுத்து*

**வீரன், விழுப்புண் உடம்பினில் பட்டு**
**வீறு கொள்ளாத நாளெல்லாம் வாழ்வில்**
**வீணான நாட்கள் என வெறுப்பான் !**

777. *சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்*
*கழல்யாப்புக் காரிகை நீர்த்து*

**நிலைத்து வாழும் புகழை விரும்பி**
**நிலையில்லா உயிரை அதற்காக போரினில்**
**நித்தம் இழக்க விரும்பும் வீரனின்**
**நிற்கும் காலில் கட்டப்படும் கழல் அழகாகும் !**

778. *உறினுயிர் அஞ்சா மறவர் இறைவன்*
*செறினுஞ்சீர் குன்றல் இலர்*

**அவசியமான நேரத்தில் உயிர் தரவும்**
**அஞ்சாத போர்க்களத்து வீர மறவர்கள்**
**அரசன் அடக்கினாலும் கோபப்பட்டாலும்**
**அப்படியே குன்றிப்போக மாட்டார்கள் !**

779. *இழைத்த திகவாமைச் சாவாரை யாரே*
*பிழைத்த தொறுக்கிற் பவர்*

**போர்க்களத்தில் சாவதற்குத் தயார் எனப்**
**போர்ப்படையில் சேரும்போது சபதம் எடுத்த**
**போர் வீரனை யாராவது தவறிப்**
**போய் கூட பிழைக்க வந்தவர் எனப் பிழையாகக் கூற மாட்டார் !**

780. *புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்கா*
*டிரந்துகோட் டக்க துடைத்து*

**தன்னை எப்போதும் காத்த**
**தலைவனுடைய கண்களிலிருந்து**
**தாரை தாரையாகக் கண்ணீர் வரும்படி**
**தான் சாக நேர்ந்தால் – அச்சாவினை**
**தான் யாசித்தாவது பெறுவது சிறப்பானது !**

# 79. நட்பு

781. *செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்*
*வினைக்கரிய யாவுள காப்பு*

**காலமெல்லாம் நட்பு கொள்வது போல்**
**காணக் கிடைக்காத செயல் இல்லை – நல்ல**
**காரியம் செய்வதற்கும் துணையாக பாது –**
**காப்பானது நட்பைப் போல் வேறில்லை !**

782. *நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்*
*பின்னீர பேதையார் நட்பு*

**நிறைந்த அறிவுள்ளவர்களுடன்**
**நிலை நாட்டும் நட்பு வளர்பிறை**
**நிலவாகத் தொடங்கி முழுமையான**
**நிலவாக வளரும் ! அறிவிலிகளுடன்**
**நிலையாகும் நட்போ தேய்பிறையாக**
**நித்தம் தேயும் !**

783. *நவில்தொறும் நூனயம் போலும் பயில்தொறும்*
*பண்புடை யாளர் தொடர்பு*

**படிக்கப் படிக்க இன்பம் தருவது**
**படிப்பறையில் வீற்றிருக்கும் நூலின் சிறப்பு !**
**பழகப் பழக இன்பம் தருவது**
**பண்புடையாளர்களின் நட்பு !**

784. *நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்*
*மேற்சென் றிடித்தற் பொருட்டு*

**“நட்பு” என்பது சிரித்து மகிழ்ந்து**
**நடந்து கொள்வதற்காக மட்டும் அல்ல !**
**நண்பர்கள் நல்வழி தவறும் போது**
**நல்லுரை வழங்கி இடித்துரைக்கும் பொருட்டே !**

785. *புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்*
*நட்பாங் கிழமை தரும்*

**முன்னரே தொடர்பும் பழக்கமும் நட்புரிமை**
**முகிழ்வதற்கு வேண்டும் என்பதில்லை !**
**முதன்மையாக ஒத்துப்போகிற உணர்வுகள்**
**முகிழ்ந்தால் நட்புரிமைக்குப் போதுமானது !**

786. *முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்*
*தகநக நட்பது நட்பு*

**முகம் மலர்ந்து பழகுவது மட்டுமே**
**முதலில் நட்பாகி விடாது !**
**உள்ளம் இனிக்கப் உள்ளன்போடு பழகுவதே**
**உண்மையான நட்பு !**

787. *அழிவி னவைநீக்கி ஆறுய்த் தழிவின்கண்*
*அல்லல் உழப்பதாம் நட்பு*

**தீய வழியில் நண்பன் சென்று அழிவைத்**
**தீண்டி விடாமல் தடுப்பதும்**
**தீங்கு வரும் போது உடனிருந்து**
**தீங்கின் துன்பத்தை பகிர்வதே நட்பு !**

788. *உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே*
*இடுக்கண் களைவதாம் நட்பு*

**உடை இடுப்பிலிருந்து நழுவிடும்போது**
**ஆங்கே விரைந்து தடுக்கும் கை போல**
**ஆபத்தும் துன்பமும் தேடி வரும்போது**
**ஆருயிர் நண்பனுக்காக ஓடி வருவதே நட்பு !**

789. *நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி*
*ஒல்லும்வாய் ஊன்றும் நிலை*

**நட்புக்கு சிறந்த நிலை யாதெனில்**
**நல்லபடியாக மனம் கோணாமல்**
**இயலும் போதெல்லாம் நண்பனுக்கு உதவி செய்து**
**இயன்றவரை தாங்குவது தான் !**

790. *இனையர் இவரெமக் கின்னம்யாம் என்று*
*புனையினும் புல்லென்னும் நட்பு*

**இவர் எனக்கு இத்துணை அன்பானவர்**
**இவருக்கு நான் அத்துணை அன்பானவன் என**
**இருவரும் அவர்களுக்குள் பாராட்டிக் கொண்டே இருந்தால்**
**இழக்கப் போவது "நட்பின் அழகை" !**

## 80. நட்பாராய்தல்

791. *நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்*
*வீடில்லை நட்பாள் பவர்க்கு*

**ஆராயாமல் நட்பு கொள்வதைப் போல்**
**ஆபத்தானதும் துன்பம் தருவதும் வேறில்லை !**
**ஆராயாமல் நட்பு வட்டத்திற்குள் நுழைந்தபின்**
**ஆண்டாண்டு ஆனாலும் விடாது நட்பு !**

792. *ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை*
*தான்சாம் துயரம் தரும்*

**ஆய்து ஆராய்ந்து பார்க்காத நட்பு**
**ஆகக் கூடி கடைசியில் இறுதி**
**யாத்திரை செல்லும் வரை துயரம் தரும் !**

793. *குணனும் குடிமையும் குற்றமும் குன்றா*
*இனனும் அறிந்தியாக்க நட்பு*

**குணம் எத்தகையது ? குடிப்பிறப்பு எத்தகையது ?**
**குற்றங்கள் ஏதாவது உண்டா ?**
**குறையாத இயல்புகள் எவை?–இவை**
**குறித்துக் கொண்டு அறிந்து கொண்ட பின்பே**
**குலவலாம் நட்பு கொண்டு !**

794. *குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்*
*கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு*

**பழி வந்து சேரக் கூடாது என்ற**
**பய உணர்வுடன் நடக்கும்**
**பண்பார்ந்த குடியில் பிறந்தவருடைய நட்பை**
**பல வகைகளிலாவது முயன்று கொளல் வேண்டும் !**

795. *அழச்சொல்லி அல்ல திடித்து வழக்கறிய*
*வல்லார்நட் பாய்ந்து கொளல்*

**குற்றத்தை எடுத்துக்காட்டி – நம் குற்றத்தை நாமே உணரும்படி**
**குற்றம் செய்ததற்குத் தண்டனையாகக் கண்ணீர்விட்டுக்**
**குற்ற உணர்வைப் போக்க வாதிக்கும்**
**குன்றா ஆற்றலுடைய வல்லவர் நட்பைக் கொள்ள வேண்டும் !**

796. *கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை*
*நீட்டி அளப்பதோர் கோல்*

**கேடு வருவதிலும் ஓர் நன்மை உண்டு – நமக்கு**
**கேட்டு வராமல் வரும் "கேடில்"தான்**
**கேண்மை எனும் நட்பின் உறுதிதனைக்**
**கேளாமல் அளக்கும் அளவுகோல் உள்ளது !**

797. *ஊதியம் என்ப தொருவற்குப் பேதையார்*
*கேண்மை ஒரீஇ விடல்*

**"ஊதியம்" என்பது என்னவெனில்**
**ஊரால் பேதை என்று இனம் காணப்பட்ட**
**அறிவிலியின் நட்பை மட்டும்**
**அறவே துறந்து விடல் ஆகும் !**

798. *உள்ளற்க உள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க*
*அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு*

**ஊக்கத்தை அழிக்கின்ற வகையில்**
**ஊறு நினைக்கும் எண்ணங்களை விடுக !**
**கேடு வரும் போது உடனடியாகக்**
**கேட்காமலேயே விலகிவிடும் நட்பைக் கை விடுக !**

799. *கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை*
*உள்ளினும் உள்ளஞ் சுடும்*

**சாகும் போது கூட ஒருவனுக்குச்**
**சாகாமல் இருக்கும் நினைப்பாகக்**
**கேடு வரும் போது கைவிட்ட**
**கேடு கெட்ட நட்பை நினைத்து விட்டால்**
**கேடாய் உள்ளம் கொதிப்படையும் !**

800. *மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்தும்*
*ஒருவுக ஒப்பிலார் நட்பு*

**மனதில் குற்றம் இல்லாதவர்களின் நட்பை**
**மறந்தும் விட்டு விடாமல் நினைக்க வேண்டும் !**
**மனதிற்குக் கொஞ்சம் கூட ஒப்பாத நட்பை – அவர்**
**மனம் விரும்பிய விலை கொடுத்தாவது விலக்குக !**

## 81. பழைமை

801. *பழைமை எனப்படுவ4 தியாதெனின் யாதும்*
*கிழமையைக் கீழ்ந்திடா நட்பு*

**"பழைமை" என்பது யாதெனில்**
**பழகிய நண்பர்கள் தங்கள் உரிமை**
**பழுதாகாமல் நட்பு கொள்வதே !**

802. *நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்*
*குப்பாதல் சான்றோர் கடன்*

**நட்பிற்கு ஆயுதம் என்னவெனில்**
**நண்பர்கள் உரிமையோடு செய்யும் செயல் !**
**உரிமையோடு செய்வதற்கு**
**உரிய இடம் தந்து மகிழ்வோடு**
**உடன்படுவது சான்றோர் கடமை !**

803. *பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை*
*செய்தாங் கமையாக் கடை*

**உரிமையோடு நண்பர் செய்த செயலை**
**உண்மையில் தான் செய்த செயலாக**
**உடன்பட்டு ஏற்காவிட்டால் அவருடன்**
**உள்ளன்போடு பழகிய நட்பு வீணாகும் !**

804. *விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையாற்*
*கேளாது நட்டார் செயின்*

**வினவாமலே உரிமையோடு நண்பர் பல**
**விடயங்களை நமக்காகச் செய்தால்**
**வித்தியாசமாக நினைக்காமல் நல்ல நண்பர் என்றும்**
**விழைவர் அதை ஆவலுடன் எதிர்பார்த்து !**

805. *பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க*
*நோதக்க நட்டார் செயின்*

**நோகக்கூடிய அளவு நம் நண்பன்**
**நோக்கம் எதுவும் இல்லாமல் ஓர் செயலைச் செய்து விட்டால்**
**உய்த்தறிய முடியாத பேதைமை என்றோ**
**உரிமையில் செய்த காரியம் என்றோ**
**உணர்ந்து கொள்ள வேண்டும் !**

806. *எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்*
*தொல்லைக்கண் நின்றார் தொடர்பு*

**நட்பு வரம்பின் எல்லை அறிந்து**
**நட்பின் இலக்கணம் அறிந்தவர் – நீண்ட கால**
**நண்பரின் தொடர்பை மட்டும் – அவரின்**
**நட்பினால் தொல்லை வந்தாலும் விட மாட்டார் !**

807. *அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்*
*வழிவந்த கேண்மை யவர்*

**தம்முடன் நீண்ட காலம் பழகிய நண்பர்கள்**
**தமக்கே எதிராக அழிவு தரும்**
**தகாத செயலைச் செய்தாலும் கூட**
**அன்பு வழியில் நட்பு கொண்டவர்**
**அதற்காக அந்த நட்பை எப்போதும்**
**அறுத்துக் கொள்ள மாட்டார் !**

808. *கேளிழுக்கங் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு*
*நாளிழுக்கம் நட்டார் செயின்*

**கேட்டுக் கொள்வர் என்றெண்ணி துணிவுடன்**
**கேண்மை கொண்ட நண்பரைப் பற்றி**
**கேவலமாகத் தவறாக சொன்னாலும்**
**கேட்டுக் கொள்ளாத நம்பிக்கை கொண்ட நண்பருக்கு**
**கேடு விளைவித்தால் அவருடன் கொண்டிருந்த நட்பே**
**கேடு காலமான நாட்களாகும் !**

809. *கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை*
*விடாஅர் விழையும் உலகு*

**தொடர்ந்து உரிமை கெடாமல் நட்பை**
**தொன்று தொட்டு வழி வழியாகத்**
**தொடரும் நட்பை ஒருவர் தவறு செய்தாலும்**
**விடாமல் நட்புறவைக் கொண்டாடுபவரை**
**விழைந்து போற்றும் உலகு !**

810. *விழையார் விழையப் படுப பழையார்கண்*
*பண்பின் தலைப்பிரியா தார்*

**பழைய தொன்று தொட்ட நண்பர்கள்**
**பண்பின்றி தவறு செய்து விட்டாலும்**
**படர்ந்திருக்கும் நட்பை விடாதவர்களைப்**
**பகைவரும் விரும்பிப் பாராட்டுவர் !**

## 82. தீ நட்பு

811. *பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை*
*பெருகலிற் குன்றல் இனிது*

**கள்ளைக் குடிப்பது போல் – பருகினால்**
**களிப்புண்டாக்கக் கூடியது போலிருக்கும்**
**பண்பில்லாதவரின் நட்பை என்றும்**
**பல வகைகளில் பெருக விடாமல் குறைத்தல் இனிது !**

812. *உறினட் டறினொரூஉம் ஒப்பிலார் கேண்மை*
*பெறினும் இழப்பினும் என்*

**பயன் உள்ளவரை நட்பு – பின்**
**பயன் முடிந்தவுடன் நட்பினையும் முடித்து விடும்**
**பலனற்றவரின் நட்பு**
**பல நாள் இருந்தாலென்ன ?**
**பட்டென்று இழந்தால் தான் என்ன ?**

813. *உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது*
*கொள்வாரும் கள்வரும் நேர்*

**வரும் நட்பினால் என்றும்**
**வரும்படியை மட்டும் கணக்கிடும் நண்பர்களும்**
**கொடுப்பவரின் மனதைக் கொள்ளாமல்**
**கொடுக்கும் விலையைக் கொள்ளும் "பொது மகளிரும்"**
**கொள்ளை அடிக்கும் "கள்வரும்" ஒன்றே !**

814. *அமரகத் தாற்றறுக்கும் கல்லாமா அன்னார்*
*தமரின் தனிமை தலை*

**பகைவரின் போர்க்களத்தில் ஆற்றுதல்**
**படுத்தாமல் கழுத்தறுக்கும் அறிவில்லாத**
**பயிற்சி இல்லாத குதிரையைப் போன்றவர்களின்**
**நட்பைப் பெறுவதைக் காட்டிலும்**
**நயத்தலுடன் தனியாக இருப்பதே சிறந்தது !**

815. *செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை*
*எய்தலின் எய்தாமை நன்று*

**உதவிதனைச் செய்தாலும்**
**உரிய பாதுகாப்பிற்கு**
**உதவாத "சிறியோரின்" நட்புதனை**
**உண்டாகாமல் இருப்பதே நன்று !**

*816. பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்*
*ஏதின்மை கோடி உறும்*

**அறிவில்லாத பேதையிடம்**
**அதிக நெருக்கத்துடன் நட்பு கொள்வதை விட**
**அறிவுள்ளோரிடம் பகை கொள்வது**
**அதிகமான கோடி மடங்கு மேலானதாகும் !**

*817. நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்*
*பத்தடுத்த கோடி உறும்*

**வன்மத்துடன் சிரித்துப் பேசும்**
**வஞ்சக நட்பை விட**
**பகைவரால் உண்டாகும் நன்மை**
**பத்துக் கோடி மடங்கு பெறும் !**

*818. ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை*
*சொல்லாடார் சோர விடல்*

**முடித்துவிடக் கூடிய எளிதானக் காரியங்களை**
**முன்னின்று தெரிந்தவர் போல் காட்டிக் கொண்டு**
**முடிக்க விடாமல் செய்து விடுபவரின்**
**நட்பை அவருக்குச் சொல்லாமலேயே**
**நளினத்தோடு விலக்கி விட வேண்டும் !**

*819. கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு*
*சொல்வேறு பட்டார் தொடர்பு*

**செய்வதாகச் சொல்வது ஒன்று**
**செய்வது வேறொன்று என**
**வினை வேறு சொல் வேறாய்**
**விளைபவர் நட்பு கனவிலும் கூட**
**விதவிதத் துன்பத்தைத்தான் தரும் !**

*820. எனைத்துங் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ*
*மன்றிற் பழிப்பார் தொடர்பு*

**மனையில் தனியாக இருக்கும் போது**
**மயங்குகிற அளவு புகழ்ந்து விட்டு**
**மன்றத்தில் பலர் முன்பு இகழும் நட்பை**
**மருங்கில் கூட நெருங்க விடக்கூடாது !**

## 83. கூடா நட்பு

821. *சீரிடங் காணின் எறிதற்குப் பட்டடை*
*நேரா நிரந்தவர் நட்பு*

**நல்ல வாய்ப்பு கிடைக்கும்போது கேடு செய்யும்**
**நண்பரைப் போல் பழகும் "பகைவரின் நட்பு"**
**நச்சென்று இடம் பார்த்து வெட்டுவதற்கு**
**நல்ல துணையாகும் பட்டறைப் பலகை போன்றது !**

822. *இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்*
*மனம்போல வேறு படும்*

**நண்பர் போல நடிக்கும் உண்மை**
**நட்பில்லாதவரின் நட்பு**
**மனைவியைப் போல நடக்கும் "பொது -**
**மகளிரின்" மனம் போல எதிர்**
**மறையாக உள்ளொன்றும் வெளிப்புறமுமாய் வேறுபடும் !**

823. *பலநல்ல கற்றக் கடைத்தும் மனநல்லர்*
*ஆகுதல் மாணார்க் கரிது*

**பல நல்ல நூல்களைக் கற்ற,**
**பல்கலை அறிஞர் ஆனாலும்**
**பகை யுணர்வு மேலிட்டவர்,**
**பகை மறந்து மனம் திருந்தி**
**பசுமையான நல்ல மனமுடையராதல் அரிது !**

824. *முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா*
*வஞ்சரை அஞ்சப் படும்*

**சிரித்து சிரித்துப் பேசி**
**சிறுமை கொண்டு நம்மைச் சீரழிக்கும்**
**வஞ்சக மனத்தைக் கொண்ட**
**வஞ்சகருடன் நட்பு கொள்ள அஞ்ச வேண்டும் !**

825. *மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்*
*சொல்லினால் தேறற்பாற் றன்று*

**மனம் ஒன்றிப் பழகாதவரின்**
**மயக்கும் வார்த்தைகளை நம்பி**
**மனதாரத் தெளிவுடன் ஒரு முடிவும்**
**மனப்பூர்வமாக எடுக்க இயலாது !**

826. *நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்*
*ஒல்லை உணரப் படும்*

**"நட்டார்" எனும் "நண்பர்" போல்**
**நல்லபடியாக இனிமையாகப் பேசினாலும்**
**"ஒட்டார்" எனும் "பகைவரின்" சொல்**
**"ஒல்லை" எனும் "பொருந்தாத தன்மை" காட்டி விடும் !**

827. *சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்*
*தீங்கு குறித்தமை யான்*

**வில் வளைவதே தன்னிலிருந்து**
**விரைந்து பாணத்தைப் பாய்ச்சித் தீங்கிழைப்பது போல்**
**பகைவர் வளைந்து வணக்கம் சொல்வது**
**பகையைத் தீர்க்கவே என்பதால் ஏற்கக் கூடாது !**

828. *தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்*
*அழுதகண் ணீரும் அனைத்து*

**பகைவர் தொழுது வணக்கம் சொல்லும்போது**
**பத்திரமாக கைக்குள் ஆயுதம் மறைந்திருப்பதைப்போல்**
**பகைவர் கண்ணீர்க் கொட்டி அழுதிடும் போது**
**பயங்கரச் சதிச் செயலே நெஞ்சில் நிறைந்திருக்கும் !**

829. *மிகச்செய்து தம்மெள் ளுவாரை நகச்செய்து*
*நட்பினுட் சாப்புல்லற் பாற்று*

**உலகத்திற்குப் போலி நட்பாக மிகப் பழகி**
**உள்ளத்தில் மிக இழிவாக**
**உணர்ந்து இகழ்பவரை நாமும்**
**நட்பை நலிவடையுமாறு செய்திட அதே**
**நடைமுறையைப் பின்பற்ற வேண்டும் !**

830. *பகைநட்பாங் காலம் வருங்கால் முகநட்*
*டகநட் பொரீஇ விடல்*

**பகைவருடன் பழகும் இக்கட்டானப்**
**பலவந்தமான சூழ்நிலை வந்தாலும்**
**மலரும் முக நட்பாக மட்டும் கொண்டு**
**மனம் விரும்பாத நட்பாக தவிர்த்து விட வேண்டும் !**

## 84. பேதைமை

***831.*** *பேதைமை என்பதொன் றியாதெனின் ஏதங்கொண்*
*டூதியம் போக விடல்*

**முட்டாள்தனம் எனும் பேதைமை என்பது எதுவெனில்**
**முழுமுதற் கொண்டு கேடு தருவது எது ? –**
**முத்தாக நன்மை தருவது எது ? என**
**முதிர்ச்சியின்றித் தெளிவில்லாமல்**
**முற்றிலும் நன்மையை விடுத்துத் தீமையை நாடுவதே ஆகும் !**

***832.*** *பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை*
*கையல்ல தன்கண் செயல்*

**முட்டாள்தனத்திலெல்லாம் மிகப் பெரிய**
**முட்டாள்தனம் எதுவெனில்**
**முற்றிலும் தீமையான – ஒழுக்கமில்லாத**
**முறையற்ற காரியங்களில்**
**முழுமையாக ஆசை கொள்வது !**

***833.*** *நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்*
*பேணாமை பேதை தொழில்*

**நாண வேண்டிய வெட்கக்கேடானச் செயலுக்கு**
**நாணாமலும், நன்மை தீமைகளை ஆராயந்து**
**நாடாமலும், காட்ட வேண்டிய அன்பைக்**
**காட்டாமலும் காக்க வேண்டிய பொருளைக்**
**காக்காமலும் இருப்பது பேதைகளின் இயல்பு !**

***834.*** *ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்*
*பேதையிற் பேதையார் இல்*

**படிக்க வேண்டிய அனைத்து நல்ல நூல்களைப்**
**படித்தும், படித்ததை உணர்ந்தும், உணர்ந்ததைப்**
**பலருக்கு உணர்த்திடவும் செய்து**
**ஊருக்கு உபதேசம் செய்தவர் அதன்படி – தானும்**
**ஊன்றி நடக்கவில்லை எனில் அவரே**
**ஊரிலுள்ள அறிவிலிகளின் அறிவிலி !**

835. *ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்*
*தான்புக் கழுந்தும் அளறு*

**ஏன் என்று யாரிடமும் உதவி கேட்காமல்**
**ஏனோ தானோ என தன்னிச்சையாகச் செயல்படும் முட்டாள்**
**ஏழு பிறப்பிலும் அடைய வேண்டிய நரகத்தை**
**ஏகோபித்து ஒரே பிறவியில் அடைவான் !**

836. *பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்*
*பேதை வினைமேற் கொளின்*

**செய்யத் தெரியாத ஒரு செயலைச்**
**செய்யத் தெரியும் என்று ஒரு முட்டாள்**
**செய்ய முனைந்தால் அது பொய்யாய் முடியும் !**
**செயலும் முடியாமல் அவனும் அடிமைத்தளையில் அகப்படுவான் !**

837. *ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை*
*பெருஞ்செல்வம் உற்றக் கடை*

**முட்டாள்களையெல்லாம் முதலாளி ஆக்கிடும்**
**'முதல்' எனும் செல்வம் சேர்ந்தால்**
**முழுமுதற் பலனையும் அடைபவர் அயலாரே !**
**முகாந்திரமுடைய உற்றார் உறவினர் பசியால் வாடுவர் !**

838. *மையல் ஒருவன் களித்தற்றாற் பேதைதன்*
*கையொன் றுடைமை பெறின்*

**மயக்கத்திலேயே இருக்கும் பித்துப் பிடித்தவன் – மேலும்**
**மயக்கம் வர கள்ளுண்டவன் போல் ஆகும்**
**மந்த புத்தி கொண்ட பேதையின் கையில் சேரும்**
**மகத்தான செல்வமானது !**

839. *பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்*
*பீழை தருவதொன் றில்*

**முட்டாள்களுடன் கொள்ளும் நட்பு**
**முற்றிலும் இனிமையானது ! ஏனெனில்**
**முட்டாள்களை விட்டு விட்டுப் பிரிய நேரும் போது**
**முகிழ்க்காது துன்பமே !**

840. *கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றாற் சான்றோர்*
*குழாஅத்துப் பேதை புகல்*

**அறிஞர்கள் கூடியுள்ள மன்றத்தில்**
**அறிவிலி ஒருவன் நுழைவது என்பது**
**அசுத்தத்தை மிதித்து கழுவாத காலை – படுக்கை**
**அறையில் வைத்ததைப் போன்றது !**

# 85. புல்லறிவாண்மை

*841.* *அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை*
*இன்மையா வையா துலகு*

**பஞ்சங்களிலேயே மிகக் கொடுமையான**
**பஞ்சம் அறிவுப் பஞ்சம் தான் ! – மற்ற**
**பஞ்சங்களையெல்லாம் உலகம் பொருட்படுத்தாது !**

*842.* *அறிவிலான் நெஞ்சுவந் தீதல் பிறிதியாதும்*
*இல்லை பெறுவான் தவம்*

**அறிவில்லாதவன் மனம் உவந்து ஒருவனுக்கு**
**அக மகிழ்ந்து ஒரு பொருளைத் தந்தால்**
**அதற்குக் காரணம் கொள்பவனின் பேறு தான் !**

*843.* *அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை*
*செறுவார்க்கும் செய்தல் அரிது*

**அறிவிலார் தமக்குத் தாமே செய்து கொண்டு**
**அனுபவிக்கும் துன்பத்தைப் போல்**
**அவர் தம் பகைவர்களால் கூட செய்தல் அரிது !**

*844.* *வெண்மை எனப்படுவ தியாதெனின் ஒண்மை*
*உடையம்யாம் என்னும் செருக்கு*

**“எமக்கு எல்லாம் தெரியும்” என**
**எகத்தாளமும் ஆணவமும் தான்**
**என்றும் “வெண்மை” எனும் “அறிவு முதிர்ச்சியின்மை” !**

*845.* *கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற*
*வல்லதூஉம் ஐயம் தரும்*

**கற்காத நூல்களையும் நன்கு**
**கற்றதாகக் காட்டிக் கொண்டால்**
**கசடறக் கற்ற துறையிலும் அவரை**
**கண்டிப்பாக உலகம் சந்தேகப்படும் !**

*846.* *அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்*
*குற்றம் மறையா வழி*

**குற்றத்தை உணர்ந்து பதறி அந்தக்**
**குற்றத்தை நீக்க முயலாமல் மேலும் அந்தக்**
**குற்றத்தினால் ஏற்பட்டு விட்ட**
**அற்றம் எனும் அவமானத்தை மட்டும்**
**அழகுற மறைக்க முயல்வது என்பது**
**அறவிலித்தனமே !**

*847.* *அருமறை சோரும் அறிவிலான் செய்யும்*
*பெருமிறை தானே தனக்கு*

**அருமறை யான நல்வழிக்கான**
**அறிவுரைகளை மனதில் போற்றி**
**அவ்வழி நடக்காத அறிவிலிகள்**
**அவர்களாகவே பெருந்துன்பத்தைத் தேடிக் கொள்வார்கள் !**

*848.* *ஏவவுஞ் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்*
*போஒம் அளவுமோர் நோய்*

**"தற்குறி" எனும் "புல்லறிவாளன்"**
**தனக்கு நன்மையானதைத் தானும் அறிய மாட்டான்**
**தனக்கு மற்றவர் சொன்னாலும் கேட்க மாட்டான் அதுவே**
**தன் உயிர் போகும் வரை உள்ள நோய் !**

*849.* *காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்*
*கண்டானாம் தான்கண்ட வாறு*

**கண்டுணர்ந்தவன் எனக் காட்டிக் கொள்ளும்**
**கண்ணான நம் புல்லறிவாளனுக்குக்**
**கண்டுணர கற்றுக் கொடுக்க நினைக்கும்**
**கற்றவன் அறிவில்லாதவனாகி விடுகிறான் ! – ஆகவே**
**கல்லாத புல்லறிவாளனுக்கு எப்போதும் அவன்**
**கண்ட அளவில் அறிவானவனே !**

*850.* *உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்*
*தலகையா வைக்கப் படும்*

**உலகில் அறிவிற் சிறந்தவர்கள்**
**உண்மை என ஆராய்ந்தறிந்து**
**உரைப்பதை எல்லாம் பொய் என**
**உறுதி படக் கூறும் புல்லறிவாளன் எப்போதும்**
**உலகில் உலாவும் ஓர் பேய் என**
**உருவகப் படுத்தப் படுவான் !**

## 86. இகல்

851. *இகலென்ப எல்லா உயிர்க்கும் பகலென்னும்*
*பண்பின்மை பாரிக்கும் நோய்*

**"இகல்" என்பது மனதில் குரோதம் வளர்த்து**
**இங்கு வரும் எல்லா உயிர்களையும்**
**"பகல்" எனும் பிரித்தல் பண்பை வளர்த்து**
**பலரையும் ஆட்டிப் படைக்கும் நோய் !**

852. *பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி*
*இன்னாசெய் யாமை தலை*

**விரோதத்தை வளர்த்து கூடாமையைக் கருதி**
**விரும்பத்தகாதவற்றை ஒருவன் செய்யினும்**
**'இகல்' எனும் மாறுபாட்டைக் கொண்டு நாம்**
**இன்னாதவற்றை செய்யாமை நன்று !**

853. *இகலென்னும் எவ்வநோய் நீக்கின் தவலில்லாத்*
*தாவில் விளக்கம் தரும்*

**'இகல்' எனும் மனமாறுபாடு நோயை**
**இந்த மனதிலிருந்து மட்டும் நீக்கிவிட்டால்**
**'தவல்' எனும் குற்றமற்ற அழியாப் புகழ்**
**தங்கு தடையில்லாமல் தானே வரும் !**

854. *இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்*
*துன்பத்துள் துன்பங் கெடின்*

**துன்பங்களிலேயே மிகப் பெரிய**
**துன்பம் மனமாறுபாடு எனும் பகையுணர்வுதான் ! அதை**
**இம்மியளவு கூட இல்லாமல் அகற்றிவிட்டால்**
**இன்பங்களிலேயே பெரும் இன்பமாகும் !**

855. *இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே*
*மிகலூக்கும் தன்மை யவர்*

**'இகல்' எனும் மனவேறுபாட்டை எதிர்த்து**
**'இணைதலை' விரும்பி நடக்கின்றவரை**
**இந்த உலகத்தில் யார் தான் வெல்ல முடியும் ?**

856. *இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை*
*தவலும் கெடலும் நணித்து*

**‘இகல்’ எனும் மனவேறுபாடு எனக்கு மிக**
**இனியது என்று சொல்வது வாழ்க்கை**
**இறுதியில் தடம்புரண்டு விரைவில் அழிந்துவிடும் !**

857. *மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்*
*இன்னா அறிவி னவர்*

**‘இகல்’ எனும் மனவேறுபாட்டை**
**இன்னும் விரும்புகிற – தீய**
**இன்னாத அறிவுடையார்**
**இனிய வெற்றிக்கு வழி காட்டும்**
**இன்றியமையாத உண்மைப் பொருளை அறியமாட்டார் !**

858. *இகலிற் கெதிர்சாய்தல் ஆக்கம் அதனை*
*மிகலூக்கின் ஊக்குமாங் கேடு*

**மனவேற்றுமைக்கு எதிராக**
**மனதார நடப்பதே சிறப்பு தரும் !**
**மன வேறுபாட்டை ஊக்கத்துடன்**
**மனமுவந்து வளர்த்துக் கொண்டால் கேடு நிச்சயம் !**

859. *இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை*
*மிகல்காணும் கேடு தரற்கு*

**சிறப்பு வரும்போது ஒருவன்**
**சிறிதும் மனவேற்றுமையை நினைக்க மாட்டான் !**
**கேடு வரும்போது மட்டும்**
**கேட்காமலேயே மன வேற்றுமை மிஞ்சும் !**

860. *இகலானாம் இன்னாத எல்லாம் நகலானாம்*
*நன்னயம் என்னும் செருக்கு*

**‘இகல்’ எனும் மனவேற்றுமை கொண்டு**
**இழிவான பகையுணர்வைக் காட்டுவோர்க்கு**
**இன்னாதத் துன்பங்கள் தொடர்ந்து வரும் !**
**நட்புணர்வோடு செயல்படுவோர்க்கு**
**நற்பயனாய் பெரு மகிழ்ச்சியும் செருக்கும் வரும் !**

## 87. பகை மாட்சி

*861.* *வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக ஓம்பா*
*மெலியார்மேல் மேக பகை*

**வலியவர்களிடம் "மாறு" எனும் "பகை"தனை**
**வலிந்து ஏற்றுதலை நீக்கி, அதே சமயம்**
**தம்மை விட மெலியவர்களிடம் பகை கொள்ளும்**
**தன்மையே "பகை மாட்சி" !**

*862.* *அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்றுவ்வான்*
*என்பரியும் ஏதிலான் துப்பு*

**உடனிருப்போரிடம் அன்பு இல்லாமலும்**
**உள்ளம் வலிமையான துணையும் இல்லாமலும்**
**தானும் வலிமை இல்லாமல் இருக்கும் போது**
**தாக்குதல் தந்து எப்படிப் பகையை வெல்ல முடியும் ?**

*863.* *அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்*
*தஞ்சம் எளியன் பகைக்கு*

**அஞ்ச வேண்டாதவற்றிற்கு அஞ்சுபவனையும்**
**அறிய வேண்டியதை அறியாதவனையும்**
**அணைத்து வாழும் சமூக சிந்தனையற்றவனையும்**
**அவ்வளவு எளிதாகப் பகைவர் வென்று விடுவர் !**

*864.* *நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்*
*யாங்கணும் யார்க்கும் எளிது*

**நெஞ்சில் 'வெகுளி' எனும் கோபத்தை நீக்காதவனையும்**
**நெஞ்சத்தில் உண்மை இல்லாதவனையும்**
**எங்கேயும் எப்போதும் எவரும்**
**எளிதாக வென்று விடலாம் !**

*865.* *வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்*
*பண்பிலன் பற்றார்க் கினிது*

**வழி காட்டும் நீதி நூலின் படி வழி நடக்காதவனுக்கும்**
**வழிகாட்டு முறைப்படி விதித்ததைச் செய்யாதவனுக்கும்**
**பழிக்கு அஞ்சாமல், பண்பும் இல்லாதவனுக்கும் மேல்**
**பகைவனுக்கு அவன் மீதுள்ள பகைமை இனிதாகும் !**

866. *காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்*
*பேணாமை பேணப் படும்*

**கண்டுரைக்க முடியாத அளவு புரியாத கோபக்காரனின் –**
**‘கழி’ எனும் மிகுந்த பேராசை கொண்டவனின் –**
**பகையை மிகவும் விரும்பி ஏற்று**
**பகைவர்கள் அவனை எளிதாக வெல்வர் !**

867. *கொடுத்துங் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து*
*மாணாத செய்வான் பகை*

**பக்கத்தில் இருந்து கொண்டே**
**பல செயல்களைத் தொடங்கியதிலிருந்து**
**‘மாணாத’ எனும் இன்னாத செயலைச் செய்து**
**‘மாற்றார்’ போல் புத்தி மயங்கி செல்பவரை**
**மாற்றல் பொருள் கொடுத்தாவது பகை கொள்ள வேண்டும் !**

868. *குணனிலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்*
*கினனிலனாம் ஏமாப் புடைத்து*

**குணம் கெட்டவர்களாக இருந்துவிட்டாலும்**
**குற்றச்சரித்திரம் மிக்கவராக இருந்துவிட்டாலும்**
**‘இனம்’ எனும் சுற்றமே தம்மைச் சுற்றி**
**இல்லாமல் போவதாலும் எப்போதும் – அவனை**
**இன்னா செய்யும் பகைவர்கள் வெல்ல**
**இனியதோர் வாய்ப்பாகும் !**

869. *செறுவார்க்குச் சேணிகவா இன்பம் அறிவிலா*
*அஞ்சும் பகைவர்ப் பெறின்*

**அறிவில்லா கோழைகளாகவும்**
**அஞ்சிடும் கோழைகளாகவும்**
**பகைவர்கள் மட்டும் இருந்து விட்டால்**
**பகைப்பார்களுக்கு வெற்றியெனும் இன்பம்**
**பல்மடங்குப் பெருகி வரும் !**

870. *கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும்*
*ஒல்லானை ஒல்லா தொளி*

**எந்தப் போர் முறையும் கல்லாத**
**எதிலும் தேராத வீரர்களையும் கூட**
**எதிர்த்து நின்று போரிட முடியாதவர்களுக்கு**
**என்றைக்கும் புகழ் ஒளி வட்டம் பொருந்தாது !**

## 88. பகைத்திறம் தெரிதல்

871. *பகையென்னும் பண்பி லதனை ஒருவன்*
*நகையேயும் வேண்டற்பாற் றன்று*

**பகை உணர்வு எனும் தீமை பயக்கும்**
**பண்பில்லாத செயலை மட்டும்**
**பரவசப்படுத்தும் நகைச்சுவைக்காகக் கூட**
**பழக்கப்படுத்திக் கொள்ளக் கூடாது !**

872. *வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க*
*சொல்லேர் உழவர் பகை*

**வில்லை ஏராக உடைய உழவர் என்ற**
**வில்லாதி வீரர்களிடம் கூட பகை கொள்ளலாம் – ஆனால்**
**சொல்லை ஏராக உடைய உழவர் என்ற**
**சொல்லாற்றல் மிக்க அறிஞர்களிடம் பகை கொள்ளக் கூடாது !**

873. *ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்*
*பல்லார் பகைகொள் பவன்*

**தனி ஒருவனாய் எப்போதும்**
**தனித்து நின்று பலரையும்**
**பகைத்துக் கொள்பவன்**
**பல மடங்கு மனநிலைத் திரிந்தவனாவான் !**

874. *பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்*
*தகைமைக்கண் தங்கிற் றுலகு*

**விரைவாக வந்த பகையையும்**
**விரும்பி நட்பாகக் கொண்டொழுகும்**
**பண்புடையாளனின் இயல்பினில் தான் இந்த**
**பரந்த உலகமே அடங்கியுள்ளது !**

875. *தன்றுணை இன்றால் பகையிரண்டால் தானொருவன்*
*இன்றுணையாக் கொள்கவற்றின் ஒன்று*

**தனக்குத் துணையாக ஒருவரும் இல்லை என்றால்**
**தனக்குப் பகையாக உள்ள பகைவர்கள்**
**தனித்தனியாக இரண்டாகப் பிரிந்தால் – அதில்**
**தனியாக ஒருவரைச் சாதகமாகப் பிரித்து**
**தனக்கு துணையாக்கி கொளல் நன்று !**

876. *தேறினுந் தேறா விடினும் அழிவின்கண்*
*தேறான் பகாஅன் விடல்*

**பகைவனைப் பற்றித் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும்**
**பகையால் அழிவும் துன்பமும் வரும் போது**
**பகைவனிடத்தில் அதிகமாக நெருங்கவும் கூடாது**
**பல கல் தூரம் விலகவும் கூடாது !**

877. *நோவற்க நொந்த தறியார்க்கு மேவற்க*
*மென்மை பகைவர் அகத்து*

**துன்பத்தைத் தாமாகவே அறிந்திராத நண்பர்களிடம் – நம்**
**துன்பத்தை நாமாக சொல்லக் கூடாது !**
**பலத்தின் சக்தியைக் கொஞ்சமும் அறியக் கூடாத**
**பகைவர்க்கு நம் பலவீனத்தைச் சொல்லக் கூடாது !**

878. *வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்*
*பகைவர்கண் பட்ட செருக்கு*

**வழி வகைகளை நன்றாக அறிந்து**
**வலிமை தனை உருவாக்கிக் கொண்டு**
**பலத்த பாதுகாப்பைத் தேடிக் கொண்டால்**
**பகைவர்க்கு ஏற்பட்ட செருக்கு அழிந்து விடும் !**

879. *இளைதாக முள்மரம் கொல்க களையுநர்*
*கைகொல்லும் காழ்த்த இடத்து*

**முள் மரம் சிறியதாக இருக்கும் போது**
**முற்றுவதற்கு முன்பே கிள்ளி எறிவதைப் போல**
**பகையையும் வளராமல் தடுத்து**
**பகை முற்றுவதற்கு முன்னால் வீழ்த்தி விட வேண்டும் !**

880. *உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர்*
*செம்மல் சிதைக்கலா தார்*

**பகைவரின் ஆணவத்தைக் குலைத்து**
**பகையறுக்க முடியாதவர்கள்**
**புவியில் வளமுடன்**
**வாழ இயலாதவர் !**

## 89. உட்பகை

*881. நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்*
*இன்னாவாம் இன்னா செயின்*

**குடியிருக்கும் வீடும் குளிர்ந்த நீரும்**
**குந்தகம் விளைவிக்கும் நோயென்றால் தீமையே !**
**தழுவும் "தமர்நீர்" ஆன "சுற்றத்தாரும்" உட்பகையால்**
**தடுக்க முடியாத துன்பங்களைத் தந்தால் தீமையே !**

*882. வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக*
*கேள்போல் பகைவர் தொடர்பு*

**'வாள்' போல் கூர் ஆயுதமாய்**
**வாகாய் வெளியே தெரியும் "பகைவனுக்கு"**
**வாழ்நாளில் அஞ்ச வேண்டாம் ! – ஆனால்**
**'கேள்' எனும் உற்ற உறவினராய்ப் பழகி**
**கேடாய் "உட்பகைக் கொண்டவனுக்கு" அஞ்ச வேண்டும் !**

*883. உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவிடத்து*
*மட்பகையின் மாணத் தெறும்*

**குவிந்திருக்கும் உறவினர்களின் உட்பகையைக்**
**குண்டூசி முனையளவு கூட இல்லாமல் அறுக்க வேண்டும்!–இல்லையேல்**
**குறித்த காலத்தில் பச்சை மண் பாண்டத்தை அறுக்கும்**
**குயவனின் கருவி போல் நிச்சயம் சீரழிக்கும் !**

*884. மனமாணா உட்பகை தோன்றின் இனமாணா*
*ஏதம் பலவும் தரும்*

**மனவேற்றுமையினால் தமக்கு உட்பகைத் தோன்றின்**
**மற்றை துணையாக இருக்கும் சுற்றத்தாரையும்**
**மனதாரப் பகைவராக்கிக் கேடு விளைவிக்கும் !**

*885. உறல்முறையான் உட்பகை தோன்றின் இறல்முறையான்*
*ஏதம் பலவும் தரும்*

**உறவு முறைகளுக்குள் மிகுதியாக**
**உட்பகை ஒருவனுக்கு உருவாகி விட்டால் – அவன்**
**உயிரையே அழிக்கக் கூடிய அளவிற்கு**
**உக்கிரமான கேடுகள் விளையும் !**

*886.* *ஒன்றாமை ஒன்றியார் கட்படின் எஞ்ஞான்றும்*
*பொன்றாமை ஒன்றல் அரிது*

**கூடவே இருக்கும் ஒன்றியாரிடம்**
**கூடாமை எனும் ஒன்றாமை – உட்பகையால்**
**கூடி வந்து விட்டால் எக்காலத்திலும்**
**கூடி வரும் அழிவைத் தடுப்பதும் அரிதாகும் !**

*887.* *செப்பின் புணர்ச்சிபோற் கூடினும் கூடாதே*
*உட்பகை உற்ற குடி*

**உட்பகை உச்சத்தில் இருக்கும் குடும்பத்தில்**
**உள்ளவர்களை எப்போதும் வெளியிலிருந்து**
**உள்ளே பார்க்காமல் பார்த்தால்**
**உள்ளபடி செப்பு மூடி போல் பொருந்தியிருப்பார்கள் – ஆனால்**
**உளமாரப் பொருந்தி இருக்க மாட்டார்கள் !**

*888.* *அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொரு*
*துட்பகை உற்ற குடி*

**'அரம்' எனும் கருவியால் கரும்பொன்னான இரும்பு**
**அராவப்பட்டால் வலிமை குறைந்து தேய்வதைப்போல**
**அழிக்கும் "உட்பகை" கொண்ட குடும்பமும் தேயும் !**

*889.* *எட்பக வன்ன சிறுமைத்தே ஆயினும்*
*உட்பகை உள்ளதாங் கேடு*

**எள்ளின் பிளவைப் போல**
**உட்பகை மிகச் சிறிதே ஆயினும்**
**உள்ளதெல்லாம் கெடும் பெருங்கேடு**
**மெல்லவே வந்து சேரும் !**

*890.* *உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருள்*
*பாம்போ டுடனுறைந் தற்று*

**உள்ளத்தால் உடன்பாடு இல்லாத**
**உள்ளப் பொருத்தம் இல்லாதவர்கள்**
**உட்பகைதனை மனதில் கொண்டு விட்டால்**
**உறைவிடமான சிறு குடிலுக்குள்**
**உடலால் ஒன்றாக இருந்தும்**
**உள்ளபடி பாம்புடன் வாழ்வது போன்றதுதான் !**

# 90. பெரியாரைப் பிழையாமை

*891.* *ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்*
*போற்றலுள் எல்லாம் தலை*

**எடுத்த காரியம் யாவையும்**
**எப்படியும் முடிக்கக்கூடிய ஆற்றலுடையவரின்**
**ஆற்றல்களை இகழாமலும் இழக்காமலும் செயல்களை**
**ஆற்றிட முனைவதே நாம் பாதுகாக்க வேண்டிய**
**ஆபத்திலிருந்து தீங்கைப் பாதுகாக்கும் காவல்களில் தலையானது !**

*892.* *பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாரால்*
*பேரா இடும்பை தரும்*

**பெரிய ஆற்றல்களை உடைய அறிவிற் சிறந்த**
**பெரியோரின் ஆலோசனைகளைத் தவிர்த்தால் –**
**பெரியோரை மதித்து ஒழுகாமற் போனால் –**
**பெருந்துன்பங்கள் தவிர்க்காமல் வரும் !**

*893.* *கெடல்வேண்டிற் கேளாது செய்க அடல்வேண்டின்*
*ஆற்று பவர்கண் இழுக்கு*

**காரியம் கெட்டுப் போக வேண்டுமெனில் – நல்ல**
**காரியக்காரர்களானப் பெரியோரிடம் ஆலோசனைக் கேட்காமல்**
**காரியத்தை செய்தால் போதும் ! ஆனால் அந்தக்**
**காரியக்காரர்களையே இழித்தால் தமக்கே தீங்கு வரும் !**

*894.* *கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்*
*காற்றாதார் இன்னா செயல்*

**'கூற்றவன்' எனப்படும் உயிரையும், உடலையும்**
**கூறுபடுத்தும் தொழிலைச் செய்யும் 'எமன்' என்னும்**
**கூற்றுவனை நாமே விரும்பி விளித்துக்**
**கூப்பிடுவது போல – ஆற்றல் உடையவர்களுக்கு – கொஞ்சம்**
**கூட ஆற்றல் இல்லாதவர் தீங்கு செய்வது !**

*895.* *யாண்டுச்சென் றியாண்டும் உளராகார் வெந்துப்பின்*
*வேந்து செறப்பட் டவர்*

**'வேந்து' எனும் ஐம்புலன்களையும் அடக்கி**
**வேதனைகளைப் போக்கும் இறைமை கொண்ட**
**பெரியோரை வெந்து – கோபப்பட வைத்தவர்**
**பெரு நிலத்தில் எங்கு சென்றாலும் வாழ முடியாது !**

896. *எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்*
*பெரியார்ப் பிழைத்தொழுகு வார்*

**எரியும் நெருப்பினால் சுடப்பட்டாலும்**
**எப்படியும் தப்பிப் பிழைத்து விடலாம் ! – ஆனால்**
**அறிவிற் சிறந்த பெரியாரிடம் பிழை செய்துவிட்டால்**
**அரிதிலும் அரிது தப்பிப் பிழைப்பது !**

897. *வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னாம்*
*தகைமாண்ட தக்கார் செறின்*

**வளமான வானளவு செல்வச் செழிப்புடன்**
**வகை வகையான வாழ்க்கைச் சுகங்களை**
**வகை தொகை புரியாமல் அனுபவித்தாலும்**
**தகுதிகள் நிறைந்த அறிவுடையோரின்**
**தகாத சினத்திற்கு ஆளாகிவிட்டால் ஒரு பயனும் இல்லை !**

898. *குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியொடு*
*நின்றன்னார் மாய்வர் நிலத்து*

**குன்று போல் உயர்வான பெருமைகளைக்**
**குவித்து வைத்திருக்கும் பெரியோரின் பெருமையைக்**
**குறைத்து மதித்து அதை அடியோடு**
**குலைப்பதற்கு முயல்பவர்கள்**
**குன்றா செல்வந்தராயினும்**
**குடும்பத்தோடு அழிந்து விடுவர் !**

899. *ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து*
*வேந்தனும் வேந்து கெடும்*

**உயர்ந்த தவக் கொள்கையில்**
**உறுதி கொண்ட பெரியோர்கள்**
**சீற்றம் கொண்டு விட்டால்**
**சீறிய வேந்தனும் இடைக்காலத்திலேயே பதவி இழப்பான் !**

900. *இறந்தமைந்த சார்புடையர் ஆயினும் உய்யார்*
*சிறந்தமைந்த சீரார் செறின்*

**வரம்பு கடந்த அதிகார**
**வலிமையைக் கொண்டவராயினும்**
**உயர்ந்த பண்புகளில் சிறந்தவர்களின்**
**உச்ச கோபத்திற்கு ஆளானால்**
**உருப்படியாய்த் தப்பிப் பிழைக்க முடியாது !**

# 91. பெண்வழிச் சேறல்

**901.** *மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்*
*வேண்டாப் பொருளும் அது*

**மனைவியை விரும்பி அவளுக்கு அடங்கி நடப்பவர்**
**மறக்க வேண்டியது மாட்சிமைப் பயனை!**
**மாபெரிய காரியங்களையும் கடமையையும்**
**மறக்கும் பொருளும் அதுவே !**

**902.** *பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்*
*நாணாக நாணுத் தரும்*

**கடமையைப் பெரிதாக எண்ணிப் பேணாமல்**
**கட்டிய மனைவியின் விருப்பத்தை மட்டுமே**
**கடமையே எனப் பெரியதாக எண்ணியவனின்**
**வெள்ளமென இருக்கும் செல்வம்**
**வெட்கக் கேட்டுக்குரியதாகி வேதனையைத் தரும் !**

**903.** *இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்*
*நல்லாருள் நாணுத் தரும்*

**இல்லாள் முன் பணிந்து தாழ்ந்து போகும்**
**இயல்பு கொண்ட ஆண்மகன் – மிக்க**
**ஆண்மையுள்ளவர் நடுவே செல்ல**
**ஆனமட்டும் நாணம் ஆக வரும் என்றும் !**

**904.** *மனையாளை யஞ்சும் மறுமையி லாளன்*
*வினையாண்மை வீறெய்த லின்று*

**மனைவிக்கு எப்போதும் அஞ்சும்**
**மறுமைப் பயன் இல்லாதவன் – அரிய**
**செயல் புரியும் ஆண்மை யுடையவனாக இருந்தாலும்**
**செருக்கான "வீறு" எனும் சிறப்பு இருக்காது !**

**905.** *இல்லாளை யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்றும்*
*நல்லார்க்கு நல்ல செயல்*

**இல்லாளுக்கு எப்போதும் அஞ்சுபவன்**
**இல்லம் முழுதும் தான் தேடிய செல்வமாக**
**இருந்தாலும் அதன் மூலம் நல்லார்க்கு**
**இணங்கும் நல்ல செயல் செய்ய அஞ்சுவான் !**

**906.** *இமையாரின் வாழினும் பாடிலரே யில்லாள்*
*அமையார்தோ ளஞ்சு பவர்*

**'இமையார்' என்ற தேவரைப் போல்**
**இன்பமாக வாழ்ந்தாலும்**
**இல்லாளின் தோள் தழுவும்**
**இன்பத்திற்காக அடங்கி அஞ்சுபவனுக்கு**
**இல்லாது போகும் பெருஞ் சிறப்பு !**

**907.** *பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்*
*பெண்ணே பெருமை உடைத்து*

**பெண் ஏவல் செய்வதைச் சிரமேற்கொண்டு**
**பெரிதும் ஏற்றுக் கொள்ளும் ஆண்மையை விட**
**பெண்மையின் சிறப்பான நாணத்தை கொண்ட**
**பெண்ணின் பெண்மையே பெருமை உடைத்து !**

**908.** *நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்*
*பெட்டாங் கொழுகு பவர்*

**நண்ணுதலாள் எனப்படும் நல்ல நெற்றியுடைய**
**நல்ல அழகுள்ள பெண்ணிடம் மயங்கி**
**நவிலும் சொல்லை அப்படியே ஏற்று நடப்பவர்**
**நண்பர்களின் குறையையும் தீர்க்க மாட்டார்**
**நன்மைகளைப் பிறருக்கும் செய்ய மாட்டார் !**

**909.** *அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்*
*பெண்ணேவல் செய்வார்கண் இல்*

**ஆணவம் கொண்ட பெண்கள் இருக்கின்ற**
**ஆணைகளுக்கு அடங்கி இயங்கும்**
**ஆண்கள் அறச்செயல்களையும்**
**ஆகின்ற பொருள் வருவாயையும்**
**ஆன பிற இன்பங்களையும் தேட முடியாது !**

**910.** *எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்*
*பெண்சேர்ந்தாம் பேதைமை இல்*

**எண்ணி முடிவு காணும் நெஞ்சுறுதி**
**என்றும் உடையவர்க்கு மதி மயங்கி**
**பெண்ணையே சுற்றிச் சுற்றி வந்து சேரும்**
**பெரும் அறியாமை எனும் பேதைமை இருக்காது !**

# 92. வரைவின் மகளிர்

**911.** *அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்*
*இன்சொல் இழுக்குத் தரும்*

**பொன்னான அன்பினைப் பற்றாமல்**
**பொருளினை மட்டும் பற்றி விழையும்**
**பொது மகளிர் போலியாக இனிமை ததும்பி**
**பொருந்தாமல் பேசுவதை நம்பினால் இறுதியில் துன்பமே !**

**912.** *பயன்தூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்*
*நயன்தூக்கி நள்ளா விடல்*

**பெறப் போகும் பயனையும் பொருளையும்**
**பெரிதாக எண்ணி அதன் அளவு பார்த்து – இனிமையாகப்**
**பெரும் பேச்சு பேசும் பொதுமகளிர் உறவைப்**
**பெற்று ஒரு போதும் நம்பி ஏமாறுதல் கூடாது !**

**913.** *பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்*
*ஏதில் பிணந்தழீஇ அற்று*

**பொருளை விரும்பும் பொருட் பெண்டிர் எனும்**
**பொது மகளிர் தொழிலுக்காக ஆடவரைப்**
**பொய்யாகத் தழுவும் முயக்கம் – இருள்**
**பொதிந்த அறையில் அந்நியமான – சற்றும்**
**பொருந்தாத உறவில்லாத பிணத்தை ஆரத்தழுவுவது போல !**

**914.** *பொருட்பொருளார் புன்னலந் தோயார் அருட்பொருள்*
*ஆயும் அறிவி னவர்*

**அருட் செல்வமாகியப் பேரின்பத்தை நாடும்**
**அறிவுடையோர்கள், அருட் செல்வந்தர்கள்**
**பொருளை மட்டுமே வாழ்வில் விரும்பும்**
**பொது மகளிரின் அற்ப சுகத்தைத் தீண்ட மாட்டார் !**

**915.** *பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின்*
*மாண்ட அறிவி னவர்*

**பொதுவாகவே மதி அறிவும் கற்றறிவும் கொண்ட**
**பொது அறிவு மிக்கவர்கள், அறிஞர் பெருமக்கள்**
**பொருள் தருகின்ற எல்லோருக்கும் வித்தியாசமில்லாமல்**
**பொதுவாக எல்லையற்ற இன்பம் தருகின்ற**
**பொது மகளிரின் இழிவான தொடர்பை விரும்ப மாட்டார்கள் !**

916. *தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்*
*புன்னலம் பாரிப்பார் தோள்*

**தன்னுடைய நலத்தை, புகழை விரும்புவர்**
**"தகை" எனும் அழகினை வெளிச்சம் போட்டு**
**தக்கபடி காட்டி செருக்கடைந்து களிப்பில்**
**தருகின்ற புன்னலம் எனும் சிற்றின்பத்திற்குத் –**
**தக்க விலை கேட்கும் மகளிரின் தோளில்**
**தடுமாறி சாய்ந்து கிடக்க மாட்டார் !**

917. *நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்*
*பேணிப் புணர்பவர் தோள்*

**நெஞ்சத்தில் ஒழுக்கத்தை நிலைநிறுத்த**
**நெடுங்காலம் முடியாதவரே – என்றும்**
**"நெடுந்தகை" எனும் நற்குணத்தைத் தொடர முடியாதவரே**
**நெஞ்சில் பிற ஆசைகளைத் தன்னகத்தே**
**நெருக்கமாகக் கொண்ட பொதுமகளிரின் தோளைத் தழுவுவர் !**

918. *ஆயும் அறிவினர் அல்லார்க் கணங்கென்ப*
*மாய மகளிர் முயக்கு*

**பொது மகளிரின் வஞ்சனையை ஆய்ந்து அறியும்**
**பொது அறிவு இல்லாதவர்களுக்குப்**
**பொது மகளிர் அணங்கு எனும் ஆசை போல்**
**பொருத்தமாகத் தழுவித்தரும் இன்பத்தைப்**
**பொருந்திச் சொல்வார்கள் "மாய மோகினி"யின் முயக்கு என்று !**

919. *வரைவிலா மாணிழையார் மென்தோள் புரையிலாப்*
*பூரியர்கள் ஆழும் அளறு*

**ஒழுக்கத்திற்கு வரைவு எல்லையேயில்லாத – எவர்**
**ஒருவருக்கும் விலை கொடுத்தால் சாயும்**
**பொது மகளிரின் மென்மையான தோளே**
**பொது அறிவில்லாதவர் ஆழ்ந்து கிடக்கும் நரகமாகும் !**

920. *இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்*
*திருநீக்கப் பட்டார் தொடர்பு*

**கள்ளத்தனமாக அகமும் புறமும் இருமனத்தை**
**கவர்ப்புடன் பிரித்து வாழும் பொது மகளிர்,**
**கள், 'கவறு' எனப்படும் சூது**
**கமலை எனும் திருமகளால் நீக்கப்பட்டவர்களே உறவாடுவர் !**

## 93. கள்ளுண்ணாமை

**921.** *உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்*
*கட்காதல் கொண்டொழுகு வார்*

**கள்ளின் மேல் காதல் கொண்டு**
**கள் மயக்கத்திலேயே எப்போதும் இருப்பவர்களைக்**
**கண்டு பகைவர்கள் பயப்பட மாட்டார்கள் !**
**கள் குடியர் தம் மதிப்பையும் இழப்பர் !**

**922.** *உண்ணற்க கள்ளை உணிலுண்க சான்றோரான்*
*எண்ணப் படவேண்டா தார்*

**கள்ளை குடிக்காதீர்கள்...!**
**கற்றவர்கள் – சான்றோர்கள் மதிப்பைப் பெற**
**கனவிலும் நினைக்காதவர்கள் வேண்டுமானால்**
**கள்ளைக் குடிக்கலாம்...!**

**923.** *ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்*
*சான்றோர் முகத்துக் களி*

**கருவறையில் பத்து மாதம் சுமந்து பெற்றவள் முன்பு**
**கள்ளருந்தி களித்து மயங்கும் மகனை**
**கண்டால் ஈன்றவள் முகமே வெறுப்பாகும் போது**
**கற்ற சான்றோரின் முகத்தில் எப்படி மகிழ்ச்சி உண்டாகும் ?**

**924.** *நாணென்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்*
*பேணாப் பெருங்குற்றத் தார்க்கு*

**நாடே இகழும் ‘கள்’ எனும் மயக்கத்தை**
**நாடும் பெருங் குற்றத்தாரைக் கண்டு**
**நாணம் எனும் நல்லவள் முகத்தைக் காட்ட**
**நாணி புறமுதுகிட்டு போய் விடுவாள் !**

**925.** *கையறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து*
*மெய்யறி யாமை கொளல்*

**மெச்சும் பொருளை செலவு செய்து**
**மெய் மறக்க வைக்கும் கள்ளைக் குடித்து**
**செயல் மறந்து மதி மயங்கக் காரணம்**
**செயலறியாமை எனும் மூடத்தனமே !**

926. *துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்*
*நஞ்சுண்பார் கள்ளுண் பவர்*

**கண் துஞ்சி உறங்குபவரும் – உயிர்**
**கவர்ந்து செத்தாரும் வேறு வேறல்லர் !**
**அதுபோல் எல்லாக் காலமும் – உயிரை**
**அழிக்கும் நஞ்சு உண்பவரும் கள் உண்பவரும் வேறு வேறல்லர் !**

927. *உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்*
*கள்ளொற்றிக் கண்சாய் பவர்*

**மறைந்திருந்து கள்ளைக் குடித்து**
**மயங்கி சரிந்தாலும் அவர்கள் குடித்ததை**
**மறைக்க முடியாமல் அவர்களது விழிகளே சுழன்று**
**மயங்குவதைக் கண்டு உள்ளூரில் வாழும்**
**மக்கள் உள்ளத்தால் எள்ளி நகையாடுவர் !**

928. *களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்*
*தொளித்ததூஉம் ஆங்கே மிகும்*

**கள்ளைக் குடிக்கவே மாட்டேன் எனக்**
**கள் குடிப்பவன் பொய் சொல்வதை விட்டு விட வேண்டும் !**
**மறைத்த உண்மையை குடித்த கள்**
**மனதிலிருந்து மறக்காமல் மறைக்காமல் வெளியே கொட்டி விடும் !**

929. *களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்*
*குளித்தானைத் தீத்துரீஇ அற்று*

**கள்ளுண்டு களித்தவனை – குடிக்காதே**
**கள்ளை என கண்டித்து அறிவுரைப்பது**
**நீருக்குள் மூழ்கியவனை – தீப்பந்தம் கொண்டு**
**நீரில் துளாவி தேடுவதைப் போல !**

930. *கள்ளுண்ணாப் போழ்திற் களித்தானைக் காணுங்கால்*
*உள்ளான்கொல் உண்டதன் சோர்வு*

**கள் உண்ணாத பொழுது குடிகாரன்**
**கள் குடித்து களிக்கின்ற இன்னொருவரைக்**
**களித்து மயங்கி சோர்ந்து கிடப்பதை**
**கண்ட பிறகாவது அவமானப்பட்டுத் தானும்**
**கள் குடித்த பின் இந்த அவல நிலை தானே என உள்ளத்தால்**
**கண்டுணர மாட்டானா ?**

## 94. சூது

**931.** *வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்*
*தூண்டிற்பொன் மீன்விழுங்கி அற்று*

**வெற்றியே பெறுவதாயினும் சூதாட்டத்தின்**
**வெற்றி வேண்டவே வேண்டாம் ! – அது**
**தூண்டிலில் இரும்பு முள்ளில் கோர்த்த உணவை உண்ணத்**
**தூண்டிய மனதினால் – இரும்பு முள்ளையே**
**தூவிய உணவாய்க் கௌவிக் கொண்டது போல !**

**932.** *ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்*
*நன்றெய்தி வாழ்வதோர் ஆறு*

**நூலிழையில் ஒன்றை முதலில் பெற்று**
**நூறு பொருளை பின் தொடர்ந்து இழக்கும்**
**சூதாட்டத்தை மிகவும் விரும்பும்**
**சூதாட்டக்காரர்கள் அறமும் இன்பமும்**
**சூழ்ந்த நல் வாழ்க்கை எய்துதல் முடியாது !**

**933.** *உருளாயம் ஓவாது கூறிற் பொருளாயம்*
*போஒய்ப் புறமே படும்*

**உருளுகின்ற பகடைக் காய்களை**
**உருட்டிப் பந்தயம் கூறும் சூதாட்டத்தால்**
**ஓங்கிய செல்வமும், செல்வம் வந்த வழி முறையும்**
**ஓய்ந்த பிறகே சூதாட்டம் ஓயும் !**

**934.** *சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்*
*வறுமை தருவதொன் றில்*

**சூதை விரும்புபவர்களுக்குப் படை**
**சூழ சிறுமைகள் பல வந்து – அவர்கள் வாழ்வைச்**
**சீரழித்து சிறப்பினை அழிக்கும் சூதாட்டத்தைப் போல்**
**சீரிய வறுமை தருவது வேறொன்றுமில்லை !**

**935.** *கவறும் கழகமும் கையும் தருக்கி*
*இவறியார் இல்லாகி யார்*

**சூதாட்டத்திற்குப் பயன்படும் விளையாட்டுக் கருவியையும்**
**சூதாட்டம் ஆடுகின்ற இடமான விளையாட்டுக் கழகத்தையும்**
**சூதாடும் செயலையும் கைவிடாதவர்**
**சூழ்ந்து தங்கிய செல்வம் அத்தனையும் இழந்து**
**சுகங்கெட்டுப் போவர் !**

936. *அகடாரார் அல்லல் உழப்பர்சூ தென்னும்*
*முகடியான் மூடப்பட் டார்*

**'சூது' எனும் மூதேவியால் முழுதும்**
**சூழ்ந்து ஆட்கொள்ளப்பட்டவர்**
**பசி அடங்க வயிராற உண்ண மாட்டார்**
**பல கபடங்களுக்கும் ஆளாகி அழிவர் !**

937. *பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்*
*கழகத்துக் காலை புகின்*

**சூதாடும் விளையாட்டுக் கழகத்திலேயே**
**சூதாடவே காலத்தைக் கழிப்பவன் –**
**பூர்வீகமாக வந்த சொத்தையும் இழப்பான்**
**பூட்டிக் காப்பாற்றிய நற்பண்பையும் இழப்பான் !**

938. *பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ அருள்கெடுத்*
*தல்லல் உழப்பிக்கும் சூது*

**உள்ள பொருளையும் கெடுத்து**
**உண்மையை மறைத்துப் பொய் சொல்ல வைத்து**
**உள்ளத்தில் அருளையும் ஒழித்து**
**உய்யும் துன்பத்தை வலிமையாக்கும் "சூது" !**

939. *உடைசெல்வம் ஊணொளி கல்வியென் றைந்தும்*
*அடையாவாம் ஆயங் கொளின்*

**உடுக்க நல்ல உடை, உய்ய நிறைந்த செல்வம்**
**உண்ண வயிறார உணவு, உருவான நல் மதிப்பு**
**உயர்ந்த கல்வி, உள்ள இந்த ஐந்தும் – சூதாட்டத்தில்**
**உறைந்தவனுக்கு அடையாத நிலையே !**

940. *இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்*
*உழத்தொறூஉம் காதற் றுயிர்*

**உள்ளத்தில் வருத்தங்கள் சேரச்சேர**
**உயிர் மேல் காதல் வருவது போல்**
**சூதாடச் சூதாட பொருளை இழந்தாலும் – மேலும்**
**சூதாட காதல் வரும் !**

## 95. மருந்து

**941.** *மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்*
*வளிமுதலா எண்ணிய மூன்று*

**வாழ வைக்கும் மருத்துவர்கள் கூறும்**
**வாதம், பித்தம், கபம் என்ற மூன்றும்**
**உடலில் மிகுந்தாலும், குறைந்தாலும்**
**உடம்பில் பல நோய்கள் ஏற்படும் !**

**942.** *மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய*
*தற்றது போற்றி உணின்*

**உடல் வளர்ச்சிக்காக ஏற்கெனவே உண்ட**
**உணவு முற்றிலும் செரிமானம் ஆகிவிட்டதா என**
**உணர்ந்து அடுத்த வேளை உணவை**
**உண்டால் "யாக்கை" என்றழைக்கப்படும்**
**உடம்பிற்கு மருந்தே தேவையில்லை !**

**943.** *அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு*
*பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு*

**உண்டது செரித்த பின்பு - இரண்டு**
**உணவு உண்பதற்கு இடையில் உள்ள**
**கால அளவறிந்து மீண்டும் உண்பது**
**காலா காலத்திற்கும் உடம்பை வாழ வைக்கும் வழி !**

**944.** *அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல*
*துய்க்க துவரப் பசித்து*

**உடம்பிற்கு ஒத்துக் கொள்கிற**
**உணவு வகைகளை கண்டு ஆராய்ந்து - முன்**
**உண்ட உணவு செரித்ததை அறிந்து**
**உரிய பசி வந்த பிறகே, உணவை உண்ண வேண்டும் !**

**945.** *மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்*
*ஊறுபா டில்லை உயிர்க்கு*

**உடம்புக்கு ஒத்துக் கொள்கிற**
**உணவு வகைகளையும், அளவுக்கதிகமாக**
**உண்பதை மறுத்து அறுசுவையானாலும் அளவோடு**
**உண்டால் உயிருக்கு ஊறுபாடில்லை !**

**946.** *இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்*
*கழிபேர் இரையான்கண் நோய்*

**இளைக்கும் குறைந்த உணவின் அளவறிந்து**
**இறுதி வரை உண்டால் இன்பமே !**
**இல்லையேல் அளவறியாமல் அதிகமாக**
**இருக்கிற வரை உணவை உண்பவர் நோய்க்கு**
**இரையாவது இயற்கையே !**

**947.** *தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்*
*நோயள வின்றிப் படும்*

**பசித் தீயின் அளவறியாமல், சீரண சக்திக்கு**
**பளுவாக அதிக அளவு உண்பவனுக்கு**
**பற்றும் நோய்களும் அளவுக்கு அதிகமாக இருக்கும் !**

**948.** *நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்*
*வாய்நாடி வாய்ப்பச் செயல்*

**நோய் என்ன என்பதனை ஆராய்ந்து**
**நோய் வரும் காரணம் என்னவென்பதையும் ஆராய்ந்து – அந்**
**நோயைத் தீர்க்கும் வழியினையும் ஆராய்ந்து**
**நோகாமல் உடம்பிற்கு பொருந்துவற்றால்**
**நோய் நீப்பதே சிறந்த மருத்துவம் !**

**949.** *உற்றான் அளவும் பிணியளவும் காலமும்*
*கற்றான் கருதிச் செயல்*

**நோயுற்றவனின் வயதையும்,**
**நோயின் தன்மையையும்**
**நோயின் கால அளவையும்**
**மருத்துவம் கற்ற மருத்துவன்**
**மனதில் கொண்டு மருந்து தர வேண்டும் !**

**950.** *உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்*
*றப்பானாற் கூற்றே மருந்து*

**நோயைப் பெற்ற நோயாளி, நோயைத் தீர்க்கும் மருத்துவன்**
**நோய்க்கு தரப்படும் மருந்து, நோயாளிக்குத் துணையாளி –**
**நோக்கும் இவை நான்கும்**
**நோய் தீர்க்கும் மதுத்துவம்**
**"நோய்" என்ற "வலிமை"மிகு கூறுகள் !**

## 96. குடிமை

*951.* *இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை இயல்பாகச்*
*செப்பமும் நாணும் ஒருங்கு*

**நடுவு நிலைமை தவறாத செம்மையும்**
**நடுங்கி நாண வேண்டியதற்கு நாணுதலும் –**
**நல்ல குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு மட்டுமே**
**நயந்து ஒருங்கே கூடி வருமே தவிர மற்றவர்களுக்கு அல்ல !**

*952.* *ஒழுக்கமும் வாய்மையும் நாணுமிம் மூன்றும்*
*இழுக்கார் குடிப்பிறந் தார்*

**வாழ்க்கையில் ஒழுக வேண்டிய ஒழுக்கம்**
**வார்த்தையில் இருக்க வேண்டிய உண்மை**
**வாடிக்கையாக வெட்கப்படவேண்டியதற்கு வெட்கம்**
**வாய்க்கப் பெற்ற இம்மூன்றும்**
**வானுயர்ந்த குடியில் பிறந்தோர்களுக்கே !**

*953.* *நகையீகை இன்சொல் இகழாமை நான்கும்*
*வகையென்ப வாய்மைக் குடிக்கு*

**மலர்ந்த மகிழ்ச்சியான இன்முகம்**
**மற்றவர்களுக்கு வழங்கும் ஈகைக் குணம்**
**மலரும் வார்த்தைகளில் இனிமை**
**மற்றவர்களை எப்போதும் இகழாமை ஆகிய**
**மகிமை குணங்கள் நான்கும் உள்ளவர்களை**
**மதிப்பு மிக்க வாய்மையுள்ள குடிமக்கள் என வகைப்படுத்த முடியும்!**

*954.* *அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்*
*குன்றுவ செய்தல் இலர்*

**கோடி கோடியாகப் பொருளை அடுக்கிக்**
**கோர்த்துக் கொடுத்தாலும்**
**நல்ல குடியில் பிறந்தவர்கள்**
**நல்லொழுக்கத்திற்குக் குறைவான செயலை செய்ய மாட்டார்கள் !**

*955.* *வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி*
*பண்பின் தலைப்பிரிதல் இன்று*

**வழங்குவதற்குப் பொருள் சுருங்கி**
**வறுமை வாட்டிய போதும்**
**பழம் பெருமை வாய்ந்த குடியில் பிறந்தவர்கள்**
**பரந்த மனதோடு பிறருக்கு வழங்கும்**
**பண்பை இழக்க மாட்டார்கள் !**

956. *சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற*
*குலம்பற்றி வாழ்துமென் பார்*

**மனதில் மாசற்ற பண்புடன் வாழலாம் என**
**மனதில் உறுதி பூண்டவர்**
**வஞ்சனை கொண்டு கோபத்தின் காரணமாக**
**வரைமுறை தவறி எதையும் செய்ய மாட்டார் !**

957. *குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்*
*மதிக்கண் மறுப்போல் உயர்ந்து*

**சிறந்த குடியில் பிறந்தவர்கள் செய்த**
**சிறிய குற்றமாக ஆனாலும்**
**வானத்து சந்திரனிடத்தில் காணப்படும்**
**வான் ஒளியில் மிளிரும் களங்கம் போல**
**வானளாவ தெரிந்து விடும் !**

958. *நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்*
*குலத்தின்கண் ஐயப் படும்*

**நல்ல குடியில் பிறந்திருந்தாலும்**
**நலமாக செல்வத்துடன் வாழ்ந்தாலும்**
**நடைமுறையில் அன்பில்லாமலிருந்தால் – பிறந்தது**
**நற்குடியில் தானா என்ற சந்தேகம் வரும் !**

959. *நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்*
*குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்*

**விளைந்த பயிரைப் பார்த்தவுடன்**
**விளைநிலத்தின் தன்மை தெரிந்து விடும் – அதுபோல்**
**விழுந்த வாய்ச் சொற்களை வைத்து**
**விதைத்த குலத்தின் தன்மை தெரிந்து விடும் !**

960. *நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்வேண்டின்*
*வேண்டுக யார்க்கும் பணிவு*

**நாடுவது நன்மை எனில் – பழிக்கு அஞ்சி**
**நாணம் உடையவனாக இருக்க வேண்டும் !**
**பிறந்த குலத்தின் உயர்வு வேண்டுமெனில்**
**பிறரிடம் பணிவு வேண்டும் !**

## 97. மானம்

961. *இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்*
*குன்ற வருப விடல்*

**செய்தே தீர வேண்டிய காரியமானாலும் – அந்தச்**
**செயலைச் செய்தால் குடிப்பெருமையின்**
**செம்மை குறையுமெனில் அச் செயலை**
**செய்யவே கூடாது !**

962. *சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு*
*பேராண்மை வேண்டு பவர்*

**சிறப்பான புகழையும்**
**சிறக்கும் பேராண்மையும் வேண்டுபவர் –**
**சிறப்பை எப்படியும் அடைய வேண்டும் என்பதற்காகச்**
**சிறுமை தரும் மானமில்லா செயல்களைச்**
**சிறிதும் செய்ய மாட்டார் !**

963. *பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய*
*சுருக்கத்து வேண்டும் உயர்வு*

**உற்ற செல்வம் பெருகி வரும் போது**
**உள்ளத்தில் பணிவு வர வேண்டும் !**
**உயர்ந்த செல்வம் சுருங்கிப் போகும் போது**
**உள்ளத்தில் தன்மான உணர்வு தலை**
**உயர்ந்து நடக்குமாறு உணர வேண்டும் !**

964. *தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்*
*நிலையின் இழிந்தக் கடை*

**உயர்ந்த ஒழுக்க நெறியிலிருந்து**
**உறுதியில்லாமல் தவறியவர்கள் – தலையிலிருந்து**
**உதிர்ந்த மயிருக்குச் சமமாக கருதப்படுவர் !**

965. *குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ*
*குன்றி அனைய செயின்*

**குன்றினைப் போல் உயர்ந்து,**
**குன்றாப் பெருமையால் பெருமையாக நிற்பவர்கள்**
**குன்றிமணி அளவு கூட இழிவான செயலில் ஈடுபட்டால் – தாழ்ந்து**
**குன்றிப் போய் விடுவார்கள் !**

**966.** *புகழின்றால் புத்தேணாட் டுய்யாதால் என்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை*

**மானத்தை விட்டு இகழ்வார் பின்னே – அவ
மானத்துடன் பின்னே பணிந்து செல்வதால்
இவ்வுலகத்தில் புகழும் இல்லை –
இனிவரும் வானுலகச் சொர்க்கமும் இல்லை !**

**967.** *ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று*

**இகழ்வார் பின்னே சென்று பொருளை
இறைஞ்சி பெற்று அதனால் ஒருவன்
இறவாமல் உயிர் வாழ்வதை விட
இறந்து விடுவதே மேல் !**

**968.** *மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த இடத்து*

**மானம் என்பது உயிருக்கு நிகரானது
மானம் தருகின்ற பெருந் தகைமை அழியும்படி
மானத்தைக் கெட்டுப்போக விட்டு
உடம்பை மட்டும் காக்கின்ற மருந்து
உயிரைக் காக்கும் மருந்தாகுமா ?**

**969.** *மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்*

**உடலில் உள்ள மயிர் நீங்கினால்
உயிர் வாழாத கவரிமானைப் போல்
உயர்வான மானம் அழிந்தால்
உயர்ந்த மனிதர்கள் உயிர் வாழ மாட்டார்கள் !**

**970.** *இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழு தேத்தும் உலகு*

**உண்மையில் இழிவு ஏற்படும் போது
உள்ளத்தில் அதைத் தாங்கிக் கொண்டு
உயிர் வாழாத மானம் உடையவரின்
உயர்ந்த புகழ் ஒளியை, உலகம் போற்றி வணங்கும் !**

## 98. பெருமை

**971.** *ஒளியொருவர்க் குள்ள வெறுக்கை இளியொருவற்*
*கஃதிறந்து வாழ்தும் எனல்*

**பிறரால் செயற்கரிய செயல்களை**
**பிறந்த பலனாகச் செய்வோம் என்ற**
**வாழ்வில் உள்ள ஊக்கமே ஒளியாகும் !**
**வாழ்க்கையில் ஊக்கமில்லாமல் எப்படியும்**
**வாழலாம் என்ற நினைப்பே இழிவானது !**

**972.** *பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான்*

**பிறந்த எல்லா மக்கள் உயிர்க்கும்**
**பிறப்பியல்பு என்பது சமமே !**
**பிறந்தவர் செய்யும் செயல்களில் – அருமையைப்**
**பிரித்தாய்ந்து தம் திறமையைப்**
**பிரகாசமாய் காட்டுவதில் தான் வேற்றுமையே !**

**973.** *மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்*
*கீழல்லார் கீழல் லவர்*

**மேலிடத்தில் இருந்தாலும்,**
**மேன்மையான செயல்களைச் செய்யாதவர்**
**மேலானவர்கள் அல்ல !**
**கீழ்மட்டத்தில் இருந்தாலும்,**
**கீழானச் செயல்களை செய்யதாதவர்**
**கீழானவர்கள் அல்ல !**

**974.** *ஒருமை மகளிரே போலப் பெருமையும்*
*தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு*

**தன் நிலையைத் தவற விடாமல்**
**தன்னைத் தானே காத்துக் கொண்டு**
**தன்னிகரில்லாமல் ஒருவன் வாழ்வானேயானால்**
**தவ ஒழுக்கத்தினால் கற்புள்ள மகளிர்க்கு உள்ள**
**தகை சால் பெருமை போல் சிறப்பு கிடைக்கும் !**

**975.** *பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்*
*அருமை யுடைய செயல்*

**பெருமைக்கு உரியர் யார் எனில்**
**பெரிய – அரிய – பெருமையுடைய**
**செயல்களை முறையறிந்து திறம்படச்**
**செய்து முடிப்பவரே ஆவர் !**

976. *சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்*
*பேணிக்கொள் வேமென்னும் நோக்கு*

**ஏற்றமிகு பெரியோர்களைப் போற்றி**
**ஏகபோகமாய் இருக்கும் அவர்தம் பண்புகளை**
**ஏற்றுக் கொள்வோம் என்கின்ற**
**ஏற்றமிகு நோக்கம் என்றும்**
**ஏகத்திற்கும் சிறியோரின் உணர்வில் இருப்பதில்லை !**

977. *இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்பும்தான்*
*சீரல் லவர்கண் படின்*

**சீரில்லாத இழிந்தவர்களிடம் போய்**
**சீரான செல்வமும் மற்ற சிறப்புகளும்**
**வந்து அடைந்து விட்டால் அவர்கள்**
**வரம்பு மீறிச் செயல்படுவது இயற்கை !**

978. *பணியுமாம் என்றும் பெருமை சிறுமை*
*அணியுமாம் தன்னை வியந்து*

**பெருந்தன்மையான பெருமைக் குணம்**
**பெற்றவர் எப்போதும் பணிந்து இருப்பர் !**
**பெருமையற்ற சிறுமைக் குணம்**
**பெற்றவர் எப்போதும் தன்னையே**
**பெரிதும் வியந்து போற்றிப்**
**பெருமை பேசி தற்புகழ் மாலை அணிந்து கொள்வர் !**

979. *பெருமை பெருமிதம் இன்மை சிறுமை*
*பெருமிதம் ஊர்ந்து விடல்*

**பெருமிதம் இல்லாமல் அடக்கத்தைப்,**
**பெற்றிருப்பது பெருமை !**
**பெருமிதமாக ஆணவத்தின் எல்லைக்கே சென்று**
**பெருங்கர்வமாக இருப்பது சிறுமை !**

980. *அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்*
*குற்றமே கூறி விடும்*

**பெருமையுடையார் பிறர் குற்றத்தைப்**
**பெரிதாக வெளியே தெரியாமல் மறைத்து நிற்பர் !**
**பெருமையற்ற சிறுமை உடையவர் – பிறர் குணத்தைப்**
**பெரிதாக மறைத்து, குற்றத்தை மட்டும் கூறி நிற்பர் !**

## 99. சான்றாண்மை

981. *கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து*
*சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு*
**சாதிக்க வேண்டிய கடமைகளை உணர்ந்த**
**சான்றாண்மை கொண்டவர்கள் – அவர்கள்**
**அறிவுக்கு நல்ல காரியம் என்று**
**அறியப்படுகிற காரியங்கள் எல்லாமே**
**அறுதியிட்டுச் செய்ய வேண்டிய கடமை எனக் கொள்வார்கள் !**

982. *குணநலஞ் சான்றோர் நலனே பிறநலம்*
*எந்நலத் துள்ளதூஉ மன்று*
**சான்றோர்களின் சிறப்பு என்பது – அவர்களைச்**
**சார்ந்த சிறப்பான குண நலமே !**
**சாற்றும் பிற சிறப்புகள் வேறு எதிலும்**
**சான்றான பெருஞ்சிறப்பு அது போல இல்லல !**

983. *அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ*
*டைந்துசால் பூன்றிய தூண்*
**மற்றவர்களிடம் காட்டும் அன்பு**
**மட்டப்படுத்தும் பழிக்கு அஞ்சும் நாணம்**
**மற்றர்வகளுக்கு உதவும் பண்பு**
**மற்ற உயிர்களிடம் காட்டும் இரக்கம்**
**மறைக்காமல் பேசும் வாய்மை – சான்றாண்மை யாவும்**
**மண்டபத்தைத் தாங்கும் ஐந்து போன்றதாம் !**

984. *கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை*
*சொல்லா நலத்தது சால்பு*
**"நோன்பு" என்பது எந்த உயிரையும்**
**நோகாத அழிக்காத அறம் !**
**"சால்பு" என்பது பிறர் தீமையைச்**
**சாடிச் சொல்லாத மேன்மை !**

985. *ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்*
*மாற்றாரை மாற்றும் படை*
**ஆணவமின்றிப் பணிவுடன் இருத்தலே,**
**ஆற்றலாளரின் ஆற்றல் !**
**ஆகவே அந்த அடக்கமே பகைவர்**
**ஆனாலும் பகைமையை மாற்றுகின்ற**
**ஆயுதமாக பயன்படுத்தப்படும் படை !**

986. *சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி*
*துலையல்லார் கண்ணும் கொளல்*

**"சால்பு" என்பது சான்றோரின் குணம்**
**சான்றாண்மைக்கு உரைகல் எதுவெனில்,**
**சிறியவர்களிடத்தில் தோற்றுப் போனாலும்**
**சிறிதும் கவலையற்று கண்ணியமாக ஒத்துக் கொள்வதே !**

987. *இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்*
*என்ன பயத்ததோ சால்பு*

**'இன்னா' எனும் துன்பம் செய்தவனுக்கு**
**இனிய நன்மைதனைத் திரும்பிச் செய்யாவிட்டால்**
**'சால்பு' எனும் "சான்றாண்மை" இருந்தும்**
**சாதிக்கப் போவது தான் என்ன ?**

988. *இன்மை ஒருவற் கிளிவன்று சால்பென்னும்*
*திண்மையுண் டாகப் பெறின்*

**'சால்பு' எனும் சான்றாண்மை பண்பில்**
**சார்ந்து வலிமையான மனஉறுதி கொண்ட**
**வல்லமையுடையவர்க்கு என்றும்**
**"வறுமை" என்பது "இழிவு" அல்ல !**

989. *ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்*
*காழி யெனப்படு வார்*

**ஆழ்ந்த சான்றாண்மைக் குணத்தில்**
**'ஆழி' எனும் கடல் போன்றவர்கள்**
**'ஊழி' எனும் உலகம் முடிவுக் காலம் எனும்**
**ஊறு வந்தாலும் தாழ்ந்து போக மாட்டார்கள் !**

990. *சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலத்தான்*
*தாங்காது மன்னோ பொறை*

**சான்றோர்களின் நற்பண்புகளே சரிவதற்கானச்**
**சான்றுகள் வரத் தொடங்கி விட்டால்**
**"சாந்தை" எனும் "பூமி" பாரம் தாங்காது !**

## 100. பண்புடைமை

*991. எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்*
*பண்புடைமை என்னும் வழக்கு*

**எவரிடத்திலும் எளிமையாகப் பழகினால்**
**எப்போதும் இரக்க குணம் பெற்றிருந்தால்**
**எய்தலாம் "பண்புடைமை" எனும் சிறப்பு !**

*992. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்*
*பண்புடைமை என்னும் வழக்கு*

**உள்ளத்தில் அன்புடையவராக இருப்பதும்**
**உயர்ந்த குடியில் பிறந்த இலக்கணத்திற்கு**
**உரியவராக நடந்து கொள்வதும் தான்**
**உயரிய "பண்புடைமை" எனும் நெறி !**

*993. உறுப்பொத்தல் மக்களொப் பன்றால் வெறுத்தக்க*
*பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு*

**ஒத்திருப்பது உறுப்புகள் என்பதால் – மக்கள் என**
**ஒத்துக் கொண்டதாக ஆகி விடாது !**
**ஒத்திருக்க வேண்டியது எப்போதும்**
**ஒப்பற்ற பண்பு நலன்கள் மற்றவை எல்லாம்**
**ஒப்பும் குண நலன்கள் தான் !**

*994. நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்*
*பண்புபா ராட்டும் உலகு*

**அறத்யையும் மற்றவர் நலத்தையும் விரும்பி**
**அனைவருக்கும் பயன்பட்டு வாழும்**
**அறிவுடையோரின் பண்பை**
**அகிலமே பாராட்டும் !**

*995. நகையுள்ளும் இன்னா திகழ்ச்சி பகையுள்ளும்*
*பண்புள பாடறிவார் மாட்டு*

**நகைச்சுவைக்காக கூட ஒருவரை**
**நகைத்து இழிவாகப் பேசினால்**
**நன்மையற்றுக் கேடு தான் விளையும் !**
**பண்புள்ளவர்கள் பகைவரிடத்திலும்**
**பண்பு தவறாமல் பேசுவார்கள் !**

**996.** *பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்*
*மண்புக்கு மாய்வது மன்*

**பண்பு "தக்கவர்களிடம்" நன்கு**
**பற்றிப் பொருந்தியிருப்பதாலேயே**
**மண்ணுலகம் அழியாமல் வாழ்கிறது ! – இல்லையேல்**
**மண்ணோடு மண்ணாக மாய்ந்து போயிருக்கும் !**

**997.** *அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்*
*மக்கட்பண் பில்லா தவர்*

**அரம் போன்று மிகக் கூர்மையான**
**அறிவினை பெற்றவராக இருந்தாலும்**
**"மக்கட் பண்பு" எனும் மனிதப் பண்பு இல்லையெனில்**
**மனமில்லா "மரத்திற்கு" சமமானவரே !**

**998.** *நண்பாற்றார் ஆகி நயமில செய்வார்க்கும்*
*பண்பாற்றார் ஆதல் கடை*

**நட்புக்கு ஏற்றவராக இல்லாமல்**
**நன்மைதனை செய்யாமல் – தீமை தனையே**
**நன்கு செய்பவர்க்கும் நாம்**
**நற்பண்போடு நன்மை செய்பவராய்**
**நடக்காவிட்டால் நாமே "இழிந்தவர்" ஆகிவிடுவோம் !**

**999.** *நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்*
*பகலும்பாற் பட்டன் றிருள்*

**யாரோடும் சிரித்துப் பழகி மகிழாதவர்களுக்கு**
**யாங்கணும் இவ்வுலகம் எப்போதும்**
**ஒளி உள்ள பகலிலும்**
**ஒளியற்ற இருளாகவே இருக்கும் !**

**1000.** *பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்*
*கலந்தீமை யால்திரிந் தற்று*

**நற்பண்பு இல்லாதவன் – வாழ்வில்**
**நயந்து பெற்ற பெருஞ்செல்வம் –**
**நல்ல பால் கொண்ட பாத்திரம்**
**"நவை" எனும் குற்றத்தால் – களங்கத்தால்**
**நலம் திரிந்து விடுவதைப் போன்றதாகும் !**

## 101. நன்றியில் செல்வம்

**1001.** *வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்*
*செத்தான் செயக்கிடந்த தில்*

**உறையும் மனை முழுக்க சேர்த்த பெருஞ்செல்வத்தை**
**உண்மையில் வாழ்வில் அனுபவிக்காமல்**
**உயிர் போன பிறகு அச்செல்வத்தால் உண்டாகும்**
**உண்மையான பயன்தான் என்ன ?**

**1002.** *பொருளானாம் எல்லாமென் றீயா திவறும்*
*மருளானாம் மாணாப் பிறப்பு*

**பொருளாதாரம் தான் எல்லாம் என்று**
**பொருளை விடாமல் பற்றிக் கொண்டு**
**பொருளை மற்றவர்களுக்கு ஈயாமல்**
**பொருள் மயக்கத்திலேயே இருப்பவனுக்குப்**
**பொன்னான பிறவிப்பயனே இல்லை !**

**1003.** *ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்*
*தோற்றம் நிலக்குப் பொறை*

**ஈட்டும் ஆசைதனை மட்டுமே அதிகமாக**
**ஈட்டிப் பொருளை மட்டுமே சேர்த்து**
**ஈட்ட வேண்டிய பெரும் புகழை**
**ஈர்க்க விழையா மக்கள் இந்த பூமிக்குப் பாரமாவர் !**

**1004.** *எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ ஒருவரால்*
*நச்சப் படாஅ தவன்*

**ஒரு பொருளையும் ஈயாதவன்**
**ஒருவராலும் விரும்பப்படாதவன் – இறப்பை**
**எய்த பிறகு வாழ்வின் மிச்சமாக**
**'எச்சம்' என்று எஞ்சி நிற்க எதையும் விட்டு வைக்காதவனே !**

**1005.** *கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய*
*கோடியுண் டாயினும் இல்*

**தாமாகப் பிறருக்குப் பொருளைக் கொடுப்பதும்**
**தாமே தம் பொருளை நுகர்வதும் – இரண்டும்**
**இல்லாதவரிடம் கோடி கோடியாக செல்வம்**
**இருந்தாலும் ஒரு பயனும் இல்லை !**

1006. *ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்கொன்*
*றீத லியல்பிலா தான்*

**தக்கபடி செல்வத்தைத் தானும் துய்க்காமல்**
**தக்கவர்களுக்குக் கொடுத்தும் உதவாமல்**
**தனக்கு மட்டும் சேர்த்து வைப்பவன்**
**தன்னிடமுள்ள செல்வத்தைத் தொற்றிய நோயாவான் !**

1007. *அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வம் மிகநலம்*
*பெற்றாள் தமியள்மூத் தற்று*

**வாழ்க்கை வசதி அற்றவர்களுக்கு**
**வாழ்க்கையில் எப்போதும் உதவி செய்து**
**வாழாதவனுடைய செல்வம் – பேரழகு வாய்க்கப் பெற்ற பெண் ஒருத்தி**
**வாழ்க்கை முழுவதும் தனியாகவே**
**வாழ்ந்து முதுமை அடைவதைப் போல !**

1008. *நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்*
*நச்சு மரம்பழுத் தற்று*

**நயந்து மற்றவர்களுக்குக் கொடுக்கப்படாததால் ஒருவனின்**
**"நச்சுதல்" எனும் "விரும்புதல்" இல்லாத செல்வம்**
**நடுவூரில் நடுநாயகமாகச் செழித்து வளர்ந்த**
**நச்சு மரத்தில் பூத்துக் குலுங்கும் பழங்களைப் போல !**

1009. *அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய*
*ஒண்பொருள் கொள்வார் பிறர்*

**உள்ளத்தில் அன்பின்றி; உண்ணாமல் உறங்காமல் – தன்னை**
**உள்ளபடி வருத்திக் கொண்டு**
**உயர்வான அறத்தையும் போற்றாமல்**
**உண்டாக்கிக் கொண்ட பெருஞ்செல்வத்தை**
**உய்த்துப் பயன்பெறுவது மற்றவர்களே !**

1010. *சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி*
*வறங்கூர்ந் தனைய துடைத்து*

**சீர்புகழ் கொண்ட செல்வத்தைச்**
**சீரோடும் சிறப்போடும் மற்றவர்களுக்காகச்**
**சீரிய முறையில் அள்ளித்தருபவர்**
**சீர்கெட்டுச் சிறிதளவே வறுமை யுற்றாலும் – அது**
**சீர்மை மழையின்றி வறண்டது போலத் துன்பமாகும் !**

## 102. நாணுடைமை

1011. *கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்*
*நல்லவர் நாணுப் பிற*
**இழிவான செயல்களைச் செய்வதற்கு**
**இழுக்கம் தரும் பழி பாவத்திற்கு**
**இரந்த நாணத்திற்கும், பெண்மைக்கே உரித்தான**
**இயல்பாகவே மனம், மொழி, செயல்களின்**
**இழுக்கத்தால் வரும் நாணத்திற்கும் இடையே அதிக வேறுபாடு உண்டு!**

1012. *ஊனுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல*
*நாணுடைமை மாந்தர் சிறப்பு*
**வாழ்வதற்கு உணவு, உடை,**
**வாழும் எல்லா மானுட உயிர்களுக்கும்**
**வாய்க்கப் பெற வேண்டிய பொதுவான தேவைகளே ! – ஆனால்**
**வாழ்க்கையில் சிறப்பான தேவை**
**வாழ்வில் வரும் பழிபாவத்திற்கான "நாணம்" தான் !**

1013. *ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாணென்னும்*
*நன்மை குறித்தது சால்பு*
**உயிர்களெல்லாம் தமது இருப்பிடமாகவும் ஆதாரமாகவும்**
**உடம்பையே கொண்டு உள்ளன !**
**'சால்பு' எனும் சான்றாண்மை குணம்**
**சார்ந்து ஆதாரமாக நிற்பது நாணத்திடமே !**

1014. *அணியன்றோ நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேற்*
*பிணியன்றோ பீடு நடை*
**நாணம் எனும் அணிகலனை அணிந்த**
**நாகரீகமான சான்றோர்களும் தவறு செய்பவர்களேயானால்**
**"நாணம்" எனும் உணர்வு ஏற்பட்டுவிடும் !**
**நாணம் இல்லாமல் அவர்கள் என்னதான்**
**நாடாளும் மன்னன் போல் வீறு நடையில்**
**நாட்டம் கொண்டாலும் அந்த நடை ஒரு நோயே !**

1015. *பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்*
*குறைபதி என்னும் உலகு*
**பிறருக்கு வரும் பழியையும்**
**பிறருக்குத் தாம் செய்த தீங்கால் தமக்கு வரும் பழியையும்**
**பிரிவினை பார்க்காமல் சுகமாக எண்ணி**
**நாணி கூனிக்குறுகும் சான்றோரை**
**"நாணத்திற்கு இருப்பிடமானவர்" என்று உலகே பாராட்டும் !**

*1016.* *நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்*
*பேணலர் மேலா யவர்*

**அறிவுடைய சான்றோர்கள் தங்களின்**
**அறமான சான்றாண்மைக்குப் பாதுகாப்பாக**
**அணிகலனாக "நாணமுடைமை"யை கைவிட்டு**
**அகண்ட உலகமே கிடைத்தாலும் விரும்ப மாட்டார் !**

*1017.* *நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்*
*நாண்துறவார் நாணாள் பவர்*

**நாணத்தின் சிறப்பை உணர்ந்த சான்றோர்**
**"நாணுடைமையை"த் தவறாமல் ஒழுகுபவர்**
**நாணத்திற்காக உயிரை விடுவார்களே தவிர**
**நாட்டம் கொண்டு உயிரைக் காப்பாற்றிக் கொள்ள**
**நாணத்தை விட்டுவிட மாட்டார் !**

*1018.* *பிறர்நாணத் தக்கது தானாணா னாயின்*
*அறம்நாணத் தக்க துடைத்து*

**நாணத்தக்க பழி பாவச்செயலை**
**நாணாமல் செய்துவிட்டு அதற்காகக் கொஞ்சம் கூட**
**நாணாமல் இருப்பவரை விட்டு அறமே**
**நாணி விலகி விடும் !**

*1019.* *குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும்*
*நாணின்மை நின்றக் கடை*

**ஒழுக வேண்டிய ஒழுக்கம் தவறினால்**
**ஒருவனுடைய குலப்பெருமை கெட்டு விடும் !**
**ஒருவனுக்குப் பழிக்கு அஞ்சும் நாணம் அழிந்தால்**
**ஒருமித்த நன்மை அனைத்தும் அழியும் !**

*1020.* *நாணகத் தில்லார் இயக்கம் மரப்பாவை*
*நாணால் உயிர்மருட்டி அற்று*

**மனதில் 'நாணம்' எனும் வெட்கம் இல்லாத**
**மக்கள் உலகில் உயிருடன் நடமாடுவது**
**மரப்பாச்சி பொம்மைக்குக் கயிறு கட்டி**
**மயக்கும் வித்தையுடன் கை கால் ஆட்டுவது போல் !**

## 103. குடிசெயல் வகை

*1021.* *கருமம் செயவொருவன் கைதூவேன் என்னும்*
*பெருமையிற் பீடுடைய தில்*

**கொண்டாடும் குடும்பப் பெருமைகளைக்**
**கொணரும் செயல்களைச் செய்வதில்**
**கொஞ்சம் கூட மனம் தளராமல்**
**கொண்ட முயற்சி தனை மேற்கொள்ளும் பெருமையை விட**
**கொண்டாடும் பெருமை வேறெதுவும் இல்லை !**

*1022.* *ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனவிரண்டின்*
*நீள்வினையான் நீளும் குடி*

**ஆழ்ந்த அறிவாம் "தெள்ளறிவு"**
**"ஆள்வினை" எனப்படும் செயல்திறமை**
**ஆன இரண்டையும் கொண்டு**
**ஆணித்தரமாக அயராது பாடுபட்டால்**
**ஆதாரமாக விளங்கும் குலப்பெருமை உயரும் !**

*1023.* *குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்*
*மடிதற்றுத் தான்முந் துறும்*

**"குடும்பத்தை உயர்த்துவேன்" என்று சூளுரைத்துக்**
**குடும்பத்திற்காகக் கடுமையாக உழைத்துக்**
**குடிதாங்கியாக இருப்பவனுக்கு, ஆலயத்தில்**
**குடியிருக்கும் தெய்வம் கூட வரிந்து கட்டிக்கொண்டு**
**குடுகுடு வென முன்வந்து உதவி செய்யும் !**

*1024.* *சூழாமல் தானே முடிவெய்தும் தங்குடியைத்*
*தாழா துஞற்று பவர்க்கு*

**தான் சோர்வின்றி, தன் குடியை உயர்த்த காலம்**
**தாழ்த்தாமல் கடுமையாகத் தொடர்ந்து உழைப்பவனுக்கு**
**தான் நினைத்தது போலவே**
**தாமாகவே வெற்றிகள் வந்து குவிந்துவிடும் !**

*1025.* *குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்*
*சுற்றமாச் சுற்றும் உலகு*

**குற்றம் இல்லாத பெருமை கொண்டவனையும்**
**குடிமக்களின் நலத்திற்குப் பாடுபடுபவனையும்**
**"சுற்றம்" என்ற உலகத்தார் அனைவரும்**
**சுற்றிச் சுற்றி வந்து போற்றுவர் !**

1026. *நல்லாண்மை என்ப தொருவற்குத் தான்பிறந்த*
*இல்லாண்மை ஆக்கிக் கொளல்*

**தன் குடியின் ஆளும் தன்மையைத்**
**தனதாக்கிக் கொள்ளும் ஒருவனின்**
**தனித்திறமையே "நல்லாண்மையாகும்" !**

1027. *அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்*
*ஆற்றுவார் மேற்றே பொறை*

**போர்க்களத்தில் பொறுப்பினை அஞ்சாமல் ஏற்கும்**
**போர் வீரனைப் போல்**
**சக குடும்பத்தாரைக் காப்பாற்றும் பொறுப்பினைச்**
**சற்றும் வல்லமை குறையாது காக்கும் சிறப்பு உடையவனே ஏற்பான் !**

1028. *குடிசெய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து*
*மானங் கருதக் கெடும்*

**குடும்பம் உயர்வு பெற உழைப்பவனுக்குக்**
**குறித்த காலம் என்று தனியாக இல்லை !**
**குடி உயர உழைப்பதற்குத் தணியட்டும் காலம் என**
**'மடி' எனும் 'சோம்பலால்' தயங்கி**
**மயங்கி வெறுமனே இருந்தால் குடும்ப மானம்**
**மறுப்பின்றிக் கெடும் !**

1029. *இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்*
*குற்றம் மறைப்பான் உடம்பு*

**குடும்பத்திற்கு எக்குற்றமும் வராமல் காக்கின்ற –**
**குற்றம் வர இருந்தாலும் தடுக்கின்ற**
**குடும்பப் பொறுப்பை உடையவனின் உடம்பு**
**குன்றாத துன்பத்திற்கே இருப்பிடமாம் !**

1030. *இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்*
*நல்லாள் இலாத குடி*

**துன்பம் வரும் போது முட்டுக்கொடுத்துத்**
**துவளாமல் தாங்கிக் கொள்ளத்**
**துணையாக ஆளில்லாத குடும்பம் – மரத்தைத்**
**துண்டாடும் "கோடாரி" என்னும்**
**"துன்பத்தால்" வெட்டி வீழ்த்தப்படும் !**

# 104. உழவு

**1031.** *சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை*

**உலகம் பல தொழில்களைச் சுழன்று சுழன்று**
**உற்சாகமாகச் செய்தாலும் மக்கள்**
**உயிர் வாழ ஏர்த்தொழிலின் பின்னால் தான்**
**உண்மையில் சுற்ற வேண்டும் ! ஆதலால்**
**உழலும் உலகில் துன்பப்பட்டாலும்**
**உழவே சிறந்த தொழில் !**

**1032.** *உழுவார் உலகத்தார்க் காணியஃ தாற்றா*
*தெழுவாரை எல்லாம் பொறுத்து*

**பல்வகைத் தொழில் புரிகின்ற மக்களின்**
**பசிதனை போக்கிடும் தொழிலாக**
**உழவுத் தொழில் விளங்குவதால் அதுவே**
**உலகத்தாரான தேர்க்கு அச்சாணி ஆகும் !**

**1033.** *உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்*
*தொழுதுண்டு பின்செல் பவர்*

**உழவு செய்து விளைவித்து யாவரும்**
**உண்ணும் வகை செய்து பின் தானும்**
**உண்டு தமக்குரியவராய் வாழ்கின்றவரே**
**உரிமையோடு வாழ்கின்றவர் ! மற்றெல்லோரும்**
**உழவரைத் தொழுது, தான் உண்டு அவர் பின் செல்வர் !**

**1034.** *பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்*
*அலகுடை நீழ லவர்*

**பல வேந்தர் குடைகள் எனும்**
**பல ஆட்சியாளர்களின் அரசுகளை**
**அலகுடை எனும் "கதிரின் குடை"யின் கீழ்**
**அடங்கும்படி செய்வர் உழவு மன்னர்கள் !**

**1035.** *இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது*
*கைசெய்தூண் மாலை யவர்*

**கையால் உழுது தாமே உண்ணும் உழவர்கள்**
**கையேந்திப் பிறரிடம் யாசிக்க மாட்டார்கள் !**
**கையேந்தும் பிறருக்குக் கண்டிப்பாக**
**கைமிகுந்து உதவி செய்வார்கள் !**

1036. *உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்*
*விட்டேமென் பார்க்கும் நிலை*

**உழவருடைய கை – வேலை செய்யாமல் மடங்கி**
**உழவுத் தொழிலை செய்யாவிட்டால்**
**பற்றற்று வாழ்க்கையை வாழ்பவரும் – எதன் மீதும்**
**பற்றில்லாத துறவியும் கூட உயிர் வாழ இயலாது !**

1037. *தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்*
*வேண்டாது சாலப் படும்*

**நிலத்தினை உழும் உழவன்**
**நிலத்தில் உடையும் ஒரு பங்கு மண்**
**காற் பங்கு மண்ணாக ஆகும் வரைக் சுண்டிடக்**
**காய விட்டால் ஒரு பிடி எரு கூட**
**காணத் தேவையில்லாமல் பயிர் செழித்து வளரும் !**

1038. *ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்*
*நீரினும் நன்றதன் காப்பு*

**ஏர் உழுவதை விட எரு இடுதல் நன்று !**
**ஏரடித்தலுக்குப் பின் களையெடுத்தல் நன்று !**
**ஏராண்மையில் நீர்ப் பாய்ச்சுவதும், பயிரை**
**ஏகபோகமாக விளைவிக்க வேண்டுமெனில்**
**தாக்கும் நோயிலிருந்துக் காப்பதும் மிக நன்று !**

1039. *செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்*
*தில்லாளின் ஊடி விடும்*

**நிலக்கிழார் நாள்தோறும் சென்று**
**நிலத்தில் விளையும் பயிரை**
**நின்று நிதானித்துப் பார்த்துத் தக்கனச் செய்யாவிடில்**
**ஊடல் கொண்ட இல்லாள் போல் நிலமும்**
**ஊடல் கொண்டு விளையாமல் போகும் !**

1040. *இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்*
*நிலமென்னும் நல்லாள் நகும்*

**வளம் இல்லை என்றெண்ணி**
**வறுமையே வாழ்க்கை என்றே**
**வதங்கி சோம்பலுற்று இருப்பவனை**
**வலிமையான நிலம் எனும் நல்லாள்**
**வலிந்து கேலி செய்வாள் !**

## 105. நல்குரவு

**1041.** *இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்*
*இன்மையே இன்னா தது*

**வறுமையைப் போலத் துன்பமானதும்**
**வருத்தப்பட வைப்பதும் எதுவென உதாரணம் காட்ட**
**வறுமையைத் தவிர வேறு எதுவும்**
**வறுமை போன்று துன்பமானதே இல்லை !**

**1042.** *இன்மை எனவொரு பாவி மறுமையும்*
*இம்மையும் இன்றி வரும்*

**"இன்மை" என்ற "வறுமைப்" பாவியினால்**
**இப்பிறப்பில் மட்டுமல்லாது**
**இனி வரும் மறுபிறப்பிலும் தொடர்ந்து**
**இன்பம் அடைய முடியாத நிலை ஏற்படுகிறது !**

**1043.** *தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக*
*நல்குர வென்னும் நசை*

**வறுமை காரணமாக பேராசை மட்டும்**
**வந்து விட்டால் அது அவனுடைய**
**வழி வழியாக வந்த பரம்பரையின் பெருமையையும்**
**வனப்பையும் ஒரு சேரக் கெடுத்து விடும் !**

**1044.** *இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த*
*சொற்பிறக்கும் சோர்வு தரும்*

**"இல்லாமை" எனும் "வறுமை" வந்துவிட்டால்**
**இழிவான சொற்களையே பேசத் தெரியாத**
**இனியதொரு நற்குடும்பத்தில் பிறந்தவர்களிடமும் கூட**
**இழிவான சொல் பிறப்பதற்கான சோர்வினை உண்டாக்கி விடுகிறது !**

**1045.** *நல்குர வென்னும் இடும்பையுள் பல்குரைத்*
*துன்பங்கள் சென்று படும்*

**வறுமை என்ற 'இடும்பை' எனும் 'துன்பம்'**
**வந்துவிட்டால் அத்தகையத் துன்பத்திற்குள்**
**பல்வேறு வகையான துன்பங்கள் அடுக்கிப்**
**பலம் கொண்ட வரிசையாக வந்து விளையும் !**

*1046. நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்*
*சொற்பொருள் சோர்வு படும்*

**நல்ல பல பொருளை – கருத்துகளை**
**நல்ல பல நூல்களைக் கற்றறிந்த அறிஞர்கள்**
**நன்றாகச் சொன்னாலும் – சொன்னவர்**
**நவிலுதலுக்கு உரியவர் வறியவர் எனில் – அந்த**
**நல்லாருள் மண்டபத்தில் அரங்கேறாது !**

*1047. அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்*
*பிறன்போல நோக்கப் படும்*

**அற வாழ்விற்குப் பொருந்தாத வகையில்**
**அவமானமாக வாழ்வதனால் வருகின்ற வறுமைதான்**
**அறம் சாராத வறுமை என்பது...!**
**அது வந்து விட்டால் பெற்ற தாயும்**
**அறவே அவனை ஒதுக்கி**
**அயலான் போலப் பார்ப்பாள் !**

*1048. இன்றும் வருவது கொல்லோ நெருநலும்*
*கொன்றது போலும் நிரப்பு*

**"நெருநல்" எனும் நேற்று வந்து கொன்ற**
**நெருப்பான துன்பம் இன்றும் வந்து**
**நெருங்கித் துன்பம் தருமோ என**
**நெஞ்சத்தில் அச்சம் மட்டும் வறுமை**
**நெருங்கினவனுக்கு எப்போதும் உண்டு !**

*1049. நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்*
*யாதொன்றும் கண்பா டரிது*

**நெருப்பு சூழ்ந்திருக்கும் போது கூட**
**நெஞ்சில் மருகுதல் இன்றி தூங்கலாம் ! ஆனால்**
**"நிரப்பு" எனும் "வறுமை" சூழ்ந்திருக்கும் போது**
**"நிம்மதி"யாக தூங்கவே முடியாது !**

*1050. துப்புர வில்லார் துவரத் துறவாமை*
*உப்பிற்கும் காடிக்கும் கூற்று*

**துப்புரவாக முற்றும் இழிந்த வறியவர் – முற்றும்**
**துறந்த முனிவராக மாறாமல் இருப்பதும்**
**துய்க்க ஒன்றுமில்லாமல் போனாலும் பசியின்**
**துயர் துடைக்கப் பிறரிடம் யாசிப்பதும்**
**துய்க்கும் உப்பிற்கும் கஞ்சிக்கும் கேடு !**

## 106. இரவு

**1051.** *இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்*
*அவர்பழி தம்பழி அன்று*

**“யாசகத்தை”த் தகுதி படைத்தவர்களிடத்திலேதான்**
**யாசிக்க வேண்டும் ! அப்படிக் கேட்ட**
**யாசகத்தைக் கூட செல்வம் இருந்தும் தருவதற்கு இல்லையென**
**யாசகனை மறுத்துவிட்டால் மறுத்தவருக்குத்தான்**
**யாங்கு பழி பாவமே தவிர அவரிடம்**
**யாசகம் கேட்டவரின் குற்றமல்ல !**

**1052.** *இன்பம் ஒருவற் கிரத்தல் இரந்தவை*
*துன்பம் உறாஅ வரின்*

**இரப்பவர், இரஞ்சுபவர் ஆகிய சம்பந்தப்பட்ட**
**இருவருக்கும் துன்பம் இல்லாமல் ஒரு பொருள்**
**இருவருக்கும் இடையில் பரிமாறிக் கொண்டிருந்தால்**
**இரப்பது கூட இரப்பவனுக்கு இன்பமே !**

**1053.** *கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்*
*றிரப்புமோர் ஏஎர் உடைத்து*

**கபடமில்லா நெஞ்சம் கொண்டு**
**கணக்கில்லாமல் ஏழைகளுக்கு உதவுவது**
**கடமையே என உணர்ந்த அறிவாளிகளிடம்**
**கலங்காமல் யாசகம் கேட்பதும் அழகே !**

**1054.** *இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்*
*கனவிலும் தேற்றாதார் மாட்டு*

**வசதி இருந்தும் செல்வம் இருந்தும்**
**வறுமையினால் கேட்ட பிச்சைக்குக்**
**கைவிரிப்பதைக் கனவிலும் நினைக்காதவரிடம்**
**கையேந்துவது என்பது அவர்களுக்கு**
**கைம்மாறாக புண்ணிய தானத்தை ஈதலே ஆகும் !**

**1055.** *கரப்பிலார் வையகத் துண்மையாற் கண்ணின்*
*றிரப்பவர் மேற்கொள் வது*

**உள்ளதை இல்லையென்று மறைக்காமல் வழங்கிடும் நல்ல**
**உள்ளத்தினர் பலர் இருப்பதினால்தான்**
**உலகில் சிலர் யாசகம் கேட்பதையே**
**உரிமையோடு மேற்கொள்கிறார்கள் !**

1056. *கரப்பிடும்பை யில்லாரைக் காணின் நிரப்பிடும்பை*
*யெல்லா மொருங்கு கெடும்*

**மலைபோல் குவிந்திருப்பதைக் கொடுக்க**
**மனமின்றி மறைத்திடும் துயரத்தைத் தராதவர்களைக் கண்டால்**
**வறுமையினால் யாசிப்போரின்**
**வறுத்தும் துன்பம் முழுவதும் ஒழியும் !**

1057. *இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்*
*உள்ளுள் உவப்ப துடைத்து*

**உள்ளத்தால் இழிவாக எண்ணாமலும்**
**உணர்வால் ஏளனமாக உணராமலும்**
**உண்மையில் வாரி வாங்கும் வள்ளலை**
**உடன் கண்டால் யாசிப்பவர்களின்**
**உள்ளம் மகிழ்ந்து உள்ளுக்குள் உவப்புறும் !**

1058. *இரப்பாரை யில்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்*
*மரப்பாவை சென்றுவந் தற்று*

**ஈரம் சூழ்ந்த இந்த உலகத்தில்**
**இரந்து வேண்டுபவர்கள் இல்லையெனில்**
**ஈங்கு மக்களின் நடமாட்டம்**
**ஈரமில்லாத உலர்ந்த மரத்தினால்**
**ஈர்ந்த மரப்பாவை பொம்மைகளை கயிற்றினால்**
**ஈர்த்துக் கட்டி இயக்கியது போல் ஆகும் !**

1059. *ஈவார்கண் என்னுண்டாம் தோற்றம் இரந்துகோள்*
*மேவார் இலாஅக் கடை*

**யாசிக்க இவ்வுலகில் வறியவர்**
**யாரும் இல்லை யெனில்**
**யாசித்தலுக்கான புண்ணியத்தையும் புகழையும் பெற**
**யாரால் முடியும் ?**

1060. *இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை*
*தானேயும் சாலும் கரி*

**"இல்லை" என்று சொல்பவனைக் கண்டு**
**"இரப்பவனுக்கு"க் கோபம் வரக் கூடாது !**
**இரப்பவனிடம் இல்லை என்பவனின்**
**இழிவான இரப்பு நிலைக்குச் சான்று**
**"இரப்பு" நிலையே !**

## 107. இரவச்சம்

*1061.* *கரவா துவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்*
*இரவாமை கோடி உறும்*

**"கரவாது" இருப்பவர்களைப் போல் இல்லாமல்**
**கனிந்து உவந்து மனப்பூர்வமாய் நீ கொடுக்கும்**
**கனிவான மனிதரிடத்தும் கூடக்**
**கருணை ஈந்து பிச்சை கேட்காமல் இருப்பதைக்**
**கணக்கிட்டால் பன் மடங்கு கோடி பெறும் !**

*1062.* *இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து*
*கெடுக உலகியற்றி யான்*

**இரந்துதான் சிலர் உயிர் வாழ வேண்டும்**
**இவ்வுலகத்தில் என்ற நிலையிருந்தால்**
**இந்த உலகத்தைப் படைத்த**
**இந்த இறைவனும் பரந்து திரிந்து**
**இரந்து கெடட்டும் !**

*1063.* *இன்மை இடும்பை இரந்துதீர் வாமென்னும்*
*வன்மையின் வன்பாட்ட தில்*

**வறுமையில் சிக்கித் தவிப்பவன்**
**வந்த துன்பத்தை நீக்க ஒரே வழி**
**'யாசகம்' கேட்பது தான் என யோசிப்பது போல**
**யாங்கு ஒரு கொடுமை வேறு இல்லை !**

*1064.* *இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே இடமில்லாக்*
*காலும் இரவொல்லாச் சால்பு*

**பிழைத்து வாழ்வதற்கு ஒரு வழியும் கிடைக்காத போதும்**
**பிறரிடம் கையேந்தி கருணை பெற்று**
**பிச்சை கேட்காத பெருங் குணத்திற்குப்**
**பிரபஞ்சத்தில் உள்ள எல்லா உலகும்**
**பிணைந்து வந்தாலும் இடமே போதாது !**

*1065.* *தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்த*
*துண்ணலின் ஊங்கினிய தில்*

**தெளிந்த நீர் போல் அதிக உணவு இல்லாமல்**
**தெளிவாகக் காய்ச்சிய கஞ்சியே ஆனாலும்**
**சொந்த உழைப்பால் சம்பாதித்துக் குடித்தால்**
**சொர்க்கமாக இருக்கும் !**

*1066.* *ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற்*
*கிரவின் இளிவந்த தில்*

**'ஆ' எனும் பசுவின் உயிரை**
**ஆபத்திலிருந்து காப்பாற்ற தண்ணீர் வேண்டுமென**
**நயத்துடன் இரந்து கேட்டாலும் – கேட்ட**
**நாவிற்கு அப்படிப்பட்ட இழிவு வேறொன்றுமில்லை !**

*1067.* *இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பிற்*
*கரப்பார் இரவன்மின் என்று*

**பிச்சையெடுக்க நேர்ந்தாலும் – வைத்துக் கொண்டு**
**பிச்சை இல்லை என்று சொல்லுகின்றவர்களிடம்**
**பிச்சை கேட்கவே வேண்டாம் என**
**பிச்சை கேட்பவர்களைப் பார்த்துப்**
**பிச்சை கேட்கிறேன் !**

*1068.* *இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்*
*பார்தாக்கப் பக்கு விடும்*

**"இரத்தல்" எனும் பாதுகாப்பற்ற படகு மூலம்**
**இவ்வறுமை எனும் கடலைக் கடக்க மிதக்கும் போது**
**இருப்பதை மறைத்து இல்லை எனச் சொல்லும்**
**இறுகிய பாறை மீது மோதி உடைந்து விடும் !**

*1069.* *இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள*
*உள்ளதூஉம் இன்றிக் கெடும்*

**இரந்து வாழ்வோரின் நிலையை நினைத்தால்**
**இந்த உள்ளமே உருகுகிறது !**
**இருப்பதைக் கொடுக்க மனமின்றி மறைத்து**
**"இல்லை" என்போரை நினைத்தால்**
**இந்த உள்ளம் உருகுவதையே ஒழித்து விடுகிறது !**

*1070.* *கரப்பவர்க் கியாங்கொளிக்கும் கொல்லோ இரப்பவர்*
*சொல்லாடப் போஒம் உயிர்*

**"இல்லை" என்ற "சொல்லை"க் கேட்டவுடன்**
**இரப்பவரின் உயிர் இல்லாமல் போகிறதே ! – ஆனால்**
**"ஈய மாட்டேன்" என்று சொல்கிற கருமியின் உயிர்**
**இருக்கும் இடம் தெரியாமல் எங்கே ஒளிந்திருக்கும் ?**

## 108. கயமை

1071. *மக்களே போல்வர் கயவர் அவரன்ன*
*ஒப்பாரி யாங்கண்ட தில்*

**வடிவத்தில் மனிதர்களாக இருக்கும்**
**வகைப்பட்ட உயிரினங்களில் மட்டும் தான்**
**தோற்றத்தில் நல்லவராகக் காட்டிக் கொண்டு**
**தோண்டி எடுத்தால் உள்ளே குணத்தில்**
**தோய்ந்த கயவராக இரு வகையில் இருப்பர் !**

1072. *நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்*
*நெஞ்சத் தவலம் இலர்*

**நல்லவை, தீயவை எதுவென**
**நன்கு ஆராய்ந்து அதைப் பற்றியே சிந்திக்கும்**
**நல்லறிஞர்கள் கொண்ட நெஞ்சம்**
**நடுங்கும் அவலத்துடன் ஒப்பிடும்போது**
**நடப்பது எதைப்பற்றியும் கவலைப்படாத**
**நச்சுக் கயவர்கள் பாக்கியசாலிகள் !**

1073. *தேவ ரனையர் கயவர் அவருந்தாம்*
*மேவன செய்தொழுக லான்*

**தேவர்களைப் போல் மனம்**
**தேடிச் சென்றதையெல்லாம்**
**தேடாமல் அடையக்கூடிய வல்லமையைத்**
**தேர்ந்து பெற்றதால் கயவர்களும்**
**தேவர்களும் ஒன்றானவர்களே !**

1074. *அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்*
*மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்*

**இழிவான கயவர்கள் தங்களை விட**
**இழிவான செயல்கள் செய்பவரைக் கண்டால்**
**இங்கே நாம் அவர்களைவிட மேன்மையானவர்கள் என**
**இறுமாப்புக் கொள்வர் !**

1075. *அச்சமே கீழ்கள தாசாரம் எச்சம்*
*அவாவுண்டேல் உண்டாம் சிறிது*

**அச்சத்தின் காரணமாக மட்டுமே**
**அயோக்கியர்கள் ஒழுக்கமாக நடப்பார்கள் !**
**அதைத்தவிர ஒரு பொருளின் மீது உள்ள**
**அதீத ஆசையால் சிறிது ஒழுக்கமாக நடப்பார்கள் !**

*1076. அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட*
*மறைபிறர்க் குய்த்துரைக்க லான்*

**சொல்லக் கூடாது என்று சொல்லிய**
**சொற்ப இரகசியங்களைக் கூட**
**சொல்வதற்கு வலியப் போய் மற்றவர்களுக்குச்**
**சொல்லி மகிழ்கிற கயமைக் குணத்தை**
**சொல்லி அடிக்கும் பறைக்கு ஒப்பிடலாம் !**

*1077. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங்*
*கூன்கையர் அல்லா தவர்க்கு*

**கயவர்கள் எப்போதும் கை மடக்கித் தங்கள்**
**கன்னத்தில் அறைபவர்களுக்கு மட்டுமே**
**கையாலாகாமல் ஈவார்களே தவிர மற்றவர்களுக்கு எச்சில்**
**கையால் கூட உதவிட மாட்டார்கள் !**

*1078. சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல*
*கொல்லப் பயன்படும் கீழ்*

**சொன்னாலே போதும் நல்லவர்கள்**
**சொன்ன குறை போக்கப் பயன்படுவார்கள் !**
**கயவர்கள் மட்டும் கதறினாலும்**
**கரும்பைக் கசக்கிப் பிழிவதைப் போல்**
**கடினப்படுத்தினால் தான் பயன்படுவார்கள் !**

*1079. உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்*
*வடுக்காண வற்றாகும் கீழ்*

**உடுப்பதையும் உண்பதையும் கூட பார்த்து**
**உள்ளத்தால் பொறாமை கொள்ளும் கயவன்**
**உறுத்தும்படி வேண்டுமென்றே குற்றம் சொல்வான் !**

*1080. எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்*
*விற்றற் குரியர் விரைந்து*

**எதற்கு உரியவர் கயவர் என்றால்**
**எப்படியும் தனக்கு வரும் துன்பத்திலிருந்து மீள**
**எதிர்பாராமல் விரைந்து தம்மையே**
**எதிரிக்கு விற்று விடுவர் !**

# இன்பத்துப்பால்

## 109. தகை அணங்குறுத்தல்

1081. *அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை*
*மாதர்கொல் மாலுமென் நெஞ்சு*

**எனைக் கொல்லும் தேவதையோ...?**
**எனை மயக்கும் மயிலோ...?**
**எட்டிப் பார்க்கும் கெட்டித் தொங்கட்டானால்**
**எப்படியும் இவள் பேரழகு மங்கைதானோ...?**
**எக்குத்தப்பாக் மருகுகிறதே நெஞ்சம் !**

1082. *நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு*
*தானைக்கொண் டன்ன துடைத்து*

**நோக்கினாள் எனை வேல் விழி கொண்டு**
**நோக்கினேன் அவள் விழிகளை எதிர்த்து !**
**நோக்கினாள் மீண்டும் எனைப் பார்த்து**
**தாக்கப்பட்டேன் ! – ஒரு வருத்தும் தேவதை திகைத்து**
**தாக்கியது தனித்து அல்ல ஒரு சேனைப் படையுடன் !**

1083. *பண்டறியேன் கூற்றென் பதனை இனியறிந்தேன்*
*பெண்டகையால் பேரமர்க் கட்டு*

**கூற்றுவன் என்று மனிதர் இவர்**
**கூறும் எமனை நான் பார்த்ததே இல்லை...?**
**கூறுகிறேன் உறுதிபட இப்போது பார்த்து விட்டேன் !**
**கூரிய விழிகளால் போர்த்தொடுத்து இதயத்தைக்**
**கூறிட்டுக்கொல்லும் பெண்ணுருவத்தில் அல்லவா**
**கூற்றுவன் நிற்கிறான் !**

1084. *கண்டார் உயிருண்ணும் தோற்றத்தால் பெண்டகைப்*
*பேதைக் கமர்த்தன கண்*

**பார்க்கிறவர்களுடைய உயிரைப் பறிக்கிற**
**பாவத்தைச் செய்கின்ற இந்த அழகு மிக்க**
**பாவையின் பார்வையைத் தரும்;**
**விழிகள் மட்டும் பெண்மையின்**
**விதிகளுக்கு மாறுபட்டு இருக்கிறதே !**

1085. *கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்*
*நோக்கமிம் மூன்றும் உடைத்து*

**உயிர் பறிக்கும் எமனோ ?**
**உறவாடும் விழியோ ,**
**உருளும் மருள் விழி கொண்ட பெண் மானோ?**
**உருக்கும் இப்பெண்ணின் பார்வையில்**
**உள்ளதே இம்மூன்றும் !**

1086. *கொடும்புருவம் கோடா மறைப்பின் நடுங்கஞர்*
*செய்யல மன்னிவள் கண்*

**வளைந்த புருவங்கள் என்னை**
**வதைத்து கொடுந்துன்பம் புரிந்து**
**வளைத்து விட்டனவே !**
**அதுவே; வளையாமல் நேர்கோட்டில்**
**வகிடெடுத்து தடுத்திருந்தால் – இந்த சித்திர**
**வதைதான் எனக்கில்லையே !**

1087. *கடாஅக் களிற்றின்மேற் கட்படாம் மாதர்*
*படாஅ முலைமேல் துகில்*

**மங்கையொருத்தியின் சாயாத கொங்கையை**
**மறைத்து அசைந்தாடும் ஆடையைக் கண்டேன் ! – அது**
**மதங்கொண்ட யானையின் தலையான**
**மத்தகத்தின் மேல் முகச்சீலையை ஒத்திருந்ததே !**

1088. *ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்*
*நண்ணாரும் உட்குமென் பீடு*

**போர்க்களத்தில் பகைவரை வெல்லும் என்**
**போதிய வலிமை இந்த அழகிய தேவதை**
**போல் ஒளி மிகுந்த நெற்றியுடன் வலம் வரும்**
**போர் மடந்தையிடம் விக்கித்து உடைந்து**
**போதாமல் தோற்று விட்டதே !**

1089. *பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்*
*கணியெவனோ ஏதில தந்து*

**மருளும் மான் விழியாள்...!**
**மந்திரப் புன்னகையுடன்**
**மயக்கும் நாணமுடையாள் !**
**மனம் ஈர்க்கும் இந்த இயற்கையான**
**மதனம் மிகு அழகுகள்**
**மதி மயக்கும் போது**
**மற்ற அணிகலன்கள் எதற்கோ...!**

1090. *உண்டார்க ணல்லது அடுநறாக் காமம்போல்*
*கண்டார் மகிழ்செய்தல் இன்று*

**கள்ளை உண்டால் தான்**
**கனியும் மதி மயக்கம்...!**
**கன்னியைக் கண்டவுடன்**
**கண்ணால் பருகினாலே**
**கதி கலங்க வைக்கும்**
**கற்பனைக்கும் எட்டாத மயக்கம்...!**

# 110. குறிப்பறிதல்

1091. *இருநோக் கிவளுண்கண் உள்ள தொருநோக்கு*
*நோய்நோக்கொன் றந்நோய் மருந்து*
**கன்னி இவளின் காந்தர்வ**
**கண்களில் இரு வகைப் பார்வைகள்...!**
**கடுந்துன்பம் விளைவிக்கும் காதல் நோயை**
**கள்ளத்தனமின்றி அள்ளித்தரும் ஓர் பார்வை...!**
**கடுமையைப் போக்கி களிப்பினைத் தந்து**
**கவலையைப் போக்கும் மருந்தாக ஓர் பார்வை !**

1092. *கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்*
*செம்பாகம் அன்று பெரிது*
**கண்ணால் என்னை களவு கொள்ளும்**
**கள்ளத்தனமான அந்த கடைக்கண் பார்வை**
**கண்டுணரும் காம இன்பத்தில் சரி பாதி அல்ல !**
**கறை கடந்த இன்பத்தை அதற்கு மேலும்**
**கடந்து தரும் முழுமை !**

1093. *நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்*
*யாப்பினுள் அட்டிய நீர்*
**நோக்கினாள் எனை காதற் கண்ணால் - நான்**
**நோக்காத போது...!**
**நோக்கிய கண்களை நான் உடன்**
**நோக்கியவுடன் தலை குனிந்தாள் - நிலம்**
**நோக்கிய அவள் கண்களிலிருந்து என் மனம்**
**நோக கண்ணீர் வழிந்தோடியது...! - காதல்**
**நோற்கும் பயிருக்கான நீராகும் அது...!**

1094. *யானோக்கும் காலை நிலனோக்கும் நோக்காக்கால்*
*தானோக்கி மெல்ல நகும்*
**நோக்கும் போது அவள் குனிந்து நிலத்தை**
**நோக்குவதும் - அவளை நான்;**
**நோக்காத போது என்னை அவள்**
**நோக்கி மகிழ்ந்து புன்னகைப்பதும் - காதல்**
**நோட்டம் தரும் இனிமைக் குறிப்பல்லவா ?**

1095. *குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்*
*சிறக்கணித்தாள் போல நகும்*
**என்னைத்தான் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் இருந்தாலும் -**
**என்னை நோக்கி நேராகக் குறி கொண்டு பார்க்காமல்**
**எங்கோ பார்ப்பது போல்; என்னையே கண்களை இடுக்கிப் பார்த்து**
**எண்ணத்தில் இன்பம் கொண்டு மகிழ்ந்தால்; என்ன தான் செய்வது?**

1096. *உறாஅ தவர்போற் சொலினும் செறாஅர்சொல்*
*ஒல்லை உணரப் படும்*

**களிப்பு மிகுந்த காதலை**
**கனிவான மனதிலே மறைத்துக் கொண்டு**
**கடுமொழிகளை அன்பில்லாத அயலார் போல**
**கதைத்தாலும் உள்ளத்தில் உறைந்த அன்பை**
**கண்டுணர முடியும் !**

1097. *செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்*
*உறாஅர்போன் றுற்றார் குறிப்பு*

**பகையுணர்வு உண்மையில் இல்லாத பொல்லாத**
**பகை மொழியும், சுடு சொல்லும்**
**பகைவரை நோக்குவது போன்று**
**படுத்தும் சுட்டு விடும் பார்வையும்**
**பதுங்கும் உள்ளத்தில் காதலின் அடையாளங்கள் !**

1098. *அசையியற் குண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்*
*பசையினள் பைய நகும்*

**யான் அவளை நோக்கும் போது பரிவினை**
**யாசிக்கும் பெண் மயிலாள் மெல்லச் சிரிப்பாள் !**
**யாங்கு மெல்லியலாள் – துவளுகின்ற துடியிடையாளிடம்**
**யாம் கண்டோம் அந்தச் சிரிப்பினில்**
**யாவரும் காணாத பேரழகை !**

1099. *ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்*
*காதலார் கண்ணே உள*

**பொது இடங்களில் கொஞ்சம் கூட அறியாதவர் போல்**
**பொய்யாகப் பொருட்படுத்தாதவர் போல்**
**பொதுவாகப் பார்ப்பது என்பது – மனம்**
**பொருந்திய காதலர்களின் இயல்பு !**

1100. *கண்ணொடு கண்இணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்*
*என்ன பயனும் இல*

**கண்டவுடன் காதல் கொண்டவர்கள்**
**கண்ணோடு கண் நோக்கியவுடன்**
**கண்கள் பேசும் இணையான விழி மொழியால்**
**கருத்தொருமித்து கலப்பதால் – அங்கே**
**கதைப்பதற்கு வாய்ச்சொற்கள்**
**கண்டிப்பாகத் தேவையில்லை ! பயனும் இல்லையே !**

## 111. புணர்ச்சி மகிழ்தல்

1101. *கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்*
*ஒண்தொடி கண்ணே உள*

**ஒளி பொருந்திய வளையல் அணிந்த**
**ஒரு அழகுப் பெண்ணிடம்தான்**
**ஒருங்கே கண்டு மகிழும், கேட்டு மகிழும், உண்டு மகிழும்,**
**ஒட்டுதலால் தொட்டு மகிழும், முகர்ந்துண்டு மகிழும்,**
**ஒன்னுதலால் ஐம்புல இன்பங்களும் நிறைந்துள்ளன !**

1102. *பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை*
*தன்னோய்க்குத் தானே மருந்து*

**ஒவ்வொரு நோயையும் தீர்க்க**
**ஒவ்வொரு மருந்தையும்**
**ஒவ்வொரு தன்மையில் கொணர வேண்டும் !**
**ஒரே ஒரு நோய்க்கு மட்டும் – காதல் நோய்க்கு**
**ஒரே இடத்தில் தான் மருந்து – ஆம்**
**ஒப்பில்லா அந்தக் காதலியே மருந்து !**

1103. *தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்*
*தாமரைக் கண்ணான் உலகு*

**தாம் காதலில் வீழ்ந்த பெண்ணின்**
**தாங்க இயலாத மெல்லிய தோள்களில்**
**தாம் சாய்ந்து தூங்கிய இன்பம்**
**தாக்கிய தருணங்களை விட**
**தாமரை மணாளன் திருமால் கண்ணன்**
**தான் வாழும் உலகம் இன்பமானதா ?**

1104. *நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்*
*தீயாண்டுப் பெற்றாள் இவள்*

**காந்தர்வக் கன்னியவள் என் இனிய**
**காதலியை விட்டு விலக விலகக்**
**காந்தல் கொழுந்து விடுகிறதே ! – ஆனால்**
**காதலியை நெருங்க நெருங்கவே**
**காணாத குளிர்ச்சி குளிரூட்டுகிறதே ! –**
**காணும் இப்புதுமை நெருப்பு இவளிடம் எப்படி ?**

1105. *வேட்ட பொழுதின் அவையவை போலுமே*
*தோட்டார் கதுப்பினாள் தோள்*

**வேண்டிய பொருள் ஒன்று**
**வேண்டிய பொழுதெல்லாம்**
**வேட்கையுடன் இன்பம் தருவதைப் போல்**
**மலரின் இதழினைப்போல் கமழும்**
**மணமும் மென்மையான கன்னங்களையுடைய**
**மங்கை இவளின் தோள் இன்பம் தருகின்றது !**

1106. *உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்*
*கமிழ்தின் இயன்றன தோள்*

**இனிய காதலியாம் இளமங்கை**
**இவளின் அழகிய தோள்களை**
**இறுகத் தழுவுதலால்**
**வாடிய என் உயிர் – உடனடியாக**
**வாடாமல் தளிர்த்து விடுகிறது ! காரணம்**
**வாய்த்த தோள்கள் சாவா மருந்தான**
**வாழ வைக்கும் அமிர்தம் தானே !**

1107. *தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்*
*அம்மா அரிவை முயக்கு*

**தனது உழைப்பால் தான் சேர்த்த**
**தன் செல்வத்தைப் பலருக்கும் பகுத்துத்**
**தந்து உண்டு களிப்பதில் ஏற்படும் இன்பம்**
**தனது அழகிய காதலியை இறுகத்**
**தழுவுகின்ற இன்பத்திற்கு நிகரானது !**

1108. *வீழும் இருவர்க் கினிதே வளியிடை*
*போழப் படாஅ முயக்கு*

**இடையில் காற்று கூட புக முடியாமல்**
**இறுகத் தழுவிக் கொண்டிருப்பது**
**இளைப்பாறும் காதல் நேசத்தில் மூழ்கியுள்ள**
**இனிய காதலர் இருவருக்கும்**
**இனிமையான செயலாகும் !**

1109. *ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்*
*கூடியார் பெற்ற பயன்*

**'ஊடல்' எனும் பொய்யாகக் கோபம் கொள்வதும்**
**ஊடலினால் விளையும் இன்பம்**
**ஊடியது போதுமென்று நிறுத்துவதும் – பின்**
**ஊடலுக்கு பின் கூடல் தரும் பேரின்பத்தை**
**ஊழியமாய்ப் பெறுவதும் காதல் மயக்கத்தில்**
**ஊர்பவர்கள் பெறும் பயன்கள் !**

1110. *அறிதோ றறியாமை கண்டற்றால் காமம்*
*செறிதோறும் சேயிழை மாட்டு*

**புத்தம் புது கருத்துகளைக் கொண்ட**
**புத்தகங்களைப் புரட்டிப் படிக்கப் படிக்க**
**புதிது புதிதாக அறிவு மேம்படுவது போல**
**புதிய புதிய அணிகலன்களைப்**
**புத்தொளி வீசும் அழகு மேனியில்**
**புதுமையாகப் பூண்ட காதல் மனைவியைப்**
**புணரும் போதெல்லாம் மீண்டும் மீண்டும்**
**புதிது புதிதாக அறிவது போல் உள்ளது !**

## 112. நலம் புனைந்து உரைத்தல்

*1111. நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்*
*மென்னீரள் யாம்வீழ் பவள்*

**அனிச்ச மலரே நீ வாழி !**
**அனைத்து மலர்களிலும் நீதான் மென்மையானவள்**
**அங்ஙனமாயினும் என்னால் விரும்பப்பட்ட**
**அருமைக் காதலியோ உன்னை விட**
**அரிதான மென்மைத் தன்மையானவள் !**

*1112. மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்*
*பலர்காணும் பூவொக்கும் என்று*

**மலர்களைக் கண்டவுடன்**
**மயங்குகின்ற நெஞ்சமே...!**
**மருகும் இவள் கண்ணைப்பார்...!**
**மனிதர் பலர் காணும் மலரைப்போல்**
**மயக்குவது தெரிகிறதா...?**

*1113. முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்*
*வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு*

**மாந்தளிர் மேனி, முத்துப்பல் வரிசை,**
**மாற்றமில்லாத மூங்கில் போன்ற தோள்,**
**மாறாத மலர் மணமான மேனி,**
**மாய்க்கும் வேல் விழிகள் – இந்த**
**மார்க்கத்தில் வந்தவளே என் காதலி !**

1114. *காணின் குவளை கவிழ்ந்து நிலனோக்கும்*
*மாணிழை கண்ணொவ்வேம் என்று*

**கண்ணான காதலியைக் குவளை மலர்கள்**
**கண்டிட்டால் "இவள் கண்களுக்குக்**
**கண்டிப்பாக நாம் ஒப்பாக வில்லையே" என**
**கன்னம் வெட்கித் தலை குனிந்து**
**கண்டிடும் நில மகளை !**

1115. *அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு*
*நல்ல படாஅ பறை*

**மெல்லினும் மிக்க அனிச்சப் பூவின்**
**மெலிதானக் காம்பை நீக்காமல்**
**மெய்யாகத் தலையில் சூடி விட்டாள்**
**மெல்லியலாள்...! அதனால்**
**மெச்சும் படியான அவள் கொடி இடை**
**மெத்த முறிந்து விட்ட அவள் இடை பற்றி**
**மெல்லுவதற்கு இனி நல்ல பறைச் செய்தி ஒன்றுமில்லை !**

1116. *மதியும் மடந்தை முகனும் அறியா*
*பதியின் கலங்கிய மீன்*

**வானத்தில் வீற்றிருக்கும் மதியும்**
**வான் நிலா போல் ஒளிரும் மங்கை முகமும்**
**வாடிக்கையாக ஒன்று போல் இருப்பதனால்**
**வானத்து மீன்களான நட்சத்திரங்கள்**
**வாடித் தவிக்கின்றன வேறுபாடு தெரியாமல் !**

1117. *அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல*
*மறுவுண்டோ மாதர் முகத்து*

**வளர்பிறையில் வளர்ந்து முழு நிலவாய்**
**வளர்ந்தபின் தேற்பிறையில் தேய்ந்து பிறை நிலவாய்**
**வளர்ந்தும் தேய்ந்தும் எல்லையற்ற ஒளி இன்பத்தை**
**வரைமுறையில்லாமல் தொடர்ந்து தரும்**
**வண்ண நிலவிற்கு உள்ள களங்கம் போல்**
**வனிதையின் முகத்தில் சிறு மறு கூட இல்லையே !**

1118. *மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்*
*காதலை வாழி மதி*

**என் இனிய பொன் நிலாவே...!**
**என் இனிய மங்கையின் முகம் போல**
**என்றும் ஒளி வீச முடியுமென்றால்**
**எந்தன் நெஞ்சம் மிகுந்த நேசம் கொண்டு**
**என்னுயிர் காதலுக்கு நீயும் உரித்தாவாய் !**

1119. *மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயின்*
*பலர்காணத் தோன்றல் மதி*

**கலை மதியே...! மலர் போன்ற**
**கண்களையுடைய என் இனிய**
**கன்னியவளின் முகத்தினை ஒத்துக்**
**கர்வப்பட வேண்டுமெனில் – இனி பலரும்**
**கண்டிடும்படி வானில் தோன்றாமல் இரு !**

1120. *அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்*
*அடிக்கு நெருஞ்சிப் பழம்*

**அளவிட முடியாத மென்மையுடைய**
**அனிச்சப்பூவும் அதற்கு ஈடாக உள்ள**
**அன்னப் பறவையின் சிறகும் கூட**
**அருமைக் காதலியின் மெல்லிய பாதங்களை**
**அம்பாகக் குத்தி வருத்தும் நெருஞ்சி முள் போன்றவை !**

## 113. காதற் சிறப்புரைத்தல்

*1121.* *பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி*
*வாலெயி றூறிய நீர்*

**மென்மையான இனிய சொற்களைப் பேசும்**
**மெல்லியலாளின் வெண்மையான பற்களுக்கிடையே**
**மெல்ல மெல்ல ஊறி வரும் வாயூறல் நீர்**
**மெய்யாகப் பாலும் தேனும் கலந்தாற் போல்**
**மெய் மறக்கச் செய்யும் இன்சுவை நீரே !**

*1122.* *உடம்பொ டுயிரிடை என்னமற் றன்ன*
*மடந்தையொ டெம்மிடை நட்பு*

**உடலும் உயிரும் பின்னிப் பிணைந்து**
**உள்ள நட்பே எனக்கும் என்**
**உள்ளத்தில் வீற்றிருக்கும்**
**உயிருக்கும் உயிரான மடந்தைக்கும்**
**உள்ள நட்பு !**

*1123.* *கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழும்*
*திருநுதற் கில்லை யிடம்*

**இனிய கண்ணின் கருமணியில் உள்ள பாவையே !**
**இடத்தைக் காலி செய்து விட்டுப் போய் விடு நீ...!**
**இல்லையெனில் என் இனிய அழகான பாவைக்கு**
**இருக்க இடம் இல்லையே என் கண்ணில் !**

*1124.* *வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்*
*அதற்கன்னள் நீங்கும் இடத்து*

**ஆய்ந்து தேர்ந்த அரிய பண்புகளை அணிந்த**
**ஆயிழையாள் இவள் என்னோடு கூடும் போது**
**உடலிடம் உயிர் இருப்பது போல் உள்ளது !**
**உடன் நீங்கும் போது அவ்வுயிர் உடலை விட்டு**
**உள்ளபடிச் செல்வது போல் உள்ளதே !**

*1125. உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்*
*ஒள்ளமர்க் கண்ணாள் குணம்*

**இன்பத்தைத் தூண்டும் ஒளி பொருந்திய**
**இசைவான விழிகளை உடைய என்**
**இனிய காதலியின் பண்புகளை**
**இங்கு எப்போதும் நினைப்பதே**
**இல்லை...! மறந்தால் தானே**
**இனி நினைப்பதற்கு...!**

*1126. கண்ணுள்ளிற் போகார் இமைப்பிற் பருவரார்*
*நுண்ணியர்எம் காத லவர்*

**நுட்பமானவர் என் காதலர்...!**
**நுண்ணிய என் கண்ணிற்குள்**
**நுழைந்தவர் வெளியே போக மாட்டார்...!**
**நுடங்கி நாம் மறந்து இமைத்தாலும்**
**நுணங்குதல் ஆகி விட மாட்டர்...! – ஏனெனில்**
**நுட்பமானவர் என் காதலர்...!**

*1127. கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்*
*எழுதேம் கரப்பாக் கறிந்து*

**கண்ணுக்குள்ளேயே இருக்கிறார் உள்ளம்**
**கவர்ந்த காதலர்...! ஆதலால் என்**
**கண்ணிற்கு மை தீட்டுவதில்லை...!**
**கண் மை தீட்டும் போது மறந்தும்**
**கண்களை மூடி விட நேரும் போது**
**கண்ணிலிருந்து என் காதலர் மறைந்து விடுவாரே...!**

1128. *நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்*
*அஞ்சுதும் வேபாக் கறிந்து*

**நெஞ்சோடு நெஞ்சமாகக் காதலர் – என்**
**நெஞ்சிற்குள்ளேயே இருக்கிறார்...!**
**நெருப்புச் சூட்டில் வெந்த பண்டத்தை**
**“நெறித்து” வாய் பிளந்து உண்டால்**
**நெக்குருகிப் போய் விட மாட்டாரா...? என்றே**
**நெஞ்சத்தால் அஞ்சுகிறேன்...!**

1129. *இமைப்பிற் கரப்பாக் கறிவல் அனைத்திற்கே*
*ஏதிலர் என்னுமிவ் வூர்*

**கண்ணை மூடி விட்டால் என் காதலர்**
**கண்ணிலிருந்து மறைந்து விடுவார்...! ஆதலால்**
**கண்ணை இமைக்காமல் விழித்திருந்து**
**கண் துஞ்சாமல் காலம் கடத்துகிறேன்...!**
**கண்ணுறங்காத் துன்பத்தை எனக்குத் தந்ததாகக்**
**கண்ணானக் காதலரை இந்த ஊர் தூற்றுகிறதே...!**

1130. *உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்*
*ஏதிலர் என்னுமிவ் வூர்*

**காதலர் எப்போதும் என் உள்ளத்தில்**
**காலமெல்லாம் உவந்து உறைந்து உள்ளார் !**
**காதலர் மகிழ்வுடன் மனதில் தங்கியிருக்கும் போது – ஊரார்**
**காதலரை அன்பில்லாதவர், பிரிந்துவிட்டார் எனக்**
**காற்று வாக்கில் அறியாமையால் தூற்றுகின்றனரே...!**

## 114. நாணுத் துறவுரைத்தல்

*1131.* *காமம் உழந்து வருந்தினார்க் கேம*
*மடலல்ல தில்லை வலி*

**கன்னியவளை நெஞ்சாரக் காதலித்துப் பின்**
**கடுந்துன்பத்தை காம நினைவுகளால் உழன்று**
**கலக்கத்தோடு வருந்துகிற காளை ஒருவனுக்குக்**
**கர்வத்தை விட்டு "மடலேறுதல்" என்ற**
**கட்டிய பனை மடல்களால் ஆன பொய்க்கால் குதிரையில்**
**கண்டிப்பாக ஊர்வலம் வந்து காதலியைக்**
**கவர்வதைத் தவிர வேறு வழியில்லை !**

*1132.* *நோனா உடம்பும் உயிரும் மடலேறும்*
*நாணினை நீக்கி நிறுத்து*

**உயிரும் உடலும் ஒட்டியிருப்பது !**
**உனக்காக என்று சொல்வது போல்**
**உயிரும் உடலும் காதலியின் பிரிவை**
**உள்வாங்கி ஏற்றுக் கொள்ள முடியாமல் தவிப்பதால்**
**உற்றிருக்கும் வெட்கத்தைப் புறந்தள்ளிவிட்டு**
**உபத்திரவத்தைப் போக்க மடலேறத் துணிகிறது !**

*1133.* *நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்*
*காமுற்றார் ஏறும் மடல்*

**ஆண்மையுள்ள நல்ல ஆண் மகனாகவும்**
**ஆற்றாமைக்கும் அவமானத்திற்கும் வெட்கப்பட்டு**
**ஆண்டாண்டு காலமாக இருந்த நான்**
**அந்தக் குணங்களையெல்லாம் மறந்து**
**அதிகமாய் வருத்தும் காதலை எப்படியும்**
**அடைவதற்காக மடலேறுவதை மேற்கொண்டுள்ளேனே !**

*1134. காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை என்னும் புணை*

**காதல் பெரு வெள்ளம் கடும் புனல் என்னும்
காட்டாறு போல் அடித்துக் கொண்டு
காணாமற் போகச் செய்கிறது
நாணத்துடன் கூடிய நல்ல ஆண்மை எனும்
நாளும் கொண்டுள்ள வாழ்க்கைப் படகை !**

*1135. தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை உழக்கும் துயர்*

**மாலைப் பொழுதின் மயக்கத்திலே
மாலையிட வேண்டிய காதலியை
மாத்திரமே நினைத்துக் கொண்டு
மாலை முழுவதும் வருத்தம் கொண்டு அதற்கு
மாமருந்தாக "மடலேறு"வதைப் பற்றியே நினைக்குமாறு
மாலை போல் வளையல்கள் அணிந்த
மாதரசி இவள் எனக்குத் தந்து விட்டாள் ...!**

*1136. மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற
படலொல்லா பேதைக்கென் கண்*

**கண்ணான காதலியின் பிரிவை
கணநேரமும் நினைத்து நினைத்தே
கண்கள் ஒரு கணம் கூட துஞ்சாமல்
கண் விழித்தே இருப்பதனால் – ஊரார்
கண் மூடும் நடு இரவிலும் நான்
கழலும் காதல் நினைவுகளுக்கு மருந்தாக – மடலால்....
கட்டிய குதிரையில் "மடலேறுவதை"ப் பற்றியே மருகுகிறேன் !**

*1137. கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்*

**பெண் இனத்திற்கே மிகப் பெரிய
பெருமை என்ன தெரியுமா...?
பெருங் கடல் போல் கொடுங் காமம்
பெரிதாக வருத்தினாலும் துன்புறுத்தினாலும் காதலினால்
பெரும் பாடு படும் ஆண் வர்க்கம் போல்
பெண்கள் மடலேறுவதே இல்லை !**

*1138. நிறையரியர் மன்னளியர் என்னாது காமம்
மறையிறந்து மன்று படும்*

**காதல் மிகவும் பொல்லாதது !
காதலில் விழுந்த ஆண்மகனைக்
காப்பாற்ற நினையாமல் – இவன்
பாவம் பரிதாபத்திற்குரியவன்...!
பாடுபடும் மனதை ஒளிக்கத் தெரியாதவன் எனப் பரிதாபப்பட்டுப்
பார்க்காமல் "காதல்" எப்படியும் வெளிப்பட்டுப்
பாரினில் எல்லோருக்கும் தெரிந்து விடுகிறதே !**

*1139. அறிகிலார் எல்லாரும் என்றேயென் காமம்
மறுகின் மறுகும் மருண்டு*

**எல்லோரும் இந்த ஊரில்
எவ்விதமும் அறியவில்லை என்றே
எண்ணி இந்தக் காதல் – ஊரின்
எல்லை வரை மறுகி மறுகி மயங்கி
எகிறிக் குதித்து உருண்டோடி வீதிகளில் சுழல்கிறது !**

*1140. யாம்கண்ணிற் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா ஆறு*

**காதல் நோய் தரும் கடுந்துன்பத்தைக்
கடுகு அளவு கூட அனுபவிக்காத
காரணத்தால் என்னைக் கண்ணில்
காணும் போதெல்லாம் எள்ளி நகையாடுவர்
காலமெல்லாம் அறிவில்லாதவர் !**

## 115. அலர் அறிவுறுத்தல்

**1141.** *அலரெழ ஆருயிர் நிற்கும் அதனைப்*
*பலரறியார் பாக்கியத் தால்*

**என் இனிய காதலைப் பற்றி ஊரார்**
**எல்லோரும் பழி தூற்றிப் பேசினாலும்**
**எவரெவரோ என் காதலைக் கதைப்பது பற்றி**
**என் உள்ளம் மகிழ்ச்சி கொள்கிறது !**
**என் காதல் கை கூட இது ஒரு வாய்ப்பு**
**என்பதால் என் உயிர் வாழ்கிறது என்பதை**
**என் ஊரார் அறியாதது என் பாக்கியமே !**

**1142.** *மலரன்ன கண்ணாள் அருமை அறியா*
*தலரெமக் கீந்ததிவ் வூர்*

**மலர் விழியாளின் அருமை பெருமை**
**மற்றும் மாண்பினை உணராமல்**
**மட்டப்படுத்தும் விதமாக இவ்வூர்**
**மனம் போன போக்கில் பழி தூற்றி**
**மனங் கவர் காதல் என்று பறை சாற்றி**
**மறைமுகமாக உதவியை ஈந்தது !**

**1143.** *உறாஅதோ ஊரறிந்த கெளவை அதனைப்*
*பெறாஅது பெற்றன்ன நீர்த்து*

**"அலர்" என்று பலரால் பேசப்பட்டு**
**அள்ளித் தெளிக்கிற "பழியும்" "கிசுகிசுவும்"**
**அருமையான என் காதலுக்குக் கிட்டாதா...?**
**அப்போதுதான் காதலியை அடையாத போதும்**
**அடைந்து விட்டதாகவே இன்பமுறுகிறேன் !**

*1144.* *கவ்வையாற் கவ்விது காமம் அதுவின்றேல்*
*தவ்வென்னும் தன்மை இழந்து*

**தேடித்தேடி எங்கள் காதலைப் பற்றி**
**தேவையற்ற பழிகளையெல்லாம்**
**தேர்ச்சியாக ஊரார் இட்டுக்கட்டியதால் தான்**
**தேறுதலாய் எங்கள் காதல் வளர்கிறது ! – இல்லையெனில்**
**தேய்ந்து போயிருக்கும் எங்களின்**
**தேன் போன்ற காதல் !**

*1145.* *களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்*
*வெளிப்படுந் தோறும் இனிது*

**காதல் – ஊராரின் ஏச்சுப் பேச்சுகளால்**
**காலமெல்லாம் தொடர்ந்து வெளிப்பட வெளிப்படக்**
**களிப்படைவது என்பது – மயக்கம் தரும்**
**கள்ளைக் குடிக்கக் குடிக்க மயங்கி மயங்கிக்**
**கள்ளை மீண்டும் விரும்புவது போல !**

*1146.* *கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்*
*திங்களைப் பாம்புகொண் டற்று*

**கண்டதோ காதலரை ஒரே ஒரு நாள்...!**
**கண்டவர்களின் – அதைப் பற்றிய பரிகாசமோ**
**சந்திரனைப் பாம்பு விழுங்கி விடும்**
**சந்திர கிரகணம் போல் ஊரெங்கும்**
**சட்டென்று பரவி விட்டது !**

1147. *ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்*
*நீராக நீளுமிந் நோய்*

**கௌவும் "காதல்" நோய் எனும் பயிருக்குக்**
**"கௌவை" எனும் "பழிச்சொல்" எருவாகவும்**
**கௌரவம் இல்லை என அன்னையின் சுடுசொல்**
**"கௌவை" எனும் வருத்தம் தரும் நீராகவும் அமையும் !**

1148. *நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்*
*காமம் நுதுப்பேம் எனல்*

**ஊரார் பழிச்சொற்களுக்குப் பயந்து**
**ஊக்கமிழந்துக் காதலை அடக்குவோம் என்பது**
**கொழுந்து விட்டு எரியும் நெருப்பைக்**
**கொழு நெய்யால் அணைப்போம் என்பதைப் போல !**

1149. *அலர்நாண ஒல்வதோ அஞ்சலோம் பென்றார்*
*பலர்நாண நீத்தக் கடை*

**உன்னை விட்டுப் பிரியவே மாட்டேன்**
**உண்மையில் அஞ்ச வேண்டாம் ! என அன்று**
**உரைத்தவர் பலர் கேலி செய்யும்படி மனம்**
**உறுத்த பிரிந்து சென்றவனுக்காக நான் ஏன்**
**உள்ளுக்குள் நாண வேண்டும் !**

1150. *தாம்வேண்டின் நல்குவர் காதலர் யாம்வேண்டும்*
*கௌவை எடுக்குமிவ் வூர்*

**யாம் காதலர்கள் இருவரும் விரும்பியவாறு**
**யாங்கணுமே எங்கள் காதலை இவ்வூரார்**
**யாவருமே அரசல் புரசலாய் பேசினர்...!**
**யாம் விரும்பியபடி ஊரார் தூற்றுவதால்**
**யாங்ஙனம் காதலரும் காதலில் வெல்ல**
**யாம் விரும்பியபடி அருளுவார் !**

## 116. பிரிவு ஆற்றாமை

1151. *செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்*
*வல்வரவு வாழ்வார்க் குரை*

**பிரிந்து செல்லாமல் இருப்பதென்றால்**
**பிரியமுடன் இப்போது என்னிடம் சொல்...!**
**பிரிந்து சென்று விடுவதைப் பற்றி**
**பிடிவாதமாகச் சொல்ல வேண்டுமெனில் யார்**
**பின்னாளில் உயிரோடு வாழ்கிறார்களோ அவரிடத்துப்**
**பிரியா விடையைச் சொல் !**

1152. *இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்*
*புன்கண் உடைத்தால் புணர்வு*

**முன்பெல்லாம் அவர் பார்த்தாலே பரவசமாய்**
**முழுமையாய்த் தழுவிய விழிகளால்**
**முழு இன்பம் விளைந்தது...!**
**இப்போதோ அவருடன் கூடியிருக்கும்போது கூட**
**இனிமை மறந்து – பிரிய வேண்டியதை எண்ணி**
**இறுதி வரை அஞ்சித் துன்பப்பட வேண்டியுள்ளது !**

1153. *அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்*
*பிரிவோ ரிடத்துண்மை யான்*

**பிரிவுத் துயரத்தை நன்கு உணர்ந்த**
**பிரியமான காதலர் ஆனாலும்**
**"பிரியமாட்டேன் நான்" என அவர் சொல்லும்**
**பேச்சை நம்புவது கடினமே ! காரணம்**
**பிரியமானவரும் சில சமயம்**
**பிரிய நேரிடுவது தான் !**

1154. *அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்*
*தேறியார்க் குண்டோ தவறு*

**அஞ்சாதே என்றென்றும் பிரியமாட்டேன் என**
**அன்போடு ஆறுதல் சொன்னவரே**
**அவருடைய உறுதிமொழியை மறந்து**
**அவரே பிரிந்து சென்று விட்டால்**
**அதற்கானத் தவறு அவரை நம்பியவர் மீதா ?**

1155. *ஓம்பின் அமைந்தார் பிரிவோம்பல் மற்றவர்*
*நீங்கின் அரிதால் புணர்வு*

**என் உயிரைக் காக்க வேண்டுமென்றால்**
**என் உயிருக்கு உயிரான காதலரை**
**எனை விட்டுப் பிரியாமல் காக்க வேண்டும்**
**என்ன காரணம் எனில், பிரிந்தவர் கூடுவது**
**என்பது எளிதான காரியம் அல்ல...!**

1156. *பிரிவுரைக்கும் வன்கண்ணர் ஆயின் அரிதவர்*
*நல்குவர் என்னும் நசை*

**மீண்டும் மீண்டும் என் இனிய காதலர்**
**மீண்டு வர முடியாத காதல் பிரிவில் ஆழ்த்தி**
**மீள முடியாத சோகத்தில் உழல வைப்பவர்**
**மீதி இல்லாமல் கடுஞ்சித்தம் கொண்டு பேசுபவர்**
**மீண்டும் வந்து அன்பு காட்டுவார் என ஆசை தனை**
**மீட்டுவது வீணே !**

1157. *துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை*
*இறைஇறவா நின்ற வளை*

**என் இனிய காதலன்**
**என்னை விட்டுப் பிரிந்த செய்தியை**
**எலும்பும் தோலுமாக பிரிவின் துயரத்தால் ஆகி**
**என் உடல் மெலிந்து முன் கை மூட்டிலிருந்து**
**எளிதாக கழன்று கீழே உருண்டு விழும்**
**என் வளையல்கள் பறை சாற்றி விடுமே...!**

1158. *இன்னா தினன்இல்லூர் வாழ்தல் அதனினும்*
*இன்னா தினியார்ப் பிரிவு*

**இனத்தவரான உற்றார் உறவினர்களே**
**இல்லாத ஊரில் வாழ்வது துன்பம்...!**
**இனிய காதலைப் பிரிந்து**
**இனியவள் இருப்பது அதை விடப் பெருந்துன்பம் !**

1159. *தொடிற்சுடின் அல்லது காமநோய் போல*
*விடிற்சுடல் ஆற்றுமோ தீ*

**காணும் தீ தொட்டால் தான் சுடும் !**
**"காதல் தீயோ" தொலை தூரத்திற்குக்**
**காதலன் சென்று விட்டாலும்**
**காதல் நோய் பற்றி தாபத்தின்**
**காய்ச்சலால் கடுமையாக சுடும் !**

1160. *அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்*
*பின்இருந்து வாழ்வார் பலர்*

**காதலன் பிரிந்து செல்வதற்கு ஒப்புக்கொண்டதால்**
**காதல் பிரிவினால் உண்டாகும் துன்பத்தைக்**
**காத்து, கலங்கிய மனதைக் கட்டுப்படுத்தி**
**காலமெல்லாம் உயிர் வாழ்வர் பலர்...!**
**காதல் நோயில் வாழ்ந்த நானோ...?**

## 117. படர்மெலிந் திரங்கல்

*1161. மறைப்பேன்மன் யானிஃதோ நோயை இறைப்பவர்க்*
*கூற்றுநீர் போல மிகும்*

**மற்றவர்கள் அறியாதவாறு இக்காதல் நோயை**
**மறைப்பேன்...! ஆனால் என் செய்வது**
**மணல் கேணி இறைக்க இறைக்க**
**மடமடவென ஊறும் நீர் போல**
**மறைக்க மறைக்க காதல் மேலும் பெருகுகிறது !**

*1162. கரத்தலும் ஆற்றேன்இந் நோயைநோய் செய்தார்க்*
*குரைத்தலும் நாணுத் தரும்*

**காதல் நோயை என்னால் கொஞ்ச**
**காலம் கூட மறைக்கவும் முடியவில்லை !**
**காரணகர்த்தாவான காதல் நோயைத் தந்த**
**காதலனிடம் நாணத்தால் உரைக்கவும் முடியவில்லை !**

*1163. காமமும் நாணும் உயிர்காவாத் தூங்குமென்*
*நோனா உடம்பின் அகத்து*

**காதல் நோயால் வாடி வதங்கும் உடம்பிலிருந்து**
**காமதேவன் உயிரைத் துண்டாக்கி**
**காவடி போல் ஒரு புறம் – துன்புறுத்தும்**
**காதல் நோயையும் – இன்னொரு புறம்**
**காவல் காக்கும் நாணமும் தொங்குகின்றன !**

*1164. காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும்*
*ஏமப் புணைமன்னும் இல்*

**காதல் நோயாகியக் கடல்**
**காணுமிடமெல்லாம் ஆழ்ந்து வருத்துகிறது !**
**காதல் கடலை நீந்திக் கடந்து செல்ல**
**"காதலன்" எனும் "பாதுகாப்பான தோணி"தான் இல்லை !**

*1165. துப்பின் எவனாவர் மன்கொல் துயர்வரவு*
*நட்பினுள் ஆற்று பவர்*

**துணிந்து இன்பம் தரும் காதல் உறவிலேயே – பிரிவுத்**
**துயரைத் தயங்காமல் எனக்குத் தந்து**
**துன்பம் இத்துணை உண்டாக்கும் காதலன்**
**துன்பம் தரும் பகையிலே என்ன செய்வாரோ ?**

*1166. இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்*
*துன்பம் அதனிற் பெரிது*

**பிரியமான காதல் இன்பம்**
**பிரபஞ்சத்தில் கடல் போன்றது...! – ஆனால்**
**பிரிவு ஏற்படுத்தும் துன்பமோ**
**பிரமிக்கும் கடலை விடப் பெரியது !**

*1167. காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்*
*யாமத்தும் யானே உளேன்*

**கரை புரண்டு ஓடும் காமம் எனும்**
**கடுமையான வெள்ளத்தில் நீந்தி**
**கரை காண முடியவில்லை...!**
**கரை காணாத காலமான நள்ளிரவில்**
**கலங்கி நான் மட்டும் தனியாகத் தவிக்கிறேன் !**

1168. *மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்திரா*
*என்னல்ல தில்லை துணை*

**“மன்னுயிர்” எனும் “மானுட” உயிர்கள்**
**மண்ணில் உள்ளவர்களை எல்லாம்**
**மதி மயங்கி உறங்கச் செய்யும் இரவே…!**
**மறுக்க முடியாத துணையாக என்னைத்தவிர**
**மற்றவர் யாருமில்லாமல் இருக்கிறாயே இரவே…!**

1169. *கொடியார் கொடுமையின் தாம்கொடிய இந்நாள்*
*நெடிய கழியும் இரா*

**கொடிது கொடிது காதல் பிரிவை ஏற்றுக்**
**கொள்ள முடியாமல் தவிக்கும் தவிப்பு**
**கொடுந் துன்பத்தை விட மிகக்**
**கொடியது இந்த “இரவுகள்” நீண்டு –**
**கொடி போல் நெடிது விழித்திருந்துக்**
**கொடுக்கும் கொடுமை !**

1170. *உள்ளம்போன் றுள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்*
*நீந்தல மன்னோவென் கண்*

**காதலர் உள்ள இடத்திற்கு என் உள்ளம்**
**காற்று போல் விரைந்து செல்கிறது…!**
**உள்ளம் சென்றதைப் போல் என்னால்**
**உடனே செல்ல முடியவில்லையே…! – சென்றிருந்தால்**
**உருண்டோடிடும் கண்ணீர் வெள்ளத்தில்**
**உறுத்தும் கண்கள் நீந்த வேண்டியதில்லையே !**

## 118. கண் விதுப்பழிதல்

*1171. கண்டாம் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்
தாங்காட்ட யாங்கண் டது*

**காணுகின்ற கண்கள் தானே என்
காதலனைக் காட்டியது...!
காதலனைக் காட்டி ஆசை கொள்ளச் செய்து
காம வேதனையை உண்டாக்கி விட்டது...!
காட்டிய கண்களே காதல் நோயைத் தந்து
காதலனை எண்ணியே துன்புற்று அழுவது ஏன் ?**

*1172. தெரிந்துணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்
பைதல் உழப்ப தெவன்*

**பின் விளைவுகளை ஆராயாமல்
பிடித்தவரைப் பார்த்து மயங்கிப்
பிரகாசமான என் விழிகள் – இன்று
பிரியமானவர் பிரிந்ததால்
பித்துப் பிடித்துப் துன்ப முறுவதும் தம்மால்தான் என
பிதற்றலுற்றுத் தவிப்பது ஏன் ?**

*1173. கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து*

**கண்கள் களைப்பேயில்லாமல் பாய்ந்து சென்று
கண்ணாரக் காதலரைக் கண்டு மகிழ்ந்தது...! அதே
கண்கள் இன்றோ தாமாகவே
கண்ணீர் விட்டு அழுகின்றன...!
கண்டிப்பாக இது நகைப்புக்கு உரியது தானே...!**

1174. *பெயலாற்றா நீருலந்த உண்கண் உயலாற்றா*
*உய்வில்நோய் என்கண் நிறுத்து*

**தப்பிப் பிழைக்க முடியாத தீராத காதல் நோயைத்**
**தந்துவிட்ட என் கண்ணானக் கண்கள்**
**தரதரவென்றுக் கண்ணீர் விட்டு அழ முடியாமல்**
**தண்ணீர்ச் சத்து இல்லாமல் வற்றி விட்டது !**

1175. *படலாற்றா பைதல் உழக்கும் கடலாற்றக்*
*காமநோய் செய்தவென் கண்*

**பிரபஞ்சத்திலேயே மிகப் பெரிய கடலை விட**
**பிரம்மாண்டமாகக் காதல் நோயை**
**பிறக்க வைத்த கண்கள்**
**பிற்பாடு கண் துஞ்சாமல் துன்பப்படுகின்றன!**

1176. *ஓஒ இனிதே எமக்கிந் நோய் செய்தகண்*
*தாஅம் இதற்பட் டது*

**ஓ ! எனக்குக் காதல் நோயை**
**ஓங்கித் தந்த என் கண்கள்**
**ஓய்ந்து வருந்தும் என்னைப் போலவே**
**ஓய்வில்லாமல் வாடி வருந்துகின்றன...! – அதனால்**
**ஓயாத மகிழ்ச்சியே எனக்கும்...!**

1177. *உழந்துழந் துள்நீர் அறுக விழைந்திழைந்து*
*வேண்டி அவர்கண்ட கண்*

**விரும்பி நெகிழ்ந்து அவரைக் கண்ட**
**விழிகள் அன்று...! – இன்றோ**
**விடியும் வரை தூக்கமின்றி**
**விசாரத்துடன் வருந்தி வருந்தி**
**விழும் கண்ணீரும் வற்றட்டுமே...!**

*1178. பேணாது பெட்டார் உளர்மன்னோ மற்றவர்க்*
*காணா தமைவில கண்*

**நெஞ்சத்தால் விரும்பாமல், "சொல்லால்" விரும்பி**
**நெருங்கிப் பழகிய ஒருவர் உள்ளார்...!**
**நெருடலாய் உறவாடிய அவரைக் காணாமல்**
**நெடுந்துயில் கொள்ளாது கண்கள் !**

*1179. வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை*
*ஆரஞர் உற்றன கண்*

**காதலன் வராவிட்டாலும் கண்கள்**
**காதலனை எதிர்பார்த்தே தூங்குவதில்லை !**
**காதலன் வந்து விட்டாலும் கண்கள்**
**காதலனின் பிரிவை எண்ணித் தூங்குவதில்லை !**
**காணுகின்ற இந்த இரு வகைத் துன்பங்களும்**
**காதலர்களின் கண்களுக்கே உரித்தானவை தானோ !**

*1180. மறைபெறல் ஊரார்க் கரிதன்றால் எம்போல்*
*அறைபறை கண்ணார் அகத்து*

**பறை அறிந்து பல செய்திகளைப்**
**பரப்புகின்ற கண்களை உடைய**
**காதல் வேதனையை அடக்கி ஆளும்**
**காதலி என்னிடமிருந்துக்**
**காக்க வேண்டிய இரகசியங்களைக் கூட – ஊரார்கள்**
**காலாகாலத்தில் அறிந்து கொள்வது ஏறஎளிது !**

## 119. பசப்புறு பருவரல்

1181. *நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தவென்*
*பண்பியார்க் குரைக்கோ பிற*

**பிரியமுடன் பிரிந்து செல்வதற்கு என் காதலனுக்குப்**
**பிரியா விடை தந்து விட்டேன்...! ஆனால்**
**பிரிவுத் துன்பம் முற்றி – துயரின் வெளிப்பாடாகப்**
**பிரியமான உடலில் "பசலை" எனும் "அழகுத்தேமல்"**
**பிரதிபலிப்பதைப் பிறரிடம் எப்படிச் சொல்வேன் ?**

1182. *அவர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்தென்*
*மேனிமேல் ஊரும் பசப்பு*

**என் இனிய காதலர்**
**எனக்காகத் தந்தார்**
**எனக் கர்வத்தோடு – "அழகுத்தேமல்"**
**எனும் பசலை நிறம்**
**என் உடலில் ஏறி ஊர்ந்து**
**எங்கும் பரவுகிறது !**

1183. *சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறா*
*நோயும் பசலையும் தந்து*

**காதலர் எனக்கு**
**காதல் நோயையும்**
**காணும் பசலை நிறத்தையும்**
**காதலித்ததின் கைமாறாகக் கொடுத்து விட்டு**
**காண்போர் வியக்கும் என் அழகையும்**
**காத்த என் நாணத்தையும் எடுத்துக் கொண்டு – அவரைக்**
**காண முடியாமல் பிரிந்து சென்று விட்டார் !**

*1184. உள்ளுவன் மன்யான் உரைப்ப தவர்திறமால்*
*கள்ளம் பிறவோ பசப்பு*

**காதலரையே தினமும் நினைக்கிறேன்**
**காதலரின் திறமையையே பேசுகிறேன்...!**
**உள்ளத்தில் எப்போதும் காதலர்**
**உள்ளிருக்கும் போது எப்படி இந்த**
**உடலில் பசலை நிறம் படரும் –**
**"உறுதல்" தான் என்ன ? வேறு சூதோ ?**

*1185. உவக்காணெம் காதலர் செல்வார் இவக்காணென்*
*மேனி பசப்பூர் வது*

**இதோ... இப்போது தான் என்**
**இனிய காதலர் பிரிந்து**
**இதோ அந்தப் பக்கம் சென்றிருப்பார்...!**
**இந்தப் பக்கம் உடனடியாக என்**
**இளகிய உடலில் பசலை நிறம்**
**இலகுவாய்ப் படர்ந்து விட்டதே...!**

*1186. விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கண்*
*முயக்கற்றம் பார்க்கும் பசப்பு*

**விளக்கின் வெளிச்சம் கொஞ்சமாவது எப்போது**
**விலகுமோ என்று காத்திருந்து பரவும்**
**இருளைப் போல என் காதலரின்**
**இறுக்கமான அணைப்பு எப்போது கொஞ்சம்**
**இடைவெளி விடுமோ எனக்காத்திருந்து**
**இலகுவாய் பரவுகிறது பசலை நிறம் !**

1187. *புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்*
*அள்ளிக்கொள் வற்றே பசப்பு*

**தலைவனைத் தழுவிக் கிடந்தேன்...!**
**தவறுதலாய்க் கொஞ்ச நேரம் சற்று**
**தள்ளி இடம் பெயர்ந்தேன்...!**
**அவ்வளவு தான் ...! தடதடவென என்னை**
**அள்ளிக் கொண்டு போவதைப் போல்**
**அத்துணை இடத்திலும் “பசலை”ப் படர்ந்து விட்டதே !**

1188. *பசந்தாள் இவளென்ப தல்லால் இவளைத்*
*துறந்தார் அவரென்பார் இல்*

**“பசலை” நோயை அடைந்தாள் அவள் என**
**பகர்கின்றார்களே தவிர...**
**பரிதாபம்... காதலர் இவளைப்**
**பரிதவிக்க விட்டுப் பிரிந்தார் எனப்**
**பகர்வதில்லையே !**

1189. *பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்*
*நன்னிலையர் ஆவர் எனின்*

**பிரிவுக்கு ஆளாக்கிவிட்டுச் சென்ற என்**
**பிரியமான காதலர் என்றும்**
**“பிரிந்திருக்கின்றக் காரணத்தால் நலம் பெறுவர்” எனப்**
**பிறழாமல் தெரிந்தால்...! “பசலை”ப்**
**பிரமாதமாகப் பற்றி என் உடலில் பரவட்டும்...!**

1190. *பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே நயப்பித்தார்*
*நல்காமை தூற்றார் எனின்*

**பிரிந்து சென்ற இனிய காதலரைப்**
**பிரியமானவர் இல்லை எனப்**
**பிறர் தூற்றாமல் இருப்பார்களேயானால்...**
**“பசலைப் படர்ந்தவள்” இவள் என நான்**
**“பட்டப் பெயர்” எடுப்பதும் நல்லது தான் !**

## 120. தனிப்படர் மிகுதி

1191. *தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே*
*காமத்துக் காழில் கனி*

**தான் நேசிப்பதைப் போலவே**
**தாமும் நேசிக்கும் காதலர் மட்டும்**
**பெற்று விட்டால் போதும்...!**
**பெற்ற விதையில்லாக் கனியை**
**பெரும் பாடு படாமல் அனுபவிக்கிறப்**
**பெறும் பேறு கிட்டியதைப் போலத்தான்...!**

1192. *வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு*
*வீழ்வார் அளிக்கும் அளி*

**விரும்பி வரும் காதலிக்கு – அவளை**
**விரும்பும் காதலர் என்றும்**
**விண்ணுயரப் பொழியும் அன்பு – உலகில்**
**வித்திட்ட உயிரை வாழ வைக்க**
**விண்ணிலிருந்து பொழியும் மழை போல...!**

1193. *வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே*
*வாழுநம் என்னும் செருக்கு*

**தன் மனம் விரும்புகிறக் காதலர்**
**தன்னையும் அதிகம் விரும்புகிறக் காதலராக**
**தமக்கு அமைந்து விட்டால்**
**பிரிந்திருந்தாலும் காதலர் திரும்பி வந்து**
**பிறவித் துயரை தீர்ப்பவர் என்பதால்**
**பிறக்குமே பெருமிதம் இன்புற்று வாழ்வதாக ...!**

1194. *வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்*
*வீழப் படாஅர் எனின்*

**உலகத்தார் நற்குணங்கள் பல வகையிலும்**
**உள்ளதால் விரும்பப்பட்டவர் – தாம்**
**உள்ளத்தால் விரும்பியவர் – தம்மை**
**உள்ளத்தால் விரும்பவில்லையெனில் – காதலிக்கும்**
**உரிமைதனை இழந்து நல்வினையற்று வீழ்வார் ...!**

1195. *நாம்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ*
*தாம்காதல் கொள்ளாக் கடை*

**நம்மால் அன்புடன் காதலிக்கப்ட்டவர்**
**நம்மை அதே போல் காதலிக்கவில்லையெனில்**
**நமக்கு அவர் வேறு என்ன**
**நன்மையைச் செய்து விட முடியும் ?**

1196. *ஒருதலையான் இன்னாது காமங்காப் போல*
*இருதலை யானும் இனிது*

**ஒரு தலைக் காதல் என்பது**
**ஒருவரிடமும் மட்டுமே உள்ள காதல்...!**
**இருவரிடமும் இனிமைக் காதல்**
**இருந்தால்தான் காவடியின் பாரம் போல்**
**இரு பக்கங்களிலும் ஒத்த கனமாக**
**இருந்தால் தானே காதலே இன்பம் ...!**

1197. *பருவரலும் பைதலும் காணான்கொல் காமன்*
*ஒருவர்கண் நின்றொழுகு வான்*

**காமதேவனாகிய "மன்மதன்" எப்போதும்**
**காதலர்களில் ஒருவர் பக்கமே சாய்ந்து விடுவதால்**
**காதலிக்கு ஏற்படும் பசலை நோயையும்**
**காம நோயின் துன்பத்தையும் அறிய மாட்டானே... !**

1198. *வீழ்வாரின் இன்சொல் பெறாஅ துலகத்து*
*வாழ்வாரின் வன்கணார் இல்*

**காதலரிடமிருந்து ஓர் இனிய சொல் வராமல்**
**காதல் பிரிவின் துன்பத்தை அனுபவிக்கும்**
**காதலி போல் உலகத்தில் "வன்கணார்" எனும்**
**காணாத வீரமிக்க பெண் யாரும் இல்லையே...!**

1199. *நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்*
*டிசையும் இனிய செவிக்கு*

**அன்புக்குரியவர் என்னிடம் எப்போதும்**
**அன்பு காட்டாதவராகப் பிரிந்து இருப்பினும்**
**அவரைப் பற்றி ஓர் இனிய சொல் செவி**
**அறைகளில் விழுந்தாலும் இனிமை பொங்குகிறது !**

1200. *உறாஅர்க் குறுநோய் உரைப்பாய் கடலைச்*
*செறாஅஅய் வாழிய நெஞ்சு*

**நெஞ்சே ! நீ வாழ்க !!**
**நெஞ்சத்தில் நிறைந்த காதலர்**
**நெஞ்சில் அன்பு இல்லாமல்**
**நெருங்கிப் பின் பிரிந்து சென்று**
**நெருக்கித் தந்த காதல் நோயின்**
**நெடுந்துயரை அவரிடம் உரைப்பதை விட**
**நெருடும் துன்பக் கடலைத் தூர்த்து விடலாம் ...!**

## 121. நினைந்தவர் புலம்பல்

1201. *உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்*
*கள்ளினும் காமம் இனிது*

**உள்ளத்தில் எண்ணும் போதெல்லாம்**
**உள்ளுக்குள் தீராத பெரு மகிழ்ச்சியை**
**உண்டாக்குவதால் என்றென்றும்**
**உண்டால் களிப்புத் தரும் கள்ளை விட**
**உண்மையாகவே காதல் இனிது !**

1202. *எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார்*
*நினைப்ப வருவதொன் றில்*

**பிரிவுத் துன்பம் இருந்தாலும்**
**பிரியமான பிரிந்தவரை நினைக்கும்போது**
**பிறந்த அந்த பிரிவுத் துன்பம்**
**பிரிந்து போய் விடுகிறது...! – ஆதலால்**
**பிரியமானக் காதல் எவ்வகையிலும் இனிதே...!**

1203. *நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்*
*சினைப்பது போன்று கெடும்*

**வருவது போல் போக்குக் காட்டி**
**வராமல் நின்று விடுகிறதே தும்மல்...!–அதைப்போல்**
**நினைப்பவர் போல் இருந்து என் காதலர்**
**நினைக்காமல் விட்டு விட்டாரா...?**

1204. *யாமும் உளேங்கொல் அவர்நெஞ்சத் தெந்நெஞ்சத்*
*தோஒ உளரே அவர்*

**நெஞ்சத்தில் என் காதலர் என்றும்**
**நெருக்கமாக நிறைந்து உள்ளார்...! – அவர்**
**நெஞ்சிலே நானும் நீங்காமல்**
**நெடுங்காலம் இருக்கின்றேனா...?**

1205. *தம்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணார்கொல்*
*எம்நெஞ்சத் தோவா வரல்*

**தன் நெஞ்சில் என்னை நுழைய விடாமல்**
**தற்காத்துக் கொண்ட காதலர்**
**என் நெஞ்சில் மட்டும் ஓயாமல்**
**எப்படியோ நுழைவதற்கு**
**எவ்விதமும் வெட்கப்படமாட்டாரா ?**

*1206. மற்றியான் என்னுளேன் மன்னோ அவரொடுயான்*
*உற்றநாள் உள்ள உளேன்*

**காதலரோடு நான் சேர்ந்திருந்த இனிய**
**காலங்களை நினைத்துத்தான் நான்**
**காதல் துயரைக் கடந்து உயிர் வாழ்கிறேன்...! – வேறு**
**காரணத்தால் நான் எப்படி உயிர் வாழ முடியும் ?**

*1207. மறப்பின் எவனாவன் மற்கொல் மறப்பறியேன்*
*உள்ளினும் உள்ளம் சுடும்*

**மறதி என்பதே இல்லாமல் காதலரை**
**மறக்காமல் நினைத்துக் கொண்டிருக்கும்போதே**
**மனதைப் பிரிவுத் துன்பம் சுட்டுப் பொசுக்குகிறதே...!**
**மற்றபடி நினைக்கவே இல்லாமல்**
**மறந்து விட்டால் நான் என்ன ஆவேனோ...?**

*1208. எனைத்து நினைப்பினும் காயார் அனைத்தன்றோ*
*காதலர் செய்யும் சிறப்பு*

**எத்துணை முறை நினைத்தாலும்**
**என் காதலர் கோபம் கொள்ள மாட்டார்...!**
**எனக்காக என் காதலர்**
**எனக்குச் செய்யும் சிறப்பு அது...!**

*1209. விளியுமென் இன்னுயிர் வேறல்லம் என்பார்*
*அளியின்மை ஆற்ற நினைந்து*

**“உன்னுயிரும் என்னுயிரும் வேறல்ல” என**
**உள்ளமுருகி முன்பு சொன்ன காதலர்**
**உண்மையில் இன்று என்னருகில் இல்லாதபோது – என்**
**உயிர் கொஞ்சம் கொஞ்சமாக அழிகிறதே...!**

*1210. விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்*
*படாஅதி வாழி மதி*

**நிலவே...! நீ வாழி ! – நெஞ்சில்**
**நின்று வாழ்ந்து வந்தாலும்**
**நிதர்சனத்தில் பிரிந்து சென்ற காதலரை**
**நிதமும் நான் கண்ணால் காண வேண்டும்...!**
**நிலவே...! நீ தான் மறைந்து விடாமல்**
**நித்தமும் ஒளி வீச வேண்டும்...!**

## 122. கனவுநிலை உரைத்தல்

*1211.* *காதலர் தூதொடு வந்த கனவினுக்*
*கியாதுசெய் வேன்கொல் விருந்து*

**காதலரை நினைத்து வருந்தி உறங்கிய போது**
**காதலர் அனுப்பிய தூதுடன் வந்து**
**காட்சி தந்த கனவுக்குக் கைம்மாறாக – சுவை**
**காணும் விருந்து என்ன செய்வேன் ?**

*1212.* *கயலுண்கண் யானிரப்பத் துஞ்சின் கலந்தார்க்*
*குயலுண்மை சாற்றுவேன் மன்*

**'கயல்' என்னும் கெண்டை மீன்கள் போல**
**கரை புரண்டு ஓடும் மையுண்ட விழிகளைத்**
**கருணை புரிய கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்...!**
**மீண்டும் விழிகள் உறங்கினால்**
**மீண்டும் காணும் கனவில் காதலரிடம் நான் என் உயிரை**
**மீட்டு இன்னும் வாழ்கிறேன் என**
**மீதி உண்மையையும் உரைப்பேன் !**

*1213.* *நனவினான் நல்கா தவரைக் கனவினால்*
*காண்டலின் உண்டென் உயிர்*

**நனவில் வந்து அன்பினை**
**நயந்து காட்டாத காதலரைக்**
**கனவிலாவது காண்பதாலேயே**
**கட்டிக் காக்கப்படுகிறது என் உயிர் !**

*1214.* *கனவினான் உண்டாகும் காமம் நனவினான்*
*நல்காரை நாடித் தரற்கு*

**நாளும் நனவில் வந்து**
**நாட்டமுடன் அன்பு காட்டாத காதலரை**
**நாடித் தேடி கொண்டு வந்து காட்டும் கனவில்**
**நாட்டம் கொண்டு இன்பம் உண்டாகிறது !**

*1215.* *நனவினாற் கண்டதூஉம் ஆங்கே கனவுந்தான்*
*கண்ட பொழுதே இனிது*

**நனவிலே அப்போது காதலரைக் கண்ட போது**
**நயந்தது ஒரு இன்பம்...!**
**கனவிலே இப்போது காதலரைக் கண்ட போதும்**
**களிப்போடு வந்தது அதே இன்பம்...!**

*1216.* *நனவென ஒன்றில்லை ஆயின் கனவினாற்*
*காதலர் நீங்கலர் மன்*

**'நனவு' என்ற 'விழிப்பு' மட்டும்**
**நடுவில் வந்து கெடுக்காமல் இருந்திருந்தால்**
**'கனவில்' கொஞ்சிய காதலர்**
**கண்டிப்பாக பிரியாமலே இருந்திருப்பார் !**

*1217.* *நனவினான் நல்காக் கொடியார் கனவினான்*
*என்னெம்மைப் பீழிப் பது*

**நேரிலே வந்து என்னிடம்**
**நேசம் கொள்ளாத கொடியவர்**
**வருகின்ற கனவிலே எப்போதும் வந்து என்னை**
**வருத்தப்பட வைப்பது ஏன் ?**

*1218.* *துஞ்சுங்கால் தோள்மேலர் ஆகி விழிக்குங்கால்*
*நெஞ்சத்தர் ஆவர் விரைந்து*

**தூங்கும் போது என் கனவில் வந்து**
**தூங்கெயிலாய் தோள் மீது சாய்ந்து மனதில்**
**தூவிய இன்பம் நிறைந்துள்ளது...!**
**தூங்கி விழித்தவுடன் காதலர் விரைவாகத்**
**தூண்டிய நேரத்தில் நெஞ்சில் தாவி அமர்ந்து கொண்டாரே...!**

*1219.* *நனவினான் நல்காரை நோவர் கனவினான்*
*காதலர்க் காணா தவர்*

**காதலரை என்றுமே கனவிலே**
**காணாத மங்கையவள் தான்**
**நனவிலே வந்து அன்பினை**
**நயக்கவில்லையே என நொந்து கொள்வார் !**

*1220.* *நனவினான் நம்நீத்தார் என்பர் கனவினான்*
*காணார்கொல் இவ்வூ ரவர்*

**நனவில் என்னை விட்டு என் காதலர் – பிரியாவிடையுடன்**
**நவிலாமல் நீங்கி விட்டார் என்று**
**நன்கு ஏளனம் செய்யும் இவ்வூரார்**
**நல்கும் என் கனவிலே நீங்காது**
**நல் வரவினைத் தருவதைக் காணமாட்டார்...!**

## 123. பொழுதுகண்டு இரங்கல்

*1221. மாலையோ அல்லை மணந்தார் உயிருண்ணும்*
*வேலைநீ வாழி பொழுது*

**மயக்கும் மாலைப் பொழுதே...! இப்போது நீ**
**மயக்கும் மாலைப் பொழுதே அல்ல...!**
**"மணந்தார்" எனும் காதலரோடு சேர்ந்து**
**மகிழ்ந்து பிறகு பிரிந்து வாடும்**
**"மகளிர்க்கு" உயிரை எடுத்து வாழ்வை**
**மறுக்கும் முடிவு காலமாக இருக்கின்றாய்...!**

*1222. புன்கண்ணை வாழி மருள்மாலை எங்கேள்போல்*
*வன்கண்ண தோநின் துணை*

**மயக்கும் மாலைப் பொழுதே – நீயும்**
**மங்கையவள் என்னைப்போல் ஒளி இழந்து**
**மருள் அடைந்த மாலைப் பொழுதாக**
**மருகி நிற்கிறாயே...! உன் துணையும்**
**மன்னவன் என் துணைபோல் என்றும்**
**மனதில் இரக்கம் இல்லாதவனா,,,?**

*1223. பனியரும்பிப் பைதல்கொள் மாலை துனியரும்பித்*
*துன்பம் வளர வரும்*

**பக்கத்தில் என் காதலர் இருக்கும்போது**
**பனி படர்ந்து பசந்த நிறம் கொண்டு**
**பயந்து வந்த மாலைப் பொழுது – நாள்**
**பட, நாள் பட காதலர் இல்லாதிருக்கும்போது**
**பரிவற்று உயிரை வெறுக்குமளவுப்**
**படுத்துகிற துன்பத்தைத் தருகிறது...!**

*1224. காதலர் இல்வழி மாலை கொலைக்களத்*
*ஏதிலர் போல வரும்*

**காதலர் இல்லாத நேரம்**
**காலம் பார்த்து வருகின்ற மாலைப் பொழுது**
**போரிடும் கொலைக் களத்தில் பொல்லாத**
**போர் வீரர்கள் வருவதைப் போல் வருகின்றது !**

*1225. காலைக்குச் செய்தநன் றென்கொல் எவன்கொல்யான்*
*மாலைக்குச் செய்த பகை*

**மயக்கும் மாலைப் பொழுது வந்தாலே**
**மயங்கி கிறங்கிக் காதல் துயர் தந்து**
**மனதை வருத்துகிற மாலைப் பொழுதிற்கு**
**மங்கையவள் நான் செய்த தீமை தான் என்ன ?**
**மனம் வருத்தாத காலைக்கு நான் செய்த நன்மை தான் என்ன ?**

*1226. மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத*
*காலை அறிந்த திலேன்*

**மயக்கும் மாலைப் பொழுது என்**
**மனதிற்கு இவ்வளவுப் பெரிய கொடுமையைச் செய்யுமென**
**"மணந்தார்" எனும் "மனம் கவர்ந்தவர்"**
**மங்கை என்னிடம் கூடி இருக்கும்போது**
**மனதால் நான் அறியவில்லையே!**

*1227. காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி*
*மாலை மலருமிந் நோய்*

**"காதல் துயர்" எனும் மலர்**
**காலையில் அரும்பி, பின் பகல்**
**காலம் முழுவதும் முதிர்ச்சியடைந்து**
**காணும் மாலைப் பொழுதில் மலரும் ஒரு நோயாகும் !**

*1228. அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்*
*குழல்போலும் கொல்லும் படை*

**'இடையன்' எனும் 'ஆயனின்'**
**இனிய புல்லாங்குழல் இசை எனக்கு**
**இனியவரின் பிரிவால் நெருப்பாகச் சுட்டு**
**இன்னல் தருகின்ற மாலைப் பொழுதிற்கு**
**இந்த மங்கையை கொல்லும் படையின் பறை**
**இசையின் தூது குழலாய் காதில் கேட்கிறது !**

*1229. பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு*
*மாலை படர்தரும் போழ்து*

**மதி மயக்கும் இந்த மாலைப் பொழுது**
**மயக்கியது என்னை மட்டுமல்ல;**
**மதி மருண்டு மாலையில் படரும்போது**
**மண்ணில் "ஊரே" மருண்டு வருத்தமடைகிறது !**

*1230. பொருள்மாலை யாளரை உள்ளி மருள்மாலை*
*மாயுமென் மாயா உயிர்*

**மயக்கும் காதலின் பிரிவுத் துயர் தரும்**
**மயக்கத்தினால் அழியாத என் உயிர் – பொருள்**
**மயக்கத்தினால் அதனைத் தேடிச் சென்ற என்**
**மன்னவரை நினைத்து இந்த**
**மயக்கும் மாலைப் பொழுதில்**
**மயங்கி மாயமாகிறதே என் உயிர்...!**

## 124. உறுப்புநலன் அழிதல்

*1231. சிறுமை நமக்கொழியச் சேட்சென்றார் உள்ளி*
*நறுமலர் நாணின கண்*

**நெடுக பிரிவுத் துன்பத்தை ஏற்படுத்தி விட்டு**
**நெடுந்தூரம் சென்று விட்ட காதலரை**
**நெக்குருக எண்ணி எண்ணி அழுத கண்கள்**
**நெகிழ்ந்து – தமக்கு நாணின நறுமலர்கள்**
**நெருடக் கண்டு நாணி விட்டன...!**

*1232. நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்*
*பசந்து பனிவாரும் கண்*

**நம்மால் நயந்தவர்**
**நம்மை நல்காமையை**
**நன்கு ஊராருக்கு உரைத்திடும்படி**
**நயந்து பசலை நிறம் கொண்டு**
**நதி போல் நீர் பொழியும் கண்கள் காட்டுகின்றன...!**

*1233. தணந்தமை சால அறிவிப்ப போலும்*
*மணந்தநாள் வீங்கிய தோள்*

**இனியவர் தழுவிக் கிடந்த போது**
**இன்ப மிகுதியால் பூரிக்குதே என்**
**இனிய இளகிய தோள்கள்**
**இப்போது மெலிந்திருப்பது**
**இனியவர் பிரிவை அறிவிக்கவே...!**

*1234. பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்*
*தொல்கவின் வாடிய தோள்*

**துணையான காதலர் பிரிந்ததால்**
**துவண்டு போய் அழகினை இழந்து**
**வாடி வதங்கிய தோள்கள்**
**வாகாய் இளைத்துப் போய் பெருமை இழந்து**
**வாரி அணிந்த வளையல்களும் கழண்டோடி விட்டன !**

*1235. கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு*
*தொல்கவின் வாடிய தோள்*

**கொஞ்சிடும் வளையல்கள் கைகளில்**
**கொஞ்சம் கூட நிற்காமல் கழன்று விழ**
**கொள்ளை அழகில் இருந்த என் தோள்கள்**
**கொண்டிருந்த அழகை இழந்து**
**கொடிய மனம் கொண்ட என்னுடைய கொடியாரின்**
**கொடுமைதனை மற்றவர்க்கு அறிவிக்கிறது !**

*1236. தொடியொடு தோள்நெகிழ நோவல் அவரைக்*
*கொடியார் எனக்கூறல் நொந்து*

**கனிவுமிகு உள்ளம் நொந்து**
**கட்டான வளையல்கள் கழன்று**
**கடினமானத் தோள்கள் மெலிந்து**
**கண்டவரெல்லாம் – என் காதல்**
**கண்ணானவரைக் கொடியவர் எனக்**
**கருத்துரைப்பதைக் கேட்டு இதயம்**
**கடுத்து நொந்து போகிறேன்...!**

*1237. பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்*
*வாடுதோட் பூசல் உரைத்து*

**என் இனிய நெஞ்சமே...!**
**என்னை விட்டுப் பிரிந்து கொண்டிருக்கும்**
**என்னுடைய அன்பில்லாக் கொடியவர்க்கு**
**என்னுடைய தோள்கள் மெலிந்து போனதால்**
**எனக்கு ஏற்பட்ட துயரை**
**எடுத்துச் சொல்லிப் பெருமை அடைய மாட்டாயா ?**

*1238. முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது*
*பைந்தொடிப் பேதை நுதல்*

**நுடங்காமல் இறுகத் தழுவிய கைகளை**
**நுணுக்கத்துடன் கொஞ்சம் தளர்த்தியவுடன்**
**நுண்மையாய் அதைக் கூடப் பொறுத்துக் கொள்ள முடியாமல்**
**நுதலாகிய நெற்றியில் பசலை நிறம்**
**நுந்துதலால் படர்ந்து விட்டது !**

*1239. முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற*
*பேதை பெருமழைக் கண்*

**இறுக்கமாகச் சேர்த்து அணைத்திருந்தபோது**
**இரண்டு காதலர்களுக்கிடையே**
**இன்பம் தரும் குளிர்ச்சி மயமான காற்று**
**இருந்த சிறு இடைவெளியிலேயே நுழைந்த போது**
**இனிய காதலியின் அகன்ற நீண்ட விழிகள்**
**இந்தப் பசலை படர்ந்து நிறம் மாறி விட்டன !**

*1240. கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே*
*ஒண்ணுதல் செய்தது கண்டு*

**"ஒண்ணுதல்" எனப்படும்**
**"ஒளி" பொருந்திய நெற்றி**
**ஒப்புதல் இல்லாத பிரிவுத் துயரால்**
**ஒத்துக் கொள்ள முடிந்த பசலை நிறமடைந்ததைக் கண்டு**
**ஒப்பில்லா காதலியின் கண்களில்**
**ஒத்து ஏறிய பசலையும் வருந்துகிறதே !**

## 125. நெஞ்சொடு கிளத்தல்

*1241.* *நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே எனைத்தொன்றும்*
*எவ்வநோய் தீர்க்கும் மருந்து*

**என் இனிய நெஞ்சமே...!**
**எந்த மருந்தாலும் தீர்க்க முடியாத**
**என் காதல் நோய் தீர்ந்திட**
**எந்த ஒரு மருந்தையாவது நினைத்துப் பார்த்து**
**எனக்குச் சொல்ல முடியுமா...?**

*1242.* *காத லவரிலர் ஆகநீ நோவது*
*பேதைமை வாழியென் நெஞ்சு*

**என் நெஞ்சே வாழ்வாயாக...!**
**என்னிடம் அவர் காதல் இல்லாதவராக இருக்க...**
**என் நெஞ்சே நீ மட்டும்**
**என்னவரை எண்ணி வருந்துகிறாயே...!**
**என்னே உன் பேதமை...!**

*1243.* *இருந்துள்ளி என்பரிதல் நெஞ்சே பரிந்துள்ளல்*
*பைதல்நோய் செய்தார்கண் இல்*

**என் நெஞ்சே...!**
**என்றும் காதலரை நினைத்து வருந்துகிறாய்...!**
**எனக்கு இந்தக் காதல் நோயைத் தந்த அவருக்கு**
**என் நெஞ்சம் போல் அவர் நெஞ்சம்**
**என்றும் அன்பு கொண்டு இல்லையே...!**

*1244. கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவையென்னைத்
தின்னும் அவர்க்காணல் உற்று*

**என் இனிய நெஞ்சே...!
என் காதலரை நீ காணச் செல்லும்போது
என் இரண்டு கண்களையும்
எப்படியாவது அழைத்துச் செல்...!
என்னவரைக் காண வேண்டுமென
எப்படி என்னைப் பிடுங்கித் தின்கிறது பார்
என் கண்கள்...!**

*1245. செற்றார் எனக்கை விடலுண்டோ நெஞ்சேயாம்
உற்றால் உறாஅ தவர்*

**விரும்பிய போதெல்லாம் நாம்
விரும்பியவர் வரவில்லையே ஏன் ? என
விளங்காதக் காரணத்தால் அவர் வெறுப்பை
விழைகிறார் என்றெண்ணி நாம் காதலைக் கை
விட்டு விட முடியுமா என்ன ?**

*1246. கலந்துணர்த்தும் காதலர்க் கண்டாற் புலந்துணராய்
பொய்க்காய்வு காய்தியென் நெஞ்சு*

**கூடிக் கலந்து ஊடலை நீக்கி இன்பத்தைக்
கூட்டும் காதலரைக் கண்டவுடன்
கூடுதலாய் ஒரு தடவைக் கூட பிணங்காத நீ – ஊடலுக்குப் பின்
கூடலின் இன்பத்தைக் காண
கூட்டிக் காண்பிப்பது பொய்க் கோபம் தானே...!**

*1247. காமம் விடுவொன்றோ நாண்விடு நன்னெஞ்சே*
*யானோ பொறேனிவ் விரண்டு*

**ஒப்பில்லா நல் நெஞ்சே...!**
**ஒன்று காதல் நெஞ்சை விடு...!**
**ஒழிக்க முடியவில்லை யெனில் காதலை**
**ஒப்புக் கொண்டு சொல்லத்தடை போடும் நாணத்தை விடு...!**
**ஒரே சமயத்தில் இரண்டையும்**
**ஒரு சேர என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது...!**

*1248. பரிந்தவர் நல்காரென் றேங்கிப் பிரிந்தவர்*
*பின்செல்வாய் பேதையென் நெஞ்சு*

**அவர் மீது கொண்ட பரிவை – அவர்**
**அறியாமல் இரக்கமின்றி எனைப்**
**பிரிந்து விட்டார் என நான் ஏங்கிடும் வேளையில்**
**பிரிந்தவர் பின்னாலேயே**
**பித்துப் பிடித்துச் சென்று கொண்டிருக்கும் என்**
**பிரியமான நெஞ்சே நீ**
**பித்தம் கொண்ட பேதையே !**

*1249. உள்ளத்தார் காத லவராக உள்ளிநீ*
*யாருழைச் சேறியென் நெஞ்சு*

**உள்ளத்திலேயே காதலர்**
**உள்ளேயே குடியிருக்கும் போது**
**உவப்பான நெஞ்சமே...!**
**உள்ளே உள்ளவரை நினைத்து**
**உலா வந்து வெளியே எவரிடம்**
**உன்னவரைக் காணப் போகிறாய் ?**

*1250. துன்னாத் துறந்தாரை நெஞ்சத் துடையேமா*
*இன்னும் இழத்தும் கவின்*

**நெஞ்சால் பழகி பின் பிரிந்து சென்ற காதலரை**
**நெஞ்சத்திலேயே வைத்திருந்து எப்போதும்**
**நெக்குருகி ஏங்கிப் போவதால், உடல்**
**நெருக்கி மெலிந்து கவின் இழந்து வாடுகிறேன் !**

## 126. நிறையழிதல்

1251. *காமக் கணிச்சி உடைக்கும் நிறையென்னும்*
*நாணுத்தாழ் வீழ்த்த கதவு*

**பெண்களுக்கே உரிய மிகப் பெரிய**
**பெருமை மிக்க குணம்**
**காமத்தை அடக்கி ஆளும் "நிறை" !**
**காதல் வேட்கை எனும் கோடரி –**
**காணும் "நாணம்" எனும் தாழ்ப்பாளிட்டும்**
**காக்கும் "நிறை" எனும் மனவலிமைக் கதவை**
**காட்டாற்று வெள்ளம் போல் வலிந்து உடைத்து விடும் !**

1252. *காமம் எனவொன்றோ கண்ணின்றென் நெஞ்சத்தை*
*யாமத்தும் ஆளும் தொழில்*

**"காமம்" என்ற "காதல் வேட்கை"**
**காட்சிக்குக் கூடக் கருணை இல்லாதது !**
**நெஞ்சத்தில் "காமம்" ஆதிக்கம் செலுத்தி**
**நெருக்கி அலைக்கழிக்கிறது !**

1253. *மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்பின்றித்*
*தும்மல்போல் தோன்றி விடும்*

**மறைக்கத்தான் நினைக்கின்றேன்**
**மனதில் உண்டாகும் காம எண்ணத்தை ! – ஆனாலும்**
**பட்டென்று எச்சரிக்காமல் வெளிப்படும் தும்மல் போல**
**பல மனக்கட்டுப்பாடுகளையும் மீறி வெளிப்பட்டு விடுகிறதே !**

1254. *நிறையுடையேன் என்பேன்மன் யானோவென் காமம்*
*மறையிறந்து மன்று படும்*

**மன உறுதி கொண்ட இந்த**
**மங்கை நான் என்பதே என் நம்பிக்கை ! – ஆனாலும்**
**மறைப்பதையும் மீறிக் கொண்டு**
**மன்றத்திலேயே என் காதல் வெளிப்பட்டு விடுகிறதே !**

*1255. செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்*
*உற்றார் அறிவதொன் றன்று*

**விருப்பின்றிச் சென்றவரின் பின்ளே**
**விரும்பி செல்லாமலிருக்கும் பெருந்தன்மை**
**விளிக்கும் காம நோய் கொண்டவனுக்கு**
**விழைவதில்லை !**

*1256. செற்றவர் பின்சேறல் வேண்டி அளித்தரோ*
*எற்றென்னை உற்ற துயர்*

**வெறுத்து ஒதுக்கிய காதலர் பின்னே**
**வெறுமை மனதுடன் பின்னே செல்லும்**
**வெட்கக்கேடான நிலையை என் நெஞ்சுக்கு**
**வெகுமானமாய்த் தந்த "காதல் நோய்"**
**வெகு அதிகமாகக் கொடியது !**

*1257. நாணென ஒன்றோ அறியலம் காமத்தால்*
*பேணியார் பெட்ப செயின்*

**நாம் விரும்பியவர் வந்து காமத்தால்**
**நாம் விரும்பிய கலைகளை**
**நான் மகிழும்படி செய்யும்போது**
**"நாணம்" என்ற பண்பு ஒன்று இருப்பதையே**
**நாம் அறிவதில்லை !**

*1258. பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்*
*பெண்மை உடைக்கும் படை*

**மாயங்கள் பலவற்றில் தேர்ந்த கள்வன்**
**மாயக் கண்ணனாக விளங்குகிற என் காதலனின்**
**மாய்ந்து மாய்ந்து பேசும் பணிவான சொற்கள்**
**மாதவிப் பெண் மயிலாள் என் பெண்மையின்**
**மாதரசிக் கோட்டையை அழிக்கும் ஆயுதங்கள் !**

*1259. புலப்பல் எனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம்*
*கலத்தல் உறுவது கண்டு*

**கூடவே கூடாது கூடல் என்றெண்ணித்தான்**
**கூடவே சென்றேன் ஊடல் செய்ய...!**
**கூட்டாளியாய் இருந்த என் நெஞ்சமோ**
**கூட்டிச் சென்ற அவருடன் கொஞ்சிக்**
**கூடுவதைக் கண்டு என் பிடிவாதம் மறந்து**
**கூடித் தழுவி நின்றேன் !**

*1260. நிணந்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ*
*புணர்ந்தூடி நிற்பேம் எனல்*

**நெருப்பிலிட்டக் கொழுப்பைப் போல உருகும்**
**நெஞ்சம் கொண்ட என்னைப் போன்றவர்கள்**
**நெஞ்சம் நிறைந்த காதலரின்**
**நெஞ்சில் உள்ள எண்ணத்திற்கு**
**நெகிழாமல் ஊடல் செய்ய முடியுமா என்ன ?**

## 127. அவர்வயின் விதும்பல்

1261. *வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற*
*நாளொற்றித் தேய்ந்த விரல்*

**வருவார் வருவார் காதலர் என்றெண்ணி**
**வரவை எதிர்பார்த்து காத்திருந்து**
**வழி மேல் விழி வைத்து என் விழிகளும்**
**வற்றி ஒளி குன்றி விட்டன...!**
**வலிந்து பிரிந்து சென்ற நாட்களைக் கோடுகளாக**
**வரைந்து சுவற்றில் எண்ணி விரலால்**
**வருடியதால் விரல்களும் தேய்ந்துவிட்டன...!**

1262. *இலங்கிழாய் இன்று மறப்பினென் தோள்மேல்*
*கலங்கழியும் காரிகை நீத்து*

**"இலங்கிழை" எனப்படும் ஒளி பொருந்திய சுண்டி**
**இழுக்கும் ஆபரணங்களை அணிந்த தோழியே !**
**இன்று நான் என் காதலரை மறப்பேன் எனில்**
**இது காறும் பொலிவிழந்த என் அழகு**
**இனி மேலும் கெட்டுத் தோள் மெலிந்து**
**இலகுவாக வளையல்கள் கழன்று விடும் !**

1263. *உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்*
*வரல்நசைஇ இன்னும் உளேன்*

**பொன்னான தாரத்தைத் தவிக்க விட்டு**
**பொருளாதாரத்தைத் தீவிரமாகத் தேடி**
**வெற்றியை மட்டுமே விரும்பி**
**வெறி கொண்டு ஊக்கத் துணை கொண்டு**
**வெளியில் பிரிந்து சென்ற காதலரை**
**வெற்றி வீரனாக காண விரும்பியே**
**வெதும்பாமல் உயிரோடு இருக்கின்றேன் !**

1264. *கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்*
*கோடுகொ டேறுமென் நெஞ்சு*

**காதல் வயப்பட்டுக் கூடியிருந்து**
**காதல் இன்பம் தந்து பிரிந்த**
**காதலர் எப்போது திரும்பி வருவார் எனச்**
**காத்திருந்துக் காத்திருந்து என் நெஞ்சம்**
**காத தூரமானாலும் மரத்தின் உச்சாணியில்**
**காய்ந்த கொம்பில் ஏறிப் பார்க்கின்றது !**

1265. *காண்கமன் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்*
*நீங்குமென் மென்தோள் பசப்பு*

**கண்கள் ஆரும் வரை –**
**கண்ணார என்னைக் கொண்டவனைக்**
**கண்டபின்பு தான் என் மெல்லிய தோளில்**
**கண்ட பசலை நிறம் நீங்கும் !**

1266. *வருகமன் கொண்கண் ஒருநாட் பருகுவன்*
*பைதல்நோய் எல்லாம் கெட*

**வாட விட்டுப் பிரிந்துள்ள காதலர்**
**வாட்டத்தைப் போக்க ஒரு நாள் வருவார் ! வந்தவுடன்**
**வாரி அணைத்து என் காதல் நோயெல்லாம் தீர**
**வாய்ப்பளித்து முற்றிலும் தீர பருகுவேன்**
**வாய்த்த ஐம்புலன்களினால் இன்பம் தனை !**

1267. *புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்*
*கண்ணன்ன கேளிர் வரின்*

**கண்ணின் மணி போன்ற என் காதல்**
**கண்ணாளர் வந்து விட்டால் கூடிக்**
**களிப்பேனோ...? ஊடல் கொள்வேனோ...?**
**கட்டித் தழுவுவேனோ...? அல்லது இரண்டும்**
**கலந்து ஊடலும் கூடலும் செய்வேனோ...?**
**கண்டிப்பாக ஒன்றும் புரியவில்லையே !**

*1268. வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து*
*மாலை அயர்கம் விருந்து*

**தானைத் தலைவன் போரினில் வெற்றியைத்**
**தான் ஈட்டுவானாக...! – மனையாள்**
**தான் நானும் வீட்டிற்குச் சென்று – அன்று**
**தாங்கியே தலைவனை அழைத்துச் சென்று**
**தாகம் தீர்க்க மாலை நேரத்து விருந்து படைப்போம் !**

*1269. ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேண் சென்றார்*
*வருநாள்வைத் தேங்கு பவர்க்கு*

**நெடுந்தூரம் சென்று விட்ட**
**நெஞ்சம் மிகுந்த காதலரை எதிர்பார்த்து**
**நெடு நாட்கள் ஏங்கிக் கொண்டிருக்கும்**
**நெகிழும் மனதுடைய மங்கைக்கு "ஒரு நாள்" கூட**
**நெடு நாள் போலத் தோன்றும் !**

*1270. பெறினென்னாம் பெற்றக்கால் என்னாம் உறினென்னாம்*
*உள்ளம் உடைந்துக்கக் கால்*

**காதல் பிரிவினைத் தாங்காமல்**
**காதல் உள்ளம் உடைந்து அழிந்திட்டால்**
**காதலைப் பெற்றதால் என்ன பயன் ?**
**காதலனின் வருகையால் என்ன பயன் ?**
**காதலனின் தழுவலைப் பெறப் போவதால்**
**காணப் போகும் பயன் தான் என்ன !**

## 128. குறிப்பறிவுறுத்தல்

*1271. கரப்பினுங் கையிகந் தொல்லாநின் உண்கண்*
*உரைக்கல் உறுவதொன் றுண்டு*

**விரிவாகச் சொல்லாமல் மறைக்கப் பார்த்தாலும்**
**விருப்பமுடன் நீயாகச் சொல்லாமல் மறைத்தாலும் – உன்**
**விழிகள் பேசும் மொழியால் – உன்**
**விழிகள் எனக்குச் சொல்வதற்குத் தனி**
**விருப்பம் கொண்ட செய்தி ஒன்று உண்டு !**

*1272. கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்*
*பெண்நிறைந்த நீர்மை பெரிது*

**கண் நிறைந்த அழகும்**
**கடினமான குளிர்ச்சியான குணம் கொண்ட**
**கணு மூங்கில் போன்ற தோளும்**
**கன்னிப் பெண்ணின் பெருமையாய்**
**கன்னியவள் காதலியாளிடம் நிறைய உள்ளது !**

*1273. மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை*
*அணியில் திகழ்வதொன் றுண்டு*

**கோர்த்துக் கட்டியுள்ள பளிங்கு மணியினுள்**
**கோடாகக் கிடந்து வெளியே தெரியும் நூலைப் போல**
**கோதையின் அழகுக்குள்ளே மறைந்திருக்கும்**
**கோலாகலமானக் குறிப்பு ஒன்று உண்டு !**

*1274. முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை*
*நகைமொக்குள் உள்ளதொன் றுண்டு*

**மலராக அரும்பும் பூவினுள்ளே**
**மணம் மறைந்திருப்பதைப் போல**
**மனம் கவர்ந்த காதலியின் புன்முறுவலில்**
**மறைந்திருக்கும் ஒரு குறிப்பு உண்டு !**

*1275. செறிதொடி செய்திறந்த கள்ளம் உறுதுயர்*
*தீர்க்கும் மருந்தொன் றுடைத்து*

**கலகலவெனச் சத்தமிட்டுக் குலுங்கும் வளையல்களைக்**
**கவனமுடன் அணிந்திருக்கும் காதலியாள்**
**கனிவுடனே செய்து விட்டுச் சென்ற**
**கள்ளத்தனக் குறிப்பினிலே அந்தச் சிரிப்பினிலே – என்**
**கலக்கத்தைத் தீர்க்கும் மருந்து ஒன்று இருக்கிறது !**

**1276.** *பெரிதாற்றிப் பெட்பக் கலத்தல் அரிதாற்றி*
*அன்பின்மை சூழ்வ துடைத்து*

**நெருங்கி நெருங்கி அன்பு காட்டி**
**நெஞ்சுருகப் போற்றித் துன்பத்தைப் போக்கி**
**நெஞ்சம் விரும்புவது போல் கூடுவது**
**நெருடலுடன் அன்பில்லாமல் பிரிந்து**
**நெடுந்துயர் ஒன்றைத் தரப்போகிறக் குறிப்பு**
**நெறியாகத் தெரிகிறதே !**

**1277.** *தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்*
*முன்னம் உணர்ந்த வளை*

**உடலால் கூடி குளிர்ந்த காதலனுக்கு**
**உள்ளத்தால் பிரியும் நினைவு வாட்டுவதை**
**நான் மனதால் அறியும் முன்னரே**
**நான் அணிந்த வளையல்கள் உணர்ந்ததால்**
**நாட்டமில்லாமல் கழன்று விட்டது !**

**1278.** *நெருநற்றுச் சென்றாரெங் காதலர் யாமும்*
*எழுநாளேம் மேனி பசந்து*

**நேற்று தான் என் காதலர்**
**நேர்பாடாய் பிரிந்து சென்றார்...! எனினும்**
**நேற்று சென்றது எவ்வளவோ**
**நேரம் காலம் கழிந்து ஏழு நாட்கள் போல்**
**நேர்ந்ததே மேனியில் "பசலை" !**

**1279.** *தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி*
*அஃதாண் டவள்செய் தது*

**காதலித் தன் கழன்று போகும் வளையல்களை நோக்கி...**
**காணும் தன் மெலிந்த தோள்களை நோக்கி... பின்**
**கால் அடிகளை நோக்கியதன் குறிப்பால்**
**காதலனையே பின் தொடர்ந்து செல்லப் போவதையே உணர்த்துகிறது!**

**1280.** *பெண்ணினாற் பெண்மை உடைத்தென்ப கண்ணினால்*
*காமநோய் சொல்லி இரவு*

**காம நோயைக் கண்களால் குறிப்பாக உணர்த்தும்**
**காதலி – அதைப் போக்க வேண்டுவது**
**பெருமைமிகு பெண்மைக்கு மேலும் ஒரு**
**பெண்மையைச் சேர்ப்பது போல !**

## 129. புணர்ச்சி விதும்பல்

1281. *உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்*
*கள்ளுக்கில் காமத்திற் குண்டு*

**காதலிக்கும் உள்ளத்தில் நினைக்கிறபோதே களிப்படைவதும்**
**காணுகிற போதே மகிழ்ச்சி அடைவதும்**
**காதலுக்கு உண்டு; கள்ளுக்கு இல்லை !**

1282. *தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்*
*காமம் நிறைய வரின்*

**காதலிக்கும் பெண்களுக்குப் பனை அளவு மிகுதியாகக்**
**காதல் வரும் போது – தன்**
**காதலனிடம் தினை அளவாவது ஊடலைக்**
**காண்பிக்காமல் இருக்க வேண்டும் !**

1283. *பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்*
*காணா தமையல கண்*

**விருப்பத்தை என் மீது காட்டாமல்**
**விரும்புகிற செயலிலே மட்டும் காட்டி**
**விருப்பத்துடன் ஈடுபட்டாலும்**
**விழிகளால் என் காதலரை**
**விழுங்காமல் இருக்க முடியவில்லையே...!**

1284. *ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து*
*கூடற்கண் சென்றதென் னெஞ்சு*

**உள்ளபடி ஊடல் கொள்ளத்தான் சென்றேன் ! – அதை**
**உள்ளம் மறந்து விட்டதடி தோழி...!**
**உள்ளம் ஊடலை மறந்து கூடலுக்கு**
**உறுதுணையாவது காதலின் சிறப்பு...!**

1285. *எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கண்*
*பழிகாணேன் கண்ட இடத்து*

**மை விழியாள் நான்**
**மை தீட்டும் நேரத்தில்**
**மை தீட்டுகிற கோலைப் பார்க்காத என்**
**மை விழிகளைப் போல என் மீது**
**மையல் கொண்ட காதலனைக் காணும் போது – என்னிடம்**
**மையாத்தல் இல்லாமல் பிரிந்து சென்ற அவனிடம்**
**மையம் கொள்ளும் குற்றம் காண்பதில்லை !**

1286. *காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்*
*காணேன் தவறல் லவை*

**நேரில் காதலரைக் காணும்போது – அவரால்**
**நேர்ந்த தவறுகளை நான் காண்பதில்லை...!**
**நேரில் காதலரைக் காணாத போது – அவரால்**
**நேர்ந்த தவறுகளைத் தவிர வேறு எதையும் காண்பதில்லை !**

1287. *உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்*
*பொய்த்தல் அறிந்தென் புலந்து*

**வெகு வேகமாக அடித்துச் செல்லும் எனத் தெரிந்தும்**
**வெள்ளத்தில் குதிப்பவரைப் போல**
**பிணங்குவதால் பயனில்லை எனத் தெரிந்தும்**
**பிணங்கிக் கொள்வது வீண் தானே !**

1288. *இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்*
*கள்ளற்றே கள்வநின் மார்பு*

**கள்வனே...! இனியவனே...! இழிவு ஏற்படுத்துகிற**
**கடுந் துன்பங்களைத் தந்தாலும்**
**கள்ளை உண்டு களித்தவர்களுக்கு மேலும் அந்தக்**
**கள்ளின் மீதே ஆசை வருவது போலவே**
**கள்வனே... என்னையும் மயங்கச் செய்கிறது உன் மார்பு !**

1289. *மலரினும் மெல்லிது காமம் சிலரதன்*
*செவ்வி தலைப்படு வார்*

**காதல் இன்பம் மலரை விட மென்மையானது !**
**காதல் இன்பத்தை அதே மென்மையுடன்**
**காமுறும் காலத்தில் நுகர்பவர்கள் சிலரே !**

1290. *கண்ணின் துனித்தே கலங்கினாள் புல்லுதல்*
*என்னினும் தான்விதுப் புற்று*

**காதல் நினைவோடு சென்ற என் மீது**
**காதலி கண்களால் மட்டுமே கோபம்**
**காட்டினாள்...! பின்பு**
**கூடித் தழுவுவதில் என்னைக் காட்டிலும்**
**கூடுதலாக விரைந்து செயல்பட்டுக்**
**கூடிக் கலந்து விட்டாள்...!**

## 130. நெஞ்சொடு புலத்தல்

**1291.** *அவர்நெஞ் சவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே*
*நீயெமக் காகா தது*

**நெஞ்சே...! நம்மை நினைக்காமலிருக்க அவர்**
**நெஞ்சம் அவருக்குத் துணை ! – ஆனால் என்**
**நெஞ்சமே...! நீ எனக்குத் துணையாக இல்லாமல்**
**குருகி அவரை நினைத்து வருத்துவது ஏன் !**

**1292.** *உறாஅ தவர்க்கண்ட கண்ணும் அவரைச்*
*செறாஅரெனச் சேறியென் நெஞ்சு*

**நெஞ்சே...! என் இனிய நெஞ்சே...!**
**நெஞ்சார அன்பு காட்டாதவர் அவர் என**
**நெஞ்சம் கண்டு கொண்ட பிறகும்**
**நெடுக வெறுக்க மாட்டார் என நம்பி அவரிடம்**
**நெருங்குகிறாயே...!**

**1293.** *கெட்டார்க்கு நட்டாரில் என்பதோ நெஞ்சேநீ*
*பெட்டாங் கவர்பின் செலல்*

**கெஞ்சிக் கொஞ்சும் நெஞ்சே...!**
**கெட்டுப் போனவர்களுக்கு நல்லதொரு**
**கெழுதகை நண்பர்கள் துணை இல்லை எனக்**
**கெத்தாக நினைத்து எனை விடுத்து, அவர் பின்னே**
**கெட்டியாகப் பிடித்துப் பின் செல்கிறாயே...!**

**1294.** *இனியன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே*
*துனிசெய்து துவ்வாய்காண் மற்று*

**என் இனிய நெஞ்சே...!**
**எப்போதும் ஊடல் செய்து கூடுவது**
**என்றும் கூடுதல் இன்பம் தரும்**
**என்று நீ எண்ணி அனுபவிக்க மாட்டாய்...!**
**எனவே அதைப் பற்றி கூடிப் பேச உன்னோடு**
**எவர் பேசப் போகிறார்கள்...?**

**1295.** *பெறாஅமை அஞ்சும் பெறின்பிரி வஞ்சும்*
*அறாஅ இடும்பைத்தென் நெஞ்சு*

**அல்லல் படும் நெஞ்சே...!**
**அவர் இல்லாத போது அவரை**
**அடைய முடியவில்லையே என வருந்தும்...!**
**அவர் இருக்கிற போதும்**
**அவர் பிரிந்து விடுவாரோ என வருந்தும்...!**
**அல்லல் மட்டுமே இப்படிப் பட்டு**
**அயராத துன்பம் அடைகிறதே என் நெஞ்சம் !**

*1296.* *தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்*
*தினிய இருந்ததென் நெஞ்சு*

**தனியே...! தன்னந் தனியே...!**
**தக்கவர் என் இனிய காதலரைத்**
**தனிமையாய் நினைத்த போது**
**தகிக்கும் என் நெஞ்சம்**
**தகைத்து என்னையே தின்பது போல் வருத்தியது !**

*1297.* *நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாவென்*
*மாணா மடநெஞ்சிற் பட்டு*

**மன்னவனை மறக்க முடியாத என்**
**மடத்தனமான நெஞ்சோடு சேர்ந்து**
**மறக்கக் கூடாத நாணத்தையும்**
**மறந்து விட்டேன் !**

*1298.* *எள்ளின் இளிவாமென் றெண்ணி அவர்திறம்*
*உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு*

**உயிர்க்காதல் நெஞ்சே...!**
**உள்ளத்தால் எள்ளிச் சென்றார்**
**உள்ளம் கவர்ந்தவர் என்றெண்ணி நாமும்**
**உள்ளத்தால் எள்ளுவது நமக்கு இழிவானது...! என**
**உணர்ந்ததால் அவர் பெருமை பற்றியே**
**உயர்வாக எண்ணுகிறாயே**
**உயிர்க் காதல் நெஞ்சே !**

*1299.* *துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய*
*நெஞ்சந் துணையல் வழி*

**துன்பம் வரும் போது அதனைத் தாங்கி**
**துயரைத் துடைப்பதற்கு நெஞ்சமே**
**துணையாக இல்லாவிட்டால் பிறகு யார்**
**துணையாக இருப்பர் ?**

*1300.* *தஞ்சம் தமரல்லர் ஏதிலார் தாமுடைய*
*நெஞ்சம் தமரல் வழி*

**நெஞ்சமே... நீயே எனக்கு உரிமையான**
**நெடுங்கால உறவு...! நீயே**
**நெருங்கி வந்து துணையாகாத போது**
**தஞ்சம் கொள்ள எனக்குத்**
**தயங்காமல் "அயலார்" வருவாரா... சொல் !**

## 131. புலவி

*1301. புல்லா திராஅப் புலத்தை அவருறும்*
*அல்லல்நோய் காண்கம் சிறிது*

**காதலி ஊடல் கொள்வதால் – காதலன்**
**காதல் துயர் நோயினால் துடிப்பதைச் சிறிது நேரம்**
**காண்பதற்கு அவரைத் தழுவிட –**
**காக்க வைத்து தயங்கிப் பிணைவாயாகக்**
**காதல் நெஞ்சே...!**

*1302. உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது*
*மிக்கற்றால் நீள விடல்*

**உணவில் அளவோடு அமைந்திருக்கும்**
**உப்புப் போல எப்போதும்**
**உறுத்தாமல் அளவோடு ஊடல் கொள்ள வேண்டும் !**
**உணவில் உப்பு மிகுதியானால்**
**உணவு பயனற்றுப் போவதைப் போல்**
**உள்ளத்தில் ஊடலின் அளவு அதிகமானால்**
**உள்ள காதல் சுவை கெட்டுவிடும் !**

*1303. அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்*
*புலந்தாரைப் புல்லா விடல்*

**ஊடல் கொண்ட காதலியின்**
**ஊடலை நீக்கித் தழுவாமல்**
**நொடித்துப் போகச் செய்து அல்லல் பட வைத்தால்**
**நொந்த மனம் இன்னமும்**
**நொந்து போகுமே !**

*1304. ஊடி யவரை உணராமை வாடிய*
*வள்ளி முதலரிந் தற்று*

**ஊடியவரைப் புரிந்து கொண்டு**
**ஊடறுத்து அன்பு செலுத்தாமை**
**வாடியுள்ள கொடியினுடைய**
**வாகான வள்ளிக்கிழங்கை அறுப்பதாகும் !**

*1305. நலத்தகை நல்லவர்க் கேளர் புலத்தகை*
*பூவன்ன கண்ணார் அகத்து*

**பூவைப் போன்ற கண்களை உடைய**
**பூவையரின் உள்ளத்தில்**
**பூபாளமாய் உண்டாகும் ஊடலின்**
**பூரிப்பே பண்புள்ள காதலுக்கு அழகாகும் !**

1306. *துனியும் புலவியும் இல்லாயின் காமம்*
*கனியும் கருக்காயும் அற்று*

**முதிர்ந்த ஊடலானப் பெரும்பிணக்கு**
**முற்றிப் பழுத்து அழுகிய பழம் போல...!**
**முற்றிலும் மிகச் சிறிதளவான சிறு பிணக்கு**
**முற்றாதக் கசக்கும் இளம் பிஞ்சு போல...!**
**முழுப் பக்குவமில்லாத இரண்டு ஊடல்களும்**
**முற்றிலும் பயனற்றவையே !**

1307. *ஊடலின் உண்டாங்கோர் துன்பம் புணர்வது*
*நீடுவ தன்றுகொல் என்று*

**ஊடலுக்குப் பின் கூடல் இன்பம் என்பதால்**
**ஊடல் கொண்டிருந்தாலும்**
**ஊடல் கொண்ட நேரம் கூடலின் நேரத்தைக் குறைப்பதால்**
**ஊடியிருக்கும் காலத்திலும் ஒரு வகைத் துன்பம் உண்டாகிறது !**

1308. *நோதல் எவன்மற்று நொந்தாரென் றஃதறியும்*
*காதலர் இல்லா வழி*

**இவள் என்னால் தான் வருந்துகிறாள் என**
**இங்கிதமாக அறிந்து கொள்பவராகக் காதலர்**
**இல்லாத போது நாம் வருந்தி என்ன பயன் ?**

1309. *நீரும் நிழல தினிதே புலவியும்*
*வீழுநர் கண்ணே இனிது*

**நிழலுக்குக் கீழ் உள்ள நீர் தான்**
**நிச்சயமாகக் குளிர்ச்சியாக இருக்கும்...!**
**உள்ளத்தில் அன்புள்ளவர்களிடம் கொள்ளும் ஊடல் தான்**
**உண்மையில் இன்பமானதாக இருக்கும் !**

1310. *ஊடல் உணங்க விடுவாரோ டென்னெஞ்சம்*
*கூடுவேம் என்ப தவா*

**ஊடலைத் தணிக்காமல் வாட விட்டு**
**ஊறுபாடு இல்லாமல் வேடிக்கைப் பார்க்கும் காதலருடன்**
**கூடியிருப்போம் என என் நெஞ்சம்**
**கூறுவதற்கு "ஆசையே" காரணம்..!**

# 132. புலவி நுணுக்கம்

*1311. பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுவுண்பர்*
*நண்ணேன் பரத்தநின் மார்பு*

**பரந்த உன் மார்பின் அழகினைப் பல**
**பருவப் பெண்கள் பொதுச் சொத்தாக நினைத்துப்**
**பருகுகிறார்கள் என்பதால் – நான் உன்**
**பரந்த மார்பினைத் தழுவ மாட்டேன் !**

*1312. ஊடி இருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை*
*நீடுவாழ் கென்பாக் கறிந்து*

**"தும்மியது" வேண்டியவர் என்றால்**
**"தும்மும்போது" நாம் "நீடு வாழ்க" என்போம் !**
**காதலருடன் "ஊடல்" கொண்டிருந்தபோது அதன்**
**காரியமாக ஊடலைக் கை விட்டு**
**காதலரை "நீடு வாழ்க" என வாய்விட்டு வாழ்த்துவேன் என்ற**
**காரணத்தோடு அவர் "தும்மினார்" !**

*313. கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்*
*காட்டிய சூடினீர் என்று*

**"கோட்டுப்பூ" எனப்படும் மரக் கொம்புகளில்**
**கோலாகலமாகப் பூக்காதப் பூவைக் கூட மார்பில்**
**கோர்த்து மாலையிட்டிருந்தாலும்**
**கோதையவள் அழகை வேறு எவளுக்கோ காட்டச் சூடியதாகக்**
**கோபித்துக் கொள்வாள் !**

*1314. யாரினுங் காதலம் என்றேனா ஊடினாள்*
*யாரினும் யாரினும் என்று*

**"யாரைக் காட்டிலும்" உன்னிடம் தான்**
**யான் காதல் மிகுதியாகக் கொண்டுள்ளேன் என**
**யானும் எளிதாகச் சொன்னதைக் கூட**
**"யாரைக் காட்டிலும்" "யாரைக் காட்டிலும்" என**
**யாதனையுடன் ஊடல் புரியத் தொடங்கி விட்டாள் !**

1315. *இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்*
*கண்நிறை நீர்கொண் டனள்*

**"இப்பிறிப்பில் யாம் பிரிய மாட்டோம்" என**
**இனிய காதலர் உறுதிபட சொன்னவுடன் – மறுத்து**
**"இனி வரும் மறுபிறப்பில்" பிரிந்து விடுவோமா என**
**இவள் கண் கலங்கினாள் !**

1316. *உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீர் என்றென்னைப்*
*புல்லாள் புலத்தக் கனள்*

**'நினைத்தேன்' என்று காதலியிடம் சொன்னதுதான் தாமதம்**
**'நினைத்தேன்' என்று சொன்னால் "மறந்ததனால்" தானே**
**நினைத்தீர்கள் எனக் கேட்டு "ஏன் மறந்தீர் ?" – என**
**நினைத்து நினைத்து ஊடல் கொண்டாள் !**

1317. *வழுத்தினாள் தும்மினேன் ஆக அழித்தழுதாள்*
*யாருள்ளித் தும்மினீர் என்று*

**தும்மல் வந்ததால் தும்மினேன் !**
**தும்மல் வந்ததால் நம் வழக்கப்படி**
**தும்மியவரை அவள் வாழ்த்தினாள் !**
**துடித்து வாழ்த்தியதற்கு பிறகு**
**துரிதமாக என்ன சந்தேகம் வந்ததோ...**
**"தும்மியது யார் நினைத்ததால் ?" எனத்**
**துவண்டு அழத் தொடங்கி விட்டாள் !**

1318. *தும்முச் செறுப்ப அழுதாள் நுமருள்ளல்*
*எம்மை மறைத்திரோ என்று*

**துணிந்து ஊடல் கொள்வாளே என அஞ்சித்**
**தும்மலை அடக்கினேன்...! வந்த**
**தும்மலை ஏன் அடக்கினீர்...?**
**துய்க்கும் இன்னொரு பெண்**
**துயிலாள் நினைப்பதை நான்**
**துப்பறியாதபடி மறைக்கிறீரோ...? எனத்**
**துவண்டு அழத் தொடங்கினாள் !**

1319. *தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்கும்நீர்*
*இந்நீரர் ஆகுதிர் என்று*

**பணிந்து போய் அவள் ஊடலைப்**
**பவ்வியமாய் நீக்கி மகிழ்வித்தாலும் – "ஓ" நீர்**
**பல பெண்களிடமும் இப்படித்தான்**
**பக்குவமாய் நடந்து கொள்வீரோ...? எனப்**
**பற்றிடும் கோபம் கொள்வாள் !**

1320. *நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்*
*யாருள்ளி நோக்கினீர் என்று*

**ஒப்பனையுடன் கூடிய அவள் அழகையே**
**ஒப்பற்றதாய் நினைத்து அவளையே இமைக்காமல்**
**ஒய்யாரமாகப் பார்த்தால்... யாருடன் என் அழகை**
**ஒப்பிட்டுப் பார்த்து உற்று நோக்கினீர்கள் என்று**
**ஒப்பாமல் கோபம் கொள்வாள் !**

## 133. ஊடலுவகை

1321. *இல்லை தவறவர்க் காயினும் ஊடுதல்*
*வல்ல தவரளிக்கும் ஆறு*

**தவறு இல்லையென்றாலும் அவர் மீது**
**தவறாமல் ஊடல் கொள்வது**
**தயங்காமல் மிகுதியாக அன்பைத்**
**தங்கு தடையில்லாமல் வளர்க்கத்தான் !**

1322. *ஊடலின் தோன்றும் சிறுதுனி நல்லளி*
*வாடினும் பாடு பெறும்*

**ஊக்கம் மிகுந்த காதலர்களிடையே உள்ளத்தில்**
**ஊதியமாய் மலரும் நல்லன்பு வாடுவதற்கு**
**ஊடுறுவும் ஊடல் காரணமாக இருந்தாலும்**
**ஊட்டத்துடன் விளைகிற இன்பம் பின்பு அதிகமாகும் !**

1323. *புலத்தலிற் புத்தேள்நா டுண்டோ நிலத்தொடு*
*நீரியைந் தன்னார் அகத்து*

**நிலத்தோடு நீர் கலந்ததைப் போல**
**நினைத்தாலும் பிரிக்க முடியாத காதலர்களுக்கிடையே**
**அளவோடு ஊடல் செய்து கூடும் இன்பத்தை விட**
**அதிக இன்பம் தரக் கூடிய தேவலோகம் உள்ளதா ?**

1324. *புல்லி விடாஅப் புலவியுள் தோன்றுமென்*
*உள்ளம் உடைக்கும் படை*

**இறுகத் தழுவி இணை பிரியாமல்**
**இருப்பதற்கு இன்றியமையாதது ஊடல்...!**
**இந்த ஊடலில் தானே என் உள்ள உறுதி**
**இடித்துரைத்து உடைக்கும் படை உள்ளது !**

1325. *தவறிலர் ஆயினும் தாம்வீழ்வார் மென்றோள்*
*அகறலின் ஆங்கொன் றுடைத்து*

**'தம்மிடம் தவறே இல்லாத போதும்**
**தவறாமல் அவளின் ஊடலுக்கு ஆளாகி**
**தன்னவளின் அழகிய மெல்லிய தோள்களைக் கொஞ்ச நேரம்**
**தழுவாமல் இருப்பதிலும் ஓர் இன்பம் இருக்கத்தான் செய்கிறது !**

1326. *உணலினும் உண்ட தறலினிது காமம்*
*புணர்தலின் ஊடல் இனிது*
**உணவை மேலும் மேலும் நன்கு**
**உண்பதை விட எப்போதும்**
**உண்ட உணவு செரிப்பதில் தான் இன்பம் ! – அதே போல்**
**உடலால் காமத்தில் கூடுவதை விட**
**உள்ளத்தால் ஊடல் கொள்வது இன்பமாகும் !**

1327. *ஊடலின் தோற்றவர் வென்றார் அதுமன்னும்*
*கூடலிற் காணப் படும்*
**உள்ளங்களுக்குள் நடக்கும் ஊடல் எனும் இனிய போரில்**
**உண்மையில் தோற்றவர் தான் வெற்றி பெற்றவர் ஆவார் !**
**உள்ள ஊடல் முடிந்துக் கூடி மகிழும் போது இந்த**
**உண்மை உணரப்படும் !**

1328. *ஊடிப் பெறுகுவம் கொல்லோ நுதல்வெயர்ப்பக்*
*கூடலில் தோன்றிய உப்பு*
**'நுதல்' எனும் 'நெற்றி'யில் வியர்த்து உப்பாகும் வரை**
**நுண்ணிய இன்பத்தை அடையும் கூடல்...!**
**நுடங்காமல் மீண்டும் ஊடல் தோன்றினால்**
**நுழையுமோ அதே போன்று இன்பம்...!**

1329. *ஊடுக மன்னோ ஒளியிழை யாமிரப்ப*
*நீடுக மன்னோ இரா*
**ஒளியிழையாள் ஊடல் புரியட்டும் !**
**ஒழியாது ஊடல் புரிந்து கொண்டே இருக்கட்டும்...!**
**ஓயாத ஊடலை ஒழிக்கவே நானும்**
**ஓய்வில்லாமல் இரவெல்லாம் கெஞ்சிடவே**
**ஓங்கியே நீளட்டும் இந்த இரவு !**

1330. *ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்*
*கூடி முயங்கப் பெறின்*
**"ஊடுதல்" என்பது "சிணுங்குதலின்" மையம்...!**
**ஊடுதல் எப்போதும் காதலுக்கு இன்பம்...!**
**ஊடல் முடிந்து கூடித்தழுவுதல் – அந்த**
**ஊடலுக்கே இன்பம் !**

# வள்ளுவர் காலத்து அருஞ் சொற் பொருள்

| | |
|---|---|
| பேரிகை | – முரசு |
| நூறுதல் | – அழித்தல் |
| அங்கணம் | – சேறு |
| நுணங்குதல் | – சோர்வடைதல் |
| நுறுங்குதல் | – அழிதல் |
| உல்கு | – சுங்கவரி |
| தெறு பொருள் | – கப்பம் |
| செறுநர் | – பகைவர் |
| ஒன்னார் | – பகைவர் |
| குழவி | – கைக்குழந்தை |
| எஃகு | – ஈட்டி, கூர்மை |
| செறுக்கு | – கர்வம் |
| செறுநர் | – பகைவர் |
| உலை | – வருத்தம் |
| ஊறு | – துன்பம் |
| கூற்றுவன் | – எமன் |
| தார் | – சேனை |
| தானை | – சேனை |
| மாலை | – உபாயம் |
| நடுகல் | – மாண்ட போர்வீரர் சிலை |
| கானம் | – காடு |
| போதாமை | – வெறுப்பு |
| துப்பு | – உணவு |
| முகிழ்த்தல் | – அரும்புதல் |
| ஒல்லுதல் | – இயலுதல் |
| ஆத்திரை | – பயணம் |
| குறுநிலை | – வழக்கு |
| கேண்மை | – உறுதி |
| மருவுதல் | – நட்புச் செய்தல் |
| கிழமை | – உறவு / உரிமை |
| கெழுதகை | – உரிமை |
| உறுப்பு | – கருவி / ஆயுதம் |
| கடை | – முடிவு / இடம் |
| கீழ்ந்திடாத | – கிடைத்திடாத |
| விழைதல் | – விரும்புதல் |
| இழுக்கம் | – பிழை, தாழ்வு, துன்பம் |
| விழையார் | – பகைவர் (விரும்பார்) |
| ஆற்றுப்படுத்தல் | – வழி கூறிச் செல்லுதல் |
| மருங்கு | – பக்கம் |
| மன்றம் | – சபை |
| பட்டடை | – தாங்கு பலகை |
| மாணார் | – பகைவர் |
| நட்டார் | – நண்பர் |
| ஒட்டார் | – பகைவர் |
| காதன்மை | – அன்பு, ஆசை |
| அளறு | – நரகம் |
| மத்தம் | – கள்ளுண்ட மயக்கம், மந்தம் |
| பீழை | – துன்பம் |
| முகிழ்தல் | – தோன்றல் |
| அற்றம் | – அவமானம் |
| வெண்மை | – புல்லறிவுடைமை |
| பகல் | – பிரித்தல் |
| தவல் | – குற்றம் |
| மேவுதல் | – விரும்புதல் |
| மாறு | – பகை |
| ஏற்றல் | – ஏற்றுதல் |
| ஓம்புக | – தவிர்க்க |
| மேக | – விரும்புக |
| துவ்வான் | – வலியிலான் |

வெகுளி – கோபம்
கழி – மிகுதி
கோடல் – மனத்துள் கொள்ளுதல்
மாணாத – இன்னாத
மான்றார் – புத்தி மயங்கியவர்
இனன் – சுற்றம், இனம்
ஏமாப்புடைத்து – பாதுகாப்பு உடைத்து
செறுவார் – பகைப்பார்
ஒல்லா – பொருந்தாத
வெகுளும் – சீறும்
ஏமுறுதல் – தன்மைதிரிதல், பைத்தியமடைதல்
கேள் – உறவு
ஏதம் – கேடு, குற்றம்
செப்பு – சிமிழ்
அடல் – போரிடுதல், கொல்லுதல்
வேந்து – அரசப்பதவி
வெந்து – சினந்து
செறல் – கோபித்தல்
உய்வு – பிழைப்பு
சார்பு – துணை, ஆதாரம்
மாண்பயன் – மாட்சிமைப்பயன், பெருமைப்பயன்
வீறு – தனிப்பட்ட சிறப்பு
இமையார் – தேவலோகத்தவர்
நுதல் – நெற்றி
பேதைமை – மடமை, அறியாமை
நயந்து – விரும்பி
முயக்கம் – புணர்ச்சி, தழுவுதல்
புன்னலம் – சிற்றின்பம்
தகை – தகுதி, அழகு
பாரிப்பார் – பரப்புவார்
நெடுந்தகை – நற்குணம், மேம்பாடு
அணங்கு – ஆசை, அழகு
கவறு – சூது
கவர்ப்பு – பலவாறாக பிரிதல்
கமலை – இலக்குமி
எஞ்ஞான்றும் – எல்லாக் காலமும்
துஞ்சினார் – உறங்கினார்
கையறியாமை – செயலறியாமை
தூவாத – பொருத்தமற்ற
அகடம் – கபடம்
உழப்பு – வலிமை, வருத்தம்
அல்லல் – துன்பம்
யாக்கை – உடல்
நார் – அன்பு
இறைஞ்சு – வணங்கி
சாற்றுதல் – நிறைத்தல்
சால்பு – மேன்மை, நிறைவு
படை – கருவி
ஆழி – கடல்
ஊழி – உலக முடிவுக் காலம்
சாந்தை – பூமி
நவை – குற்றம்
ஈண்டு – இவ்விடம்
நச்சுதல் – விரும்புதல்
உய்தல் – அனுபவித்தல்
சீமை – தேசம்
இடுக்கம் – ஒடுக்கம்
வாகு – ஒழுங்கு
மடி – சோம்பல்
இடுக்கும் – நெருக்கும்
இடும்பை – வறுமை, துன்பம்

| | | |
|---|---|---|
| நெருநல் | – | நேற்று |
| நிரப்பு | – | வறுமை |
| துய்க்கல் | – | உண்ணல் |
| இரவு | – | பிச்சை, யாசகம் |
| ஈர்ந்த | – | பிளந்த |
| கரத்தல் | – | கொடுக்காமல் மறைத்தல் |
| பிணைந்து | – | இணைந்து |
| மத்தகம் | – | யானைத் தலை |
| போர் மடந்தை | – | கொற்றவை |
| மதனம் | – | கடைதல் |
| கனிதல் | – | பழுத்தல் |
| நோற்றல் | – | தவம் செய்தல், நோன்பு |
| ஒண்ணுதல் | – | இயலுதல் |
| காந்தல் | – | வெப்பமடைதல் |
| வேட்கை | – | விருப்பம் |
| மெத்த | – | மிகுந்த |
| ஆயிழை | – | நகைகளை அணிந்தவள் |
| நுணங்குதல் | – | வாடுதல் |
| நெறித்து | – | வாய் பிளந்து |
| நெக்குருகி | – | இளகுதல் |
| புனல் | – | ஆறு, நீர் |
| புணை | – | தெப்பம் |
| கணம் | – | நொடி |
| கழலும் | – | நெகிழ்ந்து போதல் |
| கௌவை | – | பழிச்சொல், வருத்தம் |
| யாங்கணும் | – | எங்கும் |
| யாங்ஙணம் | – | எவ்விதம் |
| பிரமாணிக்கம் | – | உண்மை, வாய்மை |

| | | |
|---|---|---|
| விசாரம் | – | கவலை |
| பசலை | – | அழகுத் தேமல் |
| உறுதல் | – | தங்குதல் |
| கெழீஇ | – | நல்வினை |
| கயல் | – | கெண்டை மீன் |
| ஆயன் | – | கண்ணன் |
| நுணக்கம் | – | வாட்டம் |
| நுடங்காமல் | – | துவளாமல் |
| நுந்துதல் | – | தூண்டுல் |
| கவின் | – | அழகு |
| உவப்பு | – | மகிழ்ச்சி, விருப்பு |
| விளி | – | கொக்கரிப்பு |
| காரிகை | – | அழகு |
| இழை | – | ஆபரணம் |
| இலங்கிழை | – | ஆபரணம் அணிந்த பெண் |
| வெதும்புதல் | – | மனம் கலங்குதல் |
| நேர்பாடு | – | தற்செயல் நிகழ்ச்சி |
| மை | – | குற்றம் |
| மையாத்தல் | – | மயங்குதல் |
| காமுற | – | விரும்புதல், வேண்டிக் கோடல் |
| பூரிப்பு | – | நிறைவு |
| நொடித்துப் போதல் | – | நிலை குன்றுதல் |
| ஊறுபாடு | – | இடையூறு |
| யாதனை | – | தீவிர வேதனை |
| இன்னா | – | துன்பம் |
| கோட்டுப்பூ | – | மரக் கொம்புகளில் தோன்றும் பூ |



**இராமகுமாரன்** – தமிழை நேசிப்பவர். தமிழை சுவாசிப்பவர். அன்றைய இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த “சிறு மதுரை” என்றும் “சிவல்புரி” என்றும் அன்போடு அழைக்கப்படும் சிற்றூரான “கீழச்சிவல்பட்டி”யில் பிறந்தவர்.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டத்தில் அமைந்த இந்த “கீழச்சிவல்பட்டி”க்கு அருகில்தான் கி.மு. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற உலகப் புகழ் பெற்ற, புறநானூற்றுப் பாடலை இயற்றிய “கணியன் பூங்குன்றனார்” பிறந்த “மகிபாலன்பட்டி” உள்ளது. நம் கவியரசர் பிறந்த “சிறுகூடல்பட்டி” உள்ளது ! ஏன் 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிச்சக்கரவர்த்தி கம்பன் கடைசியாக வாழ்ந்து மறைந்த (கி.பி. 1250இல்) “நாட்டரசன்கோட்டை”யும் உள்ளது.

தமிழ் விளைந்த இந்த மண்ணாலேயே இவருக்குத் “தமிழ்” இரத்தத்தில் ஊறியுள்ளது !

இராமகுமாரன் – மதுரையில் தியாகராசர் பொறியியல் கல்லூரியில் படித்து பின் காப்பீட்டு மேலாண்மையில் முதுகலை பயின்றவர். சென்னையில் பொதுக் காப்பீட்டுத் துறையில் பணிபுரிந்து 30 ஆண்டுகளில் 3 இலட்சம் தமிழர்களுக்கு மேல் மனித குலத்தின் மகத்தான மருத்துவக் காப்பீட்டின் மகத்துவத்தை – அவசியத்தை – அதன் பயனை காப்பீட்டு ஆவணங்களாக – அறிவுரைகளாக வழங்கி உள்ளார். காப்பீட்டுத் துறையில் ஆராய்ச்சி செய்து உலகத்தில் ‘‘காப்பீட்டுத் தத்துவமே’’ கி.பி. 957இல் சோழ அரசனால் கொணரப்பட்டதுதான் என்று ஆராய்ந்து “முனைவர்” பட்டம் பெற்றவர்.

இராமகுமாரன் – தன் வாழ்நாள் குறிக்கோளாக உலகத் தமிழர்களுக்காக தமிழனின் “வாழ்வியல்” நூலான “உலகப் பொதுமறை” யான திருக்குறளை எளிமையான – இலகுவான புதுக்கவிதைத் தொகுப்பாகவும், உலகத்தில் பரந்து விரிந்து வாழும் தமிழர்கள் சிரமப்படாமல், நினைக்கும் போதெல்லாம், தேவைப்படும் போதெல்லாம், தங்களுக்கு அன்றாடம் ஏற்படும் வாழ்வியல் பிரச்சினைகளைப் பற்றி 2000 வருடங்களுக்கு முன்பே பல தீர்வுகைளச் சொன்ன வித்தகன் வள்ளுவனை கலந்தாலோசிக்க கைபேசியிலேயே “வியத்தகு வள்ளுவனின் – விலையில்லா செயலி”யாகவும் “இணையற்ற இணையதளமாகவும்” வடிவமைத்துத் தமிழுலகத்திற்கு கம்பன் பதிப்பகம் மூலம் தந்துள்ளார்.

காரைக்குடியில் வாழும் தமிழர்கள் முதல் கலிஃபோர்னியாவில் வாழும் தமிழர்கள் வரை உலகில் எந்த மூலையில் வாழும் தமிழனுக்கும் இந்த “இணையதளம்” – “இதய தளமாக” விளங்கி, தொல்காப்பியரின் யாப்பிலக்கணப்படி “அடி மோனையில்” அழகுற – மனதில் “நச் ”சென்று பதிந்து, இனிமையாக – எளிமையாக நாம் மன்றத்தில் உரையாட புதுக்கவிதைப் பாணியில் இங்கே தந்துள்ளார்!

இராமகுமாரன் – இப்புதுக்கவிதைத் தொகுப்பின் நோக்கத்தையும், குறளை எப்படி, யார் யார், எந்தச் சூழ்நிலையில், எப்பிரச்சனைக்கும் தீர்வாக எப்போதும் புரிகிற இனிய தமிழ் புதுக்கவிதையில் ஒவ்வொருக் குறட்பாவையும்அலசி ஆராய்ந்துப் பயன்படுத்த வேண்டிய காரணத்தையும் தன் “ஆசிரியர் உரை”யில் விளக்கமாகத் தந்துள்ளார் !

இனிமேல் இந்தப் “புதுக்கவிதையில் திருக்குறள்” புத்தகம் முழுவதுமாக பதிவேற்றம் செய்யப்பட்ட எங்கள் இணையதளங்கள் உலகத் தமிழர்களின் உள்ளம் கவர்ந்த “இதய தளமாக” விளங்கும் என்பதில் ஐயமில்லை.

வாருங்கள் ! வள்ளுவனை எப்போது வேண்டுமானாலும் எளிய முறையில் இலகுவாக – இனிமையாக சந்தியுங்கள் !!

கம்பன் பதிப்பகம்
www. kambanpathippagam.com
www.kuraleasy.com